
கல்கி
புத்தாண்டு மலர்
KALKI
12-4-1964 30 காசு


உங்கள் அலுவல்களை துரிதமாக கவனிக்கவும்,
உங்கள் சௌகரியத்திற்கும் இதோ ஒரு

ஹெர்குலிஸ் ஸைக்கிள் !


பஸ்ஸுக்காக காத்திருக்கத் தேவையில்லை; கும்பலில் இடிபட்டுக்கொண்டு அசௌகரியமாய்ப் பிரயாணம் செய்யவும் தேவையில்லை. உங்களுக்கென ஒரு ஹெர்குலிஸ் ஸைக்கிள் இருக்கும்போது காலேஜ் வகுப்புகளுக்குச் செல்வதோ, அல்லது படிப்பு சம்பந்தமாய் சிநேகிதர்களைச் சந்திப்பதோ மிகவும் எளிதாகிறது. அநாயாசமாக ஓடும், அழகான ஹெர்குலிஸ், வெறும் ஸைக்கிள் மட்டுமன்று .... நம்பகமானதொரு வழித்துணையும் கூட. அதன் பராமரிப்புக்கு சிறிதளவே கவனம்செலுத்தியபோதும் உங்களுக்கு அது பல வருடகாலம் உழைக்கத்தவறாது.

இன்று தயாராகும் ஸைக்கிள்களில் மிகச் சிறந்தது ஹெர்குலிஸ்.

இந்தியாவிலேயே மிகப்பெரியதும், பல நவீன யந்திர சாதனங்கள் கொண்டதுமான தொழிற்சாலையில், மிக நுட்பமான முறையில் தயாராகிறது ஹெர்குலிஸ். ஸைக்கிள் தயாரிப்பில் உலகிலேயே மிகப்பெரிய ஸ்தாபனமான ட்யூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட் (இங்கிலாந்து) ஸ்தாபனத்தின் பரந்த தொழில் நுட்ப அறிவும், நிறைந்த அனுபவமும் சேர்ந்து உருவாக்கியுள்ளது ஹெர்குலிஸ் ஸைக்கிளை. இந்த ஸைக்கிள் நீடித்து உழைப்பதில் ஆச்சரியம் என்ன?



டி. ஐ. ஸைக்கிள்ஸ் ஆப் இந்தியா, மதறாஸ்-53



வெலிங்டன்
மஹாராணி
ராக்ஸி
நூர்ஜஹான்
மற்றும்
தென்னகமெங்கும்
வேல் பிக்சர்ஸ்
பச்சை விளக்கு
வசனம்: இராம அரங்கண்ணல் · இறைமுடிமணி
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் · காமிரா: விட்டல்ராவ்
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி · கலை: A.K.சேகர்
டைரக்ஷன்: A.பீம்சிங்
ஸ்டுடியோ: ஏவிஎம்

புத்தாண்டு நற்செய்தி!



பல வருஷங்களாக
ஆஸ்திக மகாஜனங்கள்
ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும்

சேத்தனுசார்ய
ஸ்ரீ உ. வே. C. R. ஸ்ரீநிவாஸய்யங்கார்
அவர்களின்

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

(தமிழ் வசனம்)

இதுவரை வெளிவந்த மூன்று பதிப்புக்களில் இல்லாத பற்பல விசேஷாம்சங்களுடனும், ஸ்ரீமத் ராமாயணத்தையொட்டிய வேறு பல வெளியீடுகளுடனும், பாராயணத்திற்குரிய பல பொருள்களுடனும், ஸம்ஸ்க்ருத வால்மீகி ராமாயணத்துடனும் ஓர் அழகிய மரப் பெட்டியில் (எதிர்ப் பக்கத்திலுள்ள படம் பார்க்க) அளிக்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகள் இடையறாத உழைப்பின் பயனாக உருவாகியுள்ள நான்காம் பதிப்பின்

விசேஷாம்சங்கள் :

1. பால காண்டம் முதல் உத்தர காண்டம் வரையிலுள்ள ஏழு காண்டங்களும் தனித்தனியாக பைண்டு செய்யப்பட்டுள்ளன.
2. 'கல்கி' சைஸில் பக்கங்களின் நாற்புறமும் விசாலமான மார்ஜின் விட்டு, வரி எண்களுடன் படிப்பதற்கு அனுகூலமாக அச்சிடப்பட்டுள்ளன.
3. ஸர்க்கங்களில் முதல் ச்லோகமும் கடைசி ச்லோகமும் (தமிழில்) தரப்பட்டுள்ளன.
4. ஒவ்வொரு முக்கியமான கட்டத்திற்கும் முழுப் பக்கப் படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.
5. ஸ்ரீராம பட்டாபிஷேகம், ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர் மூவர்ணப் படங்கள் உள்ளன.
6. ஒவ்வொரு பிரதிக்கும் தனித்தனி அடையாள அட்டைகள் (Book Marks) வைக்கப்பட்டுள்ளன.
7. ஸுந்தர காண்ட அநுபந்தத்தில் ஸ்ரீராமர் சம்பந்தமான பல ஸ்தோத்ரங்கள், ஆழ்வார் ஆசார்யர்களின் பாசுரங்கள், பாடல்கள் ஆகியவை அற்புதமான படங்களுடன் இடம் பெற்றுள்ளன.

எதிர்ப் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வெளியீடுகள் அனைத்தும் சேர்ந்து

விலை ரூ. 140

(தபாற் கூலி, பாக்கிங், ரெயில்வே அல்லது லாரி கட்டணம் வேறு)

ஓர் அரிய வாய்ப்பு :

புஸ்தகங்கள் வெளியாவதற்குள் (15-6-1964க்குள்) கீழ்க்கண்ட விலாசத்திற்கு மொத்தமாகப் பணம் அனுப்பிப் பதிவு செய்துகொள்வோர்க்குச்

சலுகை விலை ரூ. 125

(தபாற்கூலி, பாக்கிங், ரெயில்வே அல்லது லாரி கட்டணம் உள்பட)

ஸ்தாபிதம்: 1929 | டெலிபோன்: 41538

பதிப்பகத்தார்

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி

8, ரங்கநாதன் தெரு, சென்னை-17

லிப்கோவின் மகத்தான வெளியீடு!


ஸ்ரீமத் ராமாயண வெளியீடு விவரம்:

(மொத்தம் சுமார் 5000 பக்கங்கள்)

1. பால காண்டம் (850 பக்கங்கள்)
2. அயோத்யா காண்டம் (412 பக்கங்கள்)
3. ஆரண்ய காண்டம் (210 பக்கங்கள்)
4. கிஷ்கிந்தா காண்டம் (190 பக்கங்கள்)
5. ஸுந்தர காண்டம் (474 பக்கங்கள்)
6. யுத்த காண்டம் (504 பக்கங்கள்)
7. உத்தர காண்டம் (276 பக்கங்கள்)
8. ஸ்ரீமத் வால்மீகி ராமாயண தத்வார்த்த தீபிகை (ராமாயண நோட்டுகள்) (472 பக்கங்கள்)
9. இக்ஷ்வாகு குலதனம் என்னும் ஸ்ரீரங்க மாஹாத்மியம் (440 பக்கங்கள்)
10. ஸ்ரீ ராமஸ்தோத்ரமாலா (352 பக்கங்கள்)
11. ஸ்ரீமத் ராமாயண பாராயண வகைகளும் முறைகளும், ஸ்ரீ ராம பூஜா மந்த்ராநுஷ்டான க்ரமமும் (96 பக்கங்கள்)
12. ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம் (24 பக்கங்கள்)
13. குமாரனும் கோசலை குமாரனும் என்னும் திருப்புகழில் ராமாயணம் (80 பக்கங்கள்)
14. Select Shrines of Sri Rama (Art Plates) (114 பக்கங்கள்)

இலவசமாக அளிக்கப்படுபவை (கையச முன்னளவரை):

15. ஸம்ஸ்க்ருத ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் (754 பக்கங்கள்)
16. ஸ்ரீராமர் அநுமினியப் படம்
17. ஸரஸ்வதி பீடம் (சிக்குப் பலகை)
18. அக்ஷதை பரணி
19. திலகப் பை
20. மேற்கண்டவைகளைத் தாங்கும் மரப்பெட்டி




பனாமா
இழுக்க இழுக்க இன்பம் இறுதிவரை
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco leaves.
செழுமையான வர்ஜீனியாப் புகையிலை
சீர்நிரவிய கலவை
புதுமை மயமானது

கல்கி பொருளடக்கம்

புத்தாண்டு மலர்




மூஷிகர்: விநாயகப் பெருமானே! புதுவருஷத்திலே பஸ் கட்டணம் அதிகமாகி யிருக்காம். நானும் உங்க வாகன மானதிலே பார்த்துவிட்டுப் போகலாம்னு வந்தேன்!

சோபகிருது, பங்குனி 30 ★ ஏப்ரல் 12

"கல்கி"யில் வெளியாகும் கதைகளின் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


PK
சுப்ரீம் கோர்ட்
திருத்தம்


காங்கிரஸ்
கட்சிக்கு நன்கொடை
தொழில் சமூகம்
வரிகள்
PK



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிட்டடி பாப்பா — பாரதியார் | இதழ் 37

புத்துணர்ச்சி தரும் புத்தாண்டு

நேயர்கள் யாவருக்கும் நமது நேயமான புத்தாண்டு வாழ்த்துக்கள் !

நமது நாட்டு விழாக்களில் பெரும்பான்மையானவை உழவோடு தொடர்புடையவைதான். பயிர்பச்சைகள் செழித்து வளரும் வஸந்தத்தின் தொடக்கத்தையே புத்தாண்டாக நாம் கொண்டாடி மகிழ்கிறோம். இந்தச் சமயத்தில் நம் நாட்டு உழவின் நிலையையும் உணவு படைப்பவரின் நிலையையும் சிந்திப்போமாக.

'சமதர்மம்' என்ற போலிப் பெயரில் விவசாயிகளுக்குத் தீங்கு செய்தால் அந்தத் தீங்கு விவசாயிகளோடு நிற்காது. விவசாயத்தையே பாதித்து உணவு உற்பத்தியைக் குறைக்கும். நாட்டில் துர்பிட்சம் நேரிடும். எனவே, வித்தியாசமின்றி மக்கள் எல்லோரும் உணவுக்கு அவதிப்படும் 'சமதர்ம'த்தில்தான் நிலச் சொத்துக்களை அழிக்கும் சட்டங்கள் முடிவுபெறும். நிலச் சொத்துரிமையை அழிக்கவும், அதனை நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்கு அப்பாற்படுத்தி, ஆட்சியாளர்கள் மனம் போனபடி பறிமுதல் செய்யவும் சர்வ சுதந்திரம் அளிக்கும் மசோதாவே 'பதினேழாவது திருத்தம்.' இம்மசோதாவை எதிர்த்து மார்ச் 30ந் தேதியன்று புது தில்லியில் நடைபெற்ற மகாநாட்டையும், ஊர்வலத்தையுமே புத்தாண்டின் தொடக்கம் — புது யுகத்தின் தொடக்கம் — எனக் கொள்ளலாம். பாரதத்தின் சகல ராஜ்யங்களையும் சேர்ந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட விவசாயப் பிரதிநிதிகள், மகாநாட்டில் கூடியிருந்தனர். உள்ளத்தைத் திருத்தி உழவு செய்யும் உத்தமத் தலைவர் ராஜாஜி, தலைமை தாங்கி நில உரிமை மகா சாஸனத்தை வெளியிட்டார். 1951ம் ஆண்டில் அரசியல் சாஸனம் திருத்தமானபோது 'ஜமீன்தார்களுக்காகச் செய்யப்பட்ட சட்டம், உண்மையான நில உரிமையாளரின் விஷயத்தில் ஒருகாலும் அமுலாகாது' என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இதே அரசாங்கத்தின் சார்பில் பாராளுமன்றத்தில் வாக்குறுதி தந்திருந்ததை ராஜாஜி நினைவுபடுத்தினர். கொடுத்த [illegible]க்கைக் காப்பாற்றாத அரசாங்கம் ஓர் அரசாங்கமா? வாக்குறுதியைக் காப்பாற்ற உயிர்த் தியாகமும் செய்யத் தயாராக இருந்த ஹரிச்சந்திரனும், தசரதனும் வாழ்ந்த நாட்டிலா இப்படி ஒரு நிலை?

மக்கள் நியாயமான முறையில் ஈட்டி, நேர்மையாகப் பரிபாலித்து வரும் சொத்துக்களைக் காத்துத் தர ஏற்பட்டதுதான் அரசியல் சாஸனம். சர்தார் படேல் வாழ்ந்த வரை இந்த உரிமைகளுக்கு மதிப்பிருந்தது. பின்னர் மக்களின் சுதந்திரங்களெல்லாம் தேய்பிறையாகத் தேய்ந்து, இப்போது பூரண இருளைப் பரப்பும் வகையில், உணவு உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கும் பதினேழாவது திருத்தம் பிரேரணையாகியுள்ளது.

புது தில்லியில் கூடிய விவசாயப் பிரதிநிதிகளின் எதிர்ப்புணர்ச்சி இன்று நாடெங்கிலும் பரவ வேண்டும். 'பதினேழாவது திருத்தம் யாரோ ஒரு சிலரைக் குறித்த பிரச்னை' என்று மக்கள் அலட்சியமாக இராமல், உணவு உற்பத்தியை நாசமாக்கும் இந்தத் திட்டம் தங்கள் வயிற்றிலேயே மண்ணைப் போடும் திட்டம் என்று உணர்ந்து அதனைத் தீவிரமாக எதிர்க்க வேண்டும். அச்சத்தையும், அசூயையையும் விட்டு எதிர்க்க வேண்டும். இந்த ஆண்டுக்கு 'குரோதி' என்று பெயர். குரோதமே கூடாது என்பதுதான் பெரியோரின் உபதேசம். என்றாலும், மறத்துக்கும் சார்புடைய அன்பின் அடிப்படையில், மக்கள் தார்மிகமான முறையில் ஆத்திரம் கொண்டு, தங்கள் தூக்க நிலையைக் கலைத்து, ஆட்சியாளரை எதிர்க்கவேண்டியது அவசியம். இதை நினைவுபடுத்திப் புத்துணர்ச்சி ஊட்டவே இவ்வாண்டு 'குரோதி'யாகப் பிறந்திருக்கிறதோ என்று எண்ணுகிறோம்.

என்ன சேதி?

நல்லதொரு யோசனை

நாட்டில் உள்ள சோஷலிஸ்ட் கட்சிகள் எல்லாம் காங்கிரஸோடு இணைந்து விட வேண்டுமென்று திரு அசோக மேதா நல்ல யோசனை கூறியிருக்கிறார். காங்கிரஸானது சோஷலிஸம் என்ற பெயரில் தேசத்தின் செல்வ உற்பத்தியைச் சர்க்காரின் அதிகாரத்துக்குள் முற்றிலும் அடக்கிக்கொள்ளத் தீர்மானித்து விட்டபின் சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என்று பல பிரிவுகள் இருப்பதில் பொருத்தமில்லை. பிரிந்திருப்பதால் வாக்காளர்கள் குழப்பமடைவது தவிர வேறு ஒரு பயனுமில்லை.

இதேபோல் சர்க்கார் சர்வாதிபத்தியத்தை எதிர்க்கும் கட்சிகள் ஒன்றாக இணைந்துவிட்டால் நமது ஜனநாயகம் உருப்பெறும். ஆயினும் இந்த இணைப்புக்காக எடுக்கப்பட்ட சுதந்திரக் கட்சியினரின் முயற்சி துரதிர்ஷ்டவசமாக இதுவரை பயனளிக்கவில்லை. புத்தாண்டிலேனும் கொள்கைகள் சரியாகப் பாகுபாடு ஆகி இணைப்புக்கள் தோன்ற வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

நிதானத்தில் தவறென்ன?

"திட்டங்களை ஆமை வேகத்தில் அமுல் நடத்தும்படி ராஜாஜி கூறுகிறார்" என்று ஸ்ரீ அசோக மேதா சொல்லியிருக்கிறார். பொய் சொல்லுவது காங்கிரஸ்காரரின் உரிமை என்று இருந்தோம். அசோக மேதா அவர்களும் காங்கிரஸ் பாணியில் பேசுகிறார்.

இன்றைய காங்கிரஸ் திட்டங்களால் மக்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்புக் கிடைக்காது. செல்வ உற்பத்தியைப் பெருக்கும் தொழிலும் இத்திட்டங்களால் வளராது. நமது திட்டங்கள் எல்லாம் வெளிநாட்டாரின் பெரும் பாராட்டைப் பெறுவதற்காகவே நடத்தப்படுகின்ற டம்பாச்சாரித் திட்டங்கள். இவற்றை அமுல் நடத்த வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்குவதும் உள்நாட்டில் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் வரிவிதிப்பதும் காகிதப் பணத்தை அச்சடித்து நாட்டில் புழங்கவிட்டு விலைவாசிகளை உயர்த்துவதும் நியாயமல்ல என்பதாலேயே டாம்பீகத் திட்டங்கள் இப்பொழுது வேண்டாம் என்கிறார் ராஜாஜி.

டாம்பீகத் திட்ட முறைக்கு ஓர் உதாரணம் போதும்: பெனிஸிலின் மருந்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி வரிகள் எல்லாம் செலுத்திய பிறகும் மிகக் குறைந்த விலைக்கே நம் நாட்டில் பெற முடிந்தது. அதை நிறுத்தி நம் நாட்டிலேயே பெனிஸிலின் செய்ய வேண்டும் என்று ஆரம்பித்தனர். இறக்குமதியான பெனிஸிலின் விலையைவிட உள்நாட்டுப் பெனிஸிலின் விலை நான்கு மடங்கு அதிகம். இது வெறும் டம்பாச்சாரித் திட்டம் அல்லாமல் வேறு என்ன? இந்த வகையைச் சேர்ந்ததுதான் எஃகு ஆலைகளும்.

இவற்றையெல்லாம் நிதானமாக நடத்தலாம் என்று சொன்னால் என்ன தவறு?

ஒரு கடிதம்

அயல்நாடு சென்றுள்ள தமிழர்கள் பலர். இந்தத் தமிழர்களின் நிலையை நினைவுறுத்தும் ஒரு கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம்:

> பர்மா நாட்டில் வாழும் இந்தியர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அதனால் அவர்கள் சாப்பாட்டுக்குத் திண்டாடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. பலநாட்கள் பட்டினியுடன், படுப்பதற்கு இடமில்லாமல் அவர்கள் இருப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன. இதைப் பற்றிக் கேட்க முடியாத நிலையில் உள்ள அந்நிய நாட்டிலாகா, பிரதமர் நேருவின் கையிலேயே இருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க முடியாத காங்கிரஸ் சர்க்கார் தேவையா என்பதைச் சிந்தியுங்கள்!


முதுகுளத்தூர் ஆர். எம். அப்துல் கரீம்
28—3—64

காலவனத்தில் ஆடும் கோலவனிதை

வண்ணங்களும், மணங்களும், கலைகளும் பொங்கிப் பாயும் வேனில் என்ற ஊஞ்சலில் இயற்கை அன்னை காலமாம்வனத்தில் ஊஞ்சலாடி மகிழ்கிறாள். இந்த ஆட்டத்தின் தொடக்கமே புத்தாண்டின் தொடக்கமும் ஆகும். வேனிலின் வெப்பத்திலும் மலர்ச்சி காணும் பிரகிருதி சுந்தரியை நமது அட்டைச் சித்திரத்தில் காணும் போது, துன்பத்தில் வறுபடும்போதும் மலர்ச்சி காண்பதே மனித வாழ்வு என்ற பேருண்மையை நினைவு கொள்கிறோம். வெப்பத்திலும் வாடாத உள்ள மலர்ச்சியை வாசக நேயர்கள் யாவரும் பெற வாழ்த்துகிறோம்.

கோர பவ
சாகரத்தில்
ஆழ்ந்துழலும்
நம்மை - மிகு
ப்ரேமையுடன்
கைதூக்கி
அபயமருள்
வேத சார
தாரகரூபன்




STEPPED
STEEL
TUBULAR
POLES
KALINGA TUBES LTD.
33, CHITTARANJAN AVENUE,
CALCUTTA—12.



சுதந்திர வணக்கம்

சுதந்திரக் கட்சி தனக்கென்று தேர்ந்தெடுத்துள்ள வணக்க முறையைத் தலைவர் ராஜாஜி புரிந்து காட்டுவது போல் படமெடுத்துப் பிரசுரிக்க வேணுமென்று மேட்டூர் அணையைச் சேர்ந்த ச. முத்துகிருஷ்ணன் அவர்கள் விரும்பி எழுதினர். அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்திருக்கிறோம். முதலில் எல்லோரையும் அழைத்து, அன்பினால் கையில் அடக்கம் செய்து கொள்வதுபோல் கையை மூடிச் சமிக்ஞை செய்து, பின்னர் அவர்களை யெல்லாம் சுதந்திரமாக விடுவது போலவும் சுதந்திரக் கட்சியின் சின்னமான ஐந்து மூலை நட்சத்திரத்தைக் குறிப்பதுபோலவும் கைவிரல்களை விரிப்பதே இந்தச் சமிக்ஞை. கூட்டமாக அன்பர்கள் இவ்வாறு கையை மூடித் திறக்கும் காட்சியைக் கண்டாலே சிட்டுப் புள்ளினங்கள் ஆனந்த சுதந்திரத்துடன் சிறகடித்துப் பறப்பதைக் காண்பதுபோல் ஒரு புல்லரிப்பு ஏற்படும்.

விட்டு விடுதலையாகி நிற்பாய் — இந்தச்
சிட்டுக் குருவியைப் போலே

என்று கவியரசர் பாடியதற்கேற்ப, பட்சி பறக்கும் பாவத்தில் விடுதலை உணர்வையூட்டும் இந்த வணக்க முறையைச் சுதந்திரக் கட்சி அபிமானிகள் பின்பற்ற வேணும்.




முற்றும் புதியது!
3 ரம்மியமான, புகழ் பெற்ற வாசனைகள்...
கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்திற்குப் போஷாக்கும் நறுமணமும் கொடுத்து புதிய வசீகரத்தையளிக்கிறது
நீண்ட
செழிப்பான
கூந்தலை
வளர்க்கிறது
உங்களுக்குப்
பிடித்தமான
கூந்தல்
அலங்கரிப்
புக்கு
காந்தியளிக்
கிறது
கால்கேட்டிலிருந்து மிகவும் பரபரப்பூட்டும்
ஹேர் ஆயில் செய்தி
புதியது! கால்கேட் பெர்ப்யூம்டு
கோகோனட் ஹேர் ஆயில்
உங்கள் கேசத்தை அழகுபடுத்தி நறுமணமளிக்கிறது
3 வசீ
கரிக்கும்
சுகந்தங்களில்
ரோஜா
லவண்டர்
மல்லிகை
COLGATE
உங்கள் கேசத்தின் உண்மையான அழகை வெளிப்படுத்த உதவுவதும்...
உங்கள் குடும்பம் முழுவதும் மிகவும் விரும்பும் நறுமணம் கொண்டதுமான
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலுடன்
மற்றொரு நேர்த்தியான துணைத்தயாரிப்பு
COHO. 9.3 TAM.

போகிற போக்கில்



காங்கிரஸ் கோட்டை சரிந்து வருகிறது என்பதற்குப் பல சான்றுகள் தோன்ற ஆரம்பித்திருக்கின்றன. அண்மையில் நடந்து முடிந்த ராஜ்ய சபைத் தேர்தல்களில் மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் வேட்பாளர்கள், காங்கிரஸுக்கு எதிர்த்தரப்பில் வோட்டளித்ததாலேயே தோல்வி கண்டிருக்கிறார்கள். சாக்கோ விவகாரச் சனியன் பிடித்திருக்கும் கேரள மந்திரி சபை நிறுத்திவைத்த வேட்பாளர் போன இடம் தெரியாமல் தோல்வியடைந்திருக்கிறார். இதை அடுத்துப் பஞ்சாபிலும் பீஹாரிலும் இதே நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது. சென்னையைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. எப்படியோ கோட்டை சரிந்தால் சரி. அப்படிச் சரிந்து முடிகிற நாள் இந்தியர்களுக்கே ஒரு விமோசனமான நாளாகும்.

ஃ ஃ ஃ

மத்தியப் பிரதேச சட்டசபையில் ஒரு ரசமான சம்பவம் நடந்திருக்கிறது. காங்கிரசார் கொண்டு வந்த தீர்மானம் ஒன்றை எதிர்க்கட்சிகள் தோல்வியுறச் செய்யக் கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டதாம். இருபத்தோரு காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் வோட்டெடுக்கிற சமயம் வெளியிலே அவசரமாகப் போய் விட்டார்களாம். வோட்டு எடுக்கிற பொழுது எதிர்க் கட்சிகளின் வோட்டும் ஆளும் கட்சியினுடைய வோட்டும் சரி சமமாகவே, சபாநாயகர் தமது வோட்டை ஆளும் கட்சிக்குப் போட்டு உயிர்ப் பிச்சை அளித்திருக்கிறார். இந்தச் செய்தியைக் கேட்ட காங்கிரஸ் மேலிடத்தினர் அதிர்ச்சியடைந்து, அவசரமாக வெளியே போன அந்த 21 பேர்கள்மீது நடவடிக்கை எடுக்க நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்களாம். இப்படிக் கொடுப்பதற்குப் பதிலாக அதிக நேரம் யார் சட்ட சபையிலே இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்குப் படி உயர்வு தரப்படும் என்று ஒரு மசோதா கொண்டு வருவதில் மேலிடம் தனது கவனத்தைச் செலுத்தக்கூடாதோ?

ஃ ஃ ஃ

ஷேக் அப்துல்லா அவர்கள் விடுதலையாகி வெளியே வரப்போகிறார். சுமார் பத்தாண்டு காலம் வரையில் சிறையிலே இருந்து இப்பொழுது வெளிவரும் அவர் எப்படி நடந்து கொள்வார் என்று டில்லியில் ஜோஸ்யங்கள் அடிபடுகின்றன. இந்த ஜோஸ்யங்கள் ஒருபுறமிருக்க ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி பாராளுமன்றத்தில் பேசும்போது ஷேக் அப்துல்லாவின் விடுதலைச் செய்திக்கும் டில்லிக்கும் சம்பந்தமில்லை என்றும் காச்மீர சர்க்காரின் செய்தியைக் கண்டு டில்லி அரசு ஆச்சரியப்படுவதாகவும் தெரிவித்திருக்கிறார். டில்லிக்குக் கட்டுப்பட்ட காச்மீர அரசாங்கம் இப்படிப் புரட்சி செய்துவிட்டது என்கிற வருத்தம் அவருக்கு இருப்பதாக அவரது பேச்சில் தொனிக்கிறது. வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? செய்கிற காரியத்தை, செய்ய வேண்டிய நேரத்தில், செம்மையாகச் செய்யாதவர்களுக்கெல்லாம் இந்தக் கதிதான் ஏற்படும். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த காச்மீர அரசாங்கம் இனி பொறுப்பதில் பயனில்லை என்று ஷேக் அப்துல்லாவைத் தானாக விடுதலை செய்கிறது. வெளியிலே வருகிற ஷேக் அப்துல்லா குழப்பத்திலுள்ள காச்மீரச் சிக்கல்களைச் சுமுகமாகத் தீர்க்க உதவுவாரென எதிர்பார்ப்போமாக.

இவ்விஷயமாக ராஜாஜி சென்ற வார 'ஸ்வராஜ்யா'வில்தான் எழுதியிருந்தார் என்பதையும், சமீபத்தில் டில்லி சென்றிருந்த அவர் ஷேக் அப்துல்லாவின் விடுதலையை வற்புறுத்தினார் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, சிட்டுக்குருவி இந்த அதிசய மனிதரின் சிந்தனா சக்திதான் காச்மீர சர்க்காரைத் தூண்டி விட்டிருக்குமோ என வியக்கிறது.

ஃ ஃ ஃ

மாற்றுத்தாயிடம் சிக்கி அவதிப்பட்ட ஒரு குழந்தை தனக்குத் தந்தையாவது உதவியாக இருக்க மாட்டாரா என்று அழுது கொண்டே சென்றதாம். அழுது வரும் குழந்தையைக் கண்ட தந்தையும், "அழுவதுதான் அழுகிறாய், இதையும் வாங்கிக் கொண்டு அழு" என்று முதுகில் ஒரு போடு போட்டாராம். அதைப் போல் மத்திய அரசாங்கத்தின் மறைமுக — நேர்முக வரிகளால் துன்புறும் சென்னை வாசிகளுக்குத் தமிழ்நாட்டு அரசாங்கம் ஒரு புதுக் கொடுமையை இழைத்திருக்கிறது. 7 காசாக இருந்த பஸ் கட்டணம் இந்த மாதம் முதல் தேதியிலிருந்து 10 காசாக உயர்ந்துவிட்டது. அரையணா திடீரென்று ஏறுகிற தென்றால் ஏற்கனவே அரை வயிறாகக் கிடக்கும் மக்கள் என்ன மாதிரியாக இந்தப் புது நெருக்கடியைச் சமாளிப்பார்கள்?

தனியார் தொழிலைவிடச் சர்க்கார் தொழில் சிறந்ததல்ல என்பதற்கு இது போன்ற உதாரணங்களே போதும்.

இதற்கெல்லாம் விடிவு காலம் வராதா என்றால், வோட்டுப் போடும் மகாஜனங்கள் அல்லவா பதில் சொல்ல வேண்டும்? அவர்கள்தான் தூங்கிக் கொண்டிருக்கிறார்களே!

ஃ ஃ ஃ

ஒருபுறத்தில் விஞ்ஞானிகள் பற்றாக்குறை இருப்பதாகவும், மற்றொரு புறத்தில் விஞ்ஞானிகள் வேலை இல்லாமல் இருப்பதாகவும் பாராளுமன்றப் பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு எடுத்துக் காட்டுகிறது. தணிக்கைக் குழு கூறியிருக்கிற உண்மை விஞ்ஞானிகளுக்கு மட்டும் பொருந்துவதல்ல. சர்க்கார் பராமரிப்பில் எத்தனை இலாகாக்கள் இயங்குகின்றனவோ அந்த எல்லா இலாகாக்களிலும் இதே நிலைமைதான் நிலவுகிறது. — சிட்டுக்குருவி

ஹோட்டல் கதம்பம்

"ஏனப்பா! சூடாக என்ன இருக்கிறது?" என்று ஒரு சாதாரண ஹோட்டலுக்குள் வந்து அமர்ந்த அன்பர் பரிமாறுபவரைப் பார்த்துக் கேட்கிறார். 'என்ன இருக்கிறது?' என்று அவர் கேட்டு, முதல் வாய்பாடிலிருந்து பதினாறும் வாய்பாடு வரை ஒப்புவிக்கத் தயாராகும் பள்ளிப் பையனின் நிலை தனக்கு நேராமல் இருந்ததற்கு உள்ளூற நன்றி ஏற்பட்டாலும், அதன் விளைவு தன் முகத்தில் படராமல் பார்த்துக் கொண்டு விருப்பு வெறுப்பு அற்ற ஞானியின் குரலில் "பஜ்ஜி, போண்டா, மெது வடை இருக்கு" என்று சொல்லி வயலின்காரருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும் பாடகரைப் போல் ஒரு கணம் நிறுத்தி, ஆனால் உடனேயே விட்ட இடத்தில் ஸ்வரத்தைப் பிடிக்கும் பாணியில், "சுமாரான சூடு தான் சார்! வெதுவெதுப்பாக இருக்கும்" என்று முடிக்கிறார் சர்வர்.



டிபன் சாப்பிடவந்த அன்பரின் முகத் தாமரை, கதிரவனையும் நிலவையும் சேர்ந்தாற் போல் தொடர்ந்து கண்ட விதத்தில் மலர்ந்து மூடுகிறது. அத்துடன் அவர் பசியும் போய் விடுகிறது. "காப்பியையாவது சற்றுச் சூடாகக் கொண்டு வா!" என்று உஷ்ணம் கலந்த உத்தரவைப் பிறப்பித்து விட்டுப் பெருமூச்சு விடுகிறார். பரிமாறுபவர், வானிலை அறிக்கை போல விளக்கம் கொடுக்காமல் பஜ்ஜியையோ வடையையோ கொண்டு வந்து வைத்திருந்தால் அவர் சாப்பிட்டு விட்டே போயிருப்பார். ஆனால் மனோதத்துவம் தெரியாத பரிமாறும் நபர், வாடிக்கைக்காரரின் பசியை ஒழித்த வேகத்திலேயே முதலாளியின் வியாபாரத்தையும் ஒழித்து விடுகிறார். இரண்டைப் பற்றியும் அவருக்குக் கவலை இல்லை.

ஆனால் மேலை நாடுகளில் ஹோட்டல்கள் நடத்துவதை ஒரு கலையாகவே கையாளுகிறார்கள். அதில் மனோதத்துவம் விளம்பரத்துடன் கலந்து மெருகேற்றுகிறது.

நூறு வருடங்களுக்கு முன்னமேயே லண்டன் நகரிலிருந்த ஓர் ஓட்டல் நுழைவு கதவில் வெளிப் பக்கம் 'கான்கேவ்' கண்ணாடியையும் உட்பக்கம் 'கான்வெக்ஸ்' கண்ணாடியையும் பெரிதாக அதன் உரிமையாளர் பதித்து வைத்திருந்தார்.

வாசலில் நுழையுமிடத்தில் 'எங்கள் ஓட்டல் பண்டங்களை ருசி பாருங்கள்' என்ற போர்டு உண்டு. அந்த வாசகத்தைப் படித்தவாறு கண்ணாடியில் தங்கள் உருவத்தைப் பார்த்துக் கொள்பவர்கள், ஏதோ பஞ்சத்தில் அடிபட்டுப் பல நாட்களாகப் பட்டினி இருந்தவர்கள் போலப் பிரதிபலிக்கப் படுவார்கள்.

உள்ளே போய்ச் சாப்பிட்டு விட்டு வெளியே வரும் இடத்தில் உட்பக்கமாகப் பார்த்துப் பதிக்கப்பட்டிருக்கும் கண்ணாடி, உருவங்களைக் கட்டை குட்டையாகக் குண்டாகக் காண்பிக்கும். அந்த ஓட்டலில் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பியதன் விளைவாக ஒரு சுற்றுப் பருத்து விட்டது போலப் பிரமை வாடிக்கைக்காரர்களுக்கு ஏற்பட இது ஓர் ஏற்பாடு. இந்த வேடிக்கையை ரசிப்பதற்காகவே அந்த ஓட்டலில் கூட்டம் கூடும். முதலாளியின் பணப் பெட்டியும் நிரம்பும்.



அமெரிக்க நாட்டில் காட்ஸ்கில் மலைப் பகுதியில் உள்ள ஓர் ஓட்டல் உரிமையாளர் தமக்கே உரித்தான பிரத்தியேக வழி மூலம் வாடிக்கைக்காரர்களின் எண்ணிக்கையை ஏற்றுகிறார். அவர் ஓட்டலில், தேன்நிலவைக் கழிக்க வரும் புது மணத் தம்பதிகளுக்குப் பிரத்தியேக உபசாரம் நடக்கிறது என்று பிரபலமாகி விட்டது. புதிய தம்பதிகள் ஓட்டலுக்கு வந்து தங்கியதுமே அவர்களைக் கொண்டு ஓட்டல் காம்பௌண்டில் ஒரு சிறு மரம் நடு விழாவை நடத்துகிறார். அவர்களுடைய பெயர்களையும், இரு மணத் தேதியையும் ஒரு வெள்ளிப் பலகையில் செதுக்குகிறார். அப்புறம் எத்தனை வருடங்களானாலும் அந்தத் தம்பதிகள் அந்தப் பகுதிக்குப் போகும் போதெல்லாம்



அந்த ஓட்டலில் தங்குகிறார்கள். தாங்கள் நட்ட மரத்தின் வளர்ச்சி கண்டு பூரிக்கிறார்கள். ஓட்டல் நிர்வாகியும் தம் வியாபார வளர்ச்சி கண்டு மகிழ்கிறார்.

இந்த மாதிரி நவீன யுக்திகள் தோன்றியதற்கு வெகு நாட்களுக்கு முன் பாரிஸ் நகர ஓட்டல் சொந்தக்காரர் ஒரு விநோத விளம்பரத்துக்கு ஏற்பாடு செய்தாராம். பத்து பளபளத்த வழுக்கைத் தலையர்களைப் பொறுக்கி அவர்களுக்கு உயர்ந்த ரக ஆடைகளையும் தொப்பியையும் அணிவித்து நகரத் தெருக்களில் நடக்கச் சொல்வாராம். எதிரும் புதிருமாக வரும் அவர்கள் தத்தம் குல்லாய்களைத் தூக்கிப் பரஸ்பரம் வந்தனம் செலுத்துவார்கள். அப்போது பளபளக்கும் அவர்களுடைய தலைகளில் பளிச்சிடும் அந்த ஓட்டலின் பெயர் பொது ஜனங்கள் கண்களையும் கருத்தையும் கவருமாம்!


மேரி வாண்டு பகுதியில் ஓர் ஓட்டல் நிர்வாகி புதிதாக ஓர் உணவுப் பண்டத்தைத் தயாரித்து வாடிக்கைக்காரர்களுக்கு அறிமுகப் படுத்தினார். ஆனால் அதற்கு அவ்வளவாக அதிருஷ்டமில்லை. அந்த ஓட்டல் அபிமானிகள் புதிய பண்டத்தைப் புறக்கணித்துப் பழைய ரகங்களிலேயே பிரேமைகொண்டிருந்தார்கள்.

முதலாளியோ ஒரு விடாக்கண்டர்.


ஏற்கனவே ஓட்டலில் கிடைக்கும் ஆகார விலைப் பட்டியல்களை அப்புறப் படுத்திப் புதிதாக ஒரு பட்டியல் தயாரித்தார். அந்தப் பட்டியலில் தம்முடைய புதிய தயாரிப்பின் பெயரைத் தலைகீழாய் அச்சடிக்கச் செய்தார். விலைப் பட்டியலைப் பார்த்துக்கொண்டே வரும் வாடிக்கைக்காரர்கள் அந்த இடம் வந்தவுடன் சற்றுத் தடுமாறுவார்கள். பட்டியலைத் தலைகீழாய்ப் பிடித்து அந்தப் பெயரைச் சிரத்தையுடன் படிப்பார்கள்.

இந்தத் தலைகீழ் விளம்பரம், அவருடைய தயாரிப்பைத் தலை நிமிரச் செய்து விட்டது!

—திருவேரகத்தான்









[லியோனர்ட் மோஸ்லி எழுதிய பூனையும் எலிகளும் என்ற உண்மைக் கதையின் சுருக்கம் இது. கெய்ரோவில் நரிக் குகை என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் திரைப்படமாகவும் வெளிவந்திருக்கிறது. திரைப்படம்: பாரமவுண்ட்: நூல் பிரசுரம்: ஹார்ப்பர் பிரதர்ஸ் — டெல்மாண்ட் புக்ஸ்.]



ஹிட்லருடைய ஆலோசகர்கள் பலர் ரோமல் ரொம்ப அவசரப்படுகிறார் என்று அபிப்பிராயப்பட்டார்கள். பிரிட்டிஷ் ஆளுகையின் கீழிருந்த சிறிய தீவான மால்டாவைக் கைப்பற்றி அதன் மூலம் மத்தியதரைக் கடலில் நேச நாடுகளின் கப்பல் போக்குவரத்தை முழுமையாகத் தடை செய்ய வேண்டும். பிறகுதான் ரோமல் மேலே முன்னேற வேண்டும் என்பது அவர்கள் யோசனை. ஆனால் ரோமல் ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதியும் தந்திக்கு மேல் தந்தி அடித்தும் கெய்ரோவில் ஜெர்

கெய்ரோவில் நரிக்குகை

மானியப் படைகள் வெற்றி வீரர்களாக நுழையும் காட்சியைப் படமாக்கியிருந்தார் அவர்கள் உள்ளத்தில். பிரமிட்களுக்குப் பக்கத்தில் ஸ்வஸ்திகச் சின்னம் பறப்பதையும் இன்னும் நைல் நதியைத் தாண்டி அரேபியா பர்ஷியா வழியாக இந்தியாவுக்குச் செல்லும் பாதை ஜெர்மானிய வீரர்களை வரவேற்பதையும் மனக் கண் முன்னால் கண்ட ஹிட்லர், ரோமல் மேலே முன்னேற ஊக்கம் அளித்தார். இதனால் ரோமலுக்கு ஏற்ற நம்பகமான ஓர் ஒற்றனைக் கெய்ரோவில் அமர்த்த வேண்டியது மிகவும் அவசியமாயிற்று. இந்தப் பொறுப்பை ஜான் எப்லர் ஏற்றுத் திறமையாகச் செயலாற்றுவான் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.

1914ல் அலெக்ஸாண்டிரியாவில் பிறந்தான் எப்லர். அவன் தாய் தந்தையர் ஜெர்மானியரே. எனினும் அவன் பிறந்த சிறிது காலத்திலேயே தகப்பனை இழந்து விட்டான். தாய் ஓர் எகிப்தியரைக் காதலித்து மணம் புரிந்துகொண்டாள். ஜான் எப்லர் ஹுஸைன் காபராக மாறினான். பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த வேறு பல எகிப்திய சிறுவர்களைப் போலவே ஹுஸைன் ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பப்பட்டான். ஆகவே விரைவில் அரபிக், ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மூன்று மொழிகளிலும் நல்ல தேர்ச்சி பெற்று விட்டான்.

வருஷங்கள் சென்றன. உலகப்போர் மூண்ட சமயம் பெர்லினுக்குப் போன அவன் விரைவிலேயே ஜெர்மானிய ஒற்றர்களுள் மிக முக்கியமானவனாகி விட்டான்.

உண்மைக் கதை

இன்று ரோமலிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட எப்லருடன் பீடர் மான்காஸ்டர் என்பவனும் வந்தான். எப்லர் தன் உதவியாளனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்ட ரேடியோ நிபுணன் அவன். அவர்கள் கரங்களில் இரண்டு பெட்டிகள் இருந்தன. ஒன்றில் சக்தி வாய்ந்த ரேடியோ சாதனம். மற்றொன்றில் 50,000 பவுண்டுகளுக்குப் பிரிட்டிஷ் கரன்ஸி நோட்டுக்கள்.

கெய்ரோவில் ஷெப்பர்ட் ஹோட்டலில் இருவரும் அறை எடுத்துக் கொண்டனர். அன்றிரவு மான்காஸ்டர் படுக்கப் போனான். எப்லருக்குத் தூக்கம் வரவில்லை. எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு பிறந்த நாட்டுக்குத் திரும்பியிருக்கிறானல்லவா? அவன் வீதியிலிறங்கி நடந்தான். அவன் கால்கள் அவனைக் கிட்காட் கிளப்புக்கு இட்டுச் சென்றன. அங்கே அவன் எதிர்பார்த்தது போலவே சிறிது நேரத்தில் நடன அரங்கில் ஹிக்மத் தோன்றினாள். எகிப்து நாட்டுக்கே பிரத்தியேகமாக உரித்தான ஒரு நடனத்தை ஹிக்மத் ஆட ஆரம்பித்தாள்.

ஆட்டம் முடிந்து எப்லரைக் கண்டதும், "ஹுஸைன்!" என்று ஆச்சரியத்தோடு விளித்த ஹிக்மத் புன்முறுவலுடன் அவனை வரவேற்றாள்.

"என்னை உனக்கு நினைவிருக்கிறதே" என்றான் எப்லர் மகிழ்ச்சியுடன். சற்று நேரத்துக்குப் பின், "இந்தக் குடிகாரர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று சில பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்.

"எப்போதும் போலத்தான்; அவர்களை அடியோடு வெறுக்கிறேன். ஆனால் வேறு வழியில்லாமல் அவர்களைப் பார்த்துப் புன்னகை புரிய வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது."

"அப்படியானால் உனக்கு முக்கியமான வேலைகள் கொடுக்கப் போகிறேன்" என்று கூறினான் எப்லர்.

ஹிக்மத் அவனுக்கு நல்ல யோசனைகள் கூறி உதவினாள். "ஹோட்டல் அறையைக்

காலி செய்துவிடு. நைல் நதியில் வரிசையாக நிற்கும் பல படகு வீடுகளுள் ஒன்றில்தான் நான் வசிக்கிறேன். அதற்குப் பக்கத்தில் உள்ள படகு வீட்டில் பிரிட்டிஷ் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த மேஜர் ஒருவன் வசிக்கிறான். அதை அடுத்து ஒரு படகு வீடு காலியாக உள்ளது. அதை நீ வாடகைக்கு எடுத்துக் கொள். மேஜருடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே நீ வசிப்பதால் உன்னை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள்.''

எப்லர் மீண்டும் ஹுஸைன் காபராக மாறி ஹிக்மத் குறிப்பிட்ட படகு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். சீக்கிரமே மோட்டார் வான்களில் ஏராளமான உணவும் மதுவும் மட்டுமின்றி ஒரு மிகப் பெரிய ரேடியோகிராமும் வந்து சேர்ந்தன. மான்காண்டர் ரேடியோகிராமில் நாற்பத்தெட்டு மணி நேரம் உழைத்தான். அதன் விளைவாக ரகசியச் செய்திகள் அனுப்பவேண்டிய எப்லருடைய ரேடியோ ஒலிபரப்பு யந்திரம் அந்த ரேடியோகிராமுக்குள் மறைந்திருக்குமாறு பொருத்தப்பட்டது.

நாட்கள் சென்றன. ரோமல் தனக்குத் தேவை என்று கூறியிருந்த விவரங்களை எங்கே தேடுவது? எப்படி அவற்றைச் சேகரிப்பது?

எப்லருடைய முயற்சிகளெல்லாம் தோல்வியையே அளித்தன.

ஹிக்மத்தைப் பல மாதங்களாகவே, ஒரு பிரிட்டிஷ் தளபதி தம் வயப்படுத்த நினைத்து அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டார். ஆனால் அன்று வரை அவரை ஹிக்மத் அலட்சியமே செய்து வந்தாள். அன்றிரவு கிட்காட் கிளப்பில் அவள் நடனம் முடிந்ததும் அவளுடைய ஒப்பனை அறைக்குள் வந்தார் மேஜர் ஸ்மித். ''நான் பாலைவனத்திலிடையில் உள்ள ஜெனரல் ரிட்சியின் தலைமைக் காரியாலயத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன். போவதற்கு முன்னால் இதை என் அன்பளிப்பாகத் தந்து விட்டுச் செல்ல எண்ணி வந்தேன்'' என்றார். அவர் கொடுத்தது வைரமும் மரகதமும் பதிக்கப்பட்ட ஒரு வளையல். ஹிக்மத் நன்றிப் பெருக்குடன் குழைந்தாள். ''அவ்வளவு அவசரமா?— இன்றே, இப்போதே புறப்பட வேண்டுமா? ஓர் இரவில் என்னவாகி விடும்?'' என்றாள்.

''மிகவும் முக்கியமானதும் ரகசியமானதுமான கடிதங்களை நான் ஜெனரல் ரிட்சிக்கு எடுத்துப் போகிறேன். அவற்றை ரேடியோ அல்லது டெலிபோன் மூலம் அனுப்பக்கூடாது. சாதாரணச் சேவகன் மூலமும் அனுப்பக் கூடாது என்பதால்தான் என்னை — ஒரு மேஜரை — தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்க நான் தாமதிக்கலாமா?'' என்றார் மேஜர் ஸ்மித்.

ஹிக்மத் உடனே விழித்துக் கொண்டாள். சற்று முன் அரைகுறை மனத்துடன் அவருக்கு அழைப்பு விடுத்த அவள் இப்போது தன் ஜால வித்தைகளை முழுமையாகக் காட்டத் தொடங்கி விட்டாள். மேஜர் ஸ்மித்தைக் கவர்ந்திழுத்துக் கொண்டு தன் படகு வீட்டுக்குச் சென்று விட்டாள். பல மாதங்களாகவே அவளிடம் எந்த இன்பத்தை எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தாரோ அந்த இன்பம் இன்று அவருக்குக் கிடைத்தது. கிடைத்தற்கரிய அந்த ஆசை பூர்த்தியானதும் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார் அந்தத் தலைநரைத்த மனிதர். மறு நாள் காலை இரண்டு மணி சுமாருக்கு எப்லரின் படகு வீட்டின் கதவைத் தட்டினாள் ஹிக்மத். அவனை அழைத்துக் கொண்டு தன் படகு வீட்டுக்குப் போனாள். அங்கே குடி போதையில் மேஜர் குறட்டை ஒலி எழுப்பிக் கொண்டிருந்தார்.

எப்லர் அவருடைய தோல் பையில் இருந்த கடிதங்களைப் படித்தான். படிக்கப் படிக்க அவன் உள்ளம் ஆனந்த தாண்டவம் ஆடியது. அவனுக்குத் தேவையானது அதாவது ரோமலுக்குத் தேவையானது எல்லாம் அதில் இருந்தன! அவசரம் அவசரமாய் எல்லா விவரங்களையும் குறித்துக் கொண்டான் எப்லர். அவன் போன பிறகு ஸ்மித்துக்குப் பக்கத்தில் மஞ்சத்தில் சயனித்தாள் ஹிக்மத். மெல்ல அவன் தலையை எடுத்துத் தன் நெஞ்சில் பதித்துக் கொண்டாள்.....



மறு நாள் விடிந்த பிறகு ஸ்மித்தை ஜெனரல் ரிட்சியிடம் அனுப்பி விட்டு எப்லரின் படகு வீட்டுக்கு வந்தான் ஹீக்மத். ஆனால் எப்லரின் முகத்திலும் மான்காஸ்டரின் முகத்திலும் சுபாடவில்லை. ''இரவு முழுதும் சிரமப்பட்டோம். எங்கள் செய்தியை மறுபுறத்தில் ஏற்றுக் கொள்வாரில்லை. என்ன செய்வதென்றே புரியவில்லை!''

அவர்களுடைய செய்திகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய, ரோமல்லின் முன்னணிப் படையைச் சேர்ந்த இரு ரேடியோ நிபுணர்களும் பிரிட்டிஷாரின் ராணுவக் கைதிகளாகக் கெய்ரோவில் இருந்தது அவர்களுக்கு அப்போது தெரிய நியாயமில்லையே? ஆனால் நல்ல வேளையாக அந்தக் கைதிகள் இருவரும் உறுதியான நெஞ்சத்துடன் இறுதிவரை ஊமையர்களாகவே நடித்து விட்டனர்.

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கவலையுடன் விசாரித்தான் ஹீக்மத். ''செய்ய என்ன இருக்கிறது? இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் ஏதென்ஸில் உள்ளோருடன் ரேடியோ தொடர்பு கொள்ள வேண்டும் என்பது மாற்று ஏற்பாடு. அதன்படி செய்து பார்க்கிறோம், இன்றிரவு. நள்ளிரவில் செய்திகளை அவர்கள் பெற்றுக் கொண்டதும் கடையைக் கட்டிக் கொண்டு கம்பி நீட்டிவிடுவோம்'' என்றான் எப்லர்.

விழுக்கம் போல் ஜெர்மானிய ஐந்தாம் படையின் தலைமைக் காரியாலயம் மிகவும் துணிச்சலான ஒரு காரியத்தில் இறங்கிவிட்டு அடிப்படையான ஒரு தவற்றையும் செய்திருந்தது. எப்லரை அனுப்பி விட்டு அவன் செலவுக்கு ஜெர்மனியில் அச்சடிக்கப்பட்ட பிரிட்டிஷ் பவுண்டு நோட்டுக்களைக் கொடுத்திருந்தது. கள்ள நோட்டு என்றே சாமான்யமான மக்களுக்குத் தெரியாத வகையில்தான் அவை அச்சடிக்கப்பட்டிருந்தன.

ஜெர்மானியர் பிரிட்டிஷ் பவுண்டு நோட்டுக்களை இரண்டு காரணங்களுக்காக அச்சடித்தனர். ஒன்று தங்களுடைய ஒற்றர்களுக்குப் பணம் தேவைப்பட்டது. இரண்டாவது அந்த ஒற்றர்கள் இயங்கும் நாடுகளில் இப்படிப் பவுண்டு நோட்டுக்களை வாரி விட்டால் பண வீக்கம் ஏற்பட்டு ஸ்டர்லிங்கின் மதிப்பு வெகுவாகக் குறையும். பிரிட்டனின் பொருளாதாரம் சீர்கெட்டால் அது ஜெர்மனிக்கு மிகவும் நல்லதுதானே?

ஆனால் கெய்ரோவில் ஒரு புதிய சட்டம் இயற்றி யிருந்தார்கள். இதன்படி கெய்ரோ வியாபாரிகள் தங்களுக்குக் கிடைக்கும் டாலர் அல்லது பவுண்டு நோட்டுக்களை நேரடியாகப் பாங்கில் கட்ட முடியாது. அவற்றைக் கெய்ரோவில் உள்ள பிரிட்டிஷ் பொருளாதார அதிகாரியிடம் தந்து அவற்றுக்கு ஈடான எகிப்திய நாணயங்களாகப் பெற்றுக் கொண்டு அவற்றையே பாங்குக்கு அனுப்ப வேண்டும். இம்முறையில் அமெரிக்க பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் செலவழித்த பவுண்டு, டாலர்—நோட்டுகள் எல்லாம் பிரிட்டிஷ் பொருளாதார அதிகாரியிடமே வந்து சேர்ந்தன.

1942 ஜூலை 27ந் தேதி மாலையில் யுவெட் என்று பெயர்கொண்ட ஒரு நாட்டிய மங்கை எப்லரின் படகு வீட்டுக்குள் நுழைந்தாள். அவனுடன் சமீப காலமாகச் சிநேகம் வைத்துக்கொண்டிருந்தான்' எப்லர். ஆனால் அவள் யூதர்களின் ஏஜென்ஸியைச் சேர்ந்தவள் என்பது அவனுக்குத் தெரியாது. அங்கே மான்காஸ்டரும் எப்லரும் நன்றாகக் குடித்து விட்டுக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாள் யுவெட். இன்று இரவோடு தங்கள் காரியம் முடிந்து விடும். அப்புறம் கெய்ரோவை விட்டுக் கம்பி நீட்டி விடலாம் என்கிற ஆனந்தத்தில் அவர்கள் நிறையக் குடித்து விட்டு உறங்கிக் கொண்டிருந்தனர். யுவெட் மேஜை மீது ஒரு புத்தகம் இருப்பதைப் பார்த்தாள்... டாப்னி டு மாரியர் என்ற நாவலாசிரியை எழுதிய ரிபெக்கா என்ற நாவல் அது. பக்கத்தில் சில காகிதங்கள் இருந்தன. அவற்றில் வரிசை வரிசையாகப் பல எழுத்துக்கள்காணப்பட்டன. புத்தகத்தின் இருபுறத்து அட்டைகளையும் உள்ளங்கையில் ஏந்திப் பக்கங்களை வழிய விட்டாள் யுவெட். அடிக்கடி பிரித்து வைத்துப் பயன்படுத்தப்பட்டதால் குறிப்பிட்ட நாலு பிரிவுகளாகப் பக்கங்கள் பிரிந்து கொண்டன. யுவெட் சங்கேத பாஷையில் செய்திகள் அனுப்ப அப் புத்தகம் பயன்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டாள். அவசரம் அவசரமாக ஒரு காகிதத்தில் குறிப்புகள் எடுத்துக் கொண்டு படகு வீட்டை விட்டு வெளியேறினாள்.

அன்று காலை பிரிட்டிஷ் பொருளாதார அதிகாரி அலுவலகத்தில் ஒருவன் ஒரு கருன் பவுண்டு நோட்டுக்களைக் கொடுத்து எகிப்திய நாணயங்களாக மாற்ற முற்பட்டான். கள்ள நோட்டுக்களைப் பார்த்ததும் அவனைத் துப்பறியும் இலாகா உயர் அதிகாரியிடம் அழைத்துப் போனார்கள். அவன் பயந்து போனான். ''நான் ஒரு தவறும் செய்ய வில்லையே'' என்று பதை பதைத்தான். ''இந்த நோட்டுக்களை யார் உனக்குக் கொடுத்தது?'' என்று கேட்டார் ஸான்ஸம் என்ற அந்த அதிகாரி. உணவு, மது முதலானவற்றைத் தன் மோட்டார் வானில் ஏற்றிக் கொண்டு கடைக்காரன் தானே நேரடியாகக் குறிப்பிட்ட விலாசத்துக்குப் போய் இறக்கி யிருக்கிறான். ஆகவே ''விலாசம் என்ன சொல்லு!'' என்று உத்தரவு பிறந்ததும் நைல் நதியில் உள்ள படகு வீடு என்று கூறி நெம்பரையும் கொடுத்தான் கடைக்காரன். ஆனால் இப்போது ஸான்ஸம் ஒரு தவறு செய்து விட்டார். படகு வீட்டில் எல்லாம் அமைதியாக இருப்பதைப் பார்த்து அதன் சொந்தக்காரர்கள் வெளியே போயிருப்பதாய்த் தீர்மானித்து விட்டார். உள்ளே குடிபோதையில் அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதை அவர் ஊகிக்க வில்லை. வெளியே இருந்தவாறே படகு வீட்டைக் கண்காணிக்கத் தொடங்கினார்கள். இந்தத் தருணத்தில் யுவெட் படகு வீட்டினுள் நுழைந்து விட்டுத் திரும்பியதைப் பார்த்ததும் அவளைப் பாதுகாப்புப் போலீஸார் சந்தேகித்துக் கைது செய்து ஸான்ஸமிடம் கொண்டு போனார்கள்.

யுவெட் கைதானதும் யூதர்களின் ஏஜென்ஸியுடன் தொடர்பு கொண்டிருந்த ஹோல்மன் என்பவர் ராபி என்று பெயர் கொண்ட ஒரு துப்பறியும் நிபுணரை அனுப்பி

நீகோ

ஜெர்மிஸைடல் சோப்

ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ளவும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் தலைமயிரைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், நெக்கோவின் கிருமிநாசக நுரை வழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நீகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது— சுத்தமாக்க, நோய்கிருமி பரவாமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. இன்றும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தை செலுத்துங்கள்.



தினசரி உபயோகத்திற்கான ஆதி கிருமிநாசக சோப்

NATIONAL FD 9663

அவன் விடுதலைக்கு உதவ வேண்டும் எனக் கோரினார். ராபி ஸான்ஸமுடன் பேசிப் பார்ப்பதாகச் சொல்லி விட்டுக் கிளம்பி னான். ஸான்ஸம் ரொம்பக் கவலையுடன் உட்கார்ந்திருந்தார். ராபி கூறியது எதுவும் அவர் செவிகளில் ஏறவில்லை. ''இதோ பார் ராபி! நான் சில நாட்களாகவே இரண்டு எகிப்தியர்களைக் கண்காணித்து வந்தேன். ஆனால் இப்போதுதான் அவர்கள் எகிப்தியர்கள் அல்ல, ஜெர்மானிய ஒற்றர்கள் என்று தெரிய வந்தது. அவர்கள் படகு வீட்டுக்குத் திரும்புவதற்காகக் காத்திருக்கிறேன். எந்த நிமிஷமும் அவர்கள் கைதாக்கப்பட்டதாக டெலிபோன் செய்தி வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தத் தருணத்தில் நீ என்னைத் தொந்தரவு செய்யாதே'' என்றார் ஸான்ஸம்.

இதைக் கேட்டதும், ''திரும்பி வருவதா? அவர்கள் உள்ளேதானே தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்!'' என்றான், அருகிலிருந்த புலெட்.

அவ்வளவுதான். ஸான்ஸம் துப்பாக்கியை இடுப்பில் செருகிக் கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடினார்!

எப்லரை அடித்து நொறுக்கிக் கீழே தள்ளி இழுத்துக் கொண்டு போனார்கள்.

ஸான்ஸம் உத்தரவிட்டதன் பேரில் ஹீக்மத்தையும் போலீஸார் பிடித்துக் கொண்டு போய் விசாரித்தனர். அவள் மேஜர் ஸ்மித்தைப் பற்றிக் கூறி விட்டாள். ''பிரிட்டிஷ் மேஜராம், தூ! இப்படிப்பட்ட அதிகாரிகளை வைத்துக் கொண்டுதான் ஹிட்லரை வெல்லப் போகிறீர்களோ?'' என்று ஏளனமும் வெறுப்பும் ஒன்று கலக்கப் பேசினாள். பிறகு தொடர்ந்து வருத்தத்துடன், ''ஆனால் எங்கள் திட்டமெல்லாம் பயனற்றுப் போய் விட்டதே'' என்று கூறியவள், ''இன்று இரவு மட்டும் எங்களுக்குக் கிடைத்திருந்தால் காரியம் வெற்றிகரமாக முடிந்திருக்கும்'' என்றும் ஏங்கினாள்.

ராணுவ ரகசியப் போலீஸாருக்கு இப்போது தேவைப்பட்டது எப்லர் உபயோகித்த ரகசியச் சங்கேத பாஷையின் தாத்பர்யம்தான். அது மட்டும் தெரிந்தால்....?

இது சம்பந்தமாக எப்லரை என்னென்னவோ செய்து பேச வைக்கப் பார்த்தார்கள் சிறைச்சாலையில். எப்லரும் மான்காஸ்டரும் வாய் திறக்கவேயில்லை.

இதற்கிடையில் தனியே விடப்பட்ட ராபியும் புலெட்டும் ஒன்றுகூடி மண்டையை உடைத்துக் கொள்ளாத குறையாகத் தீவிரமாக ஆலோசித்தார்கள். ரகசிய சங்கேதங்களின் தாத்பர்யங்களை புலெட் எழுதிக் கொண்டிருந்த குறிப்புக்களின் உதவியுடன் கண்டுபிடிக்க முனைந்தார்கள். அவர்கள் எடுத்துக் கொண்ட சிரமம் நல்ல பலனையும் அளித்தது. இரவு பதினொரு மணிக்குச் சங்கேத பாஷையை அவர்கள் தயாரித்து விட்டனர்.

சரியாகப் பன்னிரண்டு மணிக்குக் கெய்ரோவில் இருந்த பிரிட்டிஷ் ராணுவத் தலைமைக் காரியாலயம் ஏதென்ஸுடன் தொடர்பு கொண்டது. எப்லர்தான் செய்திகளை அனுப்புகிறான் என்ற எண்ணத்தில் அவர்கள் செய்திகளைப் பெற்றுக் கொண்டனர்! ஆனால் பிரிட்டிஷார் தாங்கள் எந்தச் செய்திகளை ஜெர்மானியர் பெற வேண்டும் என்று விரும்பினார்களோ அத்தகைய செய்திகளைத்தான் அனுப்பி வைத்தார்கள். அன்று மட்டுமல்ல, அன்றைய தினத்தைத் தொடர்ந்து இன்னும் பல வாரங்களுக்கு பிரிட்டிஷார் தங்களுக்குச் சாதகமான விதத்தில் கற்பனை செய்து அனுப்பிய செய்திகளையே ஜெர்மானியர் பெற்று வந்தனர்.

ரோமல் இந்தச் செய்திகள் கிடைத்ததும் சந்தோஷ மிகுதியில் துடையைத் தட்டினார். தமது ஒற்றனுக்கு வீரப் பதக்கம் அளிக்க வேண்டும் என்று ஹிட்லருக்குத் தந்தி அடித்தார்! ஆப்பிரிக்காவில் தாம் தோல்வியுற்றதற்கு பிரிட்டிஷ் சாணக்கியம்தான் காரணம் என்பதை உணராமலே இறந்து போனார் ரோமல். கடைசி வரை தங்கள் மாபெரும் வீரன் எப்லரைப்பற்றி ஜெர்மானியர் லவலேசமும் சந்தேகிக்க வில்லை!

சித்திரையெனும் நர்த்தகி!

நா. சீ. வரதராஜன்



புத்தொளி பரவிடச் சித்திரை யெனுமெழில்
நர்த்தகி வருகிற - திருநாளில்,

வித்தகி நிலமகள் சித்திர யெழிலுடன்
எத்திசை களிநுமென் தளிர்சூடி

நித்திய இளைஞனே, தத்துவ வடிவினைப்
பெற்றுள மதனனை வரவேற்கும்!

சித்தமும் மகிழ்வுறப் பித்தென மயலுறச்
சிற்சில பொழுதினில் நகைவாட்டும்!



படம் பிடிக்கும் போதினிலே..

ஒளியில் பிறந்து இருளில் வளரும் அருங்கலை சினிமா. சினிமா தயாரிக்க இன்றியமையாத கருவி காமிரா. அதற்குள் படக் காட்சிகளைப் பிடித்துப் போட உறுதுணையாக இருப்பது மின்சார விளக்குகளின் ஒளி வெள்ளம். படத்தைத் தயாரிக்கும் வரையில்தான் ஒளி தேவை. படப் பிடிப்பு முடிந்ததும் அதை வெளியிட இருள் சூழ்ந்த தியேட்டர் தேவைப்படுகிறது. சினிமாவின் உயிர்நாடியான ஒளிப் பதிவு பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் வியப்பாக இருக்கும்.

படப்பிடிப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் ஒளிப் பதிவைப் பற்றிக் கூற நினைக்கும் போது ஒளிப்பதிவுக் கலையில் சிறந்து விளங்கும் ஸ்ரீ ஏ. வின்சென்டின் பெயர்தான் முதலில் என் மனத் திரையில் தோன்றியது.

அவர் கேரள நாட்டைச் சேர்ந்தவர். அவரது தந்தையார் ஒரு சித்திரக்காரர். திரு வின்சென்டும் முதலில் சித்திரம் வரைவதில்தான் ஆர்வம் காட்டினார். பிறகு காமிராவில் ஓர் ஆசை தோன்றியது. ஜெமினி ஸ்டுடியோவில் அப்ரண்டிஸாகச் சேர்ந்து, பிரசித்தி பெற்ற கமால் கோஷிடம் பயிற்சி பெற்றார். ஜெமினியின் பிரபல சித்திரமான ''சந்திரலேகா''வுக்கு உதவி ஒளிப் பதிவாளராக இருந்தார்.

1954ம் ஆண்டு ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பெற்ற மலையாளப்படமான ''நீலக்குயில்''தான் இவருடைய முதல் படம்.

பிறகு வீனஸ் பிக்சர்ஸில் சேர்ந்து ''அமர தீபம்'' (சிவாஜி கணேசன், பத்மினி, சாவித்திரி ஆகியோர்கள் நடித்தது) என்னும் வெற்றிப் படம் உருவாக உறுதுணையாக இருந்தார். பிறகு ''உத்தம புத்திரன்'' வெளிவந்தது. அதில் சிவாஜியின் இரட்டை வேடத்தை மிகத்திறமையாகப் படமாக்கிப்புகழ்பெற்றார்.

சமீபத்தில் வெளியாகிச் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கும் ''காதலிக்க நேரமில்லை'' என்னும் வண்ணப் படம் திரு வின்சென்டின் கைவண்ணத்தில் உருவானது. கலர்ப் படத் தயாரிப்பில் உள்ள கஷ்டங்களை விளக்கினார். ''கதாநாயகி பச்சைப் புடவை கட்டிக்கொண்டு பசும் புல் தரையில் நின்றால், அது புல்லோடு சேர்ந்து மறைந்துவிடும். அவளுடைய முகம் மட்டும்தான் தெரியும். அதனால் பின்னணியில் நிற்கும் பசும்புல் தரையை எடுத்துக் காட்டும் வேறு நிறப் புடவையை உடுத்திக் கொள்ளச் செய்து படமெடுக்கவேண்டும்'' என்றார். இதுபோன்ற எத்தனையோ நுணுக்கங்களை அனுபவத்தின் பேரிலும் பல புத்தகங்களைப் படித்தும் தெரிந்து கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார் வின்சென்ட்.

''வருங்காலத்தில் தமிழில் கலர்ப் படங்கள் நிறைய வருமா?'' என்று கேட்டேன்.

''கலர்ப் படங்கள் தயாரிக்க அதிகமாகச் செலவாகும். அவ்விதம் அதிகமாகச் செலவு செய்து எடுத்த படம் பல ஊர்களில் நிறைய நாட்கள் ஓடினால்தான் லாபம் கிடைக்கும். தமிழர் வாழும் கடல் கடந்த பிரதேசங்களுக்கும் படம் போனால்தான் கலர்ப் படங்களுக்கு விமோசனம். அங்கெல்லாம் நம் படங்கள் போவதற்கு ஏகப்பட்ட தடைகள் இருக்கின்றனவே'' என்றார். தொடர்ந்து, ''கலர்ப் படங்கள் மட்டும் என்ன, இன்னும் சினிமாஸ்கோப் போன்ற நவீன உத்திகளையும் நாம் கையாளத்தான் போகிறோம். ஆனால் அதற்கெல்லாம் இன்னும் ரொம்ப நாட்களாகும்'' என்று சற்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினார் வின்சென்ட்.

''டைரக்டரே காமிராவை இயக்குபவராக இருந்தால் அதில் நன்மை ஏதேனும் உண்டா?'' என்று கேட்டேன்.

''நிச்சயம் உண்டு.''


'''நீங்கள் விரும்பும் சிறப்பு அம்சங்களைப் புகுத்திப் படம் எடுக்கும் ஆர்வம் உங்களுக்கு இல்லையா?''

''இருக்கிறது. அதற்காகத்தான் நானே ஒரு படம் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறேன். அது மலையாளக் கதை. நானே டைரக்ட் செய்யப் போகிறேன். காமிராவையும் நானே இயக்கப் போகிறேன்'' என்றார் வின்சென்ட். அப்பொழுது அவர் முகத்தில் காணப்பட்ட தன்னம்பிக்கையின் ஒளி திருப்தி தருவதாக இருந்தது. அவர் இன்னும் சித்திரம் வரைவதை விட்டுவிடவில்லை. வண்ண ஓவியங்கள் நிறையத் தீட்டியிருக்கிறார். அவற்றையெல்லாம் உற்சாகத்தோடு காட்டிவிட்டு, ''எனக்குச் சித்திரம் வரைவதில்தான் ரொம்ப ஆர்வம்'' என்றார். அவருடைய சித்திரங்கள் கலைச் சிறப்புடன் மிளிர்ந்தன.

அப்பொழுது அவருடைய இரண்டு மழலைச் செல்வங்களும் அவர் அருகில் வந்து நின்றன. உடனே நமது புகைப்பட நிருபர் அவரையும் குழந்தைகளையும் 'கிளிக்' செய்து காமிராவுக்குள் பிடித்துப் போட்டுக் கொண்டார். விடைபெற்றுக் கொண்டோம். —விஜயம்

சிரிக்கவும் சிந்திக்கவும்

எனது உளம் பக்குவமாகக் கனிந்த புது வருஷ வாழ்த்துக்கள்! வருஷம் என்பது பிறப்பதைப் பற்றி நான் எப்போதுமே கவலைப் படுவதில்லை. ஏனென்றால், அதற்கு ஒரு நர்ஸின் ஹோமோ, டாக்டரோ, தாதியோ தேவை யில்லை அல்லவா? தவிர பிற்காலத்தில் குட்டிகள் போடத் தொடங்கி, குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்னையை ஏற்படுத்தி விடுவதில்லை. குறிப்பிட்ட அறுபது வருஷங்களே அலுக்காமல் சலிக்காமல் திரும்பத் திரும்ப வந்து பிறந்து கொண்டிருக்கின்றன.



எந்த மகானுபாவனோ பிறக்கப்போகும் வருஷத்துக்குக் 'குரோதி' என்ற பயங்கரமான பெயரை வைத்து விட்டான்.

பஞ்சாங்கத்தில் போட்டிருக்கும் இந்த வருஷத்திய பலனைப் பற்றிய பாட்டைப் படிப்பவர்கள், உடனேயே பலமான இரும்புப் பெட்டிகள் வாங்கி வரச் சென்றுவிடுவார்கள். ஏனென்றால்,

''கோரக் குரோதிதனிற் கொள்ளை மிகும் கள்ளரினும்
பாரிற் ஜனங்கள் பயமடைவார்....''

என்று பாட்டு ஆரம்பமாகிறது.

பட்டப் பகலிலேயே அரசாங்கம் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு ஜனங்களைப் பணச் சேமிப்பு செய்ய வைக்கிறது. பாங்குகளோ பணம் சேமிக்கும்படி நம்மைத் தாஜா செய்கின்றன; கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றன. ஒவ்வொரு பாங்கும் தன்னிடம்தான் சேவிங்ஸ் பாங்க் கணக்கு ஏன் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு 108 காரணங்கள் கூறிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கின்றன. நாம் பணம் போடாதிருந்தால் பாங்க் ஏஜண்டு இராத் தூக்கமில்லாமல் தவிப்பார்; கண்ணீர் வடிப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகையால் ஒரு சேவிங்ஸ் பாங்குக் கணக்கைஆரம்பித்து அவரது கண்ணீரைத் துடைத்துவிட வேண்டுமென்று நம் கைக்குட்டைகள் துடித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் போடுவதற்குப் ப...ண...ம்?



பிரபல ஆங்கில நாடக ஆசிரியரான ஷெரிடன் நாடகங்கள் நடத்தி வந்ததில் ஓட்டாண்டியாய்ப் போய் விட்டார். அப்போது ஒரு நாள் தமது பிள்ளை மீது கோபம் வரவே, அவர், 'பயலே! உனக்கு ஒரே ஒரு ஷில்லிங்தான் ஆஸ்தியாக வைக்கப் போகிறேன்'' என்று எச்சரித்தார்.

''என் தந்தையே! அந்த ஒரு ஷில்லிங் நமக்குக் கடனாக உதவக் கூடியவர் யாரோ?'' என்று விநயமாகக் கேட்டான் மகன். அப்படி, சாதாரண ஜனங்களும் பாங்கியில் பணம் போட ஐந்தோ, பத்தோ யாராவது கடன் கொடுத்துக் கொண்டிருந்தால் சௌகரியமாயிருக்கும்.

துப்பறியும் மேதையான ஷெர்லாக் ஹோம்ஸின் எதிரில் அமர்ந்திருந்த ஸெயின்ட் லூக் கல்லூரிப் பேராசிரியரான மிஸ்டர் ஸோம்ஸ் அழாக்குறையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்:

''நாளைக்குத்தான் பரீட்சை ஆரம்பம். நான் கிரேக்க பாஷை சம்பந்தப்பட்ட கேள்வித்தாளைத் தயாரித்தேன். அந்தத் தாள் அச்சுக் கோக்கப்பட்டு, புரூப்கள் வந்திருந்தன. நான் அவற்றைத் திருத்துவதற்காக மேஜை மீது எடுத்து வைத்திருந்தேன். பிறகு ஒரு நண்பர் வீட்டுக்குச் சிற்றுண்டி சாப்பிடச் சென்று விட்டேன். போகும் போது கதவைப் பூட்டிக் கொண்டுதான் போனேன். திரும்பி வந்து பார்த்த போது கதவில் சாவித் துவாரத்தில் ஒரு சாவி இருக்கக் கண்டு திடுக்கிட்டேன். சாவிகளுள் ஒன்று என்னிடமும், மற்றொன்று என் பட்லரிடமும் இருந்தன.



அறைக்குள் நுழைந்தேன். புரூப் காகிதங்களுள் ஒன்று தரையிலும் மற்றொன்று ஜன்னல் பக்கமும் அடுத்தது மேஜை மீதுமிருந்தன.

''முதல் பக்கம் தரையின் மீதும், இரண்டாவது பக்கம் ஜன்னல் அருகிலும் மூன்றாவது அதைத் தாங்கள் வைத்துவிட்டுப் போன இடத்திலேயும் இருந்ததல்லவா?'' என்று ஹோம்ஸ் கேட்டார்.

''அப்படியேதான் கிடந்தன. அதை நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்களோ தெரியவில்லையே'' என்று பேராசிரியர் மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்பட்டார். பிறகு, ''தாங்கள் யார் அதை எடுத்துப் பார்த்ததென்று கண்டுபிடிக்க வேண்டும். கேள்வித் தாளை யாராவது பையன் பார்த்துவிட்டிருந்தால் நான் என் வேலையை ராஜிநாமா செய்துவிட வேண்டியதுதான்....'' என்று அழாக் குறையாக அவர் கூறினார்.

கடைசியில் ஹோம்ஸ் ஒரு மாணவனது பூட்ஸின் அடியில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணை வைத்துக் கொண்டு யார் வினாத் தாளைப் பார்த்ததென்று கண்டுபிடித்துவிட்

டார். அந்த மாணவன் பரீட்சை எழுதாமல் இராணுவத்தில் சேர்ந்து வெளியூருக்குப் போய் விடுகிறான்.

நமது ஊரில் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைத் தாள்கள் வெளியாகவில்லை; ஆனால் அதிலுள்ள கேள்விகள் மாணவர்களுக்குத் தெரியும் என்ற விந்தையான நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்த்தபோது, கானன் டாயில் எழுதியுள்ள 'மூன்று மாணவர்களின் சாகஸ வேலை' என்ற ஹோம்ஸைப் பற்றிய இந்தக் கதை ஞாபகத்துக்கு வந்தது.

இங்கே, 'வினாத் தாள்கள் வெளியாகியிருக்கக் கூடுமா என்பதை விசாரித்துப் பார்க்கலாமா என்று யோசனை செய்கிறோம்' என்றுகூட மந்திரி கூறமாட்டேன் என்கிறாரே.

விமானம் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்தது. ஒரு சின்னஞ் சிறு விஷமக்காரப் பையன் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த ஸ்திரீயுடன் விளையாடித் தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அந்த அம்மாளுக்குக் கோபமே வரவில்லை.



''குழந்தை வெளியே போய்க் கொஞ்சம் விளையாடேன்!'' என்றுதான் அன்புடன் சொன்னாள் அந்த அம்மாள்.

கவிஞராயும், தத்துவ சாஸ்திரியாயுமிருப்பவருக்கும் நகைச்சுவைக்கும் 'குளிக்கும் பிராப்தி'கூடக் கிடையாது என்று பொதுவான அபிப்பிராயம் ஒன்று உண்டு. ஆனால், பிரெஞ்சு ஆசிரியரான ஜீன் கிராவுடோ என்பவர் இதைப் பொய்யாக்கி விட்டார். அவர் எழுதியுள்ள 'ஷார்லியாட் வைத்தியக்காரி' என்ற மூன்று அங்க நாடகத்தில் நகைச்சுவை, கிண்டல், ஹாஸ்யம் முதலியன துள்ளி விளையாடுகின்றன....

ஒரு பெரிய தொழிலதிபர். மண்ணெண்ணெய், தங்கம், வைரம் முதலியவை பூமிக்கடியில் எங்கெங்கே ஒளிந்துகொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லக் கூடிய ஒரு நிபுணர். அவர்கள் இருவரும் ஓர் அரைப் பைத்தியக்கார ஸ்திரீ வைத்திருக்கும் ஹோட்டலுக்கு வந்து ஒரு தனி அறையில் உட்கார்ந்திருக்கிறார்கள். நிபுணர் அடிக்கடி தமது மூக்கால் எதையோ சுவாசித்துக் கொண்டிருக்கிறார். ஹோட்டல் சொந்தக்காரரைக் கூப்பிட்டுக் கிணற்றிலிருந்து இரண்டு கோப்பைத் தண்ணீர் கொண்டுவரச் சொல்கிறார். தண்ணீரைக் குடிக்கப் போகிறார்கள். அதிலிருந்து குப்பென்று மண்ணெண்ணெய் வாசனை வீசுகிறது.

''பார்த்தீர்களா? மண்ணெண்ணெய் பூமிக்கு அடியில் ஒரு மைல் ஆழத்தில் இருந்தாலும் என் மூக்கு கண்டு பிடித்துவிடும்'' என்று பெருமையுடன் சொல்கிறார் நிபுணர்.

ஹோட்டல் உள்ள இடத்தின் கீழ் மண்ணெண்ணெய் ஊற்றுக்கள் இருக்கின்றனவென்பதற்காகத் தொழிலதிபர் அதை வாங்கிவிடுகிறார். பெரிய கம்பெனி ஆரம்பிக்கப்படுகிறது. கடைசியில் சோதனை செய்து பார்த்தால், ஒரு கிணற்றில் மண்ணெண்ணெயை நிறைய ஊற்றி வைத்திருக்கிறார்கள் என்றும், அங்கே மண்ணெண்ணெய் ஊற்று இருப்பதாக ஏமாற்றி விட்டார்களென்றும் தெரிகின்றன.

இங்கே, காரைக்காலில், அறந்தாங்கியில், சுரைக்காயூரில், கோட்டையூரில் எல்லாம் மண்ணெண்ணெய் இருப்பதாகச் சொல்கிறார்கள். இருக்கலாம். ஆனால், தங்கள் நிலங்கள் நல்ல விலை போவதற்காகச் சிலர் அந்த அரைப் பைத்தியக்காரியைப் போலவும் செய்யலாமல்லவா?

ஏன், ஒரு சமயம் மாஜி மண்ணெண்ணெய் மந்திரி ஸ்ரீ கே. டி. மாளவியா ஒரு மண்ணெண்ணெய்க் கிணற்றைத் திறந்து வைத்தார். குறிப்பிட்ட தினமன்று மண்ணெண்ணெய் ஊற்றுக் கிளம்பாததால் நிறைய மண்ணெண்ணெய் கொட்டி வைத்துத் திறக்கச் செய்தார்களாம். அப்படி ஒரு செய்தி ஒரு பத்திரிகையில் வந்திருந்தது.

பாங்கு ஏஜெண்ட் என்பவர், சூரியன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் போது ஒரு குடையைக் கடன் கொடுத்து விட்டு, மழை பெய்யத் தொடங்கியதும் அதைத் திருப்பிக் கேட்கும் ஆசாமி போன்றவர். —மார்க் ட்வெய்ன்

கல்லூரிகளில் தமிழ்மொழி மூலம் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொள்ள மாணவர்கள் முன்வரவில்லை என்று தமிழக அரசாங்கம் குறைப்பட்டுக் கொள்கிறது.

தமிழ்மொழி மூலம் கல்லூரிப் பாடங்களைக் கற்கத் துணிபவர்கள் உண்மையில் வீரர்கள். நாட்டபிமானம், பாஷாபிமானம் உள்ள தியாகிகள். ஆகையால் அவர்களுக்கு ஊக்கமளிக்க அரசாங்கம் புதிய முறைகளைக் கையாள வேண்டும். சம்பளமில்லாமலோ, அல்லது ஹாஸ்டல் செலவு இல்லாமலோ படிக்க அனுமதித்தால் மட்டும் போதாது.

அந்த மாணவ மாணவிகள் கல்லூரிப் பரீட்சைகளில் தேறிய பிறகு அவர்களுக்கு வரன் பார்த்துக் கல்யாணம் செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வீடு நிர்மாணத் திட்டத்திற்காக மனை ஒன்று நானூறு ரூபாய் வீதம் வாங்கிப் பிறகு நாலாயிரம் ரூபாய் வீதம் விற்று, வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்களே, அந்த வீடுகளுள் ஒன்றைக் கல்யாணமான தம்பதிகள் வசிப்பதற்கு அளிப்பதாக உறுதிமொழி கூறலாம்.

அவர்களுக்கு ஏற்றுமதி, இறக்குமதி உற்பத்தி சம்பந்தப்பட்ட லைசென்ஸ்கள், கோட்டாக்கள் வழங்கலாம்.

மந்திரிகளும், பெரிய கல்வி அதிகாரிகளும் தமிழுக்காகவே உயிர் வாழ்ந்திருக்கும் பேராசிரியர்களும் தங்கள் தங்கள் குழந்தைகளை நூற்றுக்கு நூறு ஆங்கில மயமாக இருக்கும் பள்ளிக்கூடங்களில் சேர்க்கும்போது இது போன்ற சலுகைகள் ஏதாவது அளித்தால் தான் மாணவ மாணவிகள் தமிழிலே எல்லாவற்றையும் கற்றுத் தியாகம் செய்ய முன்வரக் கூடும்.

வழக்கறிஞர்

சென்னை உயர்நீதிமன்றம் தோன்றிப் பணியாற்ற ஆரம்பித்த கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் அந்த நீதி மன்றம் எத்தனையோ வழக்கறிஞ மேதைகளைக் கண்டிருக்கிறது. அவர்களுடைய சட்ட நுணுக்கத்தைப் பற்றியும், வாதாடும் திறமையைப் பற்றியும் நாடு இன்னும் பல நூற்றாண்டுகள் பேச விஷயம் இருக்கிறது. அத்தகைய மேதைகளின் இன்றைய தொழில் வாரிசுகளாக விளங்கும் சில வழக்கறிஞர்களின் பணி பற்றி வாசகர்களுக்கு எடுத்துரைக்கலாம் என்ற ஆசையில் இந்தப் பகுதி தொடங்கப்படுகிறது.

திரு ஜி. கோபாலசாமி, எம்.ஏ., பி.எல்.

வங்காளத்திலிருந்து 1936ல் ரோஷன் லால் என்ற இளைஞரின் தலைமையில் ஒரு புரட்சி இளைஞர் குழுவே தென்னாட்டினருக்கு நாட்டு வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் பாடத்தைக் கற்றுக் கொடுக்கத் தலைமறைவாக வந்து சென்னையில் தங்கியிருந்தார்கள்.

அந்தக் குழுவைச் சேர்ந்த இளைஞன் ஒரு நாள் காலையில் தான் தயாரித்த குண்டு நன்றாக வேலை செய்கிறதா என்பதைப் பரீட்சிக்கக் கடற்கரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். ரயில்வே லைனைத் தாண்டும்போது கம்பி தடுக்கி விட்டது. தலை குப்புற அவன் விழுந்தான். அவன் தலைமாட்டிலேயே அவன் கையிலிருந்த குண்டு வெடித்தது.

இறந்து கிடந்த இளைஞனின் சட்டைப் பைகளைச் சோதனையிட்ட பிறகு போலீஸார் ஒரு வழியாக அந்தக் கூட்டத்தினரைக் கைது செய்து பிரதம மாகாண நீதிபதி முன் ஆஜர் செய்தார்கள்.

எதிரிகளுக்கு ஆஜராக வக்கீல் யாரும் வரவில்லை. ''நீங்கள் வக்கீல் ஏற்பாடு செய்து கொள்ளப் போகிறீர்களா? அல்லது சர்க்காரே உங்களுக்காக வழக்காட ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்யலாமா?'' என்று நீதிபதி கேட்டார்.

''எங்களுக்கு ஆஜர் ஆகவேண்டும் என்று நாங்கள் விரும்புபவர் எஸ். சத்தியமூர்த்தி ஒருவர்தான்'' என்றான் அந்தப் புரட்சிக் குழுத் தலைவன்.

நண்பர் திரு கே. எஸ். ஜெயராமய்யர் மூலமாக இந்தத் தகவல் கிடைத்தவுடன் ''நான் வந்து வாதாடத் தயார். ஆனால் எனக்கு உதவி செய்ய உங்களுடைய ஜூனியர்களில் ஒருவரை அனுப்ப வேண்டும்'' என்றார் ஸ்ரீ சத்தியமூர்த்தி. அந்த அதிருஷ்டம் திரு கோபாலசாமிக்குக் கிடைத்தது.

''கோர்ட்டில் நீதிபதி பாட்ஸ்வெல்லும் ஜூரிகளும் மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல் அசையாது உட்கார்ந்திருக்க, ஒரு நாள் மாலை நான்கிலிருந்து நாலே முக்கால் வரை இந்த வழக்குக்காகத் திரு சத்தியமூர்த்தி வழக்கறிஞர் என்ற ஹோதாவில் நிகழ்த்திய உரை இன்னும் இத்தனை வருஷங்கள் கழித்தும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது என் அனுபவத்தில் மறக்க முடியாத நாள்'' என்றார் திரு கோபாலசாமி.

கேஸ் என்னவோ தோல்வி அடைந்துவிட்டது என்றாலும் புரட்சியாளர்களுக்குச் சாதகமாக வழக்காட முன்வருவோரை ஆட்சி பீடம் அக்கறுத்தி மிரட்டிய அந்தக் காலத்தில் பெரிய பரபரப்பை உண்டுபண்ணிய 'சென்னை நகர வெடிகுண்டு கேஸ்' இது.

திரு கோபாலசாமிக்கு வழக்கறிஞர் தொழில் பரம்பரைச் சொத்து என்றே சொல்லலாம். அவரது தந்தையார் திரு கோவிந்தசாமி ஐயர் அந்தக் காலத்தில் பட்டுக்கோட்டையில் ஒரு புகழ் பெற்ற கிரிமினல் லாயராம்.

''கே. எஸ். ஜே. தம்மிடம் வேலை பழக வந்திருக்கும் ஜூனியர்களிடம் எப்போதுமே அன்புடனும் உற்சாகம் ஊட்டும் வகையிலும் பழகுவதில் மன்னர்'' என்று உணர்ச்சி வசப்பட்டுக் காலஞ்சென்ற தம் சீனியரைப் பற்றிக் குறிப்பிட்டார் திரு கோபாலசாமி.

பொது மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டு போலீசாருடன் ஒத்துழைப்பதில்லை; பட்டப்பகலில் ஒரு குற்றம் நடந்ததைப் பார்த்தாலும் அதைப் பற்றிய விவரங்களைக் கூற முன்வராமல் நழுவிவிடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைக் கோபாலசாமி வன்மையாக எதிர்க்கிறார். போலீஸ் ஜபர்தஸ்துக்களை அவர்கள் விரும்பாததால்தான் ஒதுங்கிவிட நேர்கிறது என்பது அவர் கருத்து.

''குற்றவாளிகளைப் பற்றிய சாட்சியங்களைச் சேகரிக்க, தங்களிடம் பொதுமக்களை வரவழைத்து விசாரிக்கப் போலீசாருக்கு இடமளிக்கும் வகையில் ஏற்கனவே சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது அந்தக் காலத்தில், சுதேசிகளுக்கு மதிப்புக் கொடுக்க விரும்பாத அந்நியர்கள் இயற்றிய சட்டம். இது மாற்றப்பட வேண்டும். தங்களுக்கு வேண்டிய விஷயங்களைப் பொதுமக்களிடம் போய்ப் போலீஸார் தெரிந்து கொண்டு வந்து வழக்குகளைத் தயாரிக்க வேண்டும். மக்களைக் கனவான்களாக மதித்துக் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும். அப்போது சரியான, நேர்மையான விஷயங்கள் சாட்சியங்களாகக் கிடைக்கும். சில சமயங்களில் போலீசார் சொல்லிக் கொடுப்பதுபோல் சொல்ல வேண்டியிருப்பது கட்டோடு பிடிக்காத காரணத்தாலும் பலர் ஒத்துழைக்க முன் வருவதில்லை. இது போன்ற சில சந்தர்ப்பங்களில் போலீசார் ஒருவரைக் குற்றவாளி என்று ஏற்கனவே தீர்மானித்து விட்டுப் பிறகு அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில், அவசரத்தில் கேஸை ஜோடிக்கின்றனர். இறுதியில் கேஸையும் கோட்டை விடுகின்றனர். இதற்குச் சிவப்பு அரை நிஜார் கேஸ் ஓர் உதாரணம்'' என்றார் அவர்.

கணவனுடன் சண்டை போட்டுக் கொண்டு பிறந்த வீட்டுக்கு, கிராமத்துக்கு வந்துவிட்ட மனைவி ஒரு நாள் காலையில் குளக்கரைக்கு நீர் கொண்டுவரப் போனாள். ஓர் ஆண் மகன் அவளை வழிமறித்து அரிவாளால் வெட்டியிருக்கிறான். அவளுடைய கூக்குரல் சற்றுத் தள்ளி, மறைவில் தேக உபாதையைப்

போக்கிக் கொண்டிருந்த அவனுடைய தகப்பனுக்குக் கேட்டது. அவர் ஒற்றையடிப் பாதையில் ஓடி வந்தார். தாக்கியவன் பலத்த காயத்தை உண்டாக்கி விட்டு ஓடுவதைப் பார்த்தார். அவன் வெட்டிய காட்சியைச் சற்றுத் தள்ளி வரப்பு வெட்டிக் கொண்டிருந்த ஓர் ஆசாமியும் பார்த்திருக்கிறான்.

இந்தத் தாக்குதல் வழக்கு விசாரணைக்கு வந்தது. அரிவாளால் தாக்கிய நபர் ஒரு சிவப்பு அரை டிராயர் அணிந்திருந்தான் என்று பிராசிக்யூஷன் தரப்பில் தாக்கப்பட்டவனின் தந்தையும், வரப்பில் வேலை செய்தவனும் சாட்சி சொன்னார்கள். குற்றம் நடந்த இடத்துக்கு அருகில் கிடந்த ஒரு சிவப்பு அரை டிராயரை 'எக்ஸிபிட்'டாக ஏற்றுக் கொள்ளச் செய்தார்கள். தாக்கியவன் கணவன்தானென்றும், அவன் தாக்கி விட்டு ஓடும்போது யாரும் அடையாளம் கண்டு கொள்ளாமல் தான் தப்புவதற்காகச் சிவப்பு டிராயரைப் போட்டு விட்டு வேஷ்டி அணிந்து கொண்டு போய்விட்டான் என்றும் பிராஸிக்யூஷன் வழக்கின் சாராம்சம்.

எதிரிக்காக ஆஜரான வக்கீல் 'சாட்சிப் பொருளாக வந்திருக்கும் டிராயரைக் குற்றவாளி கோர்ட்டாருக்கு அணிந்து காட்ட வேண்டும்' என்று வேண்டுகோள் விடுத்தார். விசித்திரமான வேண்டுகோளை நீதிபதி அனுமதித்தார். அந்த அரை நிஜார் எதிரியின் முழங்காலுக்கு மேலே போக மறுத்து அங்கேயே நின்று விட்டது.

எதிரி விடுதலை செய்யப்பட்டான், வழக்கு ருசுவாகவில்லை என்ற காரணத்தால்! நடந்தது இதுதான். சம்பவம் நடந்த இடத்தை யொட்டியிருந்த ஒரு நீர்த்தேக்கத்தில் ஒரு சிறுவன் இறங்கி விளையாடிக் கொண்டிருந்தான். நனையாமலிருக்க அவனுடைய அரை நிஜாரைப் பாதை ஓரச் செடிக்கருகில் கழற்றி வைத்திருக்கிறான். தாக்குதல் விளைவாகக் கூக்குரல் கேட்கவே அவன் பயந்து நடுங்கி நீர்த் தேக்கத்தின் மறுபுறமாக ஏறிக் கிராமத்துக்குள் ஓடிவிட்டான். புலன் விசாரிக்க வந்தவர்கள் கண்களில் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் கிடந்த சிவப்பு நிஜார் தென்படவே அதை எதிரியின் உடைமை என்று நினைத்து அதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சாட்சியங்களையும் அப்படிச் சொல்லத் தயார் செய்திருக்கிறார்கள். எல்லாம் வழக்கில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகத்தான். அந்த அரை நிஜாரே அவர்களைக் கவிழ்த்துவிடும் என்று அவர்கள் கண்டார்களா என்ன?


''போலீஸ் அதிகாரிகளாகவும், துப்புத் துலக்கும் அதிகாரிகளாகவும் வேலை ஏற்பவர்கள் சட்டப் பரீட்சைகள் பாஸ் செய்தவர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி இருந்தால் மிகவும் நல்லது. அவர்கள் முன் யோசனையுடன் வழக்குகளைத் தயார் செய்ய முடியும். குற்றவாளிகளும் சுலபமாகத் தப்ப முடியாது'' என்ற யோசனையையும் தெரிவித்தார் திரு கோபாலசாமி.

''சட்டப்படி மனிதனுடைய உயிரைப் பறிக்கத் தீர்மானிக்கும்போது எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் போதாது'' என்ற அவர் தொடர்ந்து இதற்கு ஓர் உதாரணமும் கொடுத்தார். ''ஒருவன் கொலை செய்யப்பட்டதாக வழக்கு நடந்து கொண்டிருந்தது. யார் கொலையுண்டு இறந்து விட்டதாக வழக்கு நடந்து கொண்டிருந்ததோ சாட்சாத் அதே ஆசாமியை ஆந்திர நாட்டில் யதேச்சையாக நண்பர் ஒருவர் சந்தித்து விட்டார். கேஸைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்திருந்த அவர் உடனே சந்தேகம் தட்டிப் போலீஸில் தகவல் தெரிவித்தார். சாதாரணமாக, கொலைக் கேஸ் கோர்ட்டில் நடக்கையில் 'என்ன மாண்டவன் மீண்டும் வருவான் என்கிறீர்களோ?' என்று வாதப் பிரதிவாதங்களின் போது கிண்டலாகக் கேட்பதுண்டு. இந்த வழக்கிலோ நிஜமாகவே அப்படி நடந்தது! கடைசியில் எல்லாமே ஆயுள் இன்ஷூரன்ஸ் பணத்தை வாங்க நடந்த ஒரு சதி என்பது வெளியாயிற்று. ஆனால் ஆந்திர நாட்டில் மறைந்து வாழ்ந்த அந்த நபரை அன்று யதேச்சையாக அந்த நண்பர் சந்தித்திருக்கவில்லையானால் என்னவாகி யிருக்கும்? குற்றமற்ற ஒருவன் தூக்குத் தண்டனை பெற்றிருப்பான். இல்லையா? ஆகவே, மரண தண்டனையைப் பொறுத்தவரை ஹைகோர்ட் தீர்ப்பை ஆட்சேபித்து நேரடியாகச் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளும் வகையில் சட்டம் மாற்றி அமைக்கப்பட வேண்டும். இப்போதிருக்கும் 'ஸ்பெஷல் லீவ்' முறை சிக்கல் நிரம்பியதாக இருக்கிறது.''

''இளம் வழக்கறிஞர்களுக்கு உங்கள் யோசனை என்ன?'' என்ற கேள்விக்கு, இளம் வழக்கறிஞர்கள் குறைந்த வருவாய்க்கு வழக்குகளைத் தேடிப் போவதைத் தாம் ஆதரிக்கவில்லை என்றார். நிச்சயமாக மனம் முழுமையாக அந்த வழக்கில் லயிக்காது. இதனால் இளைஞருடைய வருங்காலம் பாதிக்கப்படும். ஒருவரிடம் 'சரக்கு' இருந்தால் கேஸ்கள் தாமாகவே அவரைத் தேடி வரும் என்பதே அவர் கொள்கை.

தம்மைப் பின்னணியில் வைத்துத் தம் தொழிலைப் பெருமையுடன் முன்னணியில் தள்ளி மகிழும் செயல் வீரர் திரு கோபாலசாமி தமது ஜூனியர்களுடன் படத்தில் தோற்றமளிக்கிறார்.

வரிசை



நம்பிக்கைக்கு உகந்த, தரத்தில் உயர்ந்த மோட்டார் உறுப்புகள்

டிவிஎஸ் வினியோகிக்கும் மோட்டார் உறுப்புகள் பரிசீலனை செய்யப் பெற்று, தேர்ந்த பிறகுதான் விற்கப்படுபவை. இந்த உண்மையை பஸ், லாரி, கார் சொந்தக்காரர்கள் நன்கு அறிவர். ஆகையால்தான் டிவிஎஸ் வினியோகிக்கும் உறுப்புகளையே அனைவரும் வாங்குகிறார்கள்.

டிவிஎஸ் வினியோகிக்கும் நம்பகமான இதர மோட்டார் உறுப்புகள்:

			Standard Battery ஸ்டான்டர்டு பேட்டரி
Springs and Leaves [illegible] ஸ்பிரிங்குகள், லீவுகள்	BORG & BECK Clutch & Spares போர்க் & பெக் கிளட்ச் ஸ்பேர்கள்	MICO Fuel Injection Parts மைக்கோ ஃபியூயல் இன்ஜெக்ஷன் பார்ட்டுகள்	[illegible] பார்ட்டுகள்
QHR Tie Rod Ends QHR டை ராடு என்டுகள்	[illegible] வால்வுகள்	HELLA Horns ஹெல்லா ஹாரன்கள்	ROLON Timing Chains ரோலான் டைமிங் செயின்கள்
KAP AUTO PARTS KAP ஆட்டோ பார்ட்டுகள்	Fenner Fan Belts பென்னர் பான் பெல்டுகள்	FRITZ Filter Elements ஃபிரிட்ஸ் பில்டர் எலிமென்டுகள்	allite Bulbs அல்லைட் பல்புகள்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-
புதுக்கோட்டை-சேலம்
கோயமுத்தூர்-திருவனந்தபுரம்

TVS

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்.
மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்
(டெக்கான்)

மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்



முன்னுரை

இதயக் கபாடம் திறமினோ!

''வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் எனவடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ!''

—கலிங்கத்துப்பரணி

'இன்று வருவார், இதோ வந்து விடுவார்!' என்று ஆவல் மிக்க துடிப்போடு அடிக்கடி கணவனின் வரவை எதிர்பார்த்துக் கதவைத் திறந்து வைத்துக் காத்து நிற்கும் பெண்கள் பலர்; பின்னர், 'இல்லை, வர மாட்டார், எங்கே வரப் போகிறார்?' என்ற ஏக்கப் பெருமூச்சோடு அடிக்கடி அவர்களே கதவைத் தாழிடுவதும் உண்டு. இப்படியே இரவெல்லாம் பத்தினிப் பெண்டிர் கதவைத் திறப்பதும் தாழிடுவதுமாக இருந்ததால் கதவின் மூலைகூடச் சிறிது சிறிதாகத் தேய்ந்து விட்டதாம்.

எங்கே சென்றனர் வீட்டுத் தலைவர்கள்? எதற்காக அவர்களை இவ்வளவு ஆவலோடும் கவலையோடும் எதிர்பார்க்கிறார்கள் பெண்கள்?

''எழுந்தது சேனை - எழலும்
இரிந்தது பாரின் முதுகு!
விழுந்தன கானும் மலையும்
வெறுந்தரையான திசைகள்!''

போருக்கென்றெழுந்த சேனை வெள்ளத்தில் ஒன்றிக் கலந்து புறப்பட்டுவிட்டார்கள் அவர்கள். அந்த வெள்ளப் பெருக்கின் வேகத்தால் பூமியின் முதுகெலும்பு முறிந்தது. காடுகளும் மலைகளும் அதன் அதிர்ச்சி தாங்காது நிலை குலைந்து வீழ்ந்தன.

அது மட்டுமா?

''அதிர்ந்தன நாலு திசைகள்!
அடங்கின ஏழு கடல்கள்!
பிதிர்ந்தன சூரி மலைகள்!
பிறந்தது தூளி படலம்!''

திசைகள் அதிர்ந்தன; கடல்கள் அடங்கின; வலிமை கொண்ட மலைகள்

கயல் விழி

அகிலன்

தெறின; புழுதிக் கூட்டம் மண்ணிலிருந்து விண்ணை முட்ட எழும்பியது.

போர், போர், போர்! வீட்டுத் தலைவியரின் உள்ளத் துடிப்பிலும் வெளியில் பொங்கிய சேனை வெள்ளத்திலும் அன்றைய நாட்டின் நிலையை அற்புதமாகப் படம் பிடித்து விட்டார் தென் தமிழ்த் தெய்வப் பரணி பாடிய சயங் கொண்டார். களவேள்விக்குத் தலைவர்களை அனுப்பி விட்டுத் துடிதுடிக்கும் நெஞ்சங்களோடு வீடுகளில் காத்திருக்கும் பெண்களுக்கு உற்சாகமூட்டுவதற்காகப் பரணி பாடுகிறார்.

'உங்களுடைய வீரர்களின் கதையை உங்களுக்குச் சொல்கிறேன்; வீட்டுக் கதவுகளைத் திறந்து கொண்டு வந்து கேளுங்கள்!' என்று இன்சொற் கவிதையால் கூவி அழைக்கிறார். கதவுகளை மட்டுமா திறக்கச் சொல்கிறார்? இல்லை; இதயக் கதவுகளையுந்தான்!

போருக்கு வீரர்களின் தினவெடுத்த தோள்களை மட்டும் நம்பியிருக்கவில்லை அந்தக் காலத்துத் தமிழகம். நாட்டிலுள்ள ஒவ்வோர் ஆண் பெண்ணின் உள்ளத்து உறுதியையும் அறிவையும் அது நம்பியிருந்தது. கொற்றவை எனும் காளித்தாயே வீரர்கள் வழிபட்ட தெய்வம். மனமாட்சி மிக்க பெண்டிர் தங்கள் அன்பெனும் ஆக்க சக்திக்கு நோன்பினால் வலிமை சேர்த்து எண்ணற்ற வெற்றிகளைத் தேடித் தந்திருக்கிறார்கள். ஆகவேதான் பெண்டிரைக் கூவி அழைத்துக் கவி பாடுகிறார் சயங்கொண்டார்.

சயங்கொண்டார் சோழ நாட்டைப் பாடினார்; நான் பாண்டிய நாட்டைப் பாட முன் வந்திருக்கிறேன். அவர் பதினோராம் நூற்றாண்டு வாழ்க்கையை வெளியிட்டிருக்கிறார். அவருக்குப் பின்னால் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு உட்பட்ட வாழ்க்கையைச் சொல்ல நான் முன் வந்திருக்



கிறேன். அவருடையது கவிதையாலான தென் தமிழ்த் தெய்வப்பரணி; நான் எழுதுவது குற்றங் குறைகள் மலிந்த மானுடனின் உரை நடைக் கதைப் பரணி.

நோக்கம் ஒன்றுதான்: குலோத்துங்க சோழனையும் கருணாகரத் தொண்டைமானையும் முன் வைத்துப் பாடித் தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்தில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுகிறார் அவர். நானோ, பிற்காலப் பாண்டியப் பேரெழுச்சித் தலைவனான முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனையும் அவனது உள்ளத்திலே மாபெரும் சக்தியாக மலர்ந்து மணம் வீசிய வாட்டடங்கண் பேரழகி கயல்விழியையும் பாடி வாசகப் பெருமக்களுக்கு மகிழ்ச்சியூட்ட விரும்புகிறேன்.

போர்களை நாம் அறவே வெறுக்கும் காலம் இது. அன்றுதொட்டு இன்றுவரையில் போர் செய்யும் முறைகளில் எத்தனையோ மாற்றங்கள் இருந்தாலும், முடிவுகளில் மாற்றங்கள் இல்லை. நகரங்களை எரிப்பது, உயிர்களை அழிப்பது, பெண்களின் நிறையைச் சீர்குலைப்பது, அடிமை கொள்ளப்பட்ட மக்களை இழிவுபடுத்துவது—இவை யெல்லாம் அன்றும் நடந்தன; இன்றும் நடக்கின்றன. மக்களின் நம்பிக்கைகள், கொள்கைகள், இலட்சியங்கள் யாவற்றையுமே குலைத்து அற வாழ்வைக் கெடுக்கக்கூடியவை போர் நிகழ்ச்சிகள்.

நாம் போர் வெறி கொண்டவர்களாக இருக்க வேண்டாம். ஆனால் போர் வெறி கொண்ட அண்டை அயலார்களுக்கு மத்தியில் விழிப்போடிருக்க வேண்டியது அவசியமல்லவா? சிந்தனையிலேதான் போர்கள் முதலில் தொடங்கப் பெறுகின்றன. நமது சிந்தனையில் பாதுகாப்பு உணர்ச்சியும் போர்களைப் பற்றிய விவரங்களும் விழிப்பும் இருக்குமானால் நம்மை யாரும் இனி உலகில் தாழ்த்திவிட முடியாது.

ஆகவேதான் போராடி வாழ்ந்த நமது பரம்பரையை இந்தச் சமயத்தில் திரும்பிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் பாண்டியர் குல வரலாற்றில் பொன்னொளி வீசி வாழ்பவன். ஆனால் கயல்விழியோ வரலாற்று ஆசிரியர்களின் விழிகளுக்கே அகப்படாத பேதைப் பெண். பேதைப் பெண்தானா அவள்?

'அரசியல் பிழைத்தார்க்கு அறமே கூற்றாகு' மென்று கூறி மதுரையம் பதியை முன்னொரு நாள் தீக்கிரையாக்கினாள் கற்புக்கரசியாம் கண்ணகி. அதன் பின்னரும் பல முறைகள் மதுரை மாநகர் தீ வாய்ப்பட்டுத் துடித்திருக்கிறது. 'மதுராந்தகர்' என்ற செருக்குப் பெயர் கொண்டு, சோழப் பேரரசே மதுரைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டு மென்று முனைந்திருக்கிறது. அத்தகைய ஒரு கடும் போரின் போது தீக் குளித்த மதுரை மாநகரில் தீக்குளித்து வந்த பெருஞ் செல்விதான் இக் கதைத் தலைவி கயல்விழி.

அமுதத்தை நல்லோருக்கு வழங்குவதற்காக அதனுடே திரண்ட விஷத்தை உண்ணப் புகுந்த ஆலவாய் அழகனின் நகரம் மதுரை. கயற்கண்ணியே அந்த அழகனைக் காத்து, விஷத்தை அவன் கண்டத்தில் தங்கச் செய்து உலகை உய்வித்தாள் என்பது கதை.

சுந்தர பாண்டியனைக் காத்த மங்கை கயல்விழி. பன்முறையும் தீக்குளித்த



மதுரைநல்லாள் எப்படித் தன் பத்தினித் தன்மையால் இன்னும் அழகு குலையாது இளமை பொங்கத் தலை நிமிர்ந்து நிற்கிறாளோ, அப்படியே கயல்விழியும் தீயால் சுடப்பட்டவள் எனினும், பின்னர் தீயையே சுட்டு வஞ்சம் தீர்த்துக் கொண்டவள்.

கயல்விழியை மட்டும் தயவுசெய்து வரலாற்று ஏடுகளில் தேட வேண்டாம். நமது வரலாற்றுச் சான்றுகள் பெரும்பாலும் ஆண்களின் பெருமைகளை மட்டுமே பேசுகின்றன. ஏன், மதுரைத் திருக்கோயில் கூட முற்காலத்தில் மீனாட்சி ஆலயமாகவோ, அங்கயற்கண்ணியின் பெயருடனோ விளங்கவில்லை. 'ஆலவாய் அண்ணல்' கோயிலாகவும், 'அப்பனி' ன் உறைவிடமுமாகவே இருந்து வந்திருக்கிறது.

பிற்காலத்தில்தான் அது சக்தியின் திருக்கோயிலாகவும் மாறியது. சுந்தர பாண்டியன் ஆண்களின் வீரத்தோடு பெண்களின் சக்தியையும் உணரத் தொடங்கிய காலத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாமல்லவா?

பார்வேந்தர்களையும் பாவேந்தர்களையும் தன்னகத்தே கொண்டிருந்த மதுரை, எத்தனையோ படையெடுப்புகளைக் கண்ட பின்னரும் இன்றும் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்குகிறது. ஒரு வேளை பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில், மாலிக்காபூரின் படையெடுப்பு — நேர்ந்திருக்கா விட்டால், மதுராபுரித் திருக் கோயிலின் மதில்களில் இருந்த கல்வெட்டுக்கள் நமக்குச் சரித்திரச் சான்றுகளை இன்னும் மிகுதியாகக் கொடுத்திருக்கக் கூடும்.

நான் ஆராய்ச்சியாளன் அல்லன்; ஆராய்ச்சிகளின் துணை கொண்டு கற்பனை செய்து கதை சொல்பவன். கயல்விழி என்ற பாணர் குலப் பேரழகியை நான் கல்வெட்டுக்களிலோ, மெய்க் கீர்த்திப் படிவங்களிலோ காணவில்லை. அங்கயற்கண்ணியாம் மீனாட்சி அம்மையின் பொற்றாமரைத் திருவடிகளிலே அவளைக் கண்டேன். சின்னஞ்சிறு பூ வண்டாக அவள் சுழன்று ரீங்காரம் செய்தாள். என் கற்பனைக் கனவில் அவள் வந்து கூறிய கதை, நெடுங்கதை இது.

வரலாற்றுப் பேராசிரியர்கள் சிலருக்கும், இலக்கியங்களிலிருந்து அன்றைய வாழ்வைக் கண்டறிய முயன்றிருக்கும் இலக்கியச் செல்வர்கள் சிலருக்கும், ஆராய்ச்சியாளர்கள் சிலருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடியுள்ளார். அவர் மரபில் வந்த மலர்ச்சியாளனாகிய நானும் சுந்தர பாண்டியன் மீதும் கயல் விழி மீதும் ஆவலால் பரணி பாட விழைகின்றேன். 'குற்றங் குறைகளைப் பொறுத்தருளும் பண்போடு இதயக் கபாடம் திறமினோ!' என்று எனது அன்பு நிறைந்த வாசகப் பெருமக்களை அழைக்கிறேன்.

வணக்கம்

அகிலன்



முதல் அத்தியாயம்

சொல்லேர் உழவன்தானா?

கொங்கு நாட்டுத் தலைநகரான கருவூரின் நெடிதுயர்ந்த கோட்டை மதிலை வளைத்துக் கொண்டு ஆன்பொருனைநதி செந்நீர் கலந்த தண்ணீரோடு சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. கோட்டைக்குள்ளேயும் ஆற்றங் கரையிலும் கொங்குநாட்டுப் படைகளுக்கும் சோழப் பேரரசின் படைகளுக்கும் கடுமையான போர். கொங்கு நாடோ சிற்றரசு; சோழப் பேரரசோ கொங்கு நாட்டைப் போல் நூற்றுக்கும் மேற்பட்ட நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டிருந்தது.

போரின் முடிவு எப்படியிருக்குமென்று முன்னமேயே தெரிந்து கொண்டுதான் கொங்கு நாட்டரசனும் எதிர்க்கத் துணிந்தான். முடிசாய மறுத்து மோதி நின்றான். கடைசியில் அவன் கொடி சாய்ந்தது. மூன்றாம் குலோத்துங்கப் பேரரசின் புலிக்கொடி இப்போது அந்த நெடிதுயர்ந்த மதிலின் உச்சியில் நெடிதுயர்ந்து பறந்தது.

கருவூர் நகரத்தின் அருமையை அந்தக் கோட்டை மதில்கூட அவ்வளவாக உணர்ந்ததில்லை. அதைப் போல் எத்தனையோ மதில்கள் தோன்றி வளர்ந்து சரிந்து விட்டன. ஆனால், சிற்றூராக அது பிறந்து வளர்ந்து, பின்னர் சேரர்களின் தலைநகரமாக வஞ்சியாய் வாழ்ந்த காலந் தொட்டு அதை ஊட்டி வளர்த்திருக்கிறது ஆன்பொருனை.

அகமும் புறமும் பாடிய சங்கப் புலவர்கள் அந்த நகரையும் நதியையும் சேர்த்து எத்தனை அழகாகப் பாடியிருக்கிறார்கள்! ஆன்பொருனை தனது சில்லிட்ட காற்றால் நீண்ட பெருமூச்சு விட்டது.

வெற்றி விழாக்களும் வீராபிஷேக விழாக்களும் கோட்டைக்குள் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தன. நகர்ப்புறத்திலும், நதிக்குள்ளும், நதிக்கரையிலும் இரத்த வெள்ளத்தைப் பெருக்கெடுத்து ஓடச் செய்த குலோத்துங்க சோழர் கொங்கு நாட்டரசனின் அரண்மனையில் வீற்றிருந்து **சோழ கேரளன்** என்ற பெயர் சூடி வீராபிஷேகமும் செய்து கொண்டார். ஆன்பொருனை நதி தனது செந்நீர் கலந்த தண்ணீரையே அவரது அபிஷேகத்துக்கும் அனுப்பி வைத்தது!

போருக்கு என்ன காரணம்? யாருக்கும் விளங்கவில்லை. முன்னமேயே சோழப் பேரரசிடம் சிற்றரசராக இருந்தவன்தான் கொங்கு நாட்டரசன். திறை செலுத்தி வந்தவன். என்றாலும், அவன் சோழ நாட்டு வீரர்களை அலட்சியப்படுத்தினான் என்று குற்றம் சாட்டி அவன் மீது பாய்ந்தது சோழப் பேரரசு.

கடல் போல் பரந்து விரிந்து கிடந்த சோழப் பெரும் படைக்கு வேலைகள் கொடுக்க வேண்டுமே! படைகளை வைத்துக் கொண்டு போர்களை நிகழ்த்தாமல் இருக்கலாமா!

வெற்றி விழாக்கள் முடிந்த மறுநாள் காலைப் பொழுது மிகவும் அயர்வோடு விடிந்தது. கோட்டைக் கதவுகளும் வழக்கத்துக்கு ஒரு நாழிகைப் பொழுது சென்ற பின்னரே திறக்கப்பட்டன. கோட்டைக் காவலர்களும் களியாட்டங்களில் கலந்துகொண்ட பின்னர் காவலுக்கு வந்ததால், அவர்களிடமும் அந்த வெற்றிச் சோம்பல் தென்பட்டது.

கதவு எப்போது திறக்கப்படும் என்று காத்திருந்தது போல் பரபரப்போடு ஏட்டுச் சுவடிகளும் கையுமாக ஓர் இளைஞன் அங்கிருந்து வெளிப்பட்டான். உயர்ந்ததோர் செந்தேக்குச் சிற்பம் போன்ற உடற்கட்டு, திரண்ட தோள்கள், பரந்து விரிந்த மார்பு, கூரிய விழிகள், விசாலமான நெற்றி.

வாயிற் காவலர்களின் தலைவனுக்கு வெற்றி மிதப்பில் ஏதாவது அவனிடம் வம்பு பேச வேண்டும் போல் தோன்றியது போலும்.

''நில்! யார் நீ?'' என்று இளைஞனின் கரத்தைப் பற்றி அவனைத் தடுத்து நிறுத்தினான்.

''ஆ!'' என்று பிடியின் வலி தாங்காதவன் போல முகம் சுளித்துக் கூவினான் இளைஞன். ''ஏன், பார்த்தால் தெரியவில்லையா? சொல்லேர் உழவனையா, சொல்லேர் உழவன்!'' என்று ஏட்டுச் சுவடிகளை அவன் முகத்துக்கெதிரே உயர்த்திப் பிடித்து, மற்றொரு கரத்தால் இடுப்பிலிருந்து எழுத்தாணியை உருவிக் காட்டினான்.

''வாளை உருவுகிறது போலல்லவா எழுத்தாணியை உருவுகிறாய்!''

''உம்முடைய வாள் முனையை விட, இந்த எழுத்தாணியின் முனை

கூர்மையுடையது. தெரியுமா? நீர் வில்லோர் உழவர்; உமக்குக் கொல்லத் தெரியும். நானோ சொல்லேருழவன்; கொல்லாமலே வெல்லத் தெரியும்! எது கூர்மையானது?''

''கொங்கு நாட்டுக் கவியோ?''

''பாண்டி நாட்டுப் பைந்தமிழ்க் குமரன் நான். பாண்டிய நாட்டிலிருந்து பல காதங்கள் நடந்து, கொங்கு நாட்டரசைப் பாடிப் பரிசில் பெற வந்தேன். வந்த இடத்தில் சோழச் சக்கரவர்த்திகளின் வீராபிஷேகத்தையே கண்டு மகிழும் பேறு கிடைத்தது. ஆனால், பாடிப் பரிசில் பெறும் வாய்ப்புத்தான் கிட்டவில்லை.''

''உன்னுடைய பாண்டிய நாட்டிலேயே உனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கும்!'' என்று பெருமையோடு கூறினான் வாயிற் காவலன்.

''பாண்டிய நாட்டிலா?''

''ஆமாம், எங்கள் சக்கரவர்த்திகளுக்கு அடுத்த வீராபிஷேகம் உங்கள் குலசேகரப் பாண்டியருடைய அரண்மனையில்தான் நடக்கப் போகிறது. கொங்கு நாட்டுக் கருவூரை வென்றதால் 'சோழ கேரளன்' ஆகி விட்டார்; அடுத்தாற்போல் மதுரைக்கும் திக்விஜயம் செய்து 'சோழ பாண்டியர்' என்ற பெயரும் சூடிக் கொள்வார். சோழ, சேர, பாண்டிய மும்மண்டலங்களுக்கும் அதிபதியாவதால் மதுரையிலேயே 'திரிபுவன வீர தேவர்' என்ற பெரும் பெயரும் பெறப் போகிறார்.''

''என்ன!'' என்று வியப்போடு கூவி, ''திரி.. புவன...வீர...தேவர்!' என்று சொல் பிரித்துப்



பார்ப்பது போல் தனக்குள் கூறிக் கொண்டான் இளைஞன்.

''சக்கரவர்த்திகளின் பெயரையா இகழ்ந்து பேசுகிறாய்?'' என்று மீசை துடிக்க, கண் சிவக்க, வாளை உருவினான் காவலன்.

''இகழ்ந்து பேசுகிறேனா! என்னுடைய நினைவில் நிறுத்திக் கவி பாடுவதற்கல்லவோ சொல்லிப் பார்க்கிறேன். 'திருபுவன வீர தேவா!' என்று தொடங்கி ஒரு பாமாலை புனைந்து சூட்டினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! மூளையைத் தீட்டிக் கொள்கிறேனய்யா, மூளையைத் தீட்டிக் கொள்கிறேன். எங்களுடைய ஒரே ஆயுதம் இது தான்!'' என்று எழுத்தாணியால் தன் தலையைச் சுட்டிக் காட்டினான்.

சொல்லேர் உழவர்கள் பகையும், பாணர்கள், கலைஞர்கள் முதலியோர் பகையும் வேண்டாமென்று ஏற்கனவே சோழப் பேரரசு படைகளுக்குக் கட்டளை யிட்டிருந்தது. வாயிற் காவலன் புலவனுடைய பேச்சிலிருந்து தப்பினால் போதுமென்று அவனை அனுப்பிவைத்தான்.

புலவன் அமராவதி என்று இன்று அழைக்கப் பெறும் ஆன்பொருனையைக் கடந்து நெடுஞ்சாலையில் விரைந்து நடந்தான். கோட்டைக் காவலனிடம் பேசிய குழைவும் துடுக்குத்தனமும் இப்போது அவன் முகத்தில் இல்லை. கடுமையாகச் சிந்திக்க வேண்டிய பொறுப்பை அந்த இளம் பிராயத்திலேயே பெற்றவன் போல் ஏதோ சிந்தனையில் தன்னை மறந்தான்.

குன்றைச் சூழ்ந்த சிற்றூர் ஒன்றில் அவனுடைய குதிரை ஒன்று வணிகனின் பாதுகாப்பில் விடப் பட்டிருந்தது. பராமரிப்புக்கான பொற் கழஞ்சுகளைக் கொடுத்து விட்டு, மௌனமாக அதன் மீது தாவி ஏறினான். களையும் கம்பீரமும் வாய்ந்த அரபு நாட்டுப் பரி அது.

பாண்டிய நாடு செல்லும் சாலையில் குதிரை காற்றின் வேகத்தில் கடுகிப் பறக்கத் தொடங்கியது. இளைஞனின் மனோ வேகமோ அப்போதே போய் மதுரைமாநகரில் குதித்து விட முடியாதா என்பது போல் சிறகடித்தது. புரவியின் பிடரியோடு ஒன்றிப் படுத்துக் காற்றைக் கிழித்த வண்ணம் அவன் கடுகிச் சென்றான்.

சோழப் பேரரசின் ஆதிக்கம் திக்கெட்டும் பரவிக் கிளைத்துச் செழித்து வளர்ந்த காலம் அது. விஜயாலய சோழரால் தஞ்சையில் ஏற்படுத்தப் பெற்ற ஆட்சி, தலைமுறை தலைமுறையாக வந்த மாவீரர்களால் மாபெரும் சாம்ராஜ்யமாக விளங்கிச் சிறந்தது. கங்கை கொண்ட சோழபுரத்தில் தலைநகரை அமைத்துக் கொண்ட சோழர்கள், இப்போது தங்களது முன்னோர்களின் பொன்னகரமாகிய பழையாறைக்கே அதை மாற்றிக் கொண்டிருந்தார்கள். தலைநகரைச் சுற்றிலும் திரும்பிய பக்கமெல்லாம் வீரர்களின் குடியிருப்புக்களே எடுப்புப் பெற்றன. மூன்றும் குலோத்துங்கச் சக்கரவர்த்திகளுக்கு வயதும் முதிர்ந்து விட்டது. யார் மீதும் போர் தொடுப்பதற்கோ, புதுப் புகழ் சேர்ப்பதற்கோ வேண்டிய முகாந்திரமும் ஏதும் இல்லை. அப்படியிருக்கும் போது திடீர் திடீரென்று சிற்றரசர்கள் மீது பாய்வதன் நோக்கம்?

படைகள்! போர்ப் படைகள்! மிதமிஞ்சிய பெரும் படைகளைத் திரட்டி வைத்துக் கொண்டிருப்பவர்களால் அமைதியாக இருக்கமுடியாது போலும்!

'சாகப் போகிற காலத்தில் சக்கரவர்த்திக்குப் புதிய வாகைகள் சூடிப் புதிய பெயர்களால் தம்மை அழைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் எழுந்திருக்கிறது. அல்லது தம்முடைய குமாரன் மூன்றும் இராஜ ராஜனுக்குப் போர்ப் பயிற்சிகள் அளிப்பதற்காக இந்தப் போர்களா? எதுவாக இருந்தாலும் சரி, இனி இந்தச் சோழர்கள் நம்முடைய பாண்டிய நாட்டை அமைதியோடு வாழவிடப் போவதில்லை!'

அமைதியற்ற மனத்தினனாய் இளைஞன் பசியையும் தாகத்தையும் மறந்து விரைந்தான். பாண்டிய நாட்டின் எல்லைக்குள் வந்த பின்னர்தான் தனது குதிரையின் முகத்தை உற்றுப் பார்த்தான் இளைஞன். அதன் சிவந்த கண்களிலிருந்து நீர் வடியத் தொடங்கியது. கடிவாயில் தும்பைப் பூவின் நிறத்தில் நுரை பொங்கியது. மாலை நேரமும் வந்து விட்டது.

இரவு நேரத்தில் தங்குவதற்காக வழியில் தென்பட்ட சிறு நகரத்தின் அஞ்சினான் புகலிடத்தை அடைந்தான் இளைஞன். அஞ்சினான் புகலிடம் என்ற பெயர் அவனுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அச்சம் என்ற சொல்லே அவனுக்கு வெறுப்பைத் தந்தது. 'ஏன், வழிப்போக்கர் புகலிடம் என்று இருந்தால் என்ன?' என்று எண்ணியபடியே குதிரையைக் கொட்டத்தில் கட்டி விட்டு உள்ளே புகுந்தான்.

களைப்பாற அங்கே குளிக்க முடிந்தது. பசி தீர அவனுக்கும் அவன் குதிரைக்கும் உணவும் கிடைத்தது. உணவைப் பரிமாறும் பணியாளனுடைய போக்கில்



சிறிது பரபரப்புக் காணப்படவே, ''என்ன செய்தி? வெளியூருக்குப் புறப்படுகிறவர் போல் அவசரப்படுகிறீரே'' என்று கேட்டான் இளைஞன்.

''இருந்திருந்தும் இன்றைக்கா யாரும் வெளியூருக்குப் புறப்படுவார்கள்? வெளியூர்களிலிருந்து மக்கள் கூட்டம் இங்கே திரண்டு வந்திருப்பதை நீங்கள் பார்க்க வில்லையா? ஊர்தோறும் மாவிலைப் பந்தலும் தென்னங் குருத்தின் தோரணமும் வாழையும் கமுகுமாக இருப்பதை நீங்கள் காணவில்லையா?''

இளைஞனுக்கே இதைக் கேட்க நாணமாகத்தான் இருந்தது. அவனுடைய ஐம்புலன்களும் மதுராபுரியில் இருந்ததால் அவன் தன்னைச் சூழ்ந்துள்ள உலகையே மறந்திருந்தான்.

''நீங்கள் கவியென்றீர்களே! ஒருவேளை கற்பனை உலகில் மிதந்திருப்பீர்கள்.''

''இந்த நகரில்.....?''

''கொற்றவைத் திருவிழாவின் கடைசி நாள் இன்றைக்கு. எங்கள் ஊர் மக்கள் இன்றைக்குத் தாங்கள் கண்கள் பெற்ற பயனை அனுபவிக்கப் போகிறார்கள். நம்முடைய ஆடரங்கில் இன்றைக்கு ஆட்டக் கதை நடக்கப் போகிறது. கவிஞருக்கும் கருத்திருந்தால் அவர் கண்கள் பெற்ற பலனைப் பெற்றுக் கொள்ளலாம்.''

''ஆட்டம், பாட்டு, கூத்து! இவ்வொன்றும் குறைவில்லை நம்முடைய மக்களுக்கு!'' என்று எரிச்சலோடு கூறினான் இளைஞன்.

''என்ன! என்ன! என்ன!''

உணவு பரிமாறுவதைப் பாதியிலேயே நிறுத்தி விடுவது போல் விழித்தான் பரிசாரகன். பாண்டிய நாட்டுக் கவி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒருவனுக்கு ஆட்டக் கதையிடம் இத்தனை வெறுப்பிருந்தது அவனுக்கு வியப்பைத் தந்தது.

''பத்தினித் தெய்வம் கண்ணகியின் கதை நடக்கிறது இங்கே. பாணர் குலப் பேரழகி கயல்விழியின் பெயரையாவது நீங்கள் கேள்வியுற்றதுண்டா?''

இளைஞன் அப்படி ஒரு பெயரைக் கேள்வியுற்றதுமில்லை. அவன் அதைக் கேள்வியுற விரும்பவுமில்லை. பரிமாறுகிறவனைப் பகைத்துக் கொள்ள வேண்டாம் என்பதற்காக அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி அவனிடம் விவரங்களையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

(தொடரும்)

இளைய பாரதத்தினர்





மயிலாப்பூர் பைன் ஆர்ட்ஸ் கிளப்பில் 'எங்கே போகிறோம்?' என்னும் நாடகம் அமெச்சூர் நாடகக் குழுவினரால் நடிக்கப்படவிருந்தது. திடீரென்று அந்த நாடகத்துக்கு நிஜமாகவே போலீஸ்காரர்கள் விஜயம் செய்தார்கள். அப்பொழுது வேஷமணிந்து கொண்டிருந்த அமெச்சூர் நடிகர்களுக்கு எப்படியிருக்கும் ?

''நாடகத்தில் சில வசனங்கள் ஆட்சேபகரமானவை. ஆகவே நாடகத்தை நிறுத்திவிட வேண்டும்!'' என்றார் போலீஸ்காரர் தடையுத்தரவை நீட்டியபடியே.

நீண்ட நேர விவாதத்துக்குப் பிறகு, அவர் குறிப்பிட்ட ஆட்சேபகரமான பகுதிகளை நீக்கி விட்டு, வழக்கமாக ஆறு மணிக்கு ஆரம்பிக்கும் நாடகத்தை ஏழே முக்கால் மணிக்குத் தொடங்கினர்.

ஆங்கிலப் படங்களில் சார்லி சாப்ளின் தமது ஹாஸ்ய வெடிகளின் மூலமும், நடிப்பின் வாயிலாகவும் மக்களை வயிறு குலுங்கக் குலுங்க நகைக்க வைத்து, அதே சமயத்தில் அவர்தன் குறைகளை வெட்டவெளிச்சமாக்கி, விடுவார். இந்தக் கைங்கரியத்தை மிஸ்டர் சோவும் 'ஸம்பவாமி யுகே யுகே' 'எங்கே போகிறோம்?' ஆகிய இரண்டு நாடகங்களிலும் கையாண்டு வெற்றி கண்டிருக்கிறார். இன்று லஞ்சப் பேயும் ஊழலும் தலைவிரித்தாடும் நிலைமையை, கடவுளே வந்து பிறந்தாலும் அவற்றிலிருந்து மீள முடியாதென்று காட்டி, 'ஸம்பவாமி யுகே யுகே' நாடகத்தை மேடையேற்றுவதில் பலவிதத் தொல்லைகளுக்கு உள்ளாகி யிருக்கிறார் சோ.

நாடகத் துறையில் இன்று வெகு வேகமாக முன்னேறி வரும் மிஸ்டர் சோவின் உண்மைப் பெயர் திரு ராமசாமி. சோ என்பது அவர் வீட்டில் வழங்கப்படும் செல்லப் பெயராம். உண்மைப் பெயரை விடச் செல்லப் பெயர் பிரசித்தியடைந்து விட்டது. 'பொன் விளையும் பூமி' என்று பேராசிரியர் கல்கி அவர்கள் புகழ்ந்துரைத்த ஆத்தூர்ப் பண்ணை ஸ்ரீ ஆர். சீனிவாசய்யரின் புதல்வர் இவர்.

இவரது இளமைப் படிப்பு பி. எஸ். எஸ். உயர்நிலைப் பள்ளியிலும், பிறகு கல்லூரிப் படிப்பு லயோலா, விவேகாநந்தா, சட்டக் கல்லூரியிலும் தொடர்ந்தன. மூன்று வருடங்கள் திரு ராமசாமி வக்கீலாகப் 'பிராக்டிஸ்' பண்ணின காலத்திலேதான் நாடகத்தில் நடிக்கவும் 'பிராக்டிஸ்' செய்யத் தொடங்கினார். 1957ம் வருஷத்திலிருந்து நாடகத் துறையில் புகுந்த மிஸ்டர் சோ யுனைடெட் அமெச்சூர்ஸ் ஆர்ட்டிஸ்ட் நாடகக் குழுவின் மூலம் பிரசித்தமானார்.

''விவேகாநந்தா கல்லூரியில் என்னுடன் பயின்ற சில மாணவர்கள் விவேகா பைன் ஆர்ட்ஸ் என்னும் அமெச்சூர் நாடகக் குழுவை அமைத்து நடித்து வந்தனர். அவர்களது விருப்பத்துக்கிணங்க இந்த நாடகக் குழுவில் சேர்ந்து நடிக்கத் தொடங்கினேன்!'' என்று பெருமிதத்துடன் கூறினார் மிஸ்டர் சோ.

'ஸம்பவாமி யுகே யுகே' என்ற நாடகம் வாணிமகாலில் நடந்து கொண்டிருந்தது. அந்த நாடகத்தில் வக்கீலின் மனைவி தன் நொடிப்பினாலும் நடிப்பினாலும் அநாயாசமாக ஹாஸ்ய வெடிகளை உதிர்த்துச் சபையோரைச் சிரிப்புக் கடலில் ஆழ்த்தினாள்.

அருகிலிருந்தவர், ''ஸார்! வக்கீலின் மனைவியாக வரும் இந்த நடிகை நன்றாக நடிக்கிறாளே! அவள் யார்?'' என்று கேட்டார்.

''அவள் நடிகையில்லைகாணும். அவன்தான் மிஸ்டர் சோ! தெரியுமா?''

''அப்படியா?'' என்று வியந்தார் அருகிலிருந்தவர்.



பாத்திரப் பொருத்தம் தத்ரூபமாக அமைந்ததால் அனைவரையும் அன்று இப்படி என்னைச் செய்து விட்டது போலும்!

"மிஸ்டர் சோ! நீங்கள் தயாரித்த ஆறு நாடகங்களும் ஒரே நகைச்சுவை மயமாயிருக்கிறதே அது. ஏனோ?" என்று கேட்டோம்.

"ஸார்! இந்தக் காலத்தில் மக்களின் வாழ்க்கை அழுது வடிகிறது. பொழுது போக்க வந்த இடத்திலும் அவர்களை அழப் பண்ணுவானேன்?" என்றார் அவர்.


'பார் மகளே, பார்!' என்னும் படத்தில் முதல் தடவையாக நகைச்சுவை நடிகராக வந்திருக்கிறார் மிஸ்டர் சோ. 'பெற்றால் தான் பிள்ளையா?' என்னும் நாடகத்தைப் பார்க்க வந்திருந்த நடிகர் சிவாஜி கணேசன் சோவின் நடிப்பைக் கண்டு அவரது திரையுலகப் பிரவேசத்துக்கு உதவி செய்தார்.

மிஸ்டர் சோ இன்னும் பிரம்மச்சாரி. இப்பொழுது டி. டி. கே. கம்பெனியில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். "கல்யாண மார்க்கெட்டில் உங்கள் பேர் அடிபடுமே? பெண்ணைப் பெற்றவர்கள் உங்களைச் சும்மா விடமாட்டார்களே?" என்று கேட்டு வைத்தோம்.

"நாடகமேடையில் ஏறி ஆடுபவனுக்குப் பெண்ணைப் பெற்றவர்கள் பெண்ணைக் கொடுக்கத் தயங்க மாட்டார்களா? அந்த மாதிரி அவர்கள் நெருங்காமல் இருப்பதே எனக்கு நல்லது. எனது கலைக் காதலுக்குக் குந்தகம் ஏற்படாதல்லவா?" என்றார் சோ.

என்றும் பிரம்மச்சாரியாகவே இருந்து கலை உலகில் பெரும் புகழும் பெற ஆசைப்படுகிறார் மிஸ்டர் சோ. ஆனால் மூக்கும் விழியுமாக லட்சணமாய் இருக்கும் அவரை அவரது பெற்றோர்களும், பெண்ணைப் பெற்றவர்களும் நாடகமாடி வழிக்குக் கொண்டு வந்துவிட மாட்டார்களா, என்ன?

சட்டத்தைப் பயின்று பட்டம் பெற்றுள்ள 'சோ' சட்டவரம்புக்கு உட்பட்டே இன்னும் பற்பல நாடகங்களை எழுதி மக்களைச் சிரிக்க வைத்துத் இருத்தவும் செய்வார் என்று எதிர் பார்த்து வாழ்த்துகிறோம். - குண்டுமணி





ஒரு கிளாஸ்


கிஸான்

ஸ்க்வாஷ் அருந்தி

இளைப்பாறுங்கள்

அது சிறந்தவொரு

பழ ரசமாகும்



சுவை மிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது. கிஸான் ஸ்க்வாஷ் ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது.

மற்ற எந்தத்
தயாரிப்பையும் விட
கிஸான் ஸ்க்வாஷ்கள்தான்
இந்தியாவில் அதிகமாக
விற்பனையாகின்றன

JWT/KP/2604

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்

நீரோட்டம்

எஸ்.ரங்கநாயகி

“கீதா! நாம் எதிர்பார்ப்பது நம்மை ஏமாற்றி விடுகின்றன. எதிர்பாராத சம்பவங்கள் இது போல் இடையிலே குறுக்கிட்டு விடுகின்றன. அப்படித்தான், நான் என் வாழ்க்கையை யாருடனோ தொடங்க நினைத்திருந்தேன். அது வேறு விதமாக முடிந்தது'' என்றான் தியாகு.

''என்ன சொல்கிறீர்கள், தியாகு?'' கீதா திடுக்கிட்டபடி கேட்டாள்.

''வேண்டாம் கீதா. உனக்கு இருக்கும் கவலையில் இதை யெல்லாம் பற்றி மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே.... நானே எல்லாவற்றையும் மறந்து விட்டேன். துயரம் என்றாலே எனக்கு வெறுப்புத்தான். அதனால்தான் உன்னையும் துணிவாக இருக்கக் கூறினேன். உன் கடிதத்திலிருந்து மற்ற விவரங்களையும் நான் புரிந்து கொண்டேன் கீதா. ஆனால் மூர்த்திக்குத் திடீரென்று இப்படி......''

தியாகு கூறி முடிக்கவில்லை. அதற்குள் வாசலில் யாரோ நிற்பது தெரிந்தது. அவர்களை உள்ளே வரும்படி தியாகு கூப்பிட்டான். அவர்களையும், அவர்கள் நீட்டிய கடிதத்தையும் பார்த்த போது ''ஐயோ!'' என்று அலறி விட்டாள் கீதா.

தியாகு கீதாவை நோக்கினான். ''கீதா, மடியில் கனமிருந்தாலல்லவோ வழியில் பயம்? ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? நீயே கூச்சல் போட்டுச் சுற்றுப்புறத்திலிருப்பவர்களுக்கு எல்லாவற்றையும் அம்பலப்படுத்தி விடாதே!'' என்று எச்சரித்து விட்டு வீட்டுக்குப் புறப்பட்டான்.

இரவு நேரம். மணி எட்டு ஒன்பது என்ற எண்ணிக்கையிலிருந்து தாண்டிப் பதினொன்றையும் எட்டிவிட்டது. சுசிலாவுக்குப் படுக்கையில் நிம்மதியிருக்கவில்லை. இன்னும் தியாகு வீட்டுக்கு வந்து சேரவில்லை.

அவள் குடித்தனம் ஆரம்பித்து விளையாட்டுப் போல் பத்து மாதங்களும் ஆகிவிட்டன. வயிற்றிலும் எட்டு மாதச் சுமையும் நிறைந்து விட்டது. குடும்பத்தில் எவ்வளவு ஆனந்தத்தை அவள் எதிர்நோக்கி நின்றாளோ அதில் அவள் பூரண குதூகலத்தைக் காணவில்லை... கீதா என்னும் புல்லுருவி இடையே புகுந்து வாழ்க்கைப் பாதையை மாற்றி விட்டதே என்று நினைத்து நினைத்து அவள் மனம் வெதும்பினாள். தியாகுவும்தானாகட்டும் எவ்வளவு துணிச்சலோடு இருக்கிறான். 'எங்கு போய் வந்தீர்கள்?' என்று கேட்கும்போதெல்லாம் தடங்கலில்லாமல் 'உனக்குத்தான் தெரியுமே சுசிலா? நான் எங்கு போவேன்? கீதாவின் வீட்டுக்குத்தான் போய் வந்தேன்' என்று கூறிவிடுகிறான். இந்தப் பதிலைக் கேட்டுச் சுசிலாவுக்குக் கோபம் கோபமாக வரும்.

''இதோ பாருங்கள். இது போன்ற பதிலை இனி என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. இரண்டிலே ஒன்று தீர்த்து விடுவோம். இந்தத் திரிசங்கு சொர்க்கவாசம்....''

''எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும் என்று பார்க்கிறாயா? அதுதான் இல்லை சுசிலா. நான் இருவருக்கும் விரோதமில்லாமல் நடந்து கொள்கிறேன். இந்த விஷயத்தில் உன்னைவிடக் கீதா எனக்கு உதவியாகத்தான் இருக்கிறாள். அவளுடைய இந்தப் பண்பட்ட குணம்தான் என்னை ஒன்றுமே வெளியிட முடியாமல் வதைக்கிறது. சுசி, உன்னுடைய இந்த உடம்பில் ஏன் வீணாக அலட்டிக் கொள்கிறாய்? என்னிடம் உன் அன்பு குறையாது என்பது எனக்குத் தெரியும். இந்த அன்பிலே நின்று வாழ்க்கையைச் சந்தோஷமாக்கப் பழகிக் கொள்......''

''இந்தச் சாதுர்யப் பேச்செல்லாம் எனக்கு அவசியமில்லை.....''



''இதில் சாதுரியம் ஏதும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. நான் சொல்வது எதையுமே நீ கேட்க விரும்பவில்லை. ஆனால் நான் என்ன செய்யட்டும் சுசி. சீதாவின் வீட்டுக்கு இப்படி அடிக்கடி போக நேரிடும் என நான் எதிர்பார்க்கவே யில்லை. சீதாவை என்னால் கைவிட முடியாது. உனக்குத் தெரியாது. நான் இப்பொழுது இந்த நிலையில் இருப்பதற்கே சீதா ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கிறாள்.....எனக்குப் பெற்றோர்கள் இடையாது என்பது உனக்குத்தான் தெரியுமே. மாமாவின் தயவில்தான் இருந்தேன். ஆனால் அவர் குடும்பத்தில் எவ்வளவு நாட்கள்தான் பாரமாக இருப்பது! அதனால் சொல்லாமல் கொள்ளாமல் இந்தக் கல்கத்தாவுக்கு ஓடி வந்து விட்டேன். பல இடங்களில் அலைந்து, கடைசியில் இதே ஆபீசில் வேலை கிடைக்கும் போல் இருந்த போது கடைசி நிமிஷத்தில் எனக்குப் போட்டியாக வந்து சீதா இந்த வேலையை அடைந்து விட்டாள்.....''

'' அன்று உங்கள் வேலையில் போட்டியாக நின்றவள் இன்று எனக்கே போட்டியாக வந்து நிற்கிறாளாக்கும்....''

''உன்னிடம் போட்டியாக நின்று அவள் என்னிடமிருந்து என்னத்தை அடைந்துவிட முடியும்?''

''புரியாதது போலப் பேசி என் கண்களைக் கட்டிவிட முடியும் என்று நினைக்காதீர்கள். ஒரு மனைவி தன் கணவரின் அன்பில் பங்கு அளிக்க விரும்ப மாட்டாள் என்பது நினைவிருக்கட்டும்.'' சுசீலா கர்ஜித்தாள்.

''நூற்றுக்கு நூறு உண்மை சுசீலா. கணவன் மனைவி இருவருமே அப்படித் தான் இருக்க வேண்டும். ஆனால் அன்பு என்பது பல உருவங்களில் உருவெடுத்துள்ளன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. சகோதர, சகோதரிகளிடம் உள்ளன்போடு பழகுவதை மனைவியோ கணவனோ தவறாக எடைபோடக் கூடாது'' என்றான் தியாகு பதற்றமில்லாமல்.

அவனுடைய அமைதியான பதில் சுசீலாவின் கோபத்துக்கு எண்ணெய்த் திரியிட்டது. முகமெல்லாம் சிவந்தது.

''சுசீலா! வீணாகப் பதற்றமடையாதே. கீதாவிடம் அன்பு செலுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதை நான் மீற முடியாது....''

''எனக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. உங்களுடன் அவள் பழகுவதைத் தடுக்க அவள் வீட்டில் வேறு ஒருவரும் இல்லையா ?''

''அவள் குடும்பத்தைப் பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய்? ஊரார் தடுப்பு எங்கள் இருவருக்குமே அவசியமில்லை. எங்கள் மன உறுதியே எங்களுக்குப் போதும்.....'' தியாகு தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து விட்டான். சட்டையை மாட்டிக் கொண்டு வெளியே சென்று விட்டான்.

சுசீலா கட்டிலோடு சாய்ந்து விட்டாள். தலையணை முழுவதும் கண்ணீர் வழிந்து நனைத்தது.

இதுபோல் எத்தனையோ நாட்கள். குடித்தனம் ஆரம்பித்த முதல் நாளே 'கீதாவின் வீட்டுக்குப்போகிறேன்' என்றவன் பிற்பகல் மூன்று மணிக்குத்தான் திரும்பினான். சுசீலா கோபத்துடன் சாப்பிடாமலே உட்கார்ந்திருந்தாள். இதன் நடுவில், செய்து வைத்திருந்த பாயஸத்தை ஒரு பூனை உருட்டிவிட்ட மனச் சஞ்சலம் வேறு. வீட்டுக்கு வந்த தியாகு சுசீலாவின் கோபத்தை உணர்ந்தான். கோபிக்க வில்லை. அதற்கு மாறாகச் சிரித்துப் பேசிச் சாப்பிட உட்கார வைத்து விட்டான். தானும் சாப்பிட அமர்ந்தான். அவனது செய்கையில் சுசீலா அன்று சற்று மன நிம்மதி கண்டாள்.

மறு நாளும், அதற்குப் பிறகும் மீண்டும் கீதாவின் வீட்டுக்குப் போய் வந்தான் தியாகு. சுசீலாவுக்கும் குறைவு வைக்காமல் துணிமணிகள் வாங்கிக் கொடுத்தான். ஓரோர் இடத்துக்கு அவளை அழைத்துச் சென்றான்.

சுசீலாவுக்கு ஒன்றுமே ரசிக்கவில்லை. கீதாவின் வீட்டுக்குத் தியாகு போவதை அவள் சற்றும் விரும்ப வில்லை. அவனுடன் சண்டையிட்டாள். நயமாகக் கூறினான். அவனோ அசைந்து கொடுக்கவில்லை. ஆபீசிலிருந்து திரும்பியதுமே கீதாவின் வீட்டுக்கு ஓடுவான். வெகு நேரம் கழித்துத் திரும்புவான்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள். தியாகு லீவு வாங்கிக் கொண்டிருந்தான்.

''இன்றைக்கு என்ன விசேஷம் ? திடீரென வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள்?'' என்று சுசீலா கேட்டாள்.

''கீதா விஷயமாக ஒரு வக்கீலைப் பார்க்க வேண்டும்.''

''கீதா விஷயமாக வக்கீலா?'' என்று சுசீலா திடுக்கிட்டுக் கேட்டாள்.

தியாகு உதட்டைக் கடித்துக் கொண்டான். சொல்லாமல் வைத்திருந்ததைச் சொல்லிவிட்டது போன்ற பிரமை...... ''சரி, சரி! அதை விட்டுத் தள்ளு. இன்று கொஞ்சம் சீக்கிரமாகச் சமையலை முடித்துவிடு. நான் சீக்கிரமே கிளம்ப வேண்டும்....''

இதைக் கூறிவிட்டுத் தியாகு மேலும் அங்கு நிற்கவில்லை. அன்றையத் தினசரிகளைப் படிக்க அருகிலிருந்த வாசகசாலை ஒன்றுக்குச் சென்று விட்டான். தியாகு திரும்பி வந்து பார்த்தபோது சுசீலா அடுப்பைக் கூடப் பற்ற வைக்க வில்லை.

''என்ன சுசி, உடம்பை ஏதேனும் படுத்துகிறதா? ஏன் இப்படிப் படுத்து விட்டாய்?'' தியாகு அவள் அருகில் சென்று அமர்ந்து முதுகைத் தடவினான்.

சுசீலா பதிலே கூறவில்லை. அவள் விசித்ததற்கு அடையாளமாக உடல் குலுங்கியது.

''சீ, பைத்தியமே! ஏன் இப்படி அழுகிறாய்? உடம்பை வலித்தால் சொல்லு. டாக்டரிடம் அழைத்துப் போகிறேன். அதற்காக.....''

''போதும், இந்தக் கரிசனம் எனக்கு அவசியமில்லை. எனக்கு உடம்பு வலித்தாலும் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. கீதாவின் விஷயத்தை முதலில் போய்க் கவனியுங்கள்.'' சுசீலா நிஷ்டூரமாகப் பதில் கூறினாள்.

''மிஸ்டர் தியாகு!'' வாசலில் இனிய குரல் ஒன்று கேட்டது.

தியாகு அவசரமாக வாசற்புறம் எழுந்து ஓடினான். ''கீதா! நீ எதற்கு இப்பொழுது இங்கு வந்தாய்? நானே உன் வீட்டுக்கு வருவதாகக் கூறியிருந்தேனே !'' என்றான்.

கீதாவின் பெயரைக் கேட்டதுமே சுசீலா எழுந்து உட்கார்ந்தாள். கீதாவிடமே நேரில் கேட்டு இன்று இரண்டில் ஒன்று தீர்த்து விடுவதாக அவள் நிச்சயித்தாள்.

''வக்கீலிடமிருந்து ஆள் வந்தது. அவர் இன்று பத்து மணிக்கு வெளியே போக வேண்டுமாம். அதனால் ஒரு மணி நேரம் முன்னாடி வந்து விட்டால் நலம் என்று சொல்லி அனுப்பினார். அதை உங்களிடம் சொல்லி நேரில் அழைத்துப் போகவே வந்தேன். உங்களுக்கு ஒன்றும் அசௌகரியமில்லையே!''

''எனக்கென்ன அசௌகரியம்? தீவிர எதிர்ப்புக்குப் பிறகு இதில் முனைகிறோம். இதில் வெற்றி கிடைக்க வேண்டுமே என்று எனக்கும் பயம்தான். அதனால் ராகு காலத்துக்கு முன்பே வக்கீலிடம்



''அவர் அன்றைக்குச் சபாவில் பேசினார். பிரமாதமாகப் பேசினார். நீங்க வந்திருக்கணும் சார்!''

''சபாவில் எந்த 'மீட்டிங்'கில் அவர் பேசினார்?''

''நீங்க ஒண்ணு! கச்சேரி நடக்கிற போது என்னோடு பேசிக்கொண்டிருந்ததைச் சொல்றேன்!''

போய் விடுவதும் நல்லதுதான்'' என்று கூறிய தியாகு, ''கீதா, டாக்ஸியில் தானே வந்தாய்? அந்த டாக்ஸியிலேயே போய் விடலாம். நீ போய் ஏறிக் கொள். நான் ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்'' என்றான்.

''மிஸ்டர், தியாகு! உங்கள் மனைவியைப் பார்க்க நேரமேயிருப்பதில்லை. அவரையும் பார்த்து விட்டு....'' என்று கீதா ஆரம்பித்த போதே ''அதற்கு இப்போது நேரமில்லை, கீதா. வக்கீலிடம் நிறையப் பேசவேண்டும். டாக்ஸி டிரைவரும் ஹார்ன் அடிக்க ஆரம்பித்து விட்டான். நீ கீழே போ.....'' என்று உத்தரவிட்டு அனுப்பி விட்டான் தியாகு. கீதா படியிறங்கி விட்டாள்.

சுசீலா கீதாவுடன் பேச நினைத்த ஒரு நிமிடத்துக்குள் இவ்வளவும் முடிந்து விட்டது. கால்சராயை மாட்டிக் கொண்ட தியாகு சுசீலாவை நோக்கி, ''சுசீலா! கீதா சொன்னதைத்தான் நீ கேட்டுக் கொண்டிருந்திருப்பாயே. நான் இப்பொழுதே போகிறேன். உனக்கு உடம்பு முடியுமானால் சமைத்து விடு. இல்லாவிடில் நான் ஹோட்டலிலிருந்தே உனக்கும் வாங்கி வந்து விடுகிறேன்'' என்று கூறிவிட்டுப் படியிறங்கி விட்டான். சுசீலா நின்ற நிலையில் சிலையாகி விட்டாள். வாசலில் டாக்ஸி புறப்படும் ஓசை கேட்டது.

சுசீலா எவ்வளவு நேரந்தான் அப்படியே உட்கார்ந்திருந்தாளோ! அவள் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவள் போல் கடிதம் எழுதுவதற்குப் பேனா காகிதம் சகிதமாக உட்கார்ந்தாள்.

இன்று எப்படியும் சித்திக்கு எழுதி விட வேண்டும். எவ்வளவு நாட்கள் தான் இப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும்? சித்திக்கு இதைப் பற்றி எழுத வேண்டாமென்றுதான் அவள் முதலில் நினைத்திருந்தாள். வயதானவருக்கு வாழ்க்கைப்பட்டு அவள் மனம் எவ்விதமெல்லாம் துன்புற்றிருக்கிறதோ! அதையே அவள் வெளிக்குக் காட்டாமல் மூத்தவள் மகனை, தன் வயதுக்குச் சமானமானவனைத் தன் மகனாகவே பாவித்து அம்மகனின் நல் வாழ்வுக்கு அடிகோலினவள். அப்படியிருக்கும் போது கல்கத்தா வாழ்க்கையை விவரித்து எழுதி, அவளே முன் நின்று நடத்திய விவாகத்தின் நிலையை விவரித்துக் காட்டி அவள் மனத்தை மேலும் துன்புறுத்துவதா? இந்த யோசனை காரணமாகத் தான் சுசீலா கடிதமே எழுதாமலிருந்தாள். அது மட்டுமல்ல, தன் குடும்பத்தில் யசோதை பேரன் என்று எடுத்துக் கொஞ்சக்கூடிய மகிழ்ச்சி நிலவப் போவதைப் பற்றியும் அவள் எழுதியிருக்கவில்லை. சுசீலாவுக்கு அதில் சிறிதும் மகிழ்ச்சி இருந்ததாகவே தெரியவில்லை. தானாக இது பற்றி எழுதவும் முன் வரவில்லை தியாகு.

இன்று வக்கீல் என்ற சொல்லைக் கேட்டதுமே சுசீலாவின் மனம் ஏதேதோ நினைத்தது. உடனே சித்திக்கு இது பற்றி விவரமாக எழுத நிச்சயித்து விட்டாள்.

கடிதத்தில், 'அன்புள்ள சித்திக்கு' என்று ஒரு வரி எழுதி விட்டாள். அதற்கு மேல் என்ன எழுதுவது? எப்படி விவரிப்பது? கடிதத்தில் கணவனது நடத்தையைச் சந்தேகிப்பதாக எழுதி விட முடியுமா? கணவர் தன்னிடம் அன்பாக இல்லை என்று எழுதுவதா?

டக்...டக்....

வாசல் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தாள் சுசீலா. தியாகுவின் ஆபீஸ் பியூன் நின்று கொண்டிருந்தான்.

''என்ன வேண்டும்?''

''ஸாப் இருக்கிறாரா?''

''இல்லை. அவர் அப்பொழுதே வெளியே போய் விட்டார். ஏன் என்ன வேண்டும்?''

''ஸாப் இன்று லீவில் இருக்கிறார் என்று தெரியும். அவரைப் பார்க்க ஆபீசில் ஒருவர் வந்திருந்தார். அவர் இன்று வரமாட்டார் என்று சொன்னதும் இந்தக் கடிதத்தை அவசரமாகக் கொடுத்து விடச் சொன்னார்.''

கடிதம் ஒட்டப்படாமல் இருந்தது. சுசீலா அதைப் பிரித்துப் பார்த்தாள்.

''தியாகு,

நீயும் கீதாவும் வக்கீலைப் பார்க்கப் போவதாக அறிந்தேன். நான் தடுக்கிறேன் என்பதற்காகவே என்னைப் பார்க்க வராமலிருக்கிறாய். மீண்டும் கூறுகிறேன். இதில் மேலே

கல்கி வெள்ளி விழா பரிசுப் போட்டி

எழுத்தாள அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி. வெள்ளி விழா சிறு கதை, நாவல் போட்டிகளின் முடிவுத் தேதியைச் சில மாதங்களுக்குத் தள்ளி வைத்தால் சௌகரியமா யிருக்கும் என்ற பல எழுத்தாளர்களின் வேண்டு கோளுக்கிணங்க முடிவுத் தேதியை 31–12–64ந் தேதிக்கு மாற்றியிருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தை எழுத்தாள அன்பர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். தொடர்கதை, சிறுகதை ஆகிய இலக்கியப் பகுதிகளில் புது சகாப்தத்தை உண்டுபண்ணிய 'கல்கி' யின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவை யொட்டி இப் பகுதிகளின் வளர்ச்சிக்காக இருபத்தையாயிரம் ரூபாயை ஒதுக்கிப் பரிசுகளாக வழங்கத் தீர்மானித்திருக்கிறோம்.

சிறந்த நாவல்களுக்கு மூன்று பரிசுகளும், சிறுகதைகளுக்கு மூன்று பரிசுகளும் தருவதாக இருக்கிறோம். சிறந்த நாவல்களுக்கு:

முதற் பரிசு	...	ரூ.	10,000
இரண்டாவது பரிசு	...	ரூ.	7,500
மூன்றாவது பரிசு	...	ரூ.	5,000

சமூக நாவல்களா யிருக்க வேண்டும் அல்லது சரித்திர நாவல் களாயிருக்க வேண்டும் என்ற கட்டுத் திட்டங்கள் ஏதும் கிடையாது. தமிழ் இலக்கிய முன்னேற்றத்துக்கு மேலும் புகழ் தேடித் தருவ தாக அமைய வேண்டும் என்ற ஒரே நிபந்தனைதான்.

அதே போலத்தான் சிறுகதைகளுக்கும்.

முதற் பரிசு	...	ரூ.	1,000
இரண்டாவது பரிசு	...	ரூ.	500
மூன்றாவது பரிசு (பத்துக் கதைகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 வீதம்)	...	ரூ.	1,000

ஆக மொத்தம் இருபத்தையாயிரம் ரூபாய் (ரூ. 25,000) பரிசுகளாக வழங்கப்பெறும்.

நந்தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆற அமர சிந்தித்துத் தமிழ் மண்ணுக்கும், 'கல்கி' பத்திரிகைக்கும் அழியாப் புகழ் தேடித் தரும் சிறுகதை, நவீனங்களை எழுதுங்கள்.

சிறுகதைகள் கல்கியில் ஆறு பக்கங்களிலிருந்து எட்டு பக்கங்களுக்குள் வரும்படியாக இருக்கலாம். நாவல்கள் கல்கி பத்திரிகையில் வாரம் ஆறு பக்கங்களாக ஒரு வருடம் வருமளவுக்கு அமையப் பெறலாம். ஒருவர் எத்தனை கதைகள், நாவல்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

1964-ம் ஆண்டு டிசம்பர் முப்பத்தியொன்றும் தேதிக்குள் எங்கள் காரியாலயத்துக்கு வந்து சேரும்படி அனுப்பி வைத்தால் போதுமானது.

இந்தப் போட்டி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

இலக்கியத் துறையிலே சிறந்து விளங்கும் அறிஞர்கள் பஞ்சாயத்தார் களாகப் பொறுப்பேற்றுப் போட்டிக்கு நீதி வழங்குவார்கள்.

எழுத்தாள அன்பர்களின் ஒத்துழைப்பு 'கல்கி'யின் பணியை மேலும் சிறந்தோங்கச் செய்யும் என்று நம்புகிறோம்.

ஏட்டிக்குப் போட்டி



* பி. டி. சாக்கோ மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் ருசுவாகவில்லை என்று கேஸைத் தள்ளுபடி செய்த மாஜிஸ்திரேட் வேறு புதிய குற்றச்சாட்டை அவர் மீது போலீஸார் சுமத்தியிருப்பதாகக் கூறினார். — திருச்சூர் செய்தி

''ஏதாவது ஒருவிதத்தில் என்னைத் தொந்தரவு செய்ய இதுவும் ஒரு சாக்கோ?'' என்று முன்னாள் கேரள மந்திரி முணுமுணுப்பது காதில் விழுகிறது.

* எங்களிடம் கான்ஸர் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ளுங்கள். சிகரெட் பிடிப்பதால் உங்களுக்குக் கான்ஸர் நோய் வந்தால் நாங்கள் உங்கள் கஷ்டத்தைப் போக்க இன்ஷூரன்ஸ் தொகையைத் தந்து விடுகிறோம்.

— ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனி

எங்களிடம் சிகரெட் வியாபார இன்ஷூரன்ஸ் செய்துகொள்ளுங்கள். கான்ஸர் பீதியால் சிகரெட் வியாபாரம் படுத்துப் போனால் நாங்கள் உங்கள் நஷ்டத்தைத் தீர்க்க இன்ஷூர் தொகையைத் தந்துவிடுகிறோம்.

— மற்றொரு இன்ஷூரன்ஸ் கம்பெனி

நடக்க வேண்டியதை நிறுத்தி விடு. உன் காரணமாகத்தான் கீதா இதில் துணிந்து நுழைவதால் உனக்கே இந்தக் கடிதம் அனுப்புகிறேன். என் பேச்சைக் கேள். இதில் வெற்றி கிட்டாது. மூர்த்தி.''

ஆபீஸ் பியூன் படி இறங்க ஆரம்பித்து விட்டான். ஏதோ சட்டென்று நினைத்தவளாய்ச் சுசீலா அவனைக் கூப்பிட்டாள்.

''லாப் ஆபீசில் கீதா என்று யாராவது இருக்கிறார்களா?''

''இதென்னம்மா, கீதாவைப் பற்றியா உங்களிடம் ஒன்றுமே கூறவில்லையா?'' என்று கேட்டான் பியூன்.

''ஏன், என்ன விசேஷம்? அப்படித் தனிப்படப் பேசுகிறாயே!'' சுசீலா உன்னிப்பாகக் கேட்டாள். தியாகு, கீதா ரகசியம் ஆபீஸ் முழுவதும் பிரசித்தம் போலும்!

''அந்தம்மாவைப் பற்றித் தெரியாதவர்களே ஆபீசில் கிடையாதும்மா. அவ்வளவு நல்ல பொண்ணு. வேலையிலே கரெக்ட், மற்றவர்களிடமும் தூரவே நின்னு பழகும்.....''

சுசீலாவுக்கு அவன் பதில் சப்பிட்டு விட்டது. அந்தப் பதிலிலிருந்து கீதாவைப் பற்றியோ, தியாகுவைப் பற்றியோ அவளால் ஒன்றும் கிரகித்துவிட முடியவில்லை.

''கீதாவுக்கு எங்கு வீடு? பெற்றோர்கள் இருக்கிறார்களா?'' என்று சுசீலா மேலும் கேட்டாள்.

''அவங்க வீட்டைப் பற்றி ஒருத்தருக்கும் தெரியாது. தூரத்தில் எங்கோ இருக்கிறான். பெற்றோர்கள் இல்லை. அத்தை மட்டும் இருந்தாள். அவளும் இறந்து விட்டாளாம். அது காரணமாகக் கீதா துரும்பாகப் போய் விட்டாள். தன் குடும்பத்தைப் பற்றி ஒருத்தரிடமும் சொல்ல மாட்டாள். மற்றவர் குடும்பத்தைப் பற்றியும் கேட்க மாட்டாள்....... நான் வர்றேம்மா.'' அவன் சென்று விட்டான்.

சுசீலா செயலற்று உட்கார்ந்து விட்டாள். கீதாவைப் பற்றின விவரம் ஒருவரிடமிருந்தும் அறிய முடியவில்லை. இதன் நடுவில் மூர்த்தி என்பவர் இவர்கள் வக்கீல் வீட்டுக்குப் போவதைத் தடுக்கிறார்......

எத்தனையோ குழப்பங்கள், எத்தனையோ யோசனைகள்....

இந்தக் குழப்பத்திலேயே மூழ்கி விட்ட சுசீலா கடைசியில் சித்திக்கு ஒரு வரிகூட எழுதவில்லை. அடுப்பைப் பற்ற வைத்துச் சமையல் செய்யவும் இல்லை.

பன்னிரண்டு மணிக்குத்தான் தியாகு திரும்பினான். உள்ளே நுழைந்ததுமே அவன் நேராகச் சமையலறைக்குச் சென்றான். அடுப்பைப் பற்ற வைத்த சுவடே தெரியவில்லை.

தியாகு சுசீலாவோடு ஒரு வார்த்தையும் பேச வில்லை. நேராக ஹோட்டலுக்குச் சென்றவன், திரும்பி வந்த போது டிபன்செட்டுடன் வந்தான். பிறகு தானே இலைகளைப் பரப்பினான்.

''சுசீலா! எழுந்து வா. எனக்கு ஒரே பசி. நீயும் சாப்பிடாமல் இருப்பாய் என்று தெரியும். அதனால்தான் கீதா வற்புறுத்தியும் கேளாமல் வந்து விட்டேன்'' என்று கூறியவன் தானே இலைகளில் பரிமாறினான்.

சுசீலா உடனே எழுந்து வந்துவிடவில்லை. தியாகுதான் அவளைக் கட்டாயப்படுத்திச் சாப்பிடச் செய்தான்.


''யாரோ மூர்த்தியாமே! உங்களைத் தேடிக் கொண்டு....'' என்று சுசீலா ஆரம்பித்தாள்.

''மூர்த்தியா? இங்கேயே வந்து விட்டானா?'' என்று தியாகு பதற்றத்துடன் கேட்டான்.

''இதற்கு என்ன இவ்வளவு பதற்றம்?'' என்றாள் சுசீலா. **(தொடரும்)**

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



பொடுகு

இது சாதாரணமான உபாதை. இதை ஒருபோதும் அலட்சியம் செய்யக்கூடாது.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டம் இல்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்.

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹேயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மெண்ட் K-1 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன் – கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/6/64

இரும்பு 'கேட்'டின் பாளைக் கொக்கியைத் தூக்கித் திறந்து யாரோ உள்ளே வருகிறார்கள். ஒரு வயசானவர். நரைத்த தலை. கிராப்பு. அதிலும் நடுவில் வழுக்கை. இரட்டை நாடி தேகம்தான். வயசானதால் இரட்டைநாடி ஊளைச் சதைமாதிரி தோன்றுகிறது. நெற்றியில் விபூதி. அதன் நடுவில் குங்குமம். அரைக் கை ஸ்லாக்கு. கீழே 'பனீர்' என்று வெள்ளைத் தட்டுச் சுற்று. இரண்டுமே வண்ணான் மடிதான்.



மறுபடியும் கேட்டைச் சாத்திப் பாளைக் கொக்கியைத் தள்ளுகிறார் அவர். கூட வந்த இருவரும் பின்தொடர உள் வாசலை நோக்கி வருகிறார். அவர் சம்சாரம் போலிருக்கிறது கூட வருகிற அம்மாள். பட்டுப் புடவை. ஸ்நானம் செய்து கூந்தலைப் பிடரியில் புரளத் துரை முடிந்திருக்கிறாள். பாதி நரை. பாதி கறுப்பு. அதுவும் ஓர் அழகுதான். கூட வருகிறான் ஒரு பையன். அம்மாள் மாதிரிதான் முகச் சாயை. தலையை ஒட்ட வெட்டின கிராப்பு. அவர் மாதிரியே நெற்றியில் விபூதி. நடுவில் குங்குமம். இருபது வயதிருக்கும். ஆனால் வயதுக்கேற்ற பாந்தமில்லை. நடை உடையில் வேட்டியை என்னமோ கோணலும் மாணலுமாகக் கட்டியிருக்கிறான். கல்லூரிப் பையனோ என்னவோ; வேட்டி கட்டிப் பழக்கமிராது.

மூன்றுபேரும் உள் வாசல் சார்பில் மறைந்து விட்டார்கள். யார் இது? தெரிந்த முகங்கள் இல்லை. ஒருவேளை விசாலத்துக்குப் பழக்கமாயிருக்கும்.

சரி, யாராகவாவது இருக்கட்டும். ஆபீஸுக்குப் போகும்போது நளினி சொல்லி விட்டுத்தான் போவாள்.

தலைகள் மறையவே, தோட்டத்துச் செடிகளின் தலைகளைப் பார்த்தார். அவர் மாடி ஜன்னல் வழியாக உலகத்தைப் பார்ப்பது ஒரு தனி அனுபவம்தான். பட்டும் படாமலும் இருக்கலாம். மரத்தின் தலைகளைப் பார்க்கலாம். கொடையாகப் பூத்த செடிகளின் தலைகளைப் பார்க்கலாம். மனிதர்களின் தலைகளைப் பார்க்கலாம்.

சாமா தாடியை உள் பக்கமாக விரலை விட்டுக் கோதினார். மாடியும் தாடியும்! எவ்வளவு பொருத்தமான பிராஸம்! மாடி வீடு கட்டி அதில் வந்து உலாவும் நேரம் வந்து விட்டது. தாடி வைத்துக் கொண்டு அதைக் கோதவும் நேரம் கிடைத்து விட்டது. மோரும் சாதத்துக்கு ஊறுகாய் தொட்டுக் கொள்வது போல, சிந்தனை செய்யும்போது தொட்டுக் கொள்ள ஒரு தாடி எவ்வளவு வாகாக இருக்கிறது!


ஆமாம். சிந்தனை செய்வதைத் தவிர வேறு ஒன்றுமே இப்பொழுது செய்ய முடிய

வில்லை. முன்பெல்லாம் போல் ஓடியாட முடியவில்லை. ஒரு தடவை கீழே இறங்கிப் போய் வந்தால் இரைக்கிறது. மூச்சு வாங்குகிறது. உலாவ என்று இரண்டு தெரு நடந்தாலே முழங்காலுக்குக் கீழே துணியாகத் துவள்கிறது. கீழ் முதுகு 'பளிச் பளிச்' சென்கிறது. ரத்த அழுக்கம் கிச்சு கிச்சு மூட்டுகிறது. பேசினால்கூடப் படபடக்கிறது. அதைத் தெரிந்து கொண்டுதானோ என்னவோ அவர் பேசுவதை நாள் கணக்கில் மணிக் கணக்கில் வீட்டுக்குப் போகும் பிரக்ஞையே இல்லாமல் கேட்டுக் கொண்டிருந்த நண்பர்கள் கூட ஒதுங்கி நிற்கிறார்கள். ஏன், விசாலமே மாடிப் பக்கம் வருவது நின்றுவிட்டது. அவளாவது போனால் போகட்டும். அவளுக்கும் வயது. இரைப்பு, கால் வலி. நளினியாவது பேச வரலாம். அவளும் வேலை வேலை என்று பறக்கிறாள். தோட்டம், அடுக்களை, அப்புறம் ஆபீசு என்று பறக்கிறாள். காப்பி, டிபன் கொண்டு வரும்பொழுது . தவிர மாடிப் பக்கம் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. எத்தனை படித்தாலும் மேலே வரப் பெண்களுக்குத் தோன்றாது போலிருக்கிறது.

''அப்பா!''

நளினி மாடிப்படி ஏறிவந்து கூப்பிட்டாள்.





தி.ஜானகிராமன்

''என்ன?''

''யாரோ உன்னைப் பார்க்கணுமாம். வந்திருக்காப்பா.''

''யாராம்!''

''யாருன்னு கேட்டேன். அவரைப் பார்க்கணும்னு வந்திருக்கோம்னு சொன்னா.''

''வரச் சொல்லு. வரச் சொல்லு.''

நம்மையும் பார்க்க வரத் தோன்றுகிறதா? இன்றைக்கு என்ன பெரிய அதிர்ஷ்டமாக இருக்கிறது!

நளினி கீழே போய் விட்டாள்.

யார் இவர்கள்! பார்த்த முகங்களே இல்லை: இல்லை, நமக்குத்தான் ஞாபக மறதி என்ற புது வியாதி வந்திருக்கிறதா? வயசானால் வியாதிகள் வந்து உட்கார்ந்த பிறகுதானே தெரிகிறது. அயலான் நிலத்தில் இரவோடு இரவாகக் குடிசை போடுகிறவர்களைப் போல் ஒரு சமயம் இவர்களைப் பார்த்திருக்கிறேனோ—இல்லையே.. எப்படியிருந்தால் என்ன? நண்பர்கள்தான் வரவில்லை — இவர்கள்தான் வரட்டுமே!

''நமஸ்காரம்.''

''நமஸ்காரம்.''

நமஸ்காரம் என்று சொன்னது போதாதா? கீழே விழுந்து நாலு தடவை சேவித்தார்: அம்மாளும் சேவித்தாள். பையன் மட்டும் சாமாவையும், அவர் தாடியையும் பார்த்து இலேசாகப் புன்னகை செய்து கொண்டு நின்றான்.

''அடாடா'' என்று கூசிக் குறுகினார் சாமா. ''இதெல்லாம் எதுக்காக?''

எழுந்துகொண்ட பெரியவர், ''நன்னாயிருக்கே நீங்கள் சொல்றது. பெரியவாளைப் பார்த்தோடனே நமஸ்காரம் பண்ணண்டாமோ! இடைக்கணுமே.... ஏய், குமார், என்னடா சிரிச்சுண்டே நிக்கறாய்! நமஸ்காரம் பண்ணுடா.''

''பரவாயில்லே'' என்று பதறினார் சாமா.

''இடைக்கணுமே. போது விடிஞ்சா பாபங்கள் செய்துண்டே இருக்கோம். ஒருதடவையாவது நல்ல காரியம் செய்யணும்னு தோணண்டாமோ'' என்றார் பெரியவர்.

பையன் குப்புற விழுந்து நமஸ்காரம் செய்தான்.

சாமா மறுபடியும் கூசிக் குறுகினார். பையன் அவருக்கு நமஸ்காரம் செய்வதை ரொம்பவும் அனுபவித்தே செய்தான். நாலோடு நிறுத்தவில்லை. ஆறு. ஏழு, பத்தாகிவிட்டது.

'' போரும்டா, குழந்தே, போரும்'' என்று அவனைத் தூக்கி நிறுத்த வேண்டும்போலிருந்தது சாமாவுக்கு. பையன் விடவில்லை.

''பண்ணட்டுமே. அத்தனைக்கத்தனை ஸ்ரேயஸுண்டே. குமார், போரும். எழுந்துக்கோ'' என்று அப்பா சொன்னதும்தான் எழுந்திருந்தான் அவன். உள்ளங் கைகளைத் தட்டிவிட்டு அவரைப் பார்த்து மறுபடியும் புன்னகை செய்தான்.

''உட்காருங்கோ'' என்று நாற்காலிகளைக் காட்டினார் சாமா.

"இப்படித்தானே இருக்கோம்" என்று கீழே உட்கார்ந்து விட்டார் வந்தவர்.

"அடாடா" என்று மீண்டும் கூனிக் குறுகி நாற்காலிகளைக்காட்டினார் சாமா. பயனில்லை. மூன்றுபேரும் கீழே உட்கார்ந்துவிட்டார்கள். ஆனால் சாமா! அவருக்குக் கீழே உட்கார்ந்து பழக்கமில்லையே. அவர்களுக்காகக் கீழே உட்கார்ந்தால் காலை மடக்க வேண்டும். எழுந்து கொள்ளும்போது அதைப் பிரிக்கவேண்டும். என்ன ஆகுமோ! டார்பண்டைன், பிண்ட தைலம்... எனவே வழக்கம்போல் தம் கட்டில்மீது உட்கார்ந்து விட்டார். தாழ்வான மரக்கட்டில் அது. மேலே நுரை மெத்தை போட்டு, அதன் மீது ஒரு கதர் விரிப்பும், அதற்கு மேல் ஒரு புலித் தோலும் போட்டிருந்தன. நளினி போன வருஷம் டில்லிக்குப் போனபோது ஹரித்துவாரம் போனளாம். அப்பாவுக்கு இருக்கட்டும் என்று வாங்கி வந்தாளாம் இந்தப் புலித் தோலை. ஆனா மட்டும் வேண்டாம் என்று உள்ளே சுருட்டி வைக்கப் பார்த்தார். நடக்கவில்லை. ஆனால் இப்பொழுதெல்லாம் அதில்லாமல் கட்டில் மீது உட்காருவது போலவே இல்லை. புலிக்குத்தான் என்ன வழவழப்பு! என்ன மென்மை! தாடி, புலித் தோல்—என்ன இது! அவருக்கே சிரிப்பு வந்தது. வாய்க்கு வராமல் அடக்கிக் கொண்டார் அதை.

"நாங்கள் கல்கத்தாவிலேருந்து வந்திருக்கோம். வல்லபதாஸோட பாக்டரியிலே நான் எஞ்சினீயரா இருக்கேன். ஒரு மாச லீவிலே வந்தோம். வர்றப்போ எங்க அம்மாஞ்சி சொன்னார். — மெட்ராஸுக்குப் போனா பெரியவாளைப் பாருடான்னு. அட்ரஸ் கொடுத்தார். எங்க அம்மாஞ்சி வி. வி. அய்யர். பின்பே கம்பெனியிலே...."

"ஆமாமா... வி. வி. அய்யரா? — பின்பே கம்பெனி — வி. வி. அய்யர் — தெரியுமே."

"அவர் எனக்கு அம்மாஞ்சியாக்கும்."

"பேஷ் பேஷ் ... அப்படியா ... ரொம்ப சந்தோஷம்...." எனக்கு ரொம்பக் காலமா பழக்கம் அவர்."

"சொன்னார்."

"சௌக்கியமா இருக்காரா?"

"சௌக்கியமா இருக்கார். இப்போ அவர் தான் ஜெனரல் மானேஜர். மாசம் பதினாயிரம் சம்பளம் கொடுக்கறான். இன்கம்டாக்ஸையும் அவனே கொடுத்திடறான். ரிடையராகிப் பத்து வருஷமாயிருக்கணும். ஆனால் நீ போகப்படாதுன்னு அவரை விடமாட்டேங்கறான்."

சாமாவுக்குத் திகைப்பாகத்தானிருந்தது.

"ம்ம்... இருக்கட்டும். முயற்சி இருக்கிற புருஷ சிம்மத்தை லட்சுமி வலிய வலிய வந்து இறுகத் தழுவிக்கத்தான் செய்வா. எத்தனை சக்தி வந்து அவனைப் பிடிச்சு இழுத்தாலும் அவ பிடிச்ச பிடியை விடுவாளோ!"

"வசனத்துலே ஒரு வார்த்தையாக்கும்... பெரியவா எப்படிப் பேசறா பாரு!" என்று மனைவியின் பக்கம் திரும்பினார் வந்தவர்.

"நான் சொல்லலே ஸ்வாமி இது. பஞ்ச தந்திரக் கதையிலே வரது" என்றார் சாமா.

"வரட்டுமே. பெரியவாளுக்கு அதை ஞாபகமாகச் சொல்லத் தோணுறதே அதை இல்லியா சொல்லணும்!"

வி. வி. அய்யருக்கு மாதம் பதினாயிரம் ரூபாய் சம்பளமாம். வருமான வரியையும் கம்பெனியே கொடுக்கிறதாம். முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் போன எல்லா மெட்ராஸிகளையும் போல வி. வி. அய்யரும் தட்டெழுத்து அடிக்கப் போனவர் தான். அப்பொழுது சாமாவும்தான் கல்கத்தா போனார். ஏதோ நாலு வருஷங்கள் ஒரு பத்திரிகையில் வேலை பார்த்தார். நன்றாகத்தான் இருந்தது. நிறையப் புத்தகங்கள் எல்லாம் படித்தார். ரங்கூன், மலாயா, ஜப்பான் என்று அந்தப் பத்திரிகை ஆசிரியரோடு ஒரு தடவை சுற்றினார். என்ன செய்தென்ன? காசைக் கண்ணால் பார்க்க முடியவில்லை. இண்டலெக்ச்சுவல் என்று இறக்கை முளைத்த இலவ விதை போல ஒரு பட்டம்தான் மிஞ்சிற்று. அறிவாளி, மேதை, சிந்தனையாளர் என்றெல்லாம் மெட்ராஸிகள், ஏன், வங்காளிகள் கூட வந்து மொய்த்தார்கள். அவர் பேச்சைக் கேட்க, மேதையின் கூர்மையையும் நுட்பத்தையும் அனுபவிக்க அவர் வீட்டில் வந்து நண்பர்கள் மொய்த்த வண்ணம் இருப்பார்கள். தட்டெழுத்து வி. வி. அய்யர் வந்ததுதான் வியப்பிலும் வியப்பாயிருந்தது. இப்பொழுது வியப்பாக இல்லை. அந்த மாதிரி குணம் இருந்ததனால்தானே இப்படி அதே கம்பெனியில் முன்னேறி சர்வமும் வல்ல ஜெனரல் மானேஜராக இருக்கிறார். தட்டெழுத்தராகப் போனது ஒரு சாக்கு. ஏதாவது ஓர் இடத்திலிருந்துதானே புறப்பட்டாக வேண்டும்? அந்த வி. வி. அய்யர் சாமா வீட்டுக்கு எத்தனை தடவை வந்திருக்கிறார்! அவருடைய வாதங்களில் மயங்கியிருக்கிறார்! சாமா வரும்படி பற்றாமல் பத்திரிகைத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டு, வக்கீல் தொழில் நடத்தப் போகிறேன் என்று சென்னை வந்தபோது, வி.வி. அய்யர் அவரைத் தடுக்கவும் முடியாமல், பேசவும் முடியாமல் தவித்துப் போய் விட்டார். மேதைகள் முரடுகள், சுதந்திர புருஷர்கள், சொன்னால் கேட்க மாட்டார்கள் என்று பயமாக இருந்திருக்கும். சாமா சென்னையில் வக்கீல் தொழிலும் சரிப்பட்டு வராமல் ஒரு கம்பெனியில் சட்ட ஆலோசகராகச் சேர்ந்து இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தையும் ஒரு பத்து வருஷம் பார்த்து, ஒரு வீட்டையும் கட்டி, ரிடையரானதுமே அதில் குடியேறி. ....வி. வி. அய்யருக்கு இதெல்லாம் தெரிந்துதானிருக்கும். ஆனால் பழையவற்றை நினைத்துக்கொண்டிருக்கிறாரே, அதுதான் பெரிய காரியம்.

சாமா வி. வி. அய்யரைப் பற்றி மேலும் விசாரித்தார். வந்தவர் எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னார்.

"அம்மாஞ்சி பெரியவாளைப் பற்றி ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது பேசாமல் இருக்க மாட்டார்."

"இது என்னத்துக்காகப் பெரியவா பெரியவான்னு சொல்லிண்டே யிருக்கேள்? நானும் உங்களைப் போல ஒரு சாதாரண மனுஷன். எனக்கும், சம்சாரம், குழந்தை குட்டிகள்ளாம் இருக்கு உங்களைப் போல—"

"இருந்தாக்கா? நீங்க பெரியவாளா இல்லாததுக்கு ஆயிடுவேளா? நீங்க இப்படி

அடக்கமாப் பேசறயளே! அதுவே பெரியவா செயற காரியமாக்கும்.''

அவர் பேசும்பொழுது அந்த அம்மாள் பக்தியும், ஸ்ரத்தையுமாகச் சாமாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அந்தப் பையன் சாமாவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

இந்தப் புன்முறுவலின் பொருள் என்னவாக இருக்கும் என்று சாமாவுக்கு நடுநடுவே யோசனை வந்து கொண்டேயிருந்தது. சட்டென்று அவருக்கு ஞாபகம் வந்தது. வந்தவரைப் பற்றி விசாரிக்காமல் வி. வி. அய்யரைப் பற்றியே இத்தனை நேரமும் பேசிக்கொண்டிருந்து விட்டோமே என்று ஒரு பச்சாத்தாபம் தோன்றியது.

''உங்க உத்தியோகம் எல்லாம் சௌகரியமா இருக்கோல்லியோ?''

''ஏதோ பெரியவா ஆசீர்வாதம்....சம்பளம்னு மாசம் ஆயிரத்து இருநூறு வரது. ஏழு மாசம் போனஸ் கொடுக்கறான்.''

''கிட்டத்தட்ட ரண்டாயிரம் வரும்.''

''அதெல்லாம் குறைச்சல் வைக்கலே குருவாயூரப்பன். மூணு பொண்ணு இருக்கா. அவாளையும் நல்ல இடமாப் பார்த்துக் குடுத்தாச்சு. இவனை நெனைச்சுத்தான் கவலே!''

''பையனையா?''

''ஆமாம்.''

''பையன் படிக்கிறானோ இல்லியோ?''

''படிச்சான்.''

''இப்ப படிக்கலியா?''

''மூணு வருஷமாச்சு. புஸ்தகம்னு ஒரு வஸ்துவையே மறந்து போய்ட்டான்.''

''ஏன்?''

''கேளுங்களேன் அவனைத்தான்.''

''என்னப்பா?'' என்று சாமா அவனைப் பார்த்தார். பதில் சொல்லவில்லை; அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தான்.

''என்ன சிரிக்கிறே? என்னைப் பார்த்தா சிரிக்கணும் போலிருக்கோ?'' என்றார் சாமா.

''உங்களைப் பார்த்து மட்டும் இல்லியாக்கும். என்னே ஒரு நாளைக்குப் பார்த்துச் சிரிச்சான், ஒரு கேள்வி கேட்டதுக்கு. அன்னிலேந்து சிரிச்சுண்டே இருக்கான். அப்ப அகண்ட வாய் குறுங்கலே.''

''போறது. எப்பப் பார்த்தாலும் அழாமெ சிரிச்சுண்டே இருக்கிறது நல்லதுதானே?''

''என்ன அப்படிச் சொல்றயள்? ஒரு கேள்வி கேட்டா பதில் சொல்லாண்டாமோ? அப்பவும் கூடச் சிரிச்சுண்டே இருந்தால் அது அழகோ? நீங்கள் கேட்டதுக்குச் சிரிச்சுண்டே இருந்தா, நீங்கள் என்ன நெனப்பயள்?''

''நீங்க கேட்ட கேள்விக்கே பதில் சொல்லல்லே. நான் கேட்டதுக்கு எப்படிப் பதில் வரும்னு நெனச்சுக்கறேன். நான் நெனக்கிறது இருக்கட்டும். நீங்க என்னமோ கேட்டேன்னு சொன்னேளே; என்ன கேட்டேள்!''

''அவனைக் காலேஜுலே சேர்க்கறப்போ நாச்சுரல் சயன்ஸ் எடுத்துக்கோடான்னேன். கணக்குத்தான் எடுத்துப்பேன்னான். எனக்கு வருத்தம். டாக்டருக்குப் படிக்க வைக்கணம்னு நெனச்சேன். எங்க பாக்டரி கம்பெனிக்கெல்லாம் நாலைஞ்சு டாக்டர்கள் இருக்கா. ஒவ்வொருத்தருக்கும் ஆயிரம், இரண்டாயிரம் சம்பளம் கொடுக்கறோம்.

''என்ன சார்! இன்னிக்கி உங்கள் கடையில் சர்க்கரை இல்லை என்று வழக்கமாக எழுதி வரும் போர்டில் ஒன்றும் எழுதாமல் இருக்கு?''

''எழுதுவதற்கு இன்னிக்குச் சாக்கட்டி இல்லே சார்!''



அதிலே ரண்டு பேர் இன்னும் ஏழெட்டு வருஷத்திலே ரிடயராயிடுவான். அதிலே நுழைஞ்சு கனூட்டா நாலு வருஷத்திலே நீ சீனியர்–மோஸ்டா ஆயிடுவாய். அட, இல்லாட்டகூடி, கெமிஸ்டிரி எடுத்துக்கோ, அப்புறம் ஃபார்மா படிக்க வைக்கறேன். என் மச்சினன் ஜெர்மன் கம்பெனியிலே சீனியர் அட்வைசராய் இருக்கான் பம்பாயிலே. அங்கே அவன் வச்சதுதான் சட்டமாயிருக்கு. நீ பாஸ் பண்ணினா, உனக்கு ஆரம்பமே ஆயிரம் கிடைக்குமாக்கும்னு சொன்னேன்.''

''அதுவும் முடியாது... கணக்குப் படிச்சான். ம். அப்புறம்?'' என்றார் சாமா.

''அதுவுமில்லே. இவன் பிடிவாதம் பிடிச்சானு! நான் நாலு நாள் பேசலே இவனோடே. சரி, அப்பா சொல்றபடியே படிக்கிறேன்னு, கெமிஸ்ட்ரி நாச்சுரல் சயன்ஸ் எடுத்துட்டான்!''

''நல்லதாப் போச்சு. அப்புறம் என்ன?''

''எப்படி நல்லதாப் போகும்! ஒவ்வொரு பரீட்சையிலேயும் இருபது மார்க் முப்பது மார்க்குக்கு மேலே வாங்கறதில்லே. ரண்டு வருஷமாயாச்சு. ஒரு நாளைக்கு எங்கிட்டே வந்தான். ஒண்ணுலேதான்ப்பா வந்துது. நான் அப்பவே கணக்கு எடுத்துக்கறேன்னுக்கும் சொன்னேன். நீங்க கேக்கலே. விசுவாமித்திரர் மாதிரி கோவிச்சுண்டேயேள். அதுக்குப் பயந்துண்டு நான் கணக்கை விட்டேன். சயன்ஸ் படிச்சேன். அதுதான் எனக்கு மார்க் வரமாட்டேங்கறதுன்னான். எனக்கு ரொம்பக் கோபமா ஆயிடுத்து அதைக் கேட்டதும். 'ஏண்டா உனக்கு மூளை எங்கே போச்சு. நான் சொன்னு எனக்கு அது வராதுன்னு தாட்சண்யமில்லாமல் சொல்லியிருக்காண்டாமோ? இப்படி ஒரு கோழையா யிருக்காய். அப்பா கிட்ட தைரியமில்லாதவன் எப்படிடா வெளியே போய்ப் பொழைக்கப் போறாய்'னு கேட்டேன். அப்பதான் இப்படிச் சிரிச்சான். அப்பவே தொட்டுச் சிரிக்கறதை நிறுத்தலே. மறுநாள் தொடங்கி காலேஜுக்குப் போகலே. சாப்பிடறான். தூங்கறான். இப்படிச் சிரிக்கறான். ஏண்டா போகலேன்னு லக்ஷம் தரம் கேட்டாச்சு. சொல்றதில்லே. பரீட்சை டயம் வந்தது. போகலே. லீவு முடிஞ்சுது. கணக்கே எடுத்துண்டு படிடா மறுபடியும்னு கால்லே விழாத தோஷம். அப்படிச் சொல்லியாச்சு. அசையணுமே. இப்படிச் சிரிச்சுண்டே இருந்தா, நாளைக்கு லோகம் இல்லையா சிரிக்

றும் நம்மளைப் பார்த்து. நாலு வருஷமாயாச்சு. ரிவளாறு மாஸே மாஸேயா தேம்பறான். பெரியவாளைப் பாருடான்னு அம்மாஞ்சி சொன்னார். நீங்க ஏதாவது வழிகாமிப் பேள்னு நெனச்சுண்டு வந்தோம்.''

நாம் என்ன வழி காட்ட இருக்கிறது? சாமாவுக்கு ஒன்றும் புரியல்லே. வி. வி. அய்யரோ நாம் ஏதேனும் விமோசனம் சொல்லப் போகிறோம் என்று அனுப்பியிருக்கிறார். என்னத்தைச் சொல்றது? தெரிந்தவரையில் ஏதோ சொன்னார் சாமா. ''படிப்பில்லாவிட்டால் முன்னுக்கு வருவது கஷ்டம். இப்பொழுது படிப்பது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அதைப் பாராட்டினால் பின்னாடி இன்னும் கஷ்டமாயிருக்கும். வயதாகிவிட்டால் படிப்பு ஏறாது. இளமையை விட்டால் ஓடியே போய்விடும். மரம் முற்றிவிடும். சட்டிகூட ஏறாது. தகப்பனார் சம்பாதித்து எத்தனை சொத்து மிச்சம் வைத்துவிட்டுப் போனாலும் தான் சம்பாதித்தால்தான் கௌரவம். இல்லாவிட்டால் ஏளனத்துக்கு இடமாகும். அப்படித் தானே சம்பாதிக்க அவசியமில்லாத அளவுக்குச் சொத்து வந்தால் கூட, படிப்பு என்ற சொத்துத்தான் பெரிய சொத்து. அந்தச் செல்வத்தைக் காப்பாற்ற உதவுவது இந்தச் சொத்துத்தான்....''

தகப்பனும் தாயாரும் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர். சாமா அதையும் கவனித்தவாறே பேசிக் கொண்டிருந்தார்.

''பெரியவா சொல்றதைச் சொல்லுங்கோ. ஆனால் நாங்க ரண்டுபேரும், அவனும் நானும், லக்ஷம் தபா சொல்லியாச்சு. இதெல்லாம் நாங்கள் சொல்ற பாடமில்லையா? பெரியவா சொல்றதைன்னு கேக்கணும்னு வந்தோம்.''

''என்ன?''

''போன வருஷம் பெரியவா கல்கத்தா வந்திருந்தப்போ, நான் குடும்பத்தோட லீவிலே ஊருக்குப் போயிருந்தேன். எனக்குப் பார்க்கக் கொடுத்து வைக்கலே. நீங்கள் வந்து சர்மா வீட்டுப் பெண்ணுக்குச் சித்த ஸ்வாதீனமாயிருக்குன்னு யந்திரம் வச்சு சக்தியை ஆவாகனம் பண்ணி சண்டி பூஜை பண்ணி இருபத்தொரு நாள் ஹோமமும் பண்ணினியளாமே... அந்த மாதிரி ஏதாவது நம்ம பையனுக்கும் செய்யணும். அப்படி ஏதாவது பகவான் கண்ணைத் திறந்து பார்க்கும்படி பெரியவாள் செய்தால்தான் உண்டு.''

சாமாவுக்குப் புலித் தோல் முன் போல் குத்திற்றே என்னவோ. துள்ளி விழுவது போல் எழுந்தார். புருவம் சுருங்கிற்று.

''அடுத்த வீடு. அடுத்த வீடு'' என்று கண்ணைச் சுருக்கி, புருவம் சுளித்து, விரலால் ஒதுக்கி அவசரம் அவசரமாகப் படபடத்தார்.

''அப்படீன்னு?''

''அடுத்த வீடு. ஸ்வாமிகிட்டே அதெல்லாம் வாங்கிக் கொடுக்கற பெரியவர் அடுத்த வீட்டிலே இருக்கார். அடுத்த வீடு அடுத்த வீடு. நான் இல்லே அது.''

''அப்படியா?''

''ஆமாம். உங்க நேரம் எல்லாம் வீணாப் போயிடுத்து. சட்டுன்னு போங்கோ. அவர் இப்ப பூஜையை முடிக்கிற சமயமாயிருக்கும். அப்புறம் சாப்பிடப் போயிடுவார். அப்புறம் தூங்கப் போயிடுவார். அப்புறம் சாயங்காலம்தான் பார்க்க முடியும். சட்டுனு போங்கோ'' என்று எதையோ மிதித்தவர் போல அங்குமிங்கும் உலாவினார் சாமா.

''இது தொண்ணூறு நம்பர் வீடுதானே?''

''அடடா, இது தொண்ணூறு ஸீன்னு. தவறி வந்துட்டேள், ஸ்வாமி.''

''அவரும் தாடி வச்சிண்டிருப்பரோ?''

''பேஷா — என் தாடியைப் போல இன்னும் ஒரு மடங்கு நீளம். அதுதான் நம்மூர்த் தாடி. ரிஷிகள் தாடி. இது ரஷ்யா தாடி — இங்கர்ஸால் தாடி — மார்க்ஸ் தாடி — பர்னார்ட் ஷா தாடி — எப்படியாவது வச்சுக்கோ. உங்களுக்கு நாழியாடுத்து. போங்கோ!''

''சிரமத்துக்கு மன்னிக்கணும். வரட்டுமா? நமஸ்காரம்.''

''நமஸ்காரம் — வாயாலே சொல்றதே போரும். வாங்கோ.''

மூன்று பேரும் விறுவிறுவென்று கீழே போனார்கள். படி இறங்கும்பொழுது ''நான் அப்பவே நெனச்சேன். தொண்ணூறு பீன்னு தொண்ணூறு ஸீயிலே நுழையறோளே அப்பான்னு நெனச்சேன். ஆனால் இந்தப் புலித் தோலையும் தாடியையும் பார்த்தபோது அம்மாஞ்சிதான் தப்பா அட்ரஸ் கொடுத்துட்டாரோன்னு நெனச்சேன்'' என்று சிரிக்கிற பையன் முதல் முதலாக வாயைத் திறந்து சொல்வது கேட்டது.

பேச்சு தேய்ந்தது. மறுபடியும் ஏதோ பேச்சுக் கீழே கேட்டது. சற்றுக் கழித்துப் பாளுக் கொக்கி திறந்து மூடும் சத்தம் கேட்டது. தொடர்ந்து அடுத்த வீட்டு 'கேட்'டு 'ஸா ரீ' என்ற ஸ்வரங்களில் கீச்சுக் குரலில் திறக்கிற சத்தம் கேட்டது.

நளினி குழந்தைச் சிரிப்புடன் வந்தாள்.

''என்னப்பா இது?... அடுத்த வீட்டுக்குன்னு வந்தாளாம் எல்லாரும்'' என்றாள்.

''நீ என்ன கேட்டே? அவா என்ன சொன்னா? நீ எப்படி எங்கிட்டே அவாளை அனுப்பிச்சே?''

''வந்தவுடனே அவர் இருக்காரான்னு கேட்டா. மாடியிலே இருக்கார்னேன். உன்கிட்டே வந்து கேட்டேன். நீ வரச்சொல்லுன்னு சொன்னே.... நீ இப்ப நாஸ்திகத் தாடி ஆயிட்டியாமே.''

''நாஸ்திகத் தாடியா? யார் சொன்னா?''

''கீழே இறங்கிப் போறபோது அந்தப் பையன்தான் சொன்னான். மேலே இருக்கிறது நாஸ்திகத் தாடியாம். நாங்க ஆஸ்திகத் தாடியைப் பார்க்க வந்தோம். அடுத்த வீட்டுக்குப் போறோம்னு எங்கிட்ட சொல்லிவிட்டுப் போனான். நீ சொல்லிண்டியா உன் தாடி நாஸ்திகத் தாடின்னு?''

''அப்படித்தான் சொன்னேன். உனக்கும் வழுக்கை உண்டுன்னு நாற்பது வருஷம் கத்தியும் கையுமா இந்த மூகத்தோட குஸ்திக்கு நின்னு அதை வழுக்கையாக்கியிருக்கேன். கடைசியில் முடியாமல் சோர்ந்து போயிட்டேன். இதை அவர்கிட்டே சொல்லிண்டிருக்கணுமா?'' என்று கூறி உட்கார்ந்தார். மாடிப் பக்கமே வராத விசாலம் கூடத் தள்ளாடித் தள்ளாடி மாடிப் படி ஏறி வந்து நின்றாள். ஒரு பையன் சிரித்த இடத்தில் இரண்டு கிழவர்களும் ஒரு பெண்ணும் சிரிக்க ஆரம்பித்தார்கள்!

ஒன்றே வாழ்வு

— மாயாவி —

சித்ரா சிலையாக அமர்ந்திருக்கிறாள். அவளுக்கு என்னென்னவோ பேச வேண்டும் என்றிருக்கிறது. உள்ளம் துடிக்கிறது; ஆனால் உதடு அசைய மறுக்கிறது. மனத்தின் நடு மையத்திலே அவன் கேட்ட கேள்வி சம்மட்டியாய்த் தகர்க்கிறது.

"நாளைக்கு என் கதியும் அப்படி ஆகாது என்பது என்ன நிச்சயம்?" கேள்வியைக் கேட்ட ஆனந்த் அவள் எதிரேதான் நிற்கிறான். மறுமொழியை எதிர்பார்த்தே நிற்கிறான். ஆனால் சித்ராவால் பதில் சொல்ல முடியவில்லையே!

அவன் புறப்படுகிறான். "ஆழம் அறிந்தே காலை விட்டு விட்டு அவதிப்பட நான் தயாராயில்லை, சித்ரா. வருகிறேன். இதுவே நமது கடைசிச் சந்திப்பு."

அறையை விட்டு வெளியேறுகிறான். மாடிப் படிகளில் அவன் தடதடவென்று இறங்கிச் செல்லும் ஒலி பலமாகக் கேட்கிறது.

சித்ராவின் நெஞ்சகம் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றுகிறது. என்றோ அவிந்துவிட்ட தனது வாழ்வில் ஒரு புத்தொளி பிறக்கப் போகிறது என்று அவள் கனவு கண்டாள். ஆனால் அதை மீண்டும் அந்தகாரத்திலேயே ஆழ்த்தி விட்டுப் போய் விட்டான் ஆனந்த்.

கீழேயிருந்து சமையற்கார அம்மாள் சங்கரி குரல் கொடுக்கிறாள். "ஏம்மா, சித்ரா! சமையல் ஆகி விட்டது. இலை போடட்டுமா இரண்டு பேருக்கும்?"

இரண்டு பேருக்கும்! ஆம், அன்று அடையப் போகும் ஆனந்தத்தைக் கொண்டாட, ஆனந்தும் தானும் ஒன்றாக அமர்ந்து விருந்துண்ண வேண்டுமென்று அவள் சங்கரி அம்மாளிடம் விருந்துச் சாப்பாடு தயாரிக்கச் சொல்லியிருந்தாள். ஆனால் இப்போது ஏமாற்றத்தைக் கொண்டாடத்தான் விருந்துண்ண வேண்டும்.

"வேண்டாம் சங்கரி அம்மா. நீங்கள் சாப்பிட்டு விட்டு, மீதியை வேலைக்காரி முனியம்மாளை எடுத்துப் போகச் சொல்லுங்கள்" என்று மாடியிலிருந்தவாறே உரத்த குரலில் கூறுகிறாள் சித்ரா.





மறு நிமிஷம் சங்கரி அம்மாள் படியேறி வரும் ஓசை கேட்கிறது. சித்ரா அவளை நிமிர்ந்து பார்க்க வெட்கித் தலையைத் தாழ்த்திக் கொள்ளுகிறாள். இருந்தாலும் அவள் எதிர்பார்த்த கேள்வி சங்கரி அம்மாளிடமிருந்து வெளி வந்துவிடுகிறது.

"எங்கே அம்மா, அவர்?"

"போய் விட்டார்! அவர் என் ஆசைகளில் மண்ணடித்து விட்டுப் போய் விட்டார்!" என்றாள் சித்ரா.

சங்கரி அம்மாள் இதைக் கேட்டுத் திடுக்கிடுவாள் என்று எதிர்பார்க்கிறாள் சித்ரா. ஆனால் அவள் அமைதியாக, "ஓ!" என்கிறாள்.

"என்னம்மா, சர்வ சாதாரணமாக, 'ஓ' என்கிறீர்கள்?" என்று வியப்புடன் கேட்கிறாள் சித்ரா.

"நான் அந்த நாளைக்காரி. அதனால் அந்த நாளில் பெரியவர்கள் சொன்னபடிதான் நடக்கும் என்று நினைத்தேன். அப்படியேதான் நடந்திருக்கிறது."

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சங்கரி அம்மா?"

"அன்று பெரியவர்கள் சொல்வார்கள் — 'பெண்களுக்கு ஒரே வாழ்வுதான் உண்டு. அது போய்விட்டால் திரும்பி வராது' என்று சொல்லுவார்கள். யார் யாருக்கு, என்ன என்ன தலையில் எழுதப்பட்டிருக்கிறதோ, அதுதான் நடக்கும். இதற்காக நீ வருத்தப்பட்டு என்ன பயன்? எழுந்திரு, சாப்பிடப் போகலாம்" என்று அழைக்கிறாள் சங்கரி அம்மாள்.

சித்ராவுக்குச் சாப்பாட்டு நினைவே வேம்பாகக் கசக்கிறது. "இல்லை; சங்கரி அம்மா! இந்த அதிர்ச்சி நீங்கியபிறகுதான் எனக்குச் சாப்பாடு இறங்கும். நீங்கள் போய்ச் சாப்பிடுங்கள். நான் பசி எடுக்கும்போது வந்து சாப்பிடுகிறேன்."

சங்கரி அம்மாள் ஐம்பது வயதானவள். உலகம் கண்ட மூதாட்டி. தன் இனத்தின் உள்ளத்தையும் உணர்ந்தவள். எனவே அவள் சித்ராவை வற்புறுத்தவில்லை. "சரி, அம்மா! பசிக்கும் போது வா; இருவரும் ஒன்றாகவே சாப்பிடுவோம்" என்று கூறி விட்டுக் கீழே இறங்கிப் போய் விடுகிறாள்.

"பெண்களுக்கு ஒரே வாழ்வுதான் உண்டு!" என்ற அவளுடைய சொற்கள் சித்ராவின் மன உலையில் காற்றாக வீச, அது கனிந்து எரிந்து அவளைத் தகிக்கிறது.

ஒரே வாழ்வு! ஒன்றே வாழ்வு!

அந்த ஒரே வாழ்வு தனக்குக் கிடைத்த விதம், தான் அதைப் போக்கிக் கொண்ட விதம், எல்லாம் சித்ராவின் மனக் கண் முன்னே திரைப் படமாக ஓடுகின்றன.

பிறந்ததுமே தாயை விழுங்கி விடுகிறது சித்ரா என்ற அந்தக் குழந்தை. தந்தை சேஷகிரி அந்தக் குழந்தையை வளர்ப்பதற்காக அருமையான டெபுடி கலெக்டர் உத்தியோகத்தை ராஜிநாமா செய்து விட்டுச் சொந்த ஊருக்கு வருகிறார். அப்போது நாற்பது வயதே ஆன அவரை மறுமணம் செய்து கொள்ளும்படி, உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் வற்புறுத்துகின்றனர். ஆனால் அவர் மறுத்து விடுகிறார். மகளை வளர்ப்பதே தமது கடமையாகக் கொண்டு வாழ்கிறார். உயிரை யெல்லாம் அந்தக் குழந்தை மீதே வைத்து வளர்க்கிறார்.

அந்தப் பாசத்தின் அரவணைப்பில் வளர்ந்து குழந்தை சித்ரா, சிறுமி சித்ராவாகவும், பின்னர் கன்னி சித்ராவாகவும் மாறுகிறாள். அழகு, அறிவு எல்லாம் அவளிடம் அமைகின்றன. ஆனால் தந்தையின் அளவு மீறிய பாசமும், அந்தப் பாசத்தின் விளைவான செல்லமும் அவளைப் பிடிவாதக்காரியாக்கி விடுகின்றன. தான் நினைத்ததை நினைத்தபடியே சாதித்துக் கொள்ளுகிறாள்.

அப்போது அவள் பருவம் பரிமளித்து நின்ற பாவை. கல்லூரியில் பி. ஏ. இறுதி ஆண்டு படிக்கிறாள். எல்லாப் பாடங்களிலும் நல்ல மார்க்குகள் வாங்குகிறாள். ஆனால் ஆங்கிலம் மட்டும் வரமாட்டேன் என்கிறது.

குமார் அவளுக்குக் கல்வி போதிக்கிறான். ஆனால் அவள் உள்ளத்தில் அவனிடமிருந்து காதல் பயிலும் ஆவல் மேலிடுகிறது. குமாரன் இளைஞன்; அழகன். ஆனால் ஏழை. தன்னிலை உணர்ந்தவன். ஆதலால் அவள் நெருங்க நெருங்க அவன் எட்டிப் போகிறான். ஒரு நாள் அவள் அவனை நேர்டியாகவே கேட்டு விடுகிறாள்.

'' விமானத்தில் பணக்காரர்கள் தாம் பறக்க முடியும் சித்ரா. ஏழைக்குக் கட்டை வண்டி தான் ஏற்றது'' என்கிறான் குமார்.

''ஏழை பணக்காரனாகும் போது......?'' என்று அவள் கேட்கிறாள்.

''ஆகும்போதுதான் அவன் விமானத்தில் பறக்க முடியும். ஆனால் ஏழை நேர்மையான முறையில் பணக்காரனாக ஏழேழு ஜன்மங்கள் ஆகுமே .....!''


''இல்லை; ஒரே நாள் ஒரே நிமிஷத்தில்கூட அவன் நேர்மையான முறையில் பணக்காரனாகிவிட முடியும்.''

''எப்படி ?''

''அவனை, பணக்காரர் ஒருவரின் ஒரே மகள் விரும்பும்போது!''

''அது எப்படி அவன் சொத்து அவனுடையதாகும் ?''

''அசட்டுக் கேள்வி! பெண்களுக்குஇரண்டு வாழ்வு உண்டு. ஒன்று கன்னி வாழ்வு; மற்றொன்று கலியாண வாழ்வு. முன்னது தாற்காலிகமானது; பின்னது நிலையானது. அந்த நிலையான வாழ்வுக்கு வரும்போது.அவள்,



''டியூஷன் ஏற்பாடு செய்யுங்கள் அப்பா!'' என்கிறாள். அவள் என் என்னுமுன் என்னையாக நிற்கும் அவர், அவள் படிக்கும் கல்லூரியில், அவளுடைய வகுப்பில் ஆங்கிலப் பாடம் எடுக்கும்பேராசிரியர் குமாரையே டியூஷனுக்கு ஏற்பாடு செய்துவிடுகிறார்.

அவளுடையவை யெல்லாம், அந்த நிலையான வாழ்வைத் தருபவரின் உடைமை.''

குமார் ஆலோசிக்கிறான். ''இது காதல் போதையின் உளறல் அல்லவே?'' என்று கேட்கிறான்.

''உண்மை'' என்கிறாள் சித்ரா.

''அப்படியானால் உன் அப்பாவிடம் பேசு. நான் என் அம்மாவிடம் பேசுகிறேன்'' என்கிறான்.

குமாருக்குத் தந்தை இல்லை. நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் தாய் மட்டுமே இருக்கிறாள்.

சித்ரா தந்தையிடம் பேசுகிறாள்.

''உனக்கு அவனைப் பிடித்திருக்கிறதென்றால் உடனே திருமணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன் சித்ரா. உன் நல்வாழ்வு என் குறிக்கோள்'' என்கிறார் சேஷகிரி.

குமார் தாயிடம் பேசுகிறான்.

''நீ அதிர்ஷ்டக்காரனடா குமார். ஆனால் பணக்கார வீட்டுப் பெண்ணாயிற்றே! இந்த நோயாளிக்குப் பணிவிடை செய்து கொண்டு அவள் இங்கே வாழ்வாளா?'' என்று அவள் கேட்கிறாள்.

''வாழ்வதானால்தான் அம்மா, அவள் என் மனைவி ஆவாள்'' என்கிறான் குமார்.

''அப்படியானால் எனக்குச் சம்மதமே'' என்கிறாள் தாய்.

இவ்விஷயம் சேஷகிரியின் முன் வருகிறது. சித்ராவின் விருப்பம் என்றால் அது அவர் விருப்பம்தானே!

குமார் — சித்ரா திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது. புது மண இன்பத்தில், கணவனிடமும், அத்தையிடமும் அளவற்ற பணிவுடன் நடந்து கொள்கிறாள் அவள். எந்தப் பணிவிடையைச் செய்ய முடியுமா என்று தன் தந்தை கேட்டாரோ, அது அவளுக்குத் துச்சமாகப் போய் விடுகிறது.

ஆறு மாதங்கள் அரை நொடியில் பறந்து விடுகின்றன. புது மண இன்பத்தில் சிறுகச் சிறுகப் பழமை தட்டுகிறது. அத்தையின் பணிவிடைச் சிரமத்தை எந்த வேகத்தில் மறந்து வந்தாளோ, அந்த வேகம் தணியுந் தோறும் பணிவிடை சிரமமாகத் தோன்றத் தொடங்குகிறது: அலுப்புத் தட்டுகிறது.

ஒரு நாள் கணவனிடம், ''இன்று அப்பாவைப் போய்ப் பார்த்து விட்டு வரலாம் என்றிருக்கிறேன்'' என்கிறாள்.

''கட்டாயம் போய் வா, சித்ரா. நான் வேண்டுமானால் கல்லூரிக்குப் போகும் வழியில் உன் வீட்டில் ஏறி, கார் அனுப்பச் சொல்லி விட்டுப் போகிறேன். ஆனால் மாலை நாலு மணிக்கு அம்மாவுக்கு மருந்து கொடுக்கத் திரும்பி வந்து விடு.''

''அத்தைக்கு வேளா வேளைக்கு மருந்து கொடுக்கவும், அவர்களுக்குப் பணிவிடை செய்யவும், அப்பாவைக் கொண்டு ஓர் ஆளை ஏற்பாடு செய்யச் சொல்லலாம் என்றுதான் போகிறேன்'' என்கிறாள் அவள்.

''ஏன் சித்ரா?''

''எனக்கு இப்போதெல்லாம் இந்த வேலை ரொம்பச் சிரமமாக இருக்கின்றது.''

அவன் வியப்புடன் அவளை நோக்கினாலும், 'பாவம்! செல்வத்தில் வளர்ந்த பெண். இதுவரை இம்மாதிரி வேலைகளில் ஈடுபட்டால் சிரமமாகத்தானே இருக்கும்!' என்று எண்ணியவனும், ''அப்படியானால் சரி, சித்ரா! நான் ஒரு வாரம் லீவு போட்டு விட்டு அம்மாவைக் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ அப்பாவுடனே தங்கியிருந்து ஓய்வெடுத்துக் கொண்டு திரும்பு'' என்கிறான்.

''நீங்கள் எதற்காக லீவு எடுத்துக் கொண்டு சிரமப்பட வேண்டும்? நிரந்தரமாக ஒரு வேலைக்காரியை அமர்த்தி விட்டால்....''

அவன் குறுக்கிடுகிறான். ''நான் உன்னைக் கைப் பிடிக்கும் முன்பானால் அது சரி, சித்ரா. ஆனால் இனிமேல் நீ இருக்கும் போது அம்மாவின் பணிவிடைகளுக்கு ஆள் போட்டால், அம்மா என்ன நினைப்பாள்?''

''அப்படியானால் அம்மாவின் பணிவிடைக்காகவா என்னை நீங்கள் மணந்து கொண்டீர்கள்?''

அவள் பேச்சிலிருந்த முரண்பாடு குமாருக்கு விளங்குகிறது. இருந்தாலும் ஒரு பத்து நாள் விட்டுப் பிடித்தால் சரியாகி விடுவாள் என்று கருதுகிறான். ஆதலால்; ''இப்போது எதற்கு நம்முள் இந்த விவாதமெல்லாம்? நீ வீட்டுக்குப் போய் ஒரு வாரமோ, பத்து நாட்களோ இருந்து விட்டு வா; பிறகு பார்த்துக் கொள்வோம்'' என்று கூறி அவளை அனுப்பி விடுகிறான்.

காட்சி மாறுகிறது. பத்து நாள் போகிறது: பதினைந்து நாள் போகிறது. ஒரு மாதமும் ஆகி விடுகிறது. சித்ராவின் மனம் இரு கூறுகளாகப் பிரிந்து வேலை செய்கிறது. இன்ப மனம் கணவனுக்காக ஏங்குகிறது. துன்ப மனம் அங்கே போய் நோயாளி அத்தைக்கு வேலைக்காரியாக உழைப்பதா என்று முரண்பாடு செய்கிறது. இறுதியில் அவள் அன்று கணவனுக்கு மாலையில் தன்னை அவசரமாகத் தன் வீட்டில் சந்திக்கும்படி ஒரு கடிதம் எழுதிக் கல்லூரிக்கு அனுப்புகிறாள்.

குமார் வருகிறான்.

தந்தையும், மகளும் கூடிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ''என்ன சித்ரா, எதற்கு அவசரமாக வருமாறு எழுதினாய்?'' என்று கேட்கிறான் குமார்.

''சொல்லு அப்பா!'' என்கிறாள் சித்ரா.

''உட்கார் குமார். சித்ரா எல்லா விஷயமும் சொன்னாள். அவள் ஆலோசனைப்படி உன் தாயைக் கவனிக்க ஓர் ஆளை அமர்த்தி விடுவதுதான் நல்லதென்று எனக்குப்படுகிறது: உன் தாய்க்குக் காச நோய். அவளுக்குப் பணிவிடை செய்யப் போய் என் ஒரே மகளையும் அந்நோய் பற்றிக் கொண்டு விட்டால்?'' என்கிறார் சேஷகிரி.

''இதை நீங்களும், உங்கள் மகளும் திருமணத்துக்கு முன்பே ஆலோசித்திருக்க வேண்டும். அப்போதே என் தாய் காச நோய்க்காரி என்பது உங்களுக்குத் தெரியுமே!''

''தெரியும். ஆனால் உன் மனைவியின் நலனைக் கருதி, நாளடைவில் நீயே அவளை அப்பணிவிடை வேலையிலிருந்து நிறுத்தி விடுவாய் என்று நினைத்தேன். நீயே நினைத்துப் பார், குமார். இந்த நோய்க்கு உள்ளாகியிருக்கும் உன் அம்மாவை வீட்டில் வைத்திருப்பது, உனக்கும் ஆபத்தே அல்லவா?''

''அதனால் என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''

''உன் அம்மாவைப் பேசாமல் ஒரு ஸானடோரியத்துக்கு அனுப்பி விடுவோம்.''

''அது எனக்கும் தெரியும். ஆனால் ஏன் அவளை அங்கே அனுப்பவில்லை, தெரியுமா?''

''ஏன் அனுப்பவில்லை?''

''அவள் நோய் குணமாகாது என்பதைப் பல டாக்டர்கள் உறுதியுடன் அறிவித்து விட்டார்கள். இனி அவள் இப்படியே தேய்ந்து தேய்ந்து மடிய வேண்டியவளே. சாகப் போகிறவள் அதுவரையில் வீட்டில் சௌகரியமாக இருக்கட்டுமே என்றுதான் அவளை ஸானடோரியத்துக்கு அனுப்பவில்லை.''

''அது சரிதான் குமார். ஆனால் அவள் வீட்டில் இருப்பது என் மகளுக்குத் தொல்லையாகவும், ஆபத்தாகவும் இருக்கிறதே!''

குமாருக்குக் கோபம் வருகிறது. ''சித்ராவை என்னுடன் நீங்கள் அனுப்பப் போகிறீர்களா, இல்லையா?''

தந்தை மகளின் முகத்தைப் பார்க்கிறார். அவள் பிடிவாதத்தின் உச்சிக் கிளைக்கு ஏறிக் கொண்டு, ''அப்பா அனுப்பினாலும் உங்கள் அம்மா உயிரோடிருக்கும் வரை நான் அங்கே வரமாட்டேன்'' என்று சொல்லுகிறாள்.

''நீ என் மனைவி. என் வீட்டுக்கு, நான் அழைக்கும் போது வந்துதான் ஆக வேண்டும்.''

சேஷகிரியும் கோபம் அடைகிறார்: ''ஏது? உரிமை பலமாக இருக்கிறதே!'' என்கிறார்.

''அவள் என் மனைவியாக இருக்கிற வரையில் இந்த உரிமை எனக்கு உண்டு.''

''மனைவியாக இருக்கிற வரையில்தானே? அதை இல்லை என்று செய்து விட்டால்? என்னம்மா, சித்ரா, என்ன சொல்கிறாய்?''

அவள் தயங்கவில்லை. வருங்காலத்தை ஊடுருவி நோக்கவில்லை. ''செய்யுங்கள் அப்பா. இவர் ரொம்பப் பொல்லாதவர். இவருடன் இனி என்னால் வாழ முடியாது'' என்கிறாள்.

''அப்படியானால் நடக்கட்டும். ஒரு வாரத்துக்குள் சட்ட ரீதியாக எங்கள் உறவு முறியா விட்டால், நான் வந்து இவளை இழுத்துச் செல்வதை யாரும் தடை செய்ய முடியாது'' என்று கூறி விட்டு வெளியேறி விடுகிறான் குமார்.

தந்தை என்ற முறையில் தம் மகளின் உயிருக்கு அபாயம் ஏற்பட்டு விடக் கூடாது என்று சேஷகிரி விரும்பியது தவறல்ல. அதே போல் தன் மனைவி தன் தாயின் பணிவிடையைப் புறக்கணிக்கக் கூடாது என்று குமார் விரும்பியதையும் தவறென்று கூற முடியாது. கல்லும் கல்லும் மோதினாற் போன்ற பிரச்னை இது. முடிவு?

பிளவுதானே!

சித்ரா, குமாரிடமிருந்து விவாகரத்துப் பெறுகிறாள்!

காட்சி மீண்டும் மாறுகிறது. காலமும் மாறுகிறது. கால வெள்ளத்தில் அவர்கள் பிளவுக்குக் காரணமாக இருந்த சித்ராவின் தந்தையும், குமாரின் தந்தையும் அடித்துச் செல்லப்படுகின்றனர். ஆனால் உடைந்த பாண்டம் உடைந்ததுதானே?

விவாகரத்து முடிந்ததுமே, தன் தாயுடன் அவ்வூரை விட்டு வெளியேறி விடுகிறான் குமார். இன்று எங்கே, யாரை மனைவியாகக் கைப்பிடித்து, எத்தனை குழந்தைகளுடன் இன்பமாக வாழ்கிறானோ? அது சித்ராவுக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள அவள் அக்கறை காட்டவும் இல்லை.

தந்தை இருந்த வரையில் அவள் வாழ்வு சலனமற்றுத்தான் விளங்குகிறது. தனிமையை அவள் சிறிதுகூட உணரவில்லை.

ஆனால் அவருடைய மறைவால் இழந்த அன்புக்காக மனம் விழையத் தொடங்குகிறது. அக் குறை எப்போதும் மனதை உறுத்துகிறது. அதிலிருந்து மனதை மாற்றுவதற்காக அவள் புற உலக நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறாள். மாதர் பொழுது போக்கு கிளப்புகளில் உறுப்பினள் ஆகிறாள். பொது நலத் தொண்டில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பங்கெடுத்துக் கொள்கிறாள்.

எந்தக் கல்லூரி முன்பு அவளுக்குக் குமாரைத் தந்ததோ, அதே கல்லூரியில் அதே ஆங்கிலப் பேராசிரியர் வேலைக்கு வந்து சேருகிறான் ஆனந்த். பொதுநலத் தொண்டில் நாட்டம் கொண்ட அவன் அவ்வூரில் முதியோருக்குக் கல்வி போதிப்பதற்காக இராப் பள்ளி ஒன்றைத் தொடங்குகிறான். அந்தப் பள்ளியின் தொடக்க விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த ஊர்ப் பிரமுகர்களில் ஒருத்தி சித்ரா.

தொடக்க விழாவில் பேசுகையில் ஆனந்த், ''நான் அறிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள ஆண்கள் கல்வி அறிவு இன்றியிருக்கிறார்கள். ஆண்களிலே ஆயிரம் பேர் கல்வி அறிவு இல்லாதவர்கள் என்றால், பெண்களில் அதற்கு இரண்டத்தனையாவது இருக்க வேண்டும். அவர்களுக்கும் கல்வி போதிக்க இந்த ஊர் மாதர்களில் யாரேனும் முன் வருவார்களானால் நான் மகிழ்ச்சியடைவேன். இதே கட்டடத்தில் அந்தப் பள்ளியையும் நடத்த நான் அனுமதி வழங்குகிறேன்'' என்று கூறுகிறான்.

கிராமவாசி தம் பையனை நகரப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருந்தார். அவரைப் பார்க்க வந்திருந்த ஒரு ஏஜெண்ட் ''உங்கள் பையனை நகரப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டீர்கள். ஓர் என்சைக்ளோபீடியா வாங்கிக் கொடுத்து விடுங்கள்'' என்றார்.

''ஐயையோ! நம்மாலே சைக்கிள் வாங்கிக் கொடுக்க முடியாது. அவன் நடந்தே பள்ளிக்கூடத்துக்குப் போகட்டுமுங்க'' என்று பதிலளித்தார் கிராமவாசி.



மனத்தின் தனிமை ஏக்கத்தை மேலும் சிறிது நேரம் மறக்கடிக்கலாமே என்று சித்ரா இந்தத் தொண்டைச் செய்ய முன் வருகிறாள். ஆனந்துடன் பழகும் வாய்ப்பு நிறையக் கிட்டுகிறது. அவனுடைய ஒவ்வொரு சொல்லிலும் தான் ஏங்கி நின்ற அன்பு கிட்டுவது போன்ற பிரமை தட்டுகிறது.

ஆனந்த் வருகிறான்.

அவனை மாடிக்கு அழைத்துச் சென்று முதலில் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறாள் சித்ரா.

''இது என் பாக்கியம்!'' என்ற அவனுடைய மறுமொழியில் பூரித்தும் போகிறாள்.

''மற்றொன்றையும் நான் உங்களுக்கு முன்னதாகவே சொல்லிவிட விரும்புகிறேன்.''

''சொல்லுங்கள் சித்ரா.''

''நான் ஏற்கனவே மணமானவள்!''

''ஆ!'' ஆனந்த் திடுக்கிடுகிறான். ''அப்படியானால் உங்கள் நெற்றிக் குங்குமம்?''

''என் குங்குமம் அழியவில்லை. கணவரை நான் விவாகரத்து செய்து விட்டேன்!''

ஆனந்த் இன்னும் அதிகமாக அதிர்ந்து போகிறான். ''ஏன் எதற்காக?''

அவள் நடந்ததை நடந்தவாறே சொல்கிறாள். ஆனந்தின் முகம் விழுந்து போகிறது. அவள் அந்த விவரங்களைச் சொல்லி முடித்து நெடுநேரமாகியும், அவன் எங்கோ நோக்கிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான்.

''சொல்லுங்கள் ஆனந்த். நான் செய்தது தவறு?''

''தவறு, தவறில்லையா என்ற பிரச்னையே இப்போது இல்லை. ஏனென்றால் அது நடந்து முடிந்த கதை.''

அவள் முகம் மலருகிறது. ''உங்கள் பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன், ஆனந்த்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறாள்.

''ஆனால்......?''

''ஆனால் என்ன ஆனந்த்?''

''வாழ்க்கைக்குத் துணை பொறுக்குவது அனுபவத்திலிருந்துதான் சித்ரா; உறுதிமொழிகளிலிருந்து இல்லை! உங்கள் முதற் கணவருக்குக் காச நோய் கொண்ட தாய் இருக்கிறாள் என்பது முன்பே தெரியும். அவளுக்குப் பணிவிடை செய்ய முடியும் என்ற உறுதியோடுதான் அவரை மணந்ததாகவும் கூறுகிறீர்கள். பிறகு மனம் மாறி, அதற்காக விவாகரத்து செய்து கொண்டிருக்கிறீர்கள். இதே மாதிரி மனமாற்றம் என் விஷயத்திலும் பிற்காலத்தில் ஏற்படாது என்று நான் எப்படி நம்புவது?''

அவளால் பதில் சொல்ல முடியவில்லை. மௌனமாகிறாள். ஆனந்த் வெளியேறுகிறான்!

திரைப்படக் கொட்டகையில் காட்சி முடிந்ததும் மணி அடிப்பதுபோல் இங்கேயும் சுவர்க் கடிகாரம் இரண்டு முறை ஒலிக்கிறது. மறுபடியும் அவள் நெஞ்சகத்திலிருந்து ஒரு பெருமூச்சுப் பிரிகிறது. அவள் உதடுகளும் பிரிந்து, சற்று முன் சங்கரி அம்மாள் வெளியிட்ட மகத்தான உண்மையை வாய்விட்டு ஒப்புவிக்கின்றன.

''பெண்களுக்கு ஒரே வாழ்வுதான் உண்டு! அது போய் விட்டால் திரும்பி வராது!''

ஆம், திரும்பி வராத அந்த வாழ்வுக்கு அவள் ஏங்கி என்ன பயன்? சித்ரா எழுந்திருக்கிறாள். அதிர்ச்சியிலிருந்து தன்னை மீட்டுக் கொண்டு விட்ட அவளுக்கு இப்போது பசி எடுக்கிறது. உணவு கொள்ளக் கீழே இறங்கிச் செல்கிறாள்.

கீழே அவள் கண்ட காட்சி அவள் நினைவுகளை அடியோடு திசை திருப்புகிறது. அங்கே சங்கரி அம்மாள் விருந்துச் சமையல் பதார்த்தங்களைச் சோறு உட்பட, வெவ்வேறு பாத்திரங்களில் எடுத்து, சித்ரா இது வரையில் பார்த்திராத நடு வயதுப் பெண் ஒருத்தியிடம் கொடுத்து, ''சீக்கிரம் கொண்டு போ; அம்மா வந்து விடப் போகிறாள்!'' என்று கூறிக் கொண்டிருக்கிறாள்!

சில நாட்களாகவே சங்கரி அம்மாள், வீட்டுப் பண்டம், பதார்த்தங்களைச் சித்ரா அறியாமல் விற்பனை செய்து வருவதாக வேலைக்காரி முனியம்மா புகார் செய்து கொண்டிருந்தாள். அதைக் கண் முன்னும் கண்டு விடவே, சங்கரி அம்மாளிடம் வந்து, ''யாரம்மா, அந்தப் பெண்? நூத்தாறு பாத்திரங்களில் எதையோ மூடி எடுத்துப் போகிறாளே; என்ன அவை?'' என்று கேட்கிறாள்.

சங்கரி அம்மாள் ஒரு கணம் திடுக்கிடுகிறாள். பிறகு, ''அவள் எனக்குத் தூரத்து உறவு சித்ரா. நம் தெருவில் வடக்குக் கோடி வீட்டில் புதிதாக போஸ்ட்மாஸ்டர் ஒருவர் குடித்தனம் வந்திருக்கிறார். அவர் வீட்டில் சமையல் செய்து போட்டுக் கொண்டிருக்கிறாள்!'' என்கிறாள்.

''அவளுக்கு நீங்கள் என்ன கொடுத்தனுப்புகிறீர்கள் இங்கிருந்து?''

''இந்தப் பெண் தினந்தோறும் சமையல் சாப்பாடெல்லாம் முடிந்தபிறகு இங்கே வந்து என்னுடன் பேசிக் கொண்டிருப்பாள். இன்றும் அப்படித்தான் வந்து பேசிக் கொண்டிருந்தாள். சற்று முன் போஸ்ட் மாஸ்டர் வீட்டு வேலைக்காரி வந்து, 'வீட்டுக்கு விருந்து வந்திருக்குது. சமையல் செய்யணுமாம்; அம்மா கூட்டிக்கிட்டு வரச் சொன்னாங்க' என்று அழைத்தாள். இந்நேரத்தில் அந்தப் பெண் போய், எப்போது சமையல் செய்து, எப்போது விருந்தாளிக்கு அவற்றைப் படைப்பது? நம் வீட்டில்தான் விருந்துச் சாப்பாடு மிஞ்சிக் கிடக்கிறதே; கொடுத்தனுப்புவோம் என்று கொடுத்தனுப்பினேன்'' என்கிறாள் சங்கரி அம்மாள்.


சித்ராவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இருந்தாலும், ''ஓ! சரிதான்'' என்று சங்கரி அம்மாளுக்கு விடை பகர்கிறாள். சாப்பாட்டை முடித்துக் கொண்டு கோடி வீட்டுக்குப் போகிறாள்.

''வாருங்கள்! வாருங்கள்!'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றுச் சித்ராவோடு பேசிக்கொண்டிருக்கிறாள் போஸ்ட் மாஸ்டர் மனைவி.

''வீட்டுக்கு விருந்தாளிகள் வந்திருப்பது போல் இருக்கிறதே! நான்.... இன்னொரு நாள் வருகிறேனே!'' என்கிறாள் சித்ரா.

''வேண்டாம், வேண்டாம். நீங்கள் இருங்கள். விருந்தாளிகள் வேறு யாரும் இல்லை. என் மூத்த மகனும், அவன் நண்ப

“எப்பொழுது பார்த்தாலும் சமையல் வேலைதானா ?”



இல்லை இல்லவே இல்லை !

நான் போர்ன்-விடா சாப்பிடுகிறேன்.
தினசரி இரண்டு கப் சாப்பிடுகிறேன்
போர்ன்-விடா அளிக்கும் சக்தியினால்
சமையல் வேலை அரை நொடியில்
முடிந்துவிடுகிறது.

BOURN-VITA

சக்திக்கும் வலிமைக்கும்



தயாரிப்பாளர்கள்:
Cadbury's



பத்திரிகையில் ஒரு கார் விற்பனை பற்றி விளம்பரம் வந்திருந்தது. புத்தம் புதிய கார் — 1962 மாடல் — ஐயாயிரம் ரூபாய் என்று விலை குறிப்பிடப்பட்டிருந்தது.

கார் வாங்க விரும்பியவர் உடனே அந்த விலாசத்துக்கு ஓடிப்போய் அதை விலைக்கு வாங்கிக் கொண்டார். பணத்தைக் கொடுக்கும்போது, ''இவ்வளவு புத்தம் புதிய காரை ஐயாயிரம் ரூபாய்க்குக் குறைந்த விலைக்கு விற்க எப்படி முன்வந்தீர்கள்?'' என்று கேட்டார் வியப்புடன்.

''எனது மாமனார் சென்ற வாரம் இறந்துபோனார். அவர் உயிலில் இந்தக் காரை விற்ற ரூபாய் என் நாத்தனாரைச் சேரவேண்டும் என்று எழுதியிருக்கிறார்! அவர் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறோம்!''



னுந்தான்! பார்த்தீர்களா? மறந்து விட்டேனே! உங்களுக்கு ரொம்ப நன்றி. அவர்கள் முன்னறிவிப்பு இல்லாமல் திடீரென்று இரண்டு மணிக்குப் பசியோடு வந்து நிற்கிறார்கள். உங்கள் வீட்டில் யாரோ விருந்துக்கு வருவதாகச் சொல்லி வரவில்லையாமே! 'எல்லாம் நிறைய இருக்கிறது; எடுத்துக் கொண்டு போ' என்று உங்கள் வீட்டுச் சமையற்கார அம்மாள் கொடுத்தனுப்பினாளோ, நான் பிழைத்தேனோ?''

''உங்கள் மகன் இந்த ஊரில்தானே இருக்கிறார்?'' என்று உரையாடலைச் சாதாரணமாகத் தொடங்குகிறாள் சித்ரா.

''இல்லை, இல்லை. அவன் பட்டணத்தில் ஒரு கல்லூரியில் புரொபஸராக இருக்கிறான்!'' என்று கூறுகிறாள் போஸ்ட்மாஸ்டரின் மனைவி. பிறகு குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''இந்தக் காலத்துப் பிள்ளைகளுக்குப் போது அறிவே கிடையாது. சாப்பாட்டு நேரம் தாண்டிய பிறகு விருந்தாளியை அழைத்துக் கொண்டு வரலாமா?'' என்றாள்.

''எப்படியோ பிரச்னை சமாளிக்கப்பட்டு விட்டதே!'' என்று அவளுக்குச் சமாதானம் சொல்கிறாள் சித்ரா.

''என்னவோ நல்ல காலம் என்று சொல்லுங்கள். சொல்லி வைத்தாற் போல் எங்கள் வீட்டு விருந்தாளிக்கு உங்கள் வீட்டில் விருந்து சமைத்து வைத்திருக்காவிட்டால் நாங்கள் எவ்வளவு திண்டாடிப் போயிருப்போம்? பசியோடு வந்த விருந்தாளியை மணிக்கணக்கில் காக்க வைத்து விட்டுச் சமையல் செய்து கொண்டிருந்தால் அவர்தான் என்ன நினைத்திருப்பார்?'' அந்த அம்மாள் மீண்டும் குரலைத் தாழ்த்திக் கொள்ளுகிறாள். ''அதிலும் பாவம், அவர் போன இடத்தில் பெரிய ஏமாற்றத்தைச் சுமந்து கொண்டு வந்திருக்கிறார்!'' என்று அனுதாபப்படுகிறாள்.

அவளுடைய அனுதாபத்தில் கலந்து கொள்ளும் நோக்கத்துடன், ''ம்......? என்ன விஷயம்?'' என்று வினவுகிறாள் சித்ரா.

''என் மகனின் நண்பருக்குப் பெண் பார்க்கப் போயிருக்கிறார்கள். 'பெண் பார்க்க வாருங்கள்' என்று அழைத்த பெண்வீட்டார், இப்போது அவர்களாகவே முந்திக் கொண்டு, 'பெண் கொடுக்கப் பிரியமில்லை; போய் வாருங்கள்' என்று திருப்பி அனுப்பி விட்டார்கள்!''

''ஆச்சரியமாக இருக்கிறதே; ஏனாம்?''

''இரண்டாந்தாரம்!''

''அது அவர்களுக்குத் தெரியாதா என்ன?''

''அது தெரியும்; ஆனால் முதல் மனைவி இவரை விவாகரத்து செய்து விட்டாள் என்ற விஷயம் பெண் வீட்டுக்காரர்களுக்குப் பிறகு தான் தெரிய வந்ததாம். தக்க காரணத்தோடுதான் அந்த விவாகரத்து நடந்திருக்கிறது; அதில் அவர் பிழை ஒன்றுமேயில்லை என்றாலும், இந்தக் காலத்தில் விவாகரத்து, அதிலும் மனைவி விவாகரத்து பெற்றாள் என்றால் கணவன் அவளைக் கொடுமைப்படுத்தியிருப்பான் என்றுதானே எல்லாரும் நினைத்து விடுகிறார்கள்! அதிலும் இது அவருக்கு முதல் அனுபவமில்லை; மூன்றாவது அனுபவம். நான் இன்று அவர் என்ன நினைத்துக் கொண்டாலும் நினைத்துக்கொள்ளட்டும் என்று துணிந்து சொல்லி விட்டேன்: 'உங்களுக்கு இனிமேல் குடும்பம் என்று ஏற்படுமானால், உங்கள் மூத்த மனைவி இது வரையில் மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்து, மீண்டும் உங்களுடன் வாழப் பிரியப்பட்டால்தான் உண்டு' என்று. அவரும் அரைமனத்துடன் சம்மதித்திருக்கிறார். இனிமேல்தான் அவருடைய மூத்த மனைவி யார், எந்த ஊர் என்பதை விசாரித்து ஆவன செய்ய வேண்டும்.....''

இப்படி அந்த அம்மாள் பேசிக் கொண்டே போகையில் சித்ராவின் மனம், 'இவர்கள் குறிப்பிடுபவர் நம் கணவராகவே இருக்கக் கூடாதா?' என்று ஏங்குகிறது. அதே நேரத்தில், ''அம்மா!'' என்று கூப்பிட்டுக் கொண்டே போஸ்ட்மாஸ்டரின் மூத்த மகன் முன்கட்டுக்கு வருகிறார். ''குமார் சம்மதித்து விட்டார் அம்மா. அவர் மனைவியைத் தேடி நீங்கள் எங்குமே போக வேண்டாம். அவள்......''

வேற்றாள் இருப்பதைப் பார்த்து விட்டு அவர் முடிக்காமல் நிறுத்திய வாக்கியத்தைச் சித்ரா முடிக்கிறாள்: ''......இதோ இருக்கிறேன்'' என்று. அதோடு அவர் பின்னால் வந்து கொண்டிருந்த குமாரின் பாதங்களில் வேரற்ற மரம் போல் சாய்ந்து, ''என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ளுங்கள். என் ஒரே வாழ்வு எது என்று எனக்குப் புரிந்து விட்டது'' என்று கதறுகிறாள்!

''எனக்கும் ஒரு மகத்தான உண்மை இன்று தான் புரிந்தது, சித்ரா!'' என்று அவளைத் தூக்கி நிறுத்துகிறான் குமார்.

''என்ன உண்மை?'' என்று கேட்கிறான் அவன் நண்பன்.

''விவாகரத்துக்கும் நம் தமிழ்ச் சமுதாயத்துக்கும் ரொம்ப தூரம் என்பது!''

ஈறு உபாதை மற்றும் பற்சிதைவு இவைகளுக்கான சிகிச்சையில்

போர்ஹான்ஸ்

டூத்பேஸ்ட் உபயோகித்துப் பெற்ற

வியக்கதக்க பலன்கள்

ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்



என்னுடைய ஈறுகள் பஞ்சுபோல ஆகிவிருந்ததால் 1948ல் அவைகளிலிருந்து இரத்தம் கசியத்தொடங்கியது. என் பற்களைப்பற்றிப் பெருமைப்படும் என் கணவர் எனக்கு போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் உபயோகிக்கச் சொன்னார். அதன்பிறகு நான் போர்ஹான்ஸை தவறாமல் உபயோகித்து ஆனந்தமும் விசேஷமான பலன்களையும் அடைந்தேன்.

ஜெ. கே. பிலாய்நகர்



மூன்று வருடங்களுக்கு முன்பு நான் பல்வலியினால் வேதனைப்பட்டேன். என் நண்பன் ஒருவன் போர்ஹான்ஸ் உபயோகிக்கும்படி ஆலோசனை கூறினான். அதை நான் உபயோகிக்கத் தொடங்கினேன். ஒரு மாதம் கழிந்தவுடன் என் பல்வலி குணமானதுடன் என் பற்கள் ஒளிவீசும் வெண்மையுடனிருப்பதைக் கண்டு வியந்தேன். நான் இப்போது போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன்.

பி. வி. பம்பாய்



நான் இளமைப் பிராயத்திலிருந்தே போர்ஹான்ஸ் டூத்பேஸ்டை உபயோகித்து வருகிறேன். என் குடும்பத்தில் எல்லோரும் இந்த டூத்பேஸ்டை உபயோகிக்கிறார்கள். எங்களில் இது பற்களை ஒளிவீசும் வெண்மையுடனும் ஈறுகளை ஆரோக்கியத்துடனும் இருக்க உதவுகிறதென்பதைக் காண்கிறோம் என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

(ஸ்ரீமதி) கே. வி. பங்களூர்



இலவசம் — பற்கள் பராமரிப்பு பற்றி படங்கள் கொண்ட புத்தகம்

ஈறு உபாதைகள் மற்றும் பற்சிதைவிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றி மேலும் அறிய நீங்கள் விரும்பினால், இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு "CARE OF THE TEETH & GUMS" என்ற புத்தகத்தின் (ஆங்கிலத்தில்) பிரதியைப்பெற தபால் செலவுக்கென 15 ந. பை ஸ்டாம்புகளை அனுப்பவும்: டிபார்ட்மெண்ட்: கே-6, மானேர்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, தபால் பை நெ. 10031, பம்பாய்-1

...இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு.

போர்ஹான்ஸ்

டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் உபயோகியுங்கள்



இந்த டூத்பிரஷ் மட்டுமே
★ உங்கள் பற்களைச் சுத்தம் செய்வதோடு,
★ ஈறுகளையும் இதமாகத் தடவிக் கொடுக்கிறது.

B.37-TAM

அறிவுக்கனலே, அருட் புனலே!

ரா. கணபதி 62

அமெரிக்க மக்கள், ஸ்வாமிஜியை இழக்கக்கூடாத ஒரு வாய்ப்பாகக் கருதி, அவரைச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கினர். அமெரிக்கர் இழக்கக் கூடாது எனக் கருதிய அந்த வாய்ப்பை ஸ்வாமிஜியின் தாய்த் திருநாடாகிய பாரதமே இழக்கச் செய்யும் சூழ்நிலையை இந்தியாவில் உண்டாக்கிக் கொண்டிருந்தார் பிரதாபசந்திர மஜூம்தார். பிரம்ம சமாஜத் தலைவராகிய இவரும் சர்வமத மகாசபையில் கலந்து கொண்டவர்களில் ஒருவர். ஸ்வாமிஜி அளப்பரும் கீர்த்தி பெற்றதைக் கண்டு பொறாமை வாய்ப்பட்டார் இந்தப் புண்ணியாத்மா. அமெரிக்காவில் ஸ்வாமிஜியைப் பற்றி அபவாதம் பரப்ப முயன்று தோற்றுப் போன அவர் இப்போது இந்தியாவில் அந்தக் 'கைங்கரியத்தை'த் தொடர்ந்திருந்தார்.

ஸ்வாமிஜியின் புகழைப் பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளின் வாயிலாகக் கேட்டு மகிழ்ச்சியும், அவரைத் தாங்கள் முன்னமே அறிந்து போற்றியிராததற்காக வெட்கமும் கொண்ட இந்திய மக்களிடையே மஜூம்தார் நிந்தனைகளைப் பரப்பி அவர்களின் நல்லெண்ணத்தைக் கெடுக்க முயன்றார்.

வந்தனை போலவே நிந்தனையும் ஸ்வாமிஜியைத் தொடவில்லைதான். என்றாலும் வேறு ஒரு காரணத்துக்காக ஸ்வாமிஜி மஜூம்தாரின் புரளியைப் பற்றிக் கவலைப்பட்டார். இஸபெல் மக்கின்ட்லிக்கு அவர் எழுதிய கடிதத்தில் இக்கவலையை உருக்கமாகத் தெரிவிக்கிறார்:

''எந்நாட்டு மக்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிக் கூட எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒரே ஒரு கவலையுண்டு. கிழ அன்னை ஒருத்தி எனக்கிருக்கிறாள். வாழ்நாள் முழுவதும் அவள் எவ்வளவோ துயரம் அநுபவித்து விட்டாள். இவ்வளவுக்கும் மத்தியில் அவள் என்னை ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் சேவை செய்வதற்காகத் தியாகம் செய்து, அந்தத் தியாகத்தைத் தாங்கி வருகிறாள். தன்னுடைய எதிர்கால நம்பிக்கையாக இருந்த மகன்-தன் குழந்தைகளிலெல்லாம் அருமைக்கு அருமையாக வளர்த்துப் பின்னர் தான் துறந்த அந்த மகன் — கண்காணாத தேசமொன்றில் மிருகம் போல வாழ்கிறான் என்று அறிந்தால் அது அப்படியே அவள் உயிரை உறிஞ்சி விடும். ஆனால் ஆண்டவன் பெரியவன். அவனது குழந்தைகளை யாரும் எதுவும் செய்துவிட முடியாது.''

ஆண்டவன் பெரியவன்தான்! மஜூம்தாரின் அபத்தங்களை இந்தியாவில் யாரும் பொருட்படுத்தவேயில்லை. மஜூம்தாருக்குச் சகோதரர் முறையாக வேண்டிய பத்திரிகாசிரியர் ஒருவரே ஸ்வாமிஜியைச் சிலாகித்து எழுதியதால் மஜூம்தாரின் 'திருப்பணி' எடுபடவில்லை.

நியூயார்க் மாநகரத்தில் 1894ம் ஆண்டில் ரோல்ஸ் ராய்ஸ்கள் ஓடவில்லை. நூறடுக்கு விண் உரசும் மாளிகைகளும் இருக்கவில்லை. என்றாலும் அன்றைய அமெரிக்காவில் அங்குதான் அதிகமாக சாரட்டுகள் ஓடின. அன்றைய அமெரிக்காவில் அங்குதான் இருபது மாடிகளுள்ள கட்டடங்கள் உயர்ந்து நின்றன. அம்மாநகரில் ஸ்வாமிஜி 1894 ஏப்ரல் 24 லிருந்து மே 6ந் தேதி வரையில் தங்கினார். நியூயார்க்கின் பெருமையை அவர் பெரிதும் ரசித்தார். பர்க் கூறுவது போல்: 'ஸ்வாமிஜி எங்கெங்கே மனிதனின் சக்தி, ஆக்கத் திறன் இவை வெளிப்படுவதைக் கண்டாலும் அங்கு திவ்விய மாதாவின் சக்தியையும், ஆக்கத் திறனையுமே கண்டு வந்தார்.'

பிற்காலத்தில் ஸ்வாமிஜியின் பிரிய சிஷ்யர்களானவர்களில் பலர் நியூயார்க்கில் தான் அவருக்கு அறிமுகமாயினர்.

நியூயார்க்கில் தமது நினைவை நீங்காமல் பொறித்து விட்டு போஸ்டன் அடைந்தார் ஸ்வாமிஜி. இந்தியாவில் பெண்கள் இழி நிலையில் இருக்கிறார்கள் என்று எண்ணி வந்த அந்நகரப் பெண்களிடையே ஸ்வாமிஜி இப்படிப் பேசினார்:

''இந்தியாவில் உயர் குலத்து விதவைகள் மறுமணம் புரிந்து கொள்வதில்லை. கீழ்க்



குழந்தை விதவைகளை மணம் புரிந்து கொள்வார்கள்; எதை வேண்டுமானாலும் உண்பார்கள்; குடிப்பார்கள்; கூத்தாடுவார்கள்; இஷ்டப்பட்ட அளவுக்குக் கலியாணம் செய்து கொள்வார்கள்; அதேபோல விவாகரத்தும் செய்வார்கள். சுருங்கச் சொன்னால் உங்கள் நாட்டில் மிக உயர்ந்த அந்தஸ்திலுள்ள பெண்கள் செய்வதை எங்கள் நாட்டின் இழிகுல மாதர் செய்வர்'' என்றார்.

அமெரிக்கப் பெண்களை அழகில் லக்ஷ்மியாகவும், அறிவில் சரஸ்வதியாகவும், அம்பாவின் அவதாரங்களாகவும் கூறியவரேதான். தமது நாட்டுப் பெண்களைப் பற்றி அவர்கள் தாழ்வாக எண்ணுகிறார்கள் என்றறிந்த போது இப்படிக் கொதிப்புடன் பேசினார். இது அல்லவோ தேச பக்தி?

இவ்வுரையில் இன்னொரு பகுதி:

''எங்களை மத வெறியர்கள் என்கிறீர்கள். இருக்கட்டும். நாங்கள் மதவெறியர்களாக இருக்கும் போது எங்களையே துன்புறுத்திக் கொள்ளுகிறோம்; ஸ்வாமியின் ரதத்துக்கு முன் விழுந்து எங்கள் உயிரையே விடுகிறோம்; எங்களுடைய தலையையே வெட்டிக் கொள்கிறோம்; ஈட்டிப் படுக்கையில் நாங்களே படுக்கிறோம். ஆனால் நீங்கள் மதவெறியர்களாக இருக்கும் போது என்ன செய்கிறீர்கள்? பிறருடைய கழுத்தை அறுக்கிறீர்கள்; பிறரைத் தீயில் பொசுக்கிச் சித்திர ஹிம்ஸை செய்கிறீர்கள்; ஈட்டிப் படுக்கையில் மற்றவர்களைப் படுக்க வைக்கிறீர்கள்! உங்கள் சதைக்கு எந்த ஆபத்தும் வராமல் சர்வ ஜாக்கிரதையாக இருக்கிறீர்கள்!''

துணிச்சல் என்பதற்கு இங்கேயில்லாமல் வேறெங்கு இலக்கணம் காண்பது?

1894ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஸ்வாமிஜியின் பெருமையை அடிமட்டமாக்க முயலும் மகத்தான யத்தனம், மயில் ராவணன் தலைபோல் மீண்டும் கிளர்ந்தெழுந்து அதன் உச்ச கட்டத்தை அடைந்தது. கிறிஸ்துவ மிஷனரிகளும், தியாஸபிஸ்ட்டுகளும் செய்து வந்த தூஷணைப் பணிக்குப் பிரம்ம சமாஜத் தலைவர் பிரதாப் சந்திர மஜூம்தார் நன்றாகத் தூபம் போட்டு வந்தார். ஸ்வாமிஜி சர்வமத சபைக்கு எவ்வித நற்சான்றிதழும் பெற்று வராததைக் காரணம் காட்டி, இந்தியாவில் அவரை யாருமே அறிந்திருக்கவில்லை என்றும் ஸ்வாமிஜி அமெரிக்காவுக்கு வந்த பின்னரே சந்நியாசம் பூண்ட ஒரு வேஷதாரி என்றும் அமெரிக்கப் பத்திரிகைகளில் எழுதினார் மஜூம்தார்.

'உங்களிடம் நற்சான்றிதழ் கேட்பது சூரியனிடம் ஒளி வீசுவதற்குச் சான்றிதழ் கேட்பது போல இருக்கிறது' என்று முன்பு சொன்ன பேராசிரியர் ரைட் உள்படப் பலருக்கு இப்போது ஸ்வாமிஜியைப் பற்றி இலேசான ஓர் ஐயமும் எழத் தொடங்கியது. இந்த ஐயத்தைத் தீர்க்கவே, ஒருபோதும் சுயபுராணம் பாடியறியாத சுவாமிஜி கேத்ரி மகாராஜா போன்ற பிரமுகர்கள் தமக்கெழுதிய கடிதங்களைக் கூச்சத்துடன் வெளியிட்டுத் தமது அந்தஸ்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியதாயிற்று? தாய் நாட்டுக்காகவென்று தனியாக ஓர் அந்நியக் கண்டத்துக்கு வந்து கண்டனத்துக்குள்ளாகித் தம்மைத் தாமே காத்துக்கொள்ள வேண்டியிருந்த ஸ்வாமிஜியின் நிலைமை எண்ணினாலே நெஞ்சு நோகிறது.

ஸ்வாமிஜியும் நெஞ்சு நொந்து தம் சென்னைச் சீடர்களுக்கு எழுதினார்: 'உங்களின் பேச்சைக் கேட்டு இங்கே வந்ததே தவறு' என்று.

ஸ்வாமிஜியின் கடிதம் சென்னைக்குப் போய்ச் சேருமுன்னரே அங்கு ராஜா ஸர் ராமஸ்வாமி முதலியார், ஸர் சுப்பிரமணிய அய்யர் ஆகியோர் ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி உலக அரங்கில் பாரதத்தின் பெருமையை நிலைநாட்டிய பெரு மகனுக்குப் புகழ் மாலை சூட்டினர். வங்கத்துச் சிங்கம் உலக அரங்கத்தில் ஏறக் காரணமாக இருந்ததற்குத் தமிழகம் எவ்வளவு பெருமைப்படலாமோ அவ்வளவு பெருமையும் பட்டது. ஸ்வாமிஜியைத் தக்க முறையில் வரவேற்று, உபசரித்து ஊக்கமளித்த அமெரிக்கர்களுக்குத் தங்களது நன்றியைத் தெரிவிக்கும் ஒரு தீர்மானத்தையும் சென்னை மகாஜனங்கள் நிறைவேற்றி அனுப்பி வைத்தனர்.

கும்பகோணம் முதலிய தமிழ் நாட்டு நகரங்களிலும் ஸ்வாமிஜிக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கூட்டங்கள் நடைபெற்றன. ராமநாதபுரத்தரசர் ஸ்வாமிஜிக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்தார்.

வடக்கே கேத்ரி மகாராஜா விசேஷ தர்பாரொன்று நடத்தி, ஸ்வாமிஜி ஹிந்து தர்மத்துக்குப் புரிந்த மாபெரும் சேவைக்காகத் தமது பெயரிலும் தமது பிரஜைகளின் பெயரிலும் நன்றிச் செய்தி அனுப்பி வைத்தார்.

இவற்றுக்கெல்லாம் சிகரமாக ஸ்வாமிஜியை ஈன்றெடுத்த வங்கம் தனதருமைச் செல்வன் —தானே இதுகாறும் அறிந்திராத அருமைகளையுடைய செல்வன் — செய்த ஒப்பற்ற சமயப் புரட்சியைப் பாராட்டி ஆனந்தப் பெருமிதத்துடன் விழா எடுத்தது.

மஜூம்தாரின் குற்றச்சாட்டுக்கள் பிரசுரமான பத்திரிகைகளில் இந்தச் செய்திகளும் வெளியாயின. ஸ்வாமிஜி ஹிந்து மதத்தை உள்ளபடி விளக்கிக் கூறியவரே, இந்திய மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றவரே என்பது இதனால் நிரூபணமாயிற்று.

வேற்று நாட்டில் யாவராலும் பழிக்கப்படுகிற ப ய ங் க ர நிலையிலிருந்த ஸ்வாமிஜி தமது சீரையும் சிறப்பையும் மீண்டும் பெறலானார். விலகியவர்கள் வந்து கூடினார்கள். கவிந்திருந்த கனமேகங்கள் சிதறியே விட்டன.

இது அம்பிகையின் அநுக்கிரகத்தாலேயே நிகழ்ந்தது என்றுதான் ஸ்வாமிஜி நம்பினார். ஹேல் சகோதரிகளுக்கு அவர் எழுதுகிறார்:

''ஜய ஜய ஜகதம்பா! நான் எதிர்பார்த்ததற்கு மேல் பெற்று விட்டேன்.... ஆண்டவன் கருணையை எண்ணி நான் குழந்தை போல் விசிக்கிறேன். சகோதரிகளே, அவன் பணியாளர்களை ஒருபோதும் விட்டுப் போவதில்லை.... ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். பிதாவாக இருக்கிறான். மாதாவாக இருக்

கிறான்: தனது குழந்தைகளை அவன் ஒரு போதும் கைவிடுவதில்லை. இல்லை, இல்லை, இல்லவே இல்லை. சிக்கலான தத்துவங்களை யெல்லாம் ஒதுக்குங்கள். ஆண்டவனின் குழந்தைகளாகி அவனிடம் சரணம் புகுங்கள் — இதற்கு மேல் என்னால் எழுத முடியவில்லை. பெண்பிள்ளையைப் போல் நான் புலம்பிக் கொண்டிருக்கிறேன்.''

ஸ்வாமிஜி மேலும் எழுதுவார்:

''உலகம் ஏராளமான பல பொருள்களில் அன்பை வைக்கட்டும். நமக்கு ஒரே ஒரு அன்புப் பண்டம்தான் உண்டு. எனக்கு வேண்டியதெல்லாம் அந்த என் அன்பன் ஒருவனே!

''அவனுடைய ஆற்றல்கள் என்னென்ன, குணங்கள் என்னென்ன என்பதெல்லாம் இங்கு யாருக்கு வேண்டிக் கிடக்கிறது? அவனுடைய கனியான குணங்களும் கூட நமக்கு வேண்டாம். இன்றைக்கும் என்றைக்குமாக அடித்துச் சொல்வோம்: 'எங்களுக்கு அவன் தரக்கூடிய செல்வங்களின் மீது அன்பில்லை' என்று. இப்படியெல்லாம் நாம் அன்பை விலை கூறவில்லை. நமக்குத் தேவை எதுவும் இல்லை. கொடுப்பதே நம் கடமை.

''தத்துவக்காரர்கள் எல்லாம் அவனுடைய சாரத்தைச் சொல்ல வருகிறார்கள், சக்தியைச் சொல்ல வருகிறார்கள், குணங்களைச் சொல்ல வருகிறார்கள் — அறியாதவர்கள்! அவனுடைய அதரங்களின் ஒரு ஸ்பரிசத்துக்காக அல்லவா இங்கு நாம் செத்துக் கொண்டிருக்கிறோம்?

''அறிவிலியே, யார் முன் நீ நடுக்கும் முழங்காலுடன் பய பீதியில் வணங்குகிறாயோ அவனுக்கு நான் என் கழுத்திலிருக்கிற மாலையைக் கழற்றிச் சூட்டினேன். அவனுடைய கழுத்தைப் பிடிக்கிற பட்டையாக அதனைச் சூட்டினேன். அதனுடன் ஒரு சங்கிலியையும் கோத்து அதைப் பிடித்துக் கொண்டு அவனை என்னுடனேயே இழுத்து வருகிறேன். அவன் ஒரு க்ஷணமும் என்னிடமிருந்து பிரிந்து விடக் கூடாதேயென்ற கவலையில்தான் கழுத்துப் பட்டை போட்டிருக்கிறேன். அது சாதாரணப் பட்டை அல்ல; பிரேமைப் பட்டை. அந்தச் சங்கிலி பிரேமையின் பரவச நிலை. அறிவிலியே! உனக்கு ரகசியம் தெரியவில்லை — எங்குமுள்ள அனந்தன் அன்புக்குக் கட்டுப்பட்டு என்னுடைய பிடிக்குள் அகப்படுகிறானடா. அகிலாண்ட நாயகன் அன்புக்கு ஆயுட்கால மூறி எழுதித் தந்த அடிமை என்பதை நீ அறியாயா? உலகங்களையெல்லாம் நடத்தி வைப்பவன் பிருந்தாவன ஆய்ச்சியருடைய கங்கணங்களின் குலுங்கல் இசைக்கேற்பப் பரதமாடினான் என்பதை நீ அறியாயா?....''

இப்படியெல்லாம் பக்த சிரமாயும் வேதாந்த சிங்கமாகவும் இருந்தபோதும், ஸ்வாமிஜி மானுடப் பண்புடனேயே எளிமையாகத் திகழ்ந்தார். கலபராக விளங்கினார். இதோ ஓர் உதாரணத்தைப் பார்ப்போம்:

ஸ்வாமிஜிக்கு ஃப்ரெஞ்சு கற்பிப்பதாகச் சொல்லிக்கொண்டு ஜோஸபீன் தப்பும் தவறுமாக ஒரு ஃப்ரெஞ்சுப் பாடலை அவருக்குச் சொல்லிவைத்து, அதன் பொருளையும் மனம் போனபடி 'விளக்கி' இருந்தாள். ஸ்வாமிஜி ஸ்வாம்ப்ஸ்காட்டில் இருந்தபோது ஃப்ரெஞ்சுப் பண்டிதர் ஒருவரிடம் அதைப் பாடிப் பொருள் கூறினாராம். பிரெஞ்சுப் புலவர் விழுந்து விழுந்து சிரித்தாராம். இதைப் பற்றி ஜோஸபீனுக்கு எழுதும் ஸ்வாமிஜி, 'இங்கே மிகவும் குளிர்ச்சியாக இருக்கிறது. அங்கே நீங்கள் வெப்பத்தில் வேர்த்து விறுவிறுத்து வறுபட்டு வெந்து கொண்டிருப்பீர்கள். இதை எண்ணும்போது இங்குள்ள குளிர்ச்சி மேலும் குளிர்ச்சியாகத் தெரிகிறது' என்று முப்பத்தியொரு வயசு இளைஞருக்குரிய விளையாட்டுத்தனத்தோடு கூறுகிறார்.



ஓர் அம்மாள் தன் நாயிடம் மிகுந்த அன்பு கொண்டு அருமையாக வளர்த்து வந்தாள். ஆனால் அந்த நாயின் வால் சுருண்டு கொண்டிருந்தது மட்டும் அவளுக்குப் பிடிக்கவில்லை. நீட்ட முடியாத அந்த வாலை வெட்டித்தான் எடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்தாள். எனினும் திடீரென்று ஒரு நாள் ஒரேயடியாக வாலை நறுக்கி விட்டால் வாலில்லாமல் நாய் ரொம்பவும் வருத்தப்படுமே என்ற இரக்கமும் அனுதாபமும் அவளை ஆட்கொண்டன. கூடவே ஒரு யோசனையும் தோன்றியது. வாலின் நுனியிலிருந்து ஆரம்பித்து இரண்டு நாளைக் கொரு தரமோ நாலு நாளைக்கொரு தரமோ கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி எடுத்துக் கொண்டு வந்தால் நாளடைவில் வாலும் மறைந்து விடும். நாய்க்கும் வால் இல்லாத குறையே தோன்றாது என எண்ணி அப்படியே செய்தாள். திட்டம் நன்கு நிறைவேறியது. அவள் எதிர்பார்த்தது போலவே நாய்க்கு வாலை இழந்து விட்டோம் என்கிற வருத்தமே லவலேசமும் ஏற்பட வில்லை. ஆனால் வெட்டுக் காயங்களின் வேதனை தாளாமல்தான் அது இறந்து விட்டது! இத்தனைக்கும் அந்த அம்மாள் அளவற்ற அன்பு காரணமாகத்தானே இப்படிச் செய்தாள்?

நம் உள்ளங்களில் உள்ள அற்பமான ஆசைகள் குற்றம் குறைகள் துவேஷங்கள் இவற்றை ஒரேயடியாக முழுமையாகக் களைந்தெறிந்து விடுவோமாக. சிறிது சிறிதாக அவற்றை நீக்க முற்பட்டு, நம்மை நாமே சித்திரவதை செய்து கொள்ளாதிருப்போமாக!

— ஒரு எம்.ஆர்.ஏ. பாட்டியின் கருத்து

ஆனால் அவரது இதர செயல்களை விவரிக்கும் பார்கோ 'அவர் முப்பத்து சொச்சம் வயது இளைஞர் அல்ல; திவ்ய மாதாவின் லீலா விபூதிகள் இடையறாது நடைபெறும் ஆதி அந்தமற்ற நிலையின் விளிம்பில் வாழ்ந்த நிரந்தரமான இளைஞர் அவர்' என்கிறார்.

1894ம் ஆண்டு வேனிற்காலத்தில் ஸ்வாமிஜியின் ஆன்ம எழுச்சி தழைத்துக் கொழிக்கலாயிற்று. அதற்கு ஒரு காரணம் இத்தனை நாட்களாக அமெரிக்காவின் பரபரப்பு மிக்க நகரங்களிலும், ஹோட்டல்களிலும், ரயில்களிலும் காலம் கடத்திய அவர் இப்போது அமைதியான இடங்களில் சஞ்சாரம் செய்ததாகும். பரபரப்பு மிக்க இடங்களிலும் ஸ்வாமிஜி தம்மை மறந்து தியானாவஸ்தையில் ஆழ்ந்ததுண்டு. டிராம் வண்டியில் பயணம் செய்யும்போது இவ்வாறு தியானத்தில் ஆழ்ந்தபடியால் இறங்க வேண்டிய இடத்தில் இறங்காமல், டிராம் வண்டியின் பல சுற்றுக்களுக்கு ஸ்வாமிஜி கட்டணம் தர வேண்டி நேரிட்டிருக்கிறது. என்றாலும் நகர வாழ்வின்போது ஸ்வாமிஜி தமது ஆத்ம சாதனைகளை ஓரளவுக்குச் சங்கிலி போட்டே வைத்திருந்தார் எனலாம். இப்போது அது கட்டவிழ்த்துக் கொண்டது.

ஆண்டவனையே எண்ணும் ஆண்டியின் கவலையற்ற தெளிவுடன் ஸ்வாமிஜி ஆற்றங்கரையில், வனாந்தரப் பிரதேசத்தில் அமைந்திருந்த கிரீனேக்கருக்கு வந்து சேர்ந்தார். அங்கு சர்வ மத சமயக் குடியிருப்பு ஒன்று நடந்து வந்தது. வேதாந்தத்திலிருந்து தந்திர ஜாலம் வரை எல்லாவற்றையும் அவியலாக்கி எல்லாம் மத உணர்வே என்று அந்தக் குடியிருப்பினர் எண்ணியிருந்தபோதிலும் அவர்களில் பக்குவமான பல ஆத்மாக்களும் இருந்தனர். ஸ்வாமிஜிக்கு மிகவும் உகந்த இடமாக அது அமைந்தது.

கிரீனேக்கர் குன்றிலே பைன் மரங்கள் சூழ்ந்த ஒரு பகுதி உண்டு. இந்த மரங்களின் கீழ்தான் சாதகர்கள் சாதனை புரிவார்கள்: 'ஸ்வாமிஜி பைன்' என்றே பிற்பாடு பெயர் பெற்ற மரத்தின் கீழ் ஸ்வாமிஜி தியானம் புரிந்ததோடு உபதேசங்களும் செய்து வந்தார். 'ஸ்வாமிஜி பைன்' கீழ் அவர் ராஜ கம்பீரமாக நிற்கும் புகைப்படத்தைத்தான் அத்தியாயத் தொடக்கத்தில் காண்கிறீர்கள். இதுகாறும் இந்தியாவின் பழக்க வழக்கங்களைப் பற்றியே அதிகம் பேசி அமெரிக்கரின் தப்பபிப்பிராயத்தைக் களைந்து வந்த ஸ்வாமிஜி, இங்குதான் வேதாந்த உபதேசத்துக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கினார். ஜீவப்ரம்ம ஐக்கியத்தைச் சொல்லும் அற்புத வாசகங்களை ஆர்வமுடன் சில அமெரிக்கர்கள் இங்கு பருகினர்.

மேரி ஹேலுக்கு ஸ்வாமிஜி எழுதுவார்: ''நான் 'சிவோஹம், சிவோஹம்' என்று கூறுகிறேன். வெள்ளை உள்ளமும், தூய்மையும், தீரமும் படைத்த குடியிருப்பு வாசிகளும் 'சிவோஹம், சிவோஹம்' என்று திரும்பச் சொல்கிறார்கள். நான் மகிழ்கிறேன்.''

எப்பாரும் எப்பதமும் எங்கணும்
  நான் சென்றே,
எந்தை! நினது அருட்புகழை
  இயம்பிடல் வேண்டும்;
செப்பாத மேனிலைமேல் சுத்த
  சிவமார்க்கம்
திகழ்ந்தோங்க, அருட்சோதி
  செலுத்திடல் வேண்டும்.

என்று இராமலிங்க வள்ளலார் வேண்டியதைத்தான் நிறைவேற்றிக் கொண்டிருந்தார் ஸ்வாமிஜி!

அமெரிக்காவில் இத்தனை நாட்கள் மாபெரும் மன்றங்களில் பேசி, பட்டு மெத்தைகளில் உறங்கிய ஸ்வாமிஜி கிரீனேக்கரில் இருந்தபோது இந்தியாவில் தாம் எளியவராக வாழ்ந்தபோது கண்ட ஆனந்தத்தை மீண்டும் கண்டார். 'தரையில் படுப்பதிலும், தரு நிழலில் தியானம் செய்வதிலும் நான் பெறும் மகிழ்ச்சியை என்னவென்பேன்!' என்கிறார் ஸ்வாமிஜி.

பரவச நிலையிலிருந்த ஸ்வாமிஜி எல்லாவற்றிலும் தெய்வத் தன்மை பூரித்திருப்பதை உணர்ந்த நாட்கள் அவை. அவர் கிரீனேக்கரில் இருந்தபோது புயலொன்று வீசியது. அதையும் சர்வேசுவரியின் விளையாட்டாகவே கண்டு அவர் எழுதுவதைப் பாருங்கள்: ''இங்குள்ள கூடாரங்களுக்குக் கூட ஒரேயடியாக ஆத்ம உணர்ச்சி வந்துவிட்டது. நேற்றடித்த புயலில் அவை மனிதர்களின் பார்வையிலிருந்து தப்பி விடுபட்டு ஓடிவிட்டன. சுமார் இருநூறு நாற்காலிகள் ஆத்ம பரவசத்தில் தரையில் கால் பாவாமல் நர்த்தனமாடின'' என்கிறார்!

போஸ்டனிலிருந்து அக்டோபர் இரண்டாந் தேதி கேம்பிரிட்ஜ் சென்று ஸ்ரீமதி ஒல்புல்லின் இல்லத்தில் தங்கினார். பிரசித்திபெற்ற வயலின் வித்வானாக இருந்து மறைந்த ஒல்புல் என்பவரின் மனைவி இவள். ஸ்வாமிஜியின் அடியார்களில் தனியிடம் பெற்றவள். ஸ்ரீ ராமகிருஷ்ண மட நிர்மாணத்துக்கு அளப்பரும் உதவி புரியப் போகிறவள். ஸ்வாமிஜி இவளைத் தாயாகக் கருதி, தாய் என்றே அழைத்தும் வந்தார்.

கேம்பிரிட்ஜில் ஸ்வாமிஜி எழுதும் பணியில் ஈடுபட்டார்.

டாக்டர் வில்லியம் ஜேம்ஸ் என்ற புகழ் பெற்ற தத்துவ சாஸ்திரி இச்சமயத்தில் ஸ்வாமிஜிக்கு அறிமுகமானார்.

''சமாதி நிலை என்றும், அப்போது நேரடியாகப் பரம்பொருளுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் சொல்கிறீர்களே! இது அநுபவத்துக்கு வரக் கூடியதுதானா?'' என்று கேட்டார் டாக்டர் ஜேம்ஸ்.

அவ்வளவுதான். அந்தக்கணமே ஸ்வாமிஜி வாக்கினால் விளக்குவதற்கு மேம்பட்ட அநுபவ நிலையில் மூழ்கினார். அந்தக் கணமே 'தோன்றுவதெல்லாம் விழுங்கும் சொரூபமாகி' மெய்ப்பொருளில் நின்றார். எந்த விதமான உணர்வும் அவருக்கு அப்போதில்லை. கொழுந்து விட்டுப் பிரகாசித்தது அவரது மேனி. டாக்டர் ஜேம்ஸ் ஸ்வாமிஜியின் உன்னத அகப் பயிற்சியைக் கண்டு ஸ்தம்பித்துப் போய்விட்டார். தெரியாமலா ஆதி சங்கர பகவான், 'ஆத்ம சாக்ஷாத்காரம் இங்கேயே



சிறந்த தரத்துடன் சிக்கனமும்
குடும்பத்தினர் அனைவருக்கும் கிடைக்கிறது
எத்தனை சிக்கனமானது! எத்தனை புத்துணர்ச்சி தருவது! இந்தப் பெரிய சைஸ் டால்க்கில் உங்களுக்கு பெயர் பெற்ற கால்கேட்டின் சிறிய தரம் கிட்டுகிறது.
எத்தனை நறுமண முடையது! எத்தனை நீடித்திருப்பது! ஸ்நானத்திற்கு பின்- வெளியே செல்லுமுன்- தாராளமாக உங்கள் உடலில் தூவிக்கொண்டு நளினமாய் விளங்குங்கள்.
எத்தனை சேர்த்தியா னது! எத்தனை மிருது வானது! கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்க்கை குழந்தை விரும்புகிறது. இளஞ்சருமத்திற்கு அது மிகவும் ஏற்றது.
COLGATE
All-Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்
அபூர்வ மலர்களின் நீடித்திருக்கும் நறுமணங்கொண்டது.



ஜீவாம்ருதம்
ஆரோக்யத்திற்கும் · பலத்திற்கும்

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டென்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமி களில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.


கால்கேட் உடனடியாக வாய் துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினால் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப் படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன! இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது — சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டென்டல் கிரீமினால் உங்கள் பற்களை நன்றாகத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கிடைத்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.

பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

இருக்கிறது! இன்றே இருக்கிறது' என்று அடித்துச் சொன்னார்?

ஓய்விருந்தும் ஸ்வாமிஜியால் புத்தகமெழுதும் பணியைத் தீவிரமாகச் செய்ய முடியவில்லை. எதிலுமே ஓர் ஆயாசம் கண்டது. "பொது வாழ்வும் பத்திரிகைப் பிரபல்யமும் வெறும் 'நான்ஸென்ஸ்'. இது எனக்குப் போதுமென்றாகி விட்டது. சாந்த ஹிமாலயத்துக்குத் திரும்ப மாட்டோமா என்று ஏங்குகிறேன்" என்று அமெரிக்கருக்கு எழுதினார். ஆனால் ஸர்வேசுவரியின் திரு உள்ளம் அப்படி இல்லையே! தனஞ்சயனின் தனுவிலிருந்து விடுபட்ட பாணம் பூமியின் அடிவாரம் வரை சென்று கங்கையைப் பீறிடச் செய்தாற்போல், கரும்பு வில் தரித்த அம்பிகையின் பாணமாகிய ஸ்வாமிஜியும் மக்களின் இதய ஆழம் வரை குடைந்து சென்று ஆன்மப் பெருக்கைப் பீறிட வேண்டியிருந்ததே!

ஸ்வாமிஜி மீண்டும் உத்வேகம் பெற்றார்.

அக்டோபர் பன்னிரண்டாம் தேதி பால்டிமோர் அடைந்தார் ஸ்வாமிஜி.

பால்டிமோரில் இனபேதம் தலைதூக்கியிருந்தது. கருப்புத் தோலுடைய ஸ்வாமிஜிக்கு இடமளிக்கக் கூட ஒரு போஜனசாலை மறுத்ததாம். இதுபோன்ற அவமதிப்புக்களை ஸ்வாமிஜி பொருட்படுத்தவில்லை.

ஸ்வாமிஜியை நீக்ரோவில் சற்றுச் சிவந்தவர் என்றே நினைத்து ஒதுக்கிய இடங்களும் உண்டு. சில முடிதிருத்தகங்கள் ஸ்வாமிஜிக்குச் சிகை திருத்த முடியாது என்று சொல்லி வெளியேற்றியுள்ளன. அப்போதெல்லாம் அவர் தாம் நீக்ரோவல்ல என்று சொல்லிக் கொள்ளவே மாட்டார். பிறகு செய்தித் தாள்களில் அவரது பிரசங்கத்துடன் படத்தையும் கண்டு மன்னிப்புக் கேட்டவர்கள் பலர்.

"ஏன் ஸ்வாமி, தாங்கள் நீக்ரோவல்ல என்பதைத் தாங்களாகவே சொல்லிக்கொள்ளவில்லை?" என்று மேல்நாட்டுச் சீடர் ஒருவர் பிற்காலத்தில் விவேகானந்தரைக் கேட்டார். அப்போது அவர் 'இன்னொருவரை மட்டமாகச் சொல்லி, அதனால் நான் உயருவதா? நான் இப்பூவுலகத்தில் அதற்காக வரவில்லை' என்றார். ஆம், எல்லோரும் தெய்விகம் பொருந்தியவர்கள் என்பதை எடுத்துச் சொல்வதற்காகவே அல்லவா அவர் பூவுலகம் வந்திருந்தார்?

சிகாகோவில் ஒரு செல்வந்தர் ஸ்வாமிஜியின் யோக சக்தியைக் குறித்து ஐயப்பட்டார். "ஸ்வாமிஜி, யோக சக்தியால் அற்புதம் நிகழ்த்த முடியும்; ஆனால் அப்படி நிகழ்த்த நான் தயாராக இல்லை என்கிறீர்கள். உண்மையில் உங்கள் யோகத்தால் அற்புதம் நிகழ்த்தவே முடியாதோ என்னவோ? முடியுமென்றால், என்னுடைய சிந்தனைகளையும், பூர்வ சரித்திரத்தையும் கண்டறிந்து சொல்லுமேன்" என்றார். ஒரு விநாடி தயங்கிய ஸ்வாமிஜி தமது பார்வையை அந்தத் தனவந்தர் மீது ஆழப் பதித்தார். கூரிய அந்தத் திருஷ்டி அம் மனிதரின் மனத்தைத் துளைத்துக் கொண்டு அவரது சகலமான சிந்தனைகளையும், பழைய வாழ்க்கையையும் உட்புறம் வெளிப்புறமாகக் கவிழ்த்து விட்டது. ஸ்வாமிஜிக்குத் தம்மைப் பற்றிச் சகலமும் தெரியத் தொடங்குகிறது என்பதைத் தனிகர் புரிந்து கொண்டார். அவருக்கு நரம்புத் தளர்ச்சியே உண்டாகி விட்டது. "ஐயோ, ஸ்வாமி! என்ன செய்கிறீர்கள்! என் உள்ளத்தை அப்படியே குடைந்து, பழைய மர்மங்களையெல்லாம் திரட்டிக் கொண்டு வருகிறீர்களே! வேண்டாம், ஸ்வாமி வேண்டாம்" என்று கூவினார்.

இப்படியே ஸ்வாமிஜியின் வாக்கில் ஐயம் கொண்ட சிலர் அமெரிக்காவின் மேற்கத்திய பாகத்தில் ஸ்வாமிஜிக்கு ஒரு பயங்கரமான — ஆனால் அவர் பயங்கரமாகவே உணராத — சோதனையை உண்டாக்கினர்.

அந்த மேற்கத்திய ஊரில் ஆயர்கள் (Cowboys) என்பதாகப் பெயர் சூட்டிக் கொண்டுள்ள பட்டதாரிகள் சிலர் கால்நடைப் பண்ணை நடத்தி வந்தனர். பிரம்ம நிலையைத் துய்த்தவன் மலை குலைந்தாலும் நிலை குலையாமல் விளங்குவான் என்று ஸ்வாமிஜி ஓர் உரையில் கூறியதைக் கேட்டிருந்த இவர்கள் அந்தக் கூற்றின் சத்தியத்தைச் சோதித்துப் பார்க்க விரும்பினார்கள். ஸ்வாமிஜியைத் தங்கள் பண்ணைக்கு அழைத்தனர். மாடுகள் தண்ணீர் பருகும் மரத் தொட்டி ஒன்றையே கவிழ்த்துப் போட்டு ஸ்வாமிஜிக்கு மேடை அமைத்திருந்தார்கள். அவர் சர்வமத மகா சபையின் ஜாஜ்வல்யமான அரங்கில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு முன்னர் உரையாற்றியது போலவேதான் மரத் தொட்டியின் மீது நின்ற போதும் உரை நிகழ்த்தினார்.

அப்போது.... திடீரென, அது என்ன சத்தம்!

அவர் நின்று பேசிய தொட்டி முறிந்ததா?

இல்லை. அதனினும் பயங்கர சத்தம் — துப்பாக்கி வேட்டு வெளிப்படும் சத்தம்!

ஆம். ஸ்வாமிஜியைச் சுற்றி வேட்டுக்கள் பறந்தன. அவரது காதை உரசியவாறு 'ரொய்ங்' 'ரொய்ங்' என்று ரவைகள் பறந்தன. பிரம்மஞானியின் சம நிலையை அறிவதற்காக 'கௌபாய்கள்' முரட்டுத்தனமாக நடத்திய சோதனை இது. ஆனால் ஸ்வாமிஜியோ இந்தக் குண்டு மாரியைப் பொருட்டாகவே நினையாமல் சாவதானமாகத் தமது பிரசங்கத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தார்!

எது நேரினும் இடர்ப்பட மாட்டோம்
அண்டம் கலங்கினும் அஞ்ச மாட்டோம்

என்ற பொன் மொழியை இவ்வாறு அவர் மெய்யாக்கினார்! (தொடரும்)

முதல் திருடன்: அந்த அம்மா கழுத்தில் போட்டுக்கொண்டிருக்கிற வைர நெக்லஸை எடுத்தால் எவ்வளவு கிடைக்கும்?

இரண்டாவது திருடன்: ஐந்து வருடமோ, ஆறு வருடமோ அது நீதிபதியைப் பொறுத்திருக்கிறது.




We are sure you are keen on modern and lasting finishes



இதுவே ரகசியம்

டி. நாராயணன்

வானளாவிய பங்களா; அதன் நெற்றியிலே ஒளிவிட்ட 'ரேணுகா பிக்சர்ஸ்' பெயர்ப் பலகை; இவை நான் பத்து வருஷங்களுக்கு முன்பு சொன்ன விளையாட்டுப் பேச்சு எவ்வளவு தீர்க்கதரிசனம் என்பதற்கு மௌனச் சாட்சிகள்.

""டேய் பாலு! உன் கண் என்ன கண்ணடா! காட்டிலும் மேட்டிலும் கல்லிலும் மண்ணிலும் கலையழகைத் துருவித் துருவித் தேடியதையும் உன் கண்களில் ஒற்றி எடுக்க ஒரு ரோஜா மலர்கூட என் கையில் இன்றில்லாது போகலாம். இன்று நானே என்றில்லை. என்றாவது ஒரு நாள் கலை உலகில் உனக்காக ஒரு சிம்மாசனம் காத்திருக்கப் போவது நிச்சயம்"" என்றேன் அன்று.

என் வாக்குப் பலித்து விட்டது. 'ரேணுகா பிக்சர்ஸ்' முத்திரை என்றாலே புதுமுகங்களுக்குப் பிரகாசமான எதிர்காலம்; எடுத்த படமெல்லாம் வெற்றிக்குமேல் வெற்றி. விரல் விட்டு எண்ணக் கூடிய நாலைந்து பட அதிபர்களில் முதல் விரல் என் நண்பன் பாலுதான்.

ஒரு சபலம் எனக்கு. சென்னைக்கு வந்தது தான் வந்தோமே, பாலுவைப் பார்த்துவிட்டுப் போனால்....

தெய்வ சந்நிதானத்தில் பாபாத்மா தயங்கித் தயங்கி நுழைவதைப் போல ஒரு வழியாக, பட அதிபர் பாலுவின் அறைக்கு முன்னே வந்து நின்றேன். ஆபீஸ் பையன் அசகாய சூரன். பார்வையாலேயே என்னை அளவிட்டான். ""என்ன ஸார்! உத்தியோக விஷயமா? அப்படி யொன்றும் வேலை காலியில்லையே?"" என்றான்.

""உங்க முதலாளி என் பால்ய நண்பர். பார்க்கலாமல்லவா ?"" என்றேன்.

""தாராளமா பாருங்களேன்! இப்ப ஐயா கொஞ்சம் 'பிஸி'. ! 'ஸ்டாஃப்' செலக்ஷன் நடக்குது. ஐயாவுக்குத்தான் வர வர வேலை தலைக்கு மேலே. பொழுது விடிஞ்சா 'போன்' பேசவே நேரமில்லே. அதுக்காக முதலாளிக்கு அந்தரங்கக் காரியதரிசி தேவையின்னு பத்திரிகையிலே விளம்பரம் போட்டோம். இரண்டே மனுதான். ஒரு அம்மா உள்ளே போயிருக்காங்க. இன்னொரு அம்மா அதோ......!"" — எதிர்ப் பெஞ்சியின் கோடியில் உட்கார்ந்திருந்த பெண்ணைச் சுட்டிக் காட்டினான் ஆபீஸ் பையன்.

அவள் பெண்ணா? அவலட்சணத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு.

முதலாளி பாலுவின் அறைக் கதவு 'கிரீச்' சிட்டது; யாரோ வெளி வரும் அரவம்; அந்தப் பயங்கரியிடமிருந்து வலுவில் பார்வையைத் திருப்பினேன். அழகெனும் அழகு இப்படி அழகு பெற்று வந்ததோ என்று சொல்லும்படி அவள் வந்தாள்.

""என்னம்மா! போன காரியம் ஜெயம் தானே? நாளையிலிருந்து வேலைக்கு வர வேண்டியதுதானே!"" என்றான் ஆபீஸ் பையன்.

""நான் வந்திருக்கக் கூடாத இடம் தம்பி, இது! பணமிருந்தால் மட்டும் போதுமா, புத்தி வேணுமே, புத்தி!"" — இதழோரத்தில் அவள் வெளியிட்ட அலட்சியப் புன்னகை, அவளுக்கு நேர்ந்த தோல்வியை எடுத்துக் காட்டியது.

சேச்சே! பாலு சுத்தக் கலைக் குருடன். என்னதான் வலை போட்டுத் தேடினாலும் இந்தப் பெண்ணை விடவா அழகானவள், பழகுவதற்கு இனியவள் இந்தப் பாலுவுக்குக் கிடைத்து விடப் போகிறாள்?

உள்ளே யிருந்து 'கிணிங்' சத்தம் கேட்டது. ""அம்மா, நீங்க......"" — தாடகையின் தங்கச்சிக்குக் கதவைத் திறந்து விட்டான் ஆபீஸ் பையன்.

அவன் என்ன வேகத்தில் உள்ளே போனானோ, அதே வேகத்துடன் வெளியே வந்து, ""'குட் நியூஸ்' தம்பி! நாளையிலிருந்து வேலைக்கு வரும்படி உத்தரவு!"" என்றான்.

""அப்படியா!"" — ஆபீஸ் பையன் துக்கம் விசாரித்தது என் காதில் விழுந்தது.


ஏன்தானோ பாலுவுக்கு இப்படிப் புத்தி கெட்டு விட்டது? இவனுக்கிருப்பது கலைக் கண்ணா, இல்லை பூனைக் கண்ணா?

மறுபடியும் 'கிணிங்' சத்தம். நரகத்தின் கதவு எனக்காகத் திறந்தது.

வேகம் என் நடையில் மட்டுந்தானா? குற்றம் புரிந்த கலைக் கொலைஞனையல்லவா சந்திக்கப் போகிறேன்? உள்ளே போனதும் என் நாக் குழறியது. கால்கள் பின்னின. அவன் தனியாக இல்லை—கூட ஒரு பெண்!

""என்னடா, அசடு! பேய் அறைஞ்சவன் மாதிரி நிக்கிறே! இப்படி உட்கார். இவள் தான் என் மனைவி ரேணுகா. என் வலது கை. என் நலன்தான் இவள் மூச்சு. எந்தக் காரியமும் இவள் உதவி இல்லாமே என்னால் செய்ய முடியறதில்லே. சாதாரண 'இன்டர்வ்யூ'வா இருக்கட்டுமே, இவள் அபிப்பிராயம் சொல்லலேன்னு அதில் உப்பு சப்பு இருக்காது"" என்றான் என் பால்ய நண்பன் பாலு.

நான் பெருமூச்சு விட்டேன். இப்பொழுதல்லவா புரிகிறது, அழகு ஏன் அழுதுகொண்டு போனது; கோரம் ஏன் சிரித்தது என்று!



சில ஆண்டுகளுக்கு முன் சென்னையில் மல் யுத்தத்தைப் பற்றிப் பெரும் சர்ச்சை நடந்து வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதோ, என்னவோ! பல்லாயிரக்கணக்கான பேர்கள் மல் யுத்தப் போட்டிகளை நான் தவறாமல் பார்க்கப் போய்க் கொண்டிருந்தார்கள். சிலர் 'இது என்ன நாகரிகமான விளையாட்டாக இல்லையே' என்று குறைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். குறைப்பட்டுக் கொண்டிருந்தவர்கள், நான் தவறாமல் இந்த யுத்தங்களுக்கு முதல் வகுப்பு டிக்கெட்டுகள் வாங்கிக் கொண்டு முன் வரிசையில் வந்து உட்கார்ந்தார்கள். நண்டுப் பிடியும் தேள் பிடியும், ஜுஜுட்ஸுவும் நடந்தபோது தாங்கள் குறைப்பட்டதை மறந்து உற்சாகமாகக் கைதட்டி ஆர்ப்பரித்துத் தங்களை அவ்விளையாட்டில் கரைத்துக் கொண்ட அதிசயத்தையும் மறந்திருப்பதற்கில்லை.

ஆனால் ரங்கன் இந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவனல்ல. இருந்தாலும் அவன் மல்யுத்தம் என்றால் காரணமின்றியே ஒருவித அருவருப்புக் கொண்டிருந்தான். அதற்கு ஏற்றாற்போல் அவன் குடியிருந்த அறைக்கு முன் பஞ்சாப் சிங்கம் பல்வீர் சிங் வந்து குடியேறினான்.

யார் இந்த ரங்கன்? ஆம்! அவனைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது இப்போது அவசியமாகிறது. ரங்கன் பட்டிக்காட்டில் வளர்ந்தவன். அவன் பெற்றோர்களுக்கு ஒரே ஒரு அருமருந்தன்ன புதல்வன். இவ்வளவு போதும் அவன் எவ்வளவு கட்டுப்பெட்டியாக வளர்ந்திருப்பான் என்பதை ஊகித்துக் கொள்ள. அவன் காலையில் பழையது சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போவான். பிற்பகல் சாப்பாடு சுடச்சுடப் பள்ளிக்கூடத்துக்குப் போய்விடும். அவன் வீட்டுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் ஒரு பர்லாங்கு தூரம் கூட இருக்காது; இந்தத் தூரம் வெயிலில்

தனி மகன் நடந்து வீட்டுக்கு வந்தால் உடல் உருகி விடுமோ என்ற பயம் தாயாருக்கு: இப்படிப் பூட்டிப் பூட்டி வைத்து வளர்க்கப்பட்ட ரங்கன், பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் படிக்க வைக்கச் சென்னைக்குப் பிரியாவிடை கொடுத்து அனுப்பி வைத்தார்கள் அவன் பெற்றோர்கள்.

சென்னையில் முதலாண்டு ரங்கன் உறவினர் வீட்டில் தங்கிப் படித்தான். அங்கு எத்தனை நாட்கள் இருக்க முடியும்? ரங்கனுக்கு என்னவோ தனது சுதந்திரம் பறிக்கப்படுவது போலவும், வீட்டார் ஏதோ தனக்கு இடைஞ்சல் விளைவிப்பது போலவும் உணரலானான். உண்மையில் வீட்டார் அவன் விஷயத்தில் சற்றும் தலையிடவில்லைதான்; எனினும் ரங்கன் கம்பர் கூறியது போல்,

"மறம்கிளைத்து உழைகல்லில
ராயினும் மனந்தான்
இறவுறும்படி இயற்றுவர்
இடையறு இன்னல்"

என்ற வாக்கைத் தன் வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் அனுபவிக்கலானான். மேலும் கல்லூரி வாழ்க்கையில், மற்ற மாணவர்களோடு பழகியதில் அவனுக்குச் சற்றுத் துணிச்சலும்கூட ஏற்பட்டுவிட்டது. பெரியோர்களின் கட்டுப்பாடின்றிச் சுதந்திரமாக வாழத் தனக்குப் போதிய வயதும் திறமையும் வந்து விட்டதாகவே உணர்ந்தான். அதனால் முதலாண்டு கோடை விடுமுறைக்கு ஊருக்குச் சென்ற ரங்கன், தன் பெற்றோர்களிடம் அடம் பிடித்துச் சென்னையில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு தனியாக வசிக்க அனுமதி பெற்று இரண்டாவது வருடக் கல்லூரிப் படிப்பைத் தொடங்கத் திரும்பி வந்தான்.

தங்கசாலைத் தெரு தர்மலிங்கம் மிலிட்டேரி ஹோட்டல் பிரபலமா அல்லது அந்த ஹோட்டலில் எடுபிடி வேலை செய்யும் முனியம்மா பிரபலமா என்பது அந்த ஹோட்டலுக்கு விஜயம் செய்யும் ரசிகர்களுக்கு ஒரு புரியாத புதிராகவே இருந்து வருகிறது. அந்த மிலிட்டேரி ஹோட்டலில் பட்டைபட்டையாக நெற்றியில் திருநீறு அணிந்து அதற்கு மேல் இரண்டு புருவங்களையும் இணைத்து ஓர் அங்குல நீளத்துக்குக் குங்குமத்தைத் தீற்றிக்கொண்டு கூரான மீசைக்கு வெண்ணெய் தடவித் திருகிவிட்டுத் தர்மலிங்கம் பெட்டியடியில் உட்கார்ந்து விட்டால் வியாபாரம் மும்முரமாக நடக்கிறது என்று பொருள். பொதுவாக, தர்மலிங்கம் பெட்டியடியில்லாத நேரம் குறைவாதலால் அக்கடையில் வியாபாரம் மந்தம்



மோகன ரங்கன்

இந்துமதி

என்ற நேரமும் கிடையாது என்று சொல்ல வேண்டும். வாடிக்கைக்காரர்கள் கடைக்குள் நுழைந்தால், "வாங்க, அண்ணே!", "வாங்க மச்சான்!", "வாங்க மாமா" என்று அவரவர் வயதுக்குத் தக்கபடி உறவு முறை கொண்டாடிக் கொண்டு தர்மலிங்கம் வரவேற்பதே தனி அழகு! கடைக்குள் நுழைந்து விட்டாலோ, பாத்திரங்களைக் கழுவிவைத்துக் கொண்டே இங்குமங்கும் அலையும் முனியம்மாள் "என்ன மச்சான்!" "என்ன மாமா", "என்ன அண்ணாத்தை!"

என்று பலவகை உறவுகள் கொண்டாடிக் கொண்டு குசலம் விசாரிக்கத் தொடங்கி விடுவான். அவன் குரல் சற்றுக் கனமான குரலாதலால் பேச ஆரம்பித்தால் இடி முழக்கம்தான் நடக்கிறதோ என்று தோன்றும். அவனுக்கும் முதலாளி தர்மலிங்கத்துக்கும் ஆதி நாட்களில் ஏதோ ஒரு வகை தொடர்பிருந்ததாகவும் அதனால்தான் தர்மலிங்கம் அவன் அட்டகாசத்தைச் சகித்துக் கொண்டு வருவதாகவும் சிலர் பேசுவார்கள். அவன் அட்டகாசக் குரலை அடக்கத் தர்மலிங்கம் தம் ரேடியோவை எவ்வளவு உரத்துச் சத்தம் போட விட முடியுமோ அவ்வளவு சத்தத்தை உயர்த்தி வைத்து விடுவார். 'விவித் பாரதி' நிகழ்ச்சிகளையும் ரேடியோ சிலோன் நிகழ்ச்சிகளையும் மாற்றி மாற்றி ரேடியோ எந்த நேரமும் அலறிக் கொண்டிருக்கும்!

தர்மலிங்கம் ஹோட்டலின் மாடியில் நான்கு அறைகள் உண்டு. அவற்றையும் அவ்வப்போது வாடகைக்கு விடுவதுண்டு. அந்த அறைகளில் வந்து தங்குபவர்களைக் கவனிக்க அவர்களுக்குச் சிற்றுண்டி பலகாரங்கள் கொண்டு கொடுக்கும் வேலையை முனியம்மாளின் மகள் மோகனா செய்து வந்தாள்.

முனியம்மாளுக்கு மகள் மோகனாவைத் தவிர வேறு குடும்பம் கிடையாது. ஆகவே தாயார் வேலை செய்யும் ஹோட்டலிலேயே ஐந்து வயதுக் குழந்தைப் பருவத்திலிருந்து சுற்றிச் சுற்றி வருபவள் மோகனா. இப்போது பதினெட்டு வயது நிரம்பிய இளம் கன்னிப் பெண்ணாகி விட்டாள். இருப்பினும் அவள் சிறு வயது முதல் செய்து வந்த வேலையைவிட வில்லை. ஹோட்டலில் வந்து தங்குபவர்களும் மோகனா கொண்டு வந்து பலகாரம் கொடுத்தால், அதன் ருசி தனியாக இருப்பதாக உணர்ந்தார்கள். தர்மலிங்கத்துக்கும் பெட்டியில் அதிக சில்லறை கிடைத்து வந்தது.

* * *

''மோகனா! நேற்று நீ குடிக்கத் தண்ணியே கொண்டு வந்து வைக்கவில்லை. ராத்திரி விக்கல் எடுத்து நான் செத்துப் போவதற்கு இருந்தேன்'' என்றான் ரங்கன்.

''ஐயா, மன்னிச்சுக்குங்க! நேற்று அந்தக் குரங்கு. கோட்டான் எனக்கு ஓயாத வேலை வைத்து உயிரை எடுத்திட்டான். அது தானுங்க, நான் நேற்று இங்கு வர முடியலே. மன்னிச்சுக்குங்க சாமி!'' என்றாள்.

ஆம், ரங்கன் தர்மலிங்கம் மிலிட்டேரி ஹோட்டல் எதிரில் அறை எடுத்துக் கொண்டதும், அவன் அறையைப் பெருக்கிச் சுத்தம் செய்யவும், மற்ற பத்துக் குடித்தனக்காரர்களுக்கும் பொதுவாக இருந்த குழாயிலிருந்து ஒரு மண் கூஜா அளவு குடிதண்ணீர் கொண்டு வந்து தன் அறையில் வைக்கவும் ஓர் ஆள் தேவைப்பட்டது. எதிரில் தர்மலிங்கம் ஹோட்டலில் வேலை செய்பவர்கள் யாராகிலும் வந்து ஓர் அரை மணி நேரம் தனக்கு வேலை செய்து விட்டுப் போவதில் யாதொரு கஷ்டமும் இராது என்று எண்ணித் தர்மலிங்கத்திடம் இந்த உதவியை நாடினான் ரங்கன்; தர்மலிங்கமும் மோகனாவை, இவ்வேலைகள் செய்வதற்கு அனுப்பி வைத்தார். மாதம் மூன்று ரூபாய் மோகனாவுக்குக் கொடுத்து விடும்படி சொன்னார். இப்படி மோகனா, ரங்கன் அறைக்கு வந்து குற்றேவல் புரியும் வேலையை இரண்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கினாள்.

மோகனா பார்ப்பதற்கு அழகாக இருப்பாள். துறுதுறு என்ற கண்களும் எடுப்பான நாசியும், புன்னகை தவழும் இதழ்களும், கருண்ட கேசமும், பின்னி முடித்த கூந்தலும், வெள்ளிப் பட்டைக் கொலுசு அணிந்த பாதமும் சுத்தமான ஆடைகளும் — எல்லாமே அவளுக்கு ஒரு தனி வசீகரிப்பை அளித்தன. ரங்கனும் அவளிடம் ஹோட்டல் விவகாரங்களைக் கேட்டு அறிவதில் மிகுந்த உற்சாகம் காட்டினான்.

''என்ன மோகனா! இன்றைக்கு உங்க ஹோட்டலுக்குப் பெரிய புள்ளி வந்திருக்கிறாப் போலிருக்கிறதே!''

''ஆமாங்க! இன்றைக்கு மூணும் நம்பர் அறையிலே கோயமுத்தூர் மில் முதலாளியினுடைய காரியதரிசியாம் ஒருவர் வந்திருக்கிறார். நான் தற்செயலாக அவர் அறைக்கு ஏதோ வேலையா நுழைஞ்சேன். அங்கே கண்ட அதிசயத்தை என்ன சொல்வேன், போங்க!''

''என்ன அதிசயத்தைக் கண்டே சொல்லு, மோகனா!''

''ஐயய்யோ, அதை மட்டும் சொல்ல மாட்டேன்.''

''ஏன்?''

''நான் அவரண்டை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று சொல்லி விட்டு வந்திருக்கிறேன். அதற்காக எனக்குப் பத்து ரூபாய் பணம் கூடக் கொடுத்திருக்கிறார்..... அதை நான் உங்களிடம் கொடுக்கிறேன். அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்து நான் கேட்கிறபோது கொடுப்பீங்களா?'' என்றாள்.

''ஆமாம்; அங்கே நீ என்னத்தைப் பார்த்தேன்னு என்கிட்டே சொல்ல மாட்டேங்கிறே. நான் மட்டும் உன் பணத்தைப் பத்திரமாக வைச்சிருந்து கொடுக்கணுமாக்கும். மாட்டேன், போ!''

''இப்படி நீங்க என்னைக் கைவிட்டால் என் கதி என்ன ஆவது?'' என்று கூறினாள். அடுத்த கணம் அவள் முகம் ஏனோ குப்பென்று சிவந்து விட்டது. நாவைக் கடித்துக் கொண்டாள்; தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

''பார்த்தாயா, மோகனா! உன் மனசிலேயிருக்கிறது வெளியே வந்துவிட்டது. ஆனாலும் என்கிட்டே அங்கே என்ன பார்த்தேங்கிறதைச் சொல்ல மாட்டேங்கிறே. அவருக்குக் கொடுத்த வாக்கைப் பெரிசாக மதிக்கிறே. என்னண்டை சொன்னால் வெளியே விட்டுவிடுவேன்னு பயப்படறே. என்னண்டை உன் உன் மனசுக்கிருக்கிற நம்பிக்கை உனக்கு இல்லே என்றுதானே ஆகிறது.....?'' என்று வருத்தத்தோடு கூறினான் ரங்கன்.

''உங்களண்டை நம்பிக்கை இல்லாமல் என்னங்க, அவர் ஒரு தோல் பெட்டி வைத்திருந்தார்; அது நிறைய பத்து ரூபாய் ஐந்து

ரூபாய் நோட்டுக்களாகக் கட்டுக்கட்டா வைத் திருந்தார். நான் நுழைந்ததைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனார். உடனே பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து இதை யாரிடமும் சொல்லாதே என்று கூறி என்னை வெளியே அனுப்பி விட்டுத் தாளிட்டுக் கொண்டார். அவ்வளவுதானுங்க....." என்று கூறிக் கொண்டே பத்து ரூபாய்நோட்டை நீட்டினான்.

"இவ்வளவுதானா...?" என்று சொல்லிக் கொண்டே அந்த நோட்டை வாங்கிய ரங்கன் சிந்தனையில் ஆழ்ந்து விட்டான். அப்போதெல்லாம் கள்ள நோட்டு அச்சடிப்ப தைப் பற்றிச் செய்திகள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருந்தன. அதைச் சேர்ந்ததாக இருக்குமோ என்று ஒரு கணம் நினைத்தான். அதற்குள் மோகனு அவ் விடத்தை விட்டு அகன்றான்.

கீ கீ கீ

"என்னங்க! உங்களைத் தானே......" என்றாள் சிவசங் கரன் பிள்ளையினுடைய மனைவி மங்களத்தாச்சி.

"என்னங்கிறே.....?"

"எனக்கென்னமோ பயமாக இருக்கிறதே!"

"எதைப் பத்தி?"

"நம்ம பிள்ளையாண்டான் ரங் கனைப் பத்தித்தான்."

"என்ன பயம்......?"

"நமசிவாய முதலியார் மகன் பட்டணத்திலே எவளோ ஒருத்தி யோடு சுற்றிக் கொண்டிருக்கிறா னாம். வரதராஜய்யங்கார் மகன் சுந்தரராஜன் எவளோ சினிமா 'எக்ஸ்ட்ரா'வாம், அவளை ரிஜிஸ் டர் கல்யாணம் செய்துக் கிட்டா னாம். இதையெல்லாம் கேட்டா ரங்கனைப் பத்தி எனக்குப் பயமா இருக்குது" என்று கூறினாள்.

"அதற்கு என்ன செய்யச் சொல்றே....?"

"அவனுக்கு ஒரு கால் கட்டுக் கட்டி வைச் சிட்டா நல்லதுன்னு தோணுது......"

"படிப்பு முடியட்டும்..... யோசிப்போம்!"

"படிப்பு முடியறதுக்குள்ளே ஒன்னு கிடக்க ஒன்னு ஆயிப் போச்சுன்னு என்ன செய்யறதுன்னு கவலையாக இருக்கே."

"உடனே கல்யாணம் பண்ணி வைக்கட னுங்கிறியா?"

"விண்டு சொல்லணுமா?"

"பொண்ணு எங்கிருக்காம்?"

"பொண்ணு இல்லே? என் தம்பி மகளே இருக்காளே! அமிர்தம்."

"உன் பிள்ளை அதற்கு ஒப்புவானா?"

"நீங்களே எடுத்த எடுப்பிலேயே அப சகுனம் மாதிரி பேசறீங்க..... அமிர்தத் துக்கு என்ன குறைச்சல்? மூக்கு இல்லையா, முழி இல்லையா, குணமில்லையா, பணமில் லையா? அவளைக் கட்டிக்கக் கொடுத்து வைச் சிருக்கணுமே!"

"எல்லாம் இருக்கு, படிப்பு இல்லே. உன் பையன் பட்டணத்திலே போய்ப் படிச்சிட்டு வரான். படிச்ச பெண்ணுத்தான் கட்டிக்கு வேண்ணு சொல்லலாம். அதற்காகச் சொல் லேன்!" என்றார் சிவசங்கரம் பிள்ளை.

"அவன் சொன்னால் சொல்லட்டும். நீங்க சொல்லாமல் இருந்தால் சரி. முதலில் அவ னுக்கு அமிர்தத்தைப் பார்த்துக்கிட்டிருக் கோம் என்று கடுதாசி போடுங்க. ஏதோ அவன் கல்யாணத்தைப் பற்றி நாம் யோசிச் சிக்கிட்டிருக்கோம் என்றாவது அவன் தெரிஞ்சிக்கட்டும். அவன் கல்யாணத்தை அவன்தான் முடிவு செய்யணும் என்று அவன் தீர்மானிக்காமல் இருந்தால் இப்போதைக்குப் போதும்" என்றாள் மங்களத்தாச்சி.

அந்த அம்மாளின் யோசனையைக் கண்டு சிவசங்கரம் பிள்ளை வியந்தார். தம் மனைவிக்



கிருக்கிற முன் யோசனையைக் கண்டு மனசுக் குள் பாராட்டிக் கொண்டார்.

கீ கீ கீ

ரங்கன் அன்று இரவு படுக்கையில் படுத்துக் கொண்ட பொழுது அன்று காலை நிகழ்ந்த சம்பவம் அவன் நினைவுக்கு வந்தது. அத் துடன் தன்னுடைய நடத்தையைப் பற்றி யும் அவனுக்கே வியப்பாக இருந்தது.

'இது என்ன இது? மோகனுவிடம் இப்படி நான் நடந்து கொண்டேன். அவனை இப்படி வற்புறுத்தி அவன் அந்த அறையில் பார்த்த அந்த அற்ப விஷயத்தை அறிய முற்பட் டேன். கட்டிக் கொண்ட மனைவியிடம் கொண்டாடும் உரிமையைப்போல் அல்லவா அவருடைய அந்த இரகசியத்தை அறிய முற்பட்டேன். சே, என்ன கேவலம்' என்று தன்னைத் தானே நிந்தித்துக் கொண்டான். அடுத்த கணம் அவனுக்கு ஓர் ஐயம் தோன்றி

விட்டது. 'உண்மையில் நான் என்னை அறியாமலே அவனை வரித்து விட்டேனே....' என்ற எண்ணம் அவன் மனத்தில் ஓடியது. காதல் என்றவுடன் குளுகுளு வென்று பொதிகை மலைத் தென்றல் வீசினாற்போல் அவன் உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பு ஏற்பட்டது. அடுத்த கணம் மோகனா நவநாகரிக உடைகளையும், நகைகளையும் அணிந்து தன் அருகில் நிற்பது போலவும், அவனும் அவளும் பேசிக் களிப்பது போலவும் நந்தவனங்களில் உலாவுவது போலவும் இன்பக் காட்சிகள் மனத்திரையில் நடமாடத் தொடங்கின. அவன் உள்ளத்தில் பெருக்கெடுத்த இன்ப உணர்ச்சி காரணமாக உடம்பெல்லாம் புல்லரித்தது. 'உங்களைத் தவிர வேறு கதி' என்றாளே, அதன் பொருள் என்ன? காலையில் அதைச் சரியாகவே புரிந்து கொள்ள வில்லையே! இப்போதல்லவா புரிகிறது! நான் அவளைக் காதலித்து மனைவியாக ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக அவளே என்னை வரித்து விட்டாள். என்னைத் தஞ்சமாக அடைந்து விட்டாள் என்பதுதான் பொருள். 'அவளைக் கைவிடுவது தன் ஆண்மைக்கு அழகா?' ஆகா! உண்மையிலேயே நானும் மோகனாவும் கணவன் மனைவி ஆகி விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று இப்படி எண்ணத் தொடங்கினான்.



அடுத்த கணம் அவன் சிந்தனை வேறு திசையில் திரும்பியது. 'சே, இதெல்லாம் என்ன யோசனைகள்! அவள் யாரோ? என்ன சாதியோ! அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? பெற்றோர்களுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்? எவ்வளவு கேவலமாக மதிப்பார்கள்? அதிருக்கட்டும்! அவர்கள் உள்ளமே அல்லவா உடைந்து போகும்! நடக்கக் கூடாதது பற்றி நினைத்து மனத்தைக் குழப்பிக் கொள்கிறேனே. வெறும் பைத்தியக்காரன் நான்.'

'யார் பைத்தியம்? காதல் பைத்தியம் மிக உயர்ந்த பைத்தியம். சாதியாவது அந்தஸ்தாவது? காதலுக்குக் கண்ணில்லை என்பார்களே — ஞாபகமில்லையா? பெற்றோர்கள் அப்படித்தான் சொல்வார்கள். அதற்காகக் காதலையும் காதலியையும் கைவிடலாமா?' இப்படியோர் எண்ணம் உள்ளத்தில் பாய்ந்த போது ஏனோ நாவெல்லாம் உடலெல்லாம் கசந்து வழிந்தது!

இப்படி இன்பமும் துன்பமும் இரட்டிப்புக் கசப்பும் மாறி மாறி அவன் உள்ளத்தில் உணர்ச்சிப் பெருக்கெடுத்தன. இந்த உணர்ச்சி வெள்ளத்தில் அலையுண்டு எத்தனை நாழிகை விழித்திருந்தானோ அவனுக்கே தெரியாது. பொழுது விடிந்து வெகு நேரமான பிறகு கண் விழித்தான். அப்போதும் அவனுக்கு அலுப்புத் தீரவில்லை. உடம்பெல்லாம் வலித்தது.

''என்னங்க, இன்னிக்கு மணி எட்டாகிறது. இன்னும் எழுந்திருக்க வில்லை'' என்று கேட்டுக்கொண்டே மோகனா வந்தாள்.

இவளுக்காகவா நேற்று ராத்திரி தூக்கத்தைக் கெடுத்துக் கொண்டு அத்தனை நாழிகை விழித்திருந்தோம் என்று எண்ணினான் ரங்கன்.

ஃ ஃ ஃ


அன்று இரவு தெருவெல்லாம் ஒரே கூட்டம். ஜனங்கள் பத்து மணி சுமாருக்குத் தாங்கள் பார்த்து விட்டு வந்த மல்யுத்தப் போட்டிகளைப் பற்றி உற்சாகமாகப் பேசிக் கொண்டே திரும்பிக் கொண்டிருந்தனர்... சிலர் அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் வேறு சிலர் மல்யுத்த வீரர்களின் சொந்தப் பழக்க வழக்கங்கள், உண்டி உணவு வகைகள், குடும்ப வாழ்க்கை, இவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்தனர்.

இரவு பத்து மணி வேளைக்குத் திரும்பும் ஜனங்கள் யாவரும் ரங்கன் குடியிருக்கும் தெரு வழியாகத்தான் போயாக வேண்டும்; அந்த ஜனங்களின் பசியை ஆற்ற அந்த வேளை திறந்து வைத்திருக்கும் மிலிட்டேரி ஹோட்டலும் தர்மலிங்கம் ஹோட்டல்தான். ஆகவே மல்யுத்தத்தைப் பற்றித் தெருவில் போகும் ஜனங்கள் பேசும் பேச்சை மட்டுமின்றி எதிர் ஹோட்டலிலிருந்து வரும் பேச்சையும் கட்டாயமாக ரங்கன் கேட்க வேண்டியிருந்தது. இவற்றைக் கேட்டுக் கேட்டு இவ்வளவு பேர் பார்க்கும் அந்த மல்யுத்தத்தில் என்னதான் அதிசய மிருக்கிறது என்று பார்த்துவிட வேண்டும் என்ற ஆவலும் ரங்கனுக்கு எழுந்தது. போதாததற்குத் தர்மலிங்கம் ஹோட்டலில் பல்வீர்சிங்கைப் பார்த்ததும் அவன் எப்படி மல்யுத்தம் செய்கிறான் என்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் வேறு எழுந்தது! ஆனால் அவன் பல்வீர்சிங் என்று எப்படி ரங்கன் தெரிந்து கொண்டான் தெரியுமா?

''என்ன மோகனா! உங்க ஹோட்டலில் ஆறு அடி உயரத்துக்குப் பெரிய மாமிச மலையாக ஒருத்தன் வந்திருக்கானே, அவன் யார்?'' என்று ஒரு நாள் கேட்டான்.

''அவருங்களா? உங்களுக்குத் தெரியாதா? அவர்தானுங்க பஞ்சாப் சிங்கம் பல்வீர் சிங். மல்யுத்தக்காரர்.''

''இவர்தானா அது! இவர்தான் நாளைக்கு ஐம்பது முட்டை, ஒரு ஆடு, இந்த கோழி


ஸிங்கர்
அறிமுகப்படுத்தும்
'மெர்ரிட்' வரிசையில் மிகப்புதிய தயாரிப்பு
மெர்ரிட்* ஃபான்கள்
மெர்ரிட்
48" சீலிங் எலெக்ட்ரிக் ஃபேன்
மெர்ரிட்
16" டேபிள் ஃபேன்
எல்லாவற்றையும் விட-ஒவ்வொரு மெர்ரிட்
மெஷினுடனும் ஆயுட்
காலம் முழுவதும் ஸிங்கரின் சேவையையும்
நீங்கள் வாங்குகிறீர்கள்
ஆடோமாடிக் நூல்நிட்டிங் மெஷின்கள்
மெர்ரிட் தையல் மெஷின்கள்
மெர்ரிட் மின்சார இஸ்திரிப் பெட்டிகள்
SS. G. 11. TAM

எல்லாம் ஒரேயடியாகச் சாப்பிடுவாருன்னு பேசிக்கிறாங்களே. அந்த ஆளு இவர்தானு?''

''அதெல்லாம் வெறும் கதைங்க. புரட்டுங்க. சாதாரணமாக எல்லாரும் சாப்பிடுகிறதுபோலத்தான் சாப்பிடுறாருங்க!''

''இல்லையாதானு......?'' என்றான் ரங்கன்.

''ஐயய்யோ! இதை வெளியே விட்டுடாதீங்க. எங்களை யெல்லாம் யாராகிலும் இப்படிச் சாப்பிடுறாரோன்னு கேட்டா, 'ஆமாம், வாஸ்தவந்தான்'னுசொல்லனும். உண்மையைச் சொல்லக் கூடாது. உங்களுக்குத்தான் உண்மையைச் சொன்னேன்..... வெளியே தெரிஞ்சுதோ, என்னைக் கொன்னுட்டான், அந்த மனுஷன்!'' என்றான் மோகனு.

''ஆமாம், மோகனு! மனுஷன் எப்படி? நல்ல குணந்தானு?''

''ஐயோ! எப்பப் பார்த்தாலும் 'உர் உர்' என்று கோபமாகக் கர்ஜித்துக் கொண்டேயிருக்கான். நேற்று வெந்நீர் வேணும்னு கேட்டான். கொண்டு வந்து கொடுத்தேன். சூட்டைக் கவனிக்காமல் வாயில் விட்டு நாக்கைச் சுட்டுக் கொண்டு விட்டான். உடனே வந்த கோபத்திலே 'படார் படார்' என்று என்னை அடிச்சுட்டான்.....''

''ஐயோ, அப்புறம்......?''

''அப்புறம் என்னங்க?''

''நீ தர்மலிங்கத்தினிடமோ, அம்மாவிடமோ சொல்ல வில்லையா?''

''ஆம்:.... இதை யெல்லாம் போய்ச் சொல்லிக்கிட்டிருப்பாங்களா?'' என்றான் மோகனு நாணிக்கொண்டே.

க் க் க்

ஒரு நாள் ரங்கனுக்கு ஒரு 'ஷாக்' அடித்தது. ஆம்! தினம் மோகனு வேலைக்கு வரும் வேளையில் அவன் தாயார்க்காரி முனியம்மா வந்தாள். அவள் உருவத்தைப் பார்த்தவுடனேயே நடுங்கிவிட்டான் ரங்கன்.

''நீ யாரம்மா?'' என்று பயந்து நடுங்கிக் கொண்டே கேட்டான் ரங்கன்.

''நான்தானுங்க முனியம்மா, மோகனுவுடைய தாயார்க்காரி!''

''ஓகோ! நீ இங்கே எங்கே வந்தே?''

''என்னங்க அப்படிக் கேட்டு விட்டீங்க? உங்களைப் பத்தி என் மகன் மோகனு எவ்வளவு தூரம் சொல்லி யிருக்கிறான். தங்கம்ன்னு தங்கம்தானும் நீங்க. தங்கமான மனசு. ரொம்ப நல்லவரு. அப்படி இப்படி என்று எவ்வளவு சொல்லி யிருக்கிறான். அப்படிப்பட்ட உங்களை நான் பார்க்க வேண்டாமா?'' என்றாள் முனியம்மா.

ரங்கனுக்குத் தர்ம சங்கடமாகப் போய் விட்டது. பெண்ணைக் கொடுக்க வருகிறவர் மாப்பிள்ளையைப் பார்க்க வருவது போல் அல்லவா, இவள் வந்திருக்கிறாள். 'ஒருகால் என் மனசு இவளுக்குத் தெரிந்துவிட்டதோ? இல்லை மோகனு, தான் ரங்கனைத் தவிர வேறு யாரையும் கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சொல்லி விட்டதன் காரணமாக இவள் தன்னைப் பார்க்க வந்திருக்கிறாளோ' என்று ஒரு கணம் யோசித்தான். ச, சீ! இது என்ன அசட்டுத்தனமான எண்ணம்: அவள் சமூக அந்தஸ்து என்ன, தன் சமூக அந்தஸ்தென்ன? மலைக்கும் மடுவுக்கும் அல்லவா இருக்கிறது? இருந்தாலும் தன் சபல சித்தம் எப்படி யெல்லாம் தன்னை நிலை தடுமாற வைக்கிறது என்று எண்ணினான்.

இந்த எண்ணங்களில் அதிக நேரம் செல வழிக்காமல் ''இன்னிக்கு மோகனு வரலியே யா வேலைக்கு. இன்னிக்கு எவ்வளவு வேலை யிருக்குது. அறையைப் பெருக்கனும். வாஷ் டிரீலே துணி போட்டுவிட்டு, சலவையான துணிகளை வாங்கி வரணும்......'' என்று அடுக்கிக் கொண்டே போனான்.

''இன்னிக்கு அந்தப் பஞ்சாபி பயில்வான் அவனை இழுத்துப் பிடிச்சிக்கினு ஏதோ வேலை வாங்கிக்கிட்டிருக்கான். 'நீதான் எதிர் வீட்டு ஐயா வீட்டுக்குப் போய் வா அம்மா' என்று என்னை அனுப்பிச்சா. எல்லாத்தையும் நான் ஒரு விநாடியிலே பண்ணிடறேன் தம்பி!'' என்றாள் முனியம்மா.

முனியம்மா 'தம்பி' என்றதும் அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆனால் முனியம்மா



1. ''ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணு என்றபடி ஒரே ஒரு நீதிபதியும், ஒரே ஒரு பிரதம நீதிபதியும், ஆகமொத்தம் இரண்டே இரண்டு நீதிபதிகளே இருந்த ஹைகோர்ட் எது?''

2. ''உத்தரப் பிரதேச சட்டசபை—ஹைகோர்ட் தகராறு சம்பந்தமான செய்தி ஒன்றில் மொத்தமுள்ள ... நீதிபதிகளுள் ... பேர் கூடி....'' என்றிருந்ததைப் படித்தபோது அங்கே அத்தனை நீதிபதிகள் இருக்கிறார்களா என்று ஆச்சரியப்பட்டோம். சரி. இந்திய ஹைகோர்ட்டுகளில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கைக் கணக்கைச் சொல்லுங்கள், பார்க்கலாம்! மிக அதிகமான நீதிபதிகள் எந்த ஹைகோர்ட்டில் உள்ளனர்?

விடைகள்: 1. அஸ்ஸாம் ஹைகோர்ட். அந்த நீதிஸ்தலத்தில் 1962ல் இரண்டு நீதிபதிகளே இருந்தார்கள். இப்பொழுது மூன்று பேர்கள் இருக்கிறார்கள்.

2. காஷ்மீர் 3; ஒரிஸ்ஸா 4; குஜராத் 9; ராஜஸ்தான் 10; மைசூர் 11; கேரளா 12; சென்னை 12; பீஹார் 15; ஆந்திரா 16; பஞ்சாப் 16; மகாராஷ்டிரா 17; மேற்கு வங்காளம் 25; உத்தரப் பிரதேசம் 33.

இவை, 1963ம் வருடம் மே மாதம் வரை உள்ள எண்ணிக்கை.

புத்தாண்டு திருப்பம்

காடு கமழ்ந்தது.
காடு கமழ்ந்தது.
காவியச் சீரோடு!—அது
நாடு மகிழ
நவயுகக் கன்னி
நடத்திடும் தேரோடு!

நடந்தின வேனில்
நடந்தின வேனில்
நயந்த துறவோடு!—அதைத்
தொடர்ந்துபுத் தாண்டில்
துறைதொறு மின்பம்
துய்ப்போம் நிறைவோடு!

—தமிழழகன்



நான் யாரையும் ஒரு கணத்துக்கு மேல் அந்நியராகப் பாவிப்பதில்லையே?

* * *

ஒரு நாள் மோகனு வேலைக்கு வந்தபோது அவள் முகம் சிவந்திருந்தது. அவள் நெடு நேரம் அழுதிருக்கிறாள் என்பது தெரிந்தது. அவள் முகத்தில் சோகம் தாண்டவமாடியது. ''என்ன மோகனு! என்ன ஒரு மாதிரியிருக் கிறாய்?'' என்று கேட்டான் ரங்கன்.

''ஒன்னுமில்லீங்க!'' என்று மூடி மறைக் கப் பார்த்தாள்.

''ஏன் மோகனு, என்கிட்டே மறைக்கிறே. என்னிடம் சொல்வதில் உனக்கென்ன? பஞ் சாமி பயில்வான் உன்னே அடித்தானு?'' என்று கேட்டான்.

''ஆமாங்க! நேற்றைக்கு அவன் ஆட்டத் திலே தோத்திட்டான். என்ன நீ தோத் திட்டேயென்னு கேட்டேன். உடனே மூக் குக்கு மேலே கோபம் வந்து அடி அடி என்று அடிச்சிட்டான்!''

''அவன் வெறும் முரடன். அவன்கிட்டே ஏன் போய் மாட்டிக்கிறே? வாய் கொடுக் கிறே? ஆனால் நீ அதுக்காக அழுததாகத் தோணல்லியே மோகனு!''

''நான் எதுக்காகவும் அழல்லேங்க; என்னே ஏன் அந்த ஆண்டவன் படைச்சான்னுதான் அழறேனுங்க!''

''இதென்ன மோகனு, பெரிய வேதாந்தி போல் பேசறே. எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே, நீ செய்யறது?'' என்றான் ரங்கன்.

''நான் என்னங்க செய்தேன்?''

''பின்னே என்ன? உன் மனசை வருத்து றது என்ன வென்று என்கிட்டேயே சொல்ல மாட்டேங்கிறே!''

''உங்ககிட்டே எதுக்குங்க சொல்றது?''

''என் மேல் பிரியமிருந்தால் நீ இப்படியெல் லாம் பேச மாட்டே, மோகனு!''

மோகனுவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ''இதென்னங்க பெரிய வார்த்தையாகத் தூக் கிப் போடறீங்க. 'பிரியம் அன்பு' எல்லாம் நமக்குள்ளே ஓரளவுதானுங்க. நீங்க பெரிய வங்க. பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளே. நான் யாருங்க, குப்பையிலே கிடக்கிறவ தானே'' என்றாள் மோகனு.

உடனே தான் பார்த்த சினிமாக் காட்சி களில் வரும் காதல் சம்பாஷணைகள், தான் படித்த நாவல்களில் வரும் காதல் சம்பா ஷணைகள் யாவும் ஒன்றன்பின் ஒன்றாக அவன் நினைவில் பீறிட்டுக் கொண்டு வந்தன.

''மோகனு! என்னைப் பார்த்தால் இப்படி யெல்லாம் பேசவா தோன்றுகிறது? நான் பணக்காரன், நீ குப்பையில் கிடப்பவள் என்ற ஏற்றத் தாழ்வு காட்டி இந்த ஒரு வருஷத்தில் ஒரு நாளாகிலும் நடந்து கொண்டதுண்டா? உன் உளமறியச் சொல். அன்பும் காதலும், பணம், சாதி, சமயம் எல்லாம் கடந்து நிற்கும் தன்மை கொண்டது. நீ என்னைப்பற்றி என்ன நினைக்கிறயோ, எனக்குத் தெரியாது. எனக்குத் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பு வரும்போது, 'என் மோகனுவைத் தான் வாழ்க்கைத்துணைவியாக ஏற்பேன்!' என்று சொல்லி விடுவேன். நான் உன்னை எப்படி நினைக்கிறேன் என்பதை வார்த்தை களால் எனக்குச் சொல்ல வரவில்லை. உன் சோர்ந்த முகத்தைப் பார்த்தாலே போதும். என் நெஞ்சம் துடிக்கிறது மோகனு!'' என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினான்.

மோகனு சிலையாகி நின்றாள். அவனுக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை.


''என்னங்க! நீங்க பேசறது கொஞ்சங்கூட நல்லா இல்லேங்க. சிரிப்பாட்டு வராதுங்க! நான் ஏதோ ஒரு வேதனையோடு வந்தால் நீங்க எனக்குப் புது வேதனையைக் கொடுத்திட் டீங்களே!'' என்றாள் மோகனு.

''என்ன மோகனு, நான் வேதனையைக் கொடுத்ததாகவா சொல்கிறாய்? என் உள் ளத்தைத் திறந்து என் அன்பைக் காட்டிய தற்கு இப்படியா நீ பதில் சொல்வது? என் அன்புக்குப் பதில் அன்பை எதிர்பார்க்கும் என்னைப் பார்த்து வேதனையளித்ததாகக் கூறு கிறயே. ஈட்டி கொண்டு குத்துவதுபோல் பேசுகிறயே!'' என்றான் ரங்கன்.

''இதெல்லாம் என்னங்க, பொருந்தாத அன்பு. உங்க அப்பா அம்மா என்ன நினைப் பாங்க. சே.....சே...! என் அம்மாக்காரி தான், பணத்தை வாங்கிக்கிட்டுப் பாழுங் கிணத்திலே என்னைத் தள்ளப் பார்க்கிறள்

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி





பாமாலிவ் பெர்ஃப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

[illegible]



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

[illegible]

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பிபெறுப்பது பாமாலிவ்

[illegible]

என்றால் ஏதேதோ பேசி நீங்களும் பாழும் கிணற்றிலே விழப் பார்க்கிறீங்களே!''

''மோகனா, நீ எனக்குப் பாழுங் கிணறா?''

''உங்களுக்கு மட்டுமல்ல, உங்க பெற்றோர்களுக்கும் குடும்ப கௌரவத்துக்கும் எல்லாவற்றுக்குமே பாழுங் கிணறுதான்......!''

''உன்னோடு என்னால் பேசி முடியாது. காதலின் உயர்வை நீ கண்டதில்லை. காதலுக்காக அரச போகத்தைத் துறந்தவர்களையும் சாதி சமயத்தை விட்டவர்களையும் பற்றி நீ கேள்விப்பட்டதில்லை போலிருக்கிறது....''

''அவங்க எல்லாம் வெறும் பைத்தியங்கள். வடிகட்டின மடையர்கள்.''

''சே, சே! என்ன வார்த்தை பேசுகிறாய். இதைப் பற்றி உன்னிடம் பேசிப் பயனில்லை. ஆமாம், உன் தாயார் உன்னை ஏதோ பாழும் கிணற்றில் தள்ளப் பார்க்கிறாள் என்றாயே, அது என்ன ?'' என்றான் ரங்கன்.

''அதுவா? அதைத்தான் சொல்ல வந்தேன். நான் முன்னே ஒரு நாள் ஒருத்தர் வீட்டிலே கட்டுக்கட்டாக நோட்டு எண்ணிக்கிட்டிருந்தார் என்று சொன்னேன் இல்லே. அவருகூடப் பத்து ரூபாய் கொடுத்தார்னு சொன்னேன் இல்லே? ஞாபகமிருக்குங்களா''

''ஆமாம். ஆமாம். அந்தப் பத்து ரூபாயை என்கிட்டேதானே கொடுத்து வைச்சே. அதை அப்படியே இன்னும் வைச்சிருக்கேன்......''

''இருக்கட்டுங்க..... இப்ப அந்த ஆளு எங்க அம்மாவுக்கு ஆயிரம் ரூபாயும், தர்மலிங்கத்துக்கு ஆயிரம் ரூபாயும் கொடுத்திடுறாராம். அப்பாலே ஒரு கோயிலிலே போய் என் கழுத்திலே மஞ்சள் கயிறு கட்டி விடுவாராம். நான் அவரோடு போய்விட வேண்டியதுதானாம். எப்படி யிருக்குங்க யோசனை!''

''உன்னை இரண்டாயிரம் ரூபாய்க்கு அந்த மனுசன் வாங்கி விடப் பார்க்கிறாரா?'' என்றான் ரங்கன். இப்படிச் சொல்லி வந்த அவன் சிந்தனை வேகமாக வேலை செய்யத் தொடங்கியது. தன்னிடம் உள்ள நோட்டு கள்ள நோட்டாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டது நினைவுக்கு வந்தது. செல்லாத நோட்டுகளின் எண் வரிசை பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. ஒவ்வொரு பாங்கியின் முகப்பிலும் ஒட்டியிருந்தது. மோகனா கொடுத்த நோட்டு செல்லாத நோட்டா என்பதை பாங்கிக்குச் சென்று ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று மனத்தில் உறுதி செய்து கொண்டான்.

''அவர் வாங்கறது இருக்கட்டும். என் அம்மாவும் முதலாளியும் என்னை விற்கப் பார்க்கிறாங்களே, அந்தக் கொடுமையைச் சொல்லுங்கள்'' என்றாள் மோகனா.

''மோகனா, இரண்டு நாள் முன்னாலே உன் அம்மாக்காரி வேலைக்கு வந்தாள். என்னை ரொம்பப் புகழ்ந்து பேசிவிட்டுப் போனாள்...'' என்றான் ரங்கன்.

''உங்களை என்னிடம் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்கச் சொல்லுவதற்குத்தான் அவள் வந்திருக்கிறாள்.''

''ஆனால் அவள் இதைப் பற்றிச் சொல்லவில்லையே?'' என்றான் ரங்கன்.

''முதல் தடவையே சொல்வாளா? நாளை மறுநாள் வந்து மெல்ல வாயைத் திறப்பாள்'' என்றாள் மோகனா!

இப்படியும் ஓர் உலகம் உண்டா என்ற அதிசயத்தில் மூழ்கினான் ரங்கன்.

ஃ ஃ ஃ


ரங்கன் ஒரு நாள் மல்யுத்தம் பார்க்கப் போயிருந்தான். உடலை வளர்த்த வீரர்களைப் பார்த்தபோது ரங்கனுக்குத் தன் பூஞ்சையான உடம்பைக் காண அவமானமாக இருந்தது.

பலராமனும், பீமனும், துரியோதனனும் ஜராசந்தனும் இப்படித்தான் இருந்திருப்பார்கள் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான். ஒவ்வொருவர் புஜங்களும் பெரும் பாறைகள்போல் கட்டுக் கட்டாக இருப்பதைக் கண்டு வியந்தான்.

மல்யுத்தம் தொடங்கியது. ஜனங்களின் உற்சாக ஆரவாரத்தில் ரங்கனும் கரைந்து போனான்.

கடைசியாகப் பஞ்சாப் சிங்கம் பல்வீர் சிங் தோன்றினான். 'ஆள் ஜோராக இருக்கிறான்' என்று நினைத்துக் கொண்டான். இவ்வளவு பலசாலியானவன் அந்தப் பேதை மோகனாவை அடித்தால் அவள் எப்படித் தாங்குவாள், பாவம்! என்று மோகனாவிடம் பரிவும் பல்வீர் சிங்கிடம் கோபமும் கொண்டான். மற்போர் தொடங்கியது. பல்வீர் சிங்கின் போர் முறை கண்ணுக்கு விருந்தாக இருந்தது. இவ்வளவு நன்றாகச் சண்டை போடுபவன் தோற்கவே முடியாது என்று ஜனங்கள் எதிர்பார்த்த போது அவன் தோற்றுப் போனான். ஜனங்களுக்கு அவனிடம் ஒரே அனுதாபம்.

''மோகனா, நேற்று நான்கூட மல்யுத்தத்துக்குப் போயிருந்தேன். பல்வீர்சிங் தன்



ழுகத்தான் போரிட்டார். கடையில் துரதிர்ஷ்டவசமாகத் தோற்றுப் போனார். பாவம்!'' என்றான் ரங்கன்.

''பாவம், என்னுங்க! அவர் தோற்றுப் போகிற அன்னிக்கு, ஜெயிக்கிற நாளைவிட அதிக பணம் கெடைக்குங்க!'' என்றாள்.

''என்ன? என்ன?'' என்றான் ரங்கன்.

''அதெல்லாம் மல்யுத்த ரகசியம்.''

''மோகனு! உனக்கு எவ்வளவோ விஷயங்கள் தெரிந்திருக்கு. இதைப் பார்க்கும்போது உன்னைக் கட்டிக்கிறவன் பாக்கியசாலியாகத்தான் இருக்கணும்!''

''என்னைத்தான் எங்கம்மா கோயமுத்தூர்க்காரருக்கு விற்றுவிடத் தீர்மானிச்சுட்டாங்களே. பணம்கூட வாங்கிட்டாளே!''

''என்ன அநியாயம்!''

''ஆமாம். இந்த மல்யுத்தம் இன்னும் இரண்டு நாட்கள் இந்த ஊரிலிருக்கும். அது வரைக்கும் பல்வீர்சிங்கும் இந்த ஹோட்டலில் இருப்பார். அவர் இருக்கிற வரைக்கும் அவருக்கு வேலை செஞ்சிட்டு அப்புறமா கோயமுத்தூர்காரரோடே போயிடணும் என்று திட்டம் போட்டு வைச்சிருக்காளே!''

''அந்தப் பஞ்சாப்காரனண்டை உதைகுத்து வாங்க உன்னைத் தவிர வேறு ஆள் இல்லையாமா?'' என்றான் ரங்கன்.

''அவர் அடிச்சாலும் பரவாயில்லீங்க. இந்தக் கோயமுத்தூர்க்காரரோடே ......'' என்று கண்களில் நீர் மல்க நின்றாள் மோகனு.

''இப்போதுகூட நேரம் கடக்க வில்லை, மோகனு!'' என்றான் ரங்கன்.

அந்தச் சமயம், 'போஸ்ட்' என்ற குரல் கேட்டது. உறையைப் பார்த்தான். தந்தையிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்று தெரிந்து கொண்டு அப்படியே மேஜை மீது வைத்தான்.

''இப்போதே உங்களோடே ஓடிவிடச் சொல்கிறீர்களா, அந்தப் பாவத்தை மட்டும் ஒரு நாளும் செய்ய மாட்டேன்!'' என்றாள் மோகனு.

* * *

மறு நாள் காலை ரங்கன் பாங்கிக்குப் போனான். தன் கையிலிருந்த நோட்டை அங்கு குறிப்பிட்டிருந்த எண்களோடு ஒப்பிட்டுப் பார்த்தான். தன் கையிலிருப்பது—அன்று மோகனு பத்திரமாக வைத்திரு என்று கொடுத்தது கள்ள நோட்டு என்று தெளிவாகத் தெரிந்தது.

அப்படியானால் தர்மலிங்கமும் முனியம்மாளும் கள்ள நோட்டை வாங்கிக் கொண்டல்லவா மோகனுவை விற்கப் போகிறார்கள்? இதை மோகனுவிடம் சொல்லிவிட வேண்டும், எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று ரங்கன் விரைந்தான்.

ஆனால் ஹோட்டலுக்கு வந்தால் ஒரே அமளி துமளிப் பட்டுக் கொண்டிருந்தது. தர்மலிங்கத்திடமும், முனியம்மாளிடமும் அந்தக் கோயமுத்தூர்க்காரர், தான் ஊரை விட்டுப் போன பிறகே அந்த நோட்டுக்களை மாற்ற வேண்டும், வெளியில் எடுக்க வேண்டும் என்று எவ்வளவோ எச்சரிக்கை செய்திருந்தான். ஆனால் முனியம்மா, 'என்னிடம் வந்த பணத்தை நான் எப்பொழுது வேணுமானாலும் செலவு செய்வேன்' என்று கூறி ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு கடை வீதிக்கு ஏதோ சாமான் வாங்கப் போனாள். கடைக்காரர் நோட்டைப் பார்த்தவுடன் சந்தேகப்பட்டு முனியம்மாவுக்குத் தெரியாமல் போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டார்.

போலீஸ்காரர் திடீரென்று தோன்றி ஏது பணம் என்று விரட்டவே, முனியம்மா ''எனக்கு அந்தக் கோயமுத்தூர்க்காரர் தான் கொடுத்தார்'' என்று விவரத்தைச் சற்றும் கூசாமல் சொல்லி விட்டாள். உடனேபோலீஸ்காரர்கள் ஹோட்டலுக்கு விஜயம்செய்துதர்மலிங்கத்தையும் கோயமுத்தூர்க்காரரையும் கைது செய்து கொண்டு போய் விட்டார்கள். ஹோட்டலில் வேலைக்காரர்களும், ஊர் ஜனங்களும் தவிர வேறு யாருமில்லை. ஜேஜே என்று ஹோட்டலின்முன் கூட்டம் கூடியிருந்தது.

இந்தக் கட்டத்தில்தான் ரங்கன் அங்கு வந்து சேர்ந்தான். மெள்ள விசாரித்ததில் இவன் வருவதற்கு முன்பே போலீஸாருக்குத் தகவல் எட்டி முனியம்மாவும், தர்மலிங்கமும் கைது செய்யப்பட்டு விட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

''மோகனுவைக் கோயமுத்தூர்க்காரன் தூக்கிக் கொண்டு போய் விட்டானோ?'' என்று கவலையோடு கேட்டான் ரங்கன்.

கூட்டத்தில் யாரோ ஒருவர், ''அந்தக் கோயமுத்தூர்க்காரரையுந்தான் போலீஸ்காரர்கள் பிடித்து விட்டார்களே!'' என்றான்.

''பின் மோகனு எங்கே?''

''மோகனு, பஞ்சாப் பயில்வான் பல்வீர்சிங்குடன் ஓடி விட்டாள்!'' என்றான் ஹோட்டல் சிப்பந்தி ஒருவன்.

''என்ன? அவளை அடித்து இம்சை செய்து கொண்டிருந்தானே, அவனுடனா?'' என்று வியப்புடன் கேட்டான் ரங்கன்.

''காதல் என்பது பலவிதம்!'' என்று ஒரு சினிமா இசைத் தட்டின் ஒலி எங்கிருந்தோ வந்தது.

* * *

''**இ**ந்தப் பின்னையாண்டானுக்குக் கடிதம் போய் ஒரு வாரமாகிறது. இன்னும் பதிலே போட வில்லையே! தபால் வர நேரமாச்சு. இன்றைக்காவது பதில் வருகிறதோ என்று பார்க்க வேண்டும்!'' என்று கூறிக் கொண்டிருந்தாள் மங்களத்தாச்சி.

''ஐயா, போஸ்ட்!'' என்று தபால்காரனின் குரல் கேட்டது.

சிவசங்கரன் பின்னே விரைந்தார். கடிதத்தைப் பிரித்தார்.

''மகா...ா...ஸ்ரீ அப்பா அவர்களுக்கு.

வணக்கம். உங்கள் விருப்பத்துக்கு மாறாக இது வரை நான் நடந்து கொண்டது இல்லை. நான் அபிராமியைக் கலியாணம் செய்துகொள்வது உங்களுடைய விருப்பம், அம்மாவினுடைய விருப்பம் என்றால் அப்படியே ஏற்பாடு செய்யுங்கள். நமஸ்காரம்.

ரங்கன்.''

குண்டு மல்லிகை

அரு ராமநாதன்

நேரில் சொல்லத் தயங்கி உள்ளத்துள்ளேயே குமுறிக்கொண்டிருந்த தன் ஆசைகளையெல்லாம் உமாவுக்கு எழுதிய கடிதத்தில் கொட்டித் தீர்த்திருந்தான் பிச்சுமணி. அவன் எங்கோ இருந்தான்; இவள் இங்கே நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்தாள். எனினும் பிச்சுமணி தான் சென்ற இடங்களிலெல்லாம் உமாவும் தன் பின்னோடு வந்திருப்பதாகவே மனப்பூர்வமாகப் பாவித்துக் கொண்டான். தான் பார்த்த ஒவ்வொரு காட்சியையும் அவளுடன் சேர்ந்தே அவன் அனுபவித்துக் கொண்டிருந்தான். பிச்சுமணியின் இந்த விசித்திரமான மனநிலை உமாவுக்கு மிகுந்த வியப்பையும் மன நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது. அவள் அடுத்த பக்கத்தைப் புரட்டிப் படிக்கலானாள் :

விநாயகம் பிள்ளை உறவினர் ஒருவரின் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தது. அந்தக் கலியாணத்துக்கு நாங்களும் போயிருந்தோம். மண மேடையில் புது மணத் தம்பதிகள் இருவரும் புத்தாடைகள் புனைந்து பொன் நகைகளும் புன்னகைகளும் புத்தொளி வீசிப் படரக் குதூகலமாக உட்கார்ந்திருந்தார்கள். அந்தக் காட்சி இப்போதும் என் நினைவில் அப்படியே பசுமையாக வருகிறது. சாந்தம் தவழும் முகத்தோடும், புதுமை காணப் போகும் வேட்கையோடும் மணப்பெண் நாணத்துடன் தலை குனிந்தபடியே அமர்ந்திருந்தாலும், தன் அருகில் உள்ள மாப்பிள்ளையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அடித்துக் கொள்கிறது. எறிட்டுப் பார்க்கவோ வெட்கம் தடுக்கிறது. ஆனால் மாப்பிள்ளையோ கடைக்கண்ணால் அடிக்கடி தன் துணைவியை வெகு தாராளமாகப் பார்த்துக் கொண்டே யிருக்கிறார். அதை உள்ளூற உணர்ந்து மணப் பெண்ணின் முகம் புன்முறுவலால் பொன்னென மின்னுகிறது. அதே நிலையில் அந்த மணக்கோலத்தில் உங்களைப் பார்த்தால் எப்படியிருக்கும் என்று நினைத்தேன்: உடனே அந்த மணப் பெண் மறைந்துபோய் அந்த இடத்தில் நீங்களே மணப் பெண்ணாகத் தோற்ற மளித்தீர்கள்! என் மனக் கண்களில் உங்களுடைய அந்த மணக் கோலம் அப்படியே பதிந்திருக்கிறது. நீங்கள் புது மணப் பெண்ணைப் போல, ஜரிகைப் புடவையும், பட்டு ரவிக்கையும் அணிந்திருக்கிறீர்கள். உங்கள் நெற்றியிலும் தலையிலும் வைரங்கள் மின்னும் சூரியப் பிறை, சந்திரப் பிறை! உங்களுடைய நீளமான தலைப் பின்னலில் நவரத்தின சடை நாகம். அதன் நெடுகிலும் ரத்தினங்களின் ஒளியோடு கலந்து மருவும் கூந்தலின் நறுமணம் என்னுடைய நெஞ்சை அள்ளுகிறது. இடையில் தங்க ஒட்டியாணம் தவழுகிறது. உங்கள் கை நிறைய வைர வளையல்கள் குலுங்குகின்றன. உங்கள் சிவந்த பாதங்களைக் கால் கொலுசுகள் தொட்டுக் கொஞ்சி விளையாடுகின்றன. என் பாட்டியின் உயிரோவியத்தில் உள்ள நகைகள் அத்தனையையும் நீங்கள் எடுத்து உங்கள் உடம்பு முழுதும் அணிந்திருக்கிறீர்கள். ஆனால் அத்தனை நகைகளின் ஜொலிப்புகளுக்கு இடையிலும் உங்களுக்கே இயற்கையான உடல்



நிறத்தின் ஒளியும், உங்கள் முகத்துக்கே உரிய அன்பின் ஒளியுந்தான் அதி பிரகாசமாக என் கண்களுக்குத் தெரிகின்றன.

உங்களுடைய இந்த மணக்கோலம் என்னுடைய மனக் கண்களில் நன்றாகப் பதிந்து விட்ட பிறகு அங்கு நடந்த திருமணத்தின் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் நீங்களே மணப் பெண்ணாகத் தோன்ற ஆரம்பித்து விட்டீர்கள்.

திருமணத்தின் சடங்குகளாக நலங்கு பாடுவது. தம்பதிகள் இருவரும் ஜோடியாக ஊஞ்சலில் அமர்ந்திருப்பது. திருமஞ்சன நீராடுவது. தனியறையில் மாப்பிள்ளைக்குப் பெண் புத்தமுது பரிமாறுவது போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தன. நீங்கள் மணப் பெண்ணாக இருந்தால் அந்நிகழ்ச்சிகளிலெல்லாம் எப்படி நடந்து கொள்வீர்கள்........? பெண்கள் நலங்கு பாட, ஊஞ்சலில் நீங்கள் என்னருகில் எப்படி நாணிக் கோணிக் கொண்டு அமர்ந்திருப்பீர்கள்? தனியறையில் நீங்கள் எந்தக் கோணத்தில் நின்று கொண்டு எனக்குப் புத்தமுது பரிமாறுவீர்கள்...? அதை நினைக்க நினைக்க மேலும் நினைக்க



முடியாமல் என் உணர்வெல்லாம் குதூகலம் பொங்கித் தத்தளிக்கிறது.

தம்பதிகள் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் பூப்பந்து வீசுவது, பல்லாங்குழி விளையாடுவது, தேங்காய் உருட்டிப் பிடிப்பது, 'டக்—அப்—வார்' போல் ஒரு பந்தைத் தன் பலம் முழுவதையும் காட்டித் தன் கைகளால் தன் பக்கம் இழுக்க முயல்வது, குடத்துத் தண்ணீருக்குள் போடப்படும் சின்னக் குழந்தைப் பொம்மையை யார் முதலில் எடுப்பது போன்ற போட்டி விளையாட்டுக்களும் அங்கு நிறைய நடந்தன. மாப்பிள்ளை ஜெயித்தால் மாப்பிள்ளையின் தோழர்கள் 'உய்' என்று கைகொட்டிச் சிரித்துப் பெண் கட்சியினரைக் கிண்டல் செய்வார்கள். பெண் ஜயித்தால் பெண்ணின் தோழிகள் இன்னும் அதிகமாகக் கரகோஷம் செய்து சிரிப்பார்கள். வயதான பெரியவர்கள்கூடக் கட்சி கட்டிக் கொண்டு, ''விடாதே, பொண்ணு!'' என்றோ, 'விட்டுக் கொடுக்காதேடா மாப்பிள்ளை' என்றோ உற்சாகப் படுத்துவார்கள். வயதான அத்தை பாட்டிகள்கூட அக்காட்சிகளைப் பார்த்து வெகு ரசமாக அனுபவிப்பார்கள்.

உமா, நீங்கள் மணப் பெண்ணாக இருந்தால் அத்தகைய போட்டி விளையாட்டுக்களிலெல்லாம் நீங்கள்தான் ஜெயிப்பீர்கள். நான் தோற்றுப் போய் விடுவேன். உடனே உங்கள் தங்கை வசந்தியும், உங்கள் டியூஷன் குழந்தைகளும் கைகொட்டிச் சிரித்து என்னைக் கேலி செய்வார்கள். என் உறவினர்கள் எனக்காகப் பரிதாபப்படுவார்கள். என் தாத்தா என்னை,— 'மடையா!' என்பார். எங்கள் பட்லர் இருதயசாமிகூட, ''என்ன தம்பி, ஜெயிக்காமல் விட்டுட்டியே!'' என்பான். இதை யெல்லாம் பார்த்ததும் நீங்கள் அடுத்த போட்டியில் நானே ஜெயிக்குமாறு எனக்காக விட்டுக் கொடுத்து விடுவீர்கள்! உமா, இப்படி யெல்லாம் நான் எழுதுகிறேனே என்று கோபித்துக் கொள்ளாதீர்கள். என் மனத்தில் தோன்றிய எண்ணங்களை யெல்லாம், அந்தக் கற்பனையின் ஆனந்தங்களை யெல்லாம், சிறு சிறு அனுபவங்களை யெல்லாம் யாரிடமாவது சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. அவற்றை யெல்லாம் சொல்லுவதற்கு உங்களைத் தவிர எனக்கு இந்த உலகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்? மனம் விட்டுப் பேசக் கூடிய ஒரு நண்பன்கூட எனக்கு இல்லையே.....?

மேலே கொஞ்சம் பொறுமையாகப் படியுங்கள்.

மறு நாள் நானும் தாத்தாவும் திருச்செந்தூருக்குக் காரில் யாத்திரை சென்றோம். அதே காரில் என் தாத்தாவின் சிநேகிதரும், சிநேகிதரின் பெண் ஒருத்தியும் வந்தார்கள். அந்தப் பெண்ணின் பெயர் லலிதாவாம்! கல்லூரியில் பி.ஏ. படிக்கிறாளாம்! பார்வைக்கு உங்கள் தங்கை வசந்தி போலவே யிருந்தாள். ஆனால் காரில் பொழுது போவதற்காக அவள் அழகாகக் கீர்த்தனைகள் பாடிக் கொண்டு வரும் போது நீங்களே பாடுவது போல் இருந்தது. திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குள் நுழைவதற்கு முன்னால் ஒரு பிள்ளையார்கோவில் இருக்கிறது. என் தாத்தா ஒரு தேங்காயை வாங்கி அந்தப் பிள்ளையாருக்குச் சிதறு காயாக உடைத்தார். நான் இரண்டு காய்கள் வாங்கி உடைத்தேன்: ஒரு காய் எனக்காக! இன்னொரு காய் உங்களுக்காக!

அந்த நோக்கம் என் தாத்தாவுக்குப் புரியாதாகையால் 'நீ மட்டும் என்னடா ரெண்டு காய் வாங்கி உடைக்கிறே! என்னைவிட நீ பெரிய மனுஷனாகி விட்டாயோ?' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டார். உண்மையில் அவரைவிட நான் பெரிய மனுஷனாகிவிட வேண்டுமென்பதுதான் அவருடைய எண்ணம்!

பிறகு நாங்கள் கடற்கரையில் அமைந்திருக்கும் முருகப் பெருமானின் கோவிலுக்குள் நுழைந்தோம். அதைச் சுற்றியுள்ள இடங்களை யெல்லாம் — பார்வையிட்டோம். அப்பப்பா! அது அநாதியான ஒரு தனி உலகம் போலவே அமைந்திருக்கிறது. ஒருவித அருள் ஒளியையும் ஆனந்த அமைதியையும் நமக்கு ஊட்டி நம்மை மெய்மறக்கச் செய்து விடுகிறது. அங்கு வள்ளிநாச்சியார் யானைக்குப் பயந்து ஒளிந்த குகையென்று ஓர் இடம் இருக்கிறது. அதை லலிதாதான் எங்களை அழைத்துப் போய்க் காட்டினாள். அந்தப் பாறைக் குகைக்குள் நீங்கள் கண்ணாம்பூச்சி விளையாடுவது போல் எங்காவது ஒளிந்து கொண்டிருக்க மாட்டீர்களா என்று ஏனோ எனக்குத் தோன்றியது.

முருகன் சந்நிதிக்குச் செல்வதற்கு முன்னால் யாத்திரிகர்கள் அங்குள்ள நாழிக் கிணற்றில் குளித்து விட்டுப் பிறகு கடலிலும் நீராடுவது வழக்கமாம். 'உடம்பில் வெறுமனே தண்ணீரை எடுத்துத் தெளித்துக் கொண்டால் போதும், அந்தி இருட்டில் குளிப்

பதோ கடலில் நீராடுவதோ நல்லதல்ல' என்று என் தாத்தா என்னைத் தடுக்க முயன்றார். ஆனால் நான் கேட்கவில்லை. எனக்கோ ஒரே உற்சாகம்! நான் நாழிக் கிணறை நோக்கி விரைந்தோடினேன். நாழிக் கிணறு என்பது ஒரு கைச் சாண் அளவு வட்டமுள்ள ஒரு சிறு குழி போலவே இருக்கிறது. அதில் ஒரு சிறு செம்புதான் நுழைய முடியும். ஆனால் எத்தனையோ பக்தர்கள் எத்தனையோ செம்பு தண்ணீரை எத்தனையோ காலமாக அதிலிருந்து எடுத்துக் குளித்து வந்தும் எடுக்க எடுக்கக் குறையாமல் இன்னும் ஜலம் அதில் நிறைந்து கொண்டே யிருக்கிறதாம்! உமா, அந்த நாழிக் கிணற்றை நீங்கள் பார்த்தால் மிகவும் அதிசயப்படுவீர்கள்! பிறகு கோவிலைப் பார்த்துக் கொண்டே அந்தி இருளில் அமைதியின் அலைகளை வீசும் ஆழ்கடலிலே நீங்கள் நீராடினால் மிகவும் ஆனந்தப்படுவீர்கள். பிறகு இரவு எட்டு மணிக்கு முருகன் சந்நிதியிலே சந்தனக் காப்புடன் விளங்கும் முருகனுக்குத் தீபாராதனை ஆகும் காட்சியை நீங்கள் தரிசித்தால், மெய்ம்மறந்து விடுவீர்கள். ஏனெனில், அங்கு கரையாத மனமும் கரைந்து விடும். நிறையாத மனமும் நிறைந்து விடும். உணர்வெல்லாம் ஆனந்தத்தால் சிலிர்த்து, அன்பு மயமான உள்ளங்களெல்லாம் அருள் வழியிலேயே ஒருமித்து விடும்.

உமா, உங்களைப் பற்றிய அந்த நினைவோடு நான் திருச்செந்தூரை விட்டுக் கிளம்பி இன்று இரவுதான் இங்கே கன்னியாகுமரி வந்து சேர்ந்திருக்கிறேன். வந்ததும் தாத்தா 'ரெஸ்ட்' எடுக்க வேண்டும் என்று சொல்லி விட்டார். அதனால் நானேதான் கன்னியாகுமரியைச் சுற்றிப் பார்க்க வேண்டும்.

இங்கு நான் வந்ததுமே எனக்கு ஒரு வித மன அமைதியும் அதே சமயம் ஒரு வித ஆனந்த ஆவேசத்தின் துள்ளலும் ஏற்படுகின்றன. முரண்பாடான அவ்விரண்டு உணர்வுகளையும் இந்தக் கன்னியாகுமரி ஒன்றில்தான் அடைய முடியுமாம். இந்த ஹோட்டலிலுள்ள ஒருவர் சொன்னார்.

என் தாத்தா தூங்கிய பிறகு நான் ரகசியமாக வேறொரு அறைக்குச் சென்று அமர்ந்து இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

ஆனால் இதை யெல்லாம் உங்களுக்கு ஏன் எழுதுகிறேன் தெரியுமா?

உங்களை நான் பிரிந்து வெளியூருக்குச் சிறிது காலம் யாத்திரை போனால் உங்களைச் சுலபமாக மறந்து விடுவேன்



திரைத் துணுக்குகள்

இது சரடு: எம். ஜி. ஆர். வீட்டில் நேற்று இரவு ஒரு கள்ளன் புகுந்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டினான். அவரை ஓர் அறையில் தள்ளிப் பூட்டி விட்டு வீட்டிலிருந்த நகைகள் பணம் எல்லாவற்றையும் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்டான். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளி வந்தும் கூட ரசிகப் பெரு மக்களிடமிருந்து ஓர் அனுதாபச் செய்தி கூட வரவில்லை! ''மீசையை முறுக்குகிறார் மாதவி!'', ''எம். ஜி. ஆர். தாக்கப்பட்டார்!'', ''அசோகன் கடப்பட்டார்!'' என்றெல்லாம் பத்திரிகைகளில் தலைப்புக்களைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டிருக்கும் ரசிகர்கள், 'ஓ! எம்.ஜி.ஆர். நடிக்கிற படத்தில் இப்படியும் ஒரு காட்சி வருகிறது போலும்!' என்று எண்ணி அமைதியாக இருந்து விட்டனர். 'புலி வருகிறது' கதைதான் நடந்தது!

இது உண்மை: இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ஜெனரல் மாண்ட் கோமரியைப் போலவே உருவ ஒற்றுமை கொண்டிருந்த கிளிப்டன் ஜேம்ஸ் என்பவரைத் தேடிக் கண்டு பிடித்தது பிரிட்டிஷ் அரசாங்கம். அபாயமான சந்தர்ப்பங்களில் எல்லாம் ஜெர்மானியர்களின் கவனத்தை நிஜ மாண்ட்கோமரியின் செயல்களிலிருந்து திருப்புவதற்கு இந்தப் போலி ஜெனரலைப் பயன்படுத்தினார்கள் பிரிட்டிஷார். கிளிப்டன் ஜேம்ஸின் கதை 'ஐ வாஸ் மாண்டிஸ் டபிள்' (நான் மாண்டியின் இரட்டையன்) என்ற பெயரில் திரைப் படமாக வெளிவந்தது. கிளிப்டன் ஜேம்ஸே அதில் நடித்திருந்தார்.

ஒரு நாள் அந்தப் படத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்த ஒருவரைச் சுட்டிக் காட்டி, 'அதோ கிளிப்டன் ஜேம்ஸ் போகிறார்!' என்றார்கள், அடுத்த காட்சிக்குக் 'க்யூ'வில் நின்றவர்கள். ஆனால் வாசலில் நின்ற காரில் ஏறிக் கொண்டு சென்றது நிஜமான தளபதி மாண்ட்கோமரியேதான்!

ஃ ஃ ஃ

உங்களுக்குத் தெரியுமா?

○ பிரிட்டிஷ் ஆட்சியின் கீழுள்ள மத்திய, கிழக்கு ஆப்பிரிக்க நாடுகள், ஸூடான், ஏடன், பஹ்ரெயின், பர்மா, கம்போடியா, இலங்கை, இந்தோனேசியா, டெஹ்ரான், சிங்கப்பூர், மலேயா, போர்னியோ, தாய்லாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்தியத் திரைப் படங்கள் காண்பிக்கப்பட்டு நமக்கு அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தருகின்றன.

○ ராஜ்கபூர் ஹொப்பர் பாபாகவும், பிமல்ராய் காமிராமானாகவும்தான் திரை உலகில் தொழிலை ஆரம்பித்தார்கள்.



"நீங்க கொடுக்க வேண்டிய பணத்தைக் கேட்க உங்க வீட்டுக்கு நடந்து நடந்து என் கால் வலி எடுத்துவிட்டது. என் செருப்பு தேய்ந்து போய் விட்டது..."

"ஐயோ பாவம், உங்க வீட்டுக்குப் பக்கத்திலே ஏதேனும் வாடகைக்கு ஒரு வீடு பிடிக்கக் கொடுங்களேன். வந்து விடறேன்."



என்று நீங்கள் நினைத்திருக்கலாம்! அப்படித்தான் எல்லாருமே எதிர்பார்ப்பார்கள். ஆனால் உங்களை விட்டு நான் விலகிச் செல்லச் செல்ல என் நினைவுகளில் நீங்கள்தான் இன்னும் அதிகமாக நெருங்கி நெருங்கி வருகிறீர்கள்! ஏனெனில் அவ்வளவு மனப்பூர்வமாக நான் உங்களைக் காதலிக்கிறேன். ஆம் உமா, அவ்வளவு மனப் பூர்வமாகக் காதலிக்கிறேன்! என் காதலுக்குரிய ஒரே தேவதை யென்றும் உங்களைப் போற்றி வழிபடுகிறேன். ஆத்மார்த்தமான காதலென்பதும் ஒருவித பக்திதானே? ஆனால் அதை நீங்கள் உணரவில்லை, உமா! ம், அதை எப்படி நீங்கள் உணருவீர்கள்? ஒரு வெகுளிப் பையனின் வெறும் அசட்டுத்தனமான ஆசை என்றல்லவா அதை நீங்கள் நினைக்கிறீர்கள்? என்னைச் சாதாரணமான ஒரு சின்னப் பையன் என்றே நினைக்கிறீர்கள்! அட, ஆண்டவனே!

நான் பையன் அல்ல, உமா! நான் மனிதன்தான்! மனித உணர்ச்சியே இல்லாத டாக்டர் ஜகந்நாதனை விட நான் மனிதன்தான்! அதை என்றாவது ஒரு நாள் நீங்களே நிச்சயம் உணர்ந்து கொள்வீர்கள்.

உமா, நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாழிகையும் உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்கு வெகு அருகிலேயே, என் இருதயத்தின் மூல ஸ்தானத்திலேயே எப்போதும் இருந்து வருகிறீர்கள்! — இங்கே என் அறையில் வேறு யாரும் என் அருகில் இல்லாமல் நான் தன்னந்தனியாக இருக்கும் சமயங்களிலே உங்கள் கையை எடுத்துக் கோத்துக் கொள்கிறேன். உங்கள் அமைதியான முகத்தை என் இரு கைகளாலும் ஏந்திப் பிடித்து அந்த முகத்திலே விதம் விதமான ஆசைப் புன்முறுவல்களை யெல்லாம் தேடுகிறேன். உங்கள் வட்டக் கருவிழிகளை உற்று உற்றுப் பார்த்து அவற்றிலே பொங்கும் அன்பை யெல்லாம் அள்ளி அள்ளிப் பருகுகிறேன். உங்கள் கூந்தலை வாஞ்சையுடன் தடவி அதில் பரவும் மணத்தையெல்லாம் முகர்கிறேன். உங்கள் நெற்றியை மிருதுவாக வருடி நெடுமூச்செறிகிறேன். குவியும் உங்கள் உதடுகளைப் பல கோணங்களில் பார்த்துப் பார்த்து மயங்குகிறேன். அவை யெல்லாம் எனக்குச் சொந்தமாக வேண்டியவை என்று ஏங்கி ஏங்கித் தவிக்கிறேன். ஆனால் நீங்கள் அநுமதித்தாலன்றி அதையும் நானாகவே எடுத்துக் கொள்ள மாட்டேன். சொல்லுங்கள், உமா! நீங்கள் அனுமதிப்பீர்களா? என்னை ஏற்றுக் கொள்வீர்களா? முடியாது என்று நீங்கள் இப்போது சொல்லலாம்! ஆனால் என்றாவது ஒரு நாள் என்னை ஏற்றுக் கொள்வீர்கள், என் ஆசைகளையெல்லாம் பன்மடங்காக எதிரொலிப்பீர்கள் என்றே நினைக்கிறேன். ஆமாம், உமா! நிச்சயமாக அப்படி நினைக்கிறேன். ஏனெனில் உங்களை என்று நான் முதன் முதலில் சந்தித்தேனோ அப்போதே என் ஆத்மாவும் அதன் விதியும் உங்களோடு பிணைந்து விட்டன என்பதை உணர்ந்து கொண்டேன். அதை நீங்களும் உணரும் ஒரு காலம் வரும். அது வரை என்னை ஒரு மனிதனாக, உங்களுக்கு ஏற்ற ஒரு சிறந்த மனிதனாக எப்படி யெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டுமோ, அப்படி யெல்லாம் என்னை மாற்றிக் கொள்ள முயல்வேன்.

கடைசியாக ஒரு வார்த்தை உமா! இதை யெல்லாம் எழுதுவது உங்களுக்குப் பிடிக்க வில்லை யென்றால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! இந்தக் கடிதத்துக்கு உங்களிடமிருந்து பதில் எதுவும் வராது என்பது எனக்குத் தெரியும்! இருந்தாலும் என் விலாசத்தை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். இனி ஒவ்வொரு நாளும் உங்களிடமிருந்து, தபாலை எதிர்நோக்கிக் காத்திருப்பேன். அதாவது வரவே வராத உங்கள் பதில் கடிதத்துக்காக வழிமேல் விழி வைத்து ஒவ்வொரு விநாடியும் காத்துக்கொண்டிருப்பேன்.

அது உங்களுக்கு வேடிக்கையாகத் தோன்றுகிறதா? பரிதாபமாகத்தோன்றுகிறதா? நீங்களே முடிவு கட்டிக் கொள்ளுங்கள்.

இப்படிக்கு,


உங்கள் பிச்சுமணி

(தொடரும்)

எல்லா டயர்களும் ஒன்றுபோலத் தோன்றலாம்

ஆனால் பயர்ஸ்டோன் டயரில் ஒரு வித்தியாசம் இருக்கிறது

Firestone



இந்த டிரெடைப் பாருங்கள்—இதில் உள்ள ஆயிரக்கணக்கான வழுக்குவதைத் தடுக்கக் கூடிய கோணங்கள் வண்டியை நிற்கும் போதும், நிறுத்தும்போதும், திரும்பும் போதும், தக்கவாறு ரஸ்தாவைக் கவ்விப் பிடித்து பாதுகாப்பளிக்கிறது.



பிரத்தியேகமான, பசையில் தோய்க்கப் பட்ட கார்டு பாடி, டயர் பலவீனமடை வதைத் தடுத்து உங்களுக்கு டயர் வெடிப் புகள் மற்றும் 'ப்ளை' பிரிதல் முதலியவற்றி லிருந்து மிகுந்த பாதுகாப்பளிக்கிறது.



டயரில் பொறிக்கப்பட்டிருக்கும் இந்தப் பெயர்தான் மிகவும் முக்கியமான வித்தி யாசம்—அதுதான் நீடித்திருக்கும் உழைப் பிற்கும் உங்கள் நிச்சயம்.





1. பந்தய மைதானம்

"ஒன்... டூ... த்ரீ..."

"ஹம்ஹூம்! நகர மாட்டேங்கறயே!"

"ஒன்... டூ...."


"இந்தா! இவ்வளவு அவசரமாச் சொல்லிலே... கம் ஆன்! மெதுவாச் சொல்றேன்."

"ஒன்... டூ... இரண்டேகால்... இரண்டேகாலே அரைக்கால்..."

"ஏய் இடியட்! உனக்காகத்தான் தொண்டைத் தண்ணியை வற்றடிக்கிறேன்."

"எகெய்ன் ஸ்டார்ட்டிங்! ஒன்... டூ..."

வாசல் கதவை யாரோ படபடவென்று தட்டிய சத்தம் கேட்டது. நாகராஜன் 'ஒன் டூ த்ரீ' வாய்ப்பாட்டைச் சட்டென்று நிறுத்தித் தான் உட்கார்ந்திருந்த நாற்காலிக்குக் கை எட்டும் தூரத்திலிருந்த ஒரு கயிற்றைக் கண்டு இழுத்தான். அடுத்தகணம் பின் விசையால் இயங்குவது போல் வாயிற் கதவு உட்பக்கமாக நகர்ந்து திரும்பியது.



கதவுக்கப்பால் வெளியே நின்றவர், தாழ்ப்பாள் அசையும் ஓசை ஏதும் இல்லாது கதவு திறந்ததைக் கண்டு திடுக்கிட்டவர் போல் இரண்டடி பின்னுக்குப் போய் நின்றார். எந்த விநாடியிலும் உள்ளே இருக்கும் முரட்டு அல்சேஷியன் நாய் தம்மேல் வந்து பாய்ந்து விடுமோ என்ற பயந்தான் அவர் பின்னுக்கு நகர்ந்ததற்குக் காரணம்.

"இந்த வீடுதானு என்று நம்பரைக் கரெக்டாகப் பார்த்து விட்டீர்களல்லவா? அப்படியானால் உள்ளே வாருங்களேன்" என்றான் நாகராஜன் உடம்பை அசைக்காமலேயே. தொடர்ந்து "இந்த வீட்டு நம்பர் முப்பத்தி ஏழு" என்றும் சொன்னான்.

"இந்த வீடுதான்! உள்ளே இருக்கிற நாய் அஹிம்ஸாவாதியா, ஆக்ரமிப்புவாதியா என்று தெரிந்து கொண்டால் உள்ளே கவலையாக வரலாமல்லவா?" என்றார் வாசலில் நின்றவர்.

அவர் நாய் என்று குறிப்பிட்டது நாகராஜன் காதில் நபர் என்று ஒலித்தது. "ஐயா! நான் சுத்த சைவம்! விழுந்து கடித்து விடமாட்டேன். தைரியமாக உள்ளே வாருங்கள்" என்றான்.

"நான் உங்களைக் குறிப்பிடவில்லை. உள்ளேயிருக்கும் அல்சேஷியனையோ அபூர்வசேஷியனையோ குறிப்பிடுகிறேன். போர்டு வேறு இதோ மாட்டியிருக்கிறதே!" வாசல் ஆசாமியின் பேச்சில் கொஞ்சம் படபடப்பு இருந்தது.

அவ்வளவுதான்; ஏதோ அதீத சக்திவாய்ந்த ஸ்பிரிங்கினால் உந்தித் தள்ளப்படுவதுபோல நாகராஜன் நாற்காலியிலிருந்து துள்ளிக் குதித்து விழுந்து விழுந்து சிரித்தான். பக்கத்து ஷெல்பிலிருந்து ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பிரித்துப் பார்த்து விட்டுச் சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு. "சார்! நீங்க முந்நூற்றி நாற்பத்தி நாலாவது ஆசாமி. கொஞ்சம் பெயர், விலாசத்தைச் சொல்கிறீர்களா? எழுதிக் கொள்கிறேன்" என்று கூறி நாகராஜன் இரண்டடி முன்னுக்கு வந்தான்.

கோமதி சுவாமிநாதன்

வாசல் ஆசாமி இரண்டடி பின்னுல் போனுர். கதவு நம்பர் பிரச்னையின்போதே எழுந்த சந்தேக வித்து இப்போது துளிர்த்துக் கிளை விட்டது. இந்த நடுப் பகலில் தெருவில் ஆள் நடமாட்டம் கூட அதிகம் இல்லாத வேளையில் இப்படி ஒரு பைத்தியத்திடம் வந்து சிக்கிக்கொண்டோமே என்ற பயம் அவரை ஆட்கொண்டது.

நாகராஜன் அவர் நிலையைப் புரிந்து கொண்டான். ''என்ன சார்! வெற்றிகரமாகப் பின்வாங்கப் பார்க்கிறீர்கள்? இங்கே நாயுமில்லே, பேயுமில்லே! பேச வாய் இருக்கிறது. விளையாட அதோ 'டாய்' இருக்கிறது. நீங்கள் பார்த்த அறிக்கையில் 'கடவுளைப் பற்றி ஜாக்கிரதையாக இருங்கள்' என்று தான் போட்டிருக்கிறதே தவிர, நாயைப் பற்றி ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லவில்லை. 'பிவேர் ஆப் காட்' என்று படிக்க வேண்டியதை 'பிவேர் ஆப் டாக்' என்று பழக்கத்தின் அடிப்படையில் நீங்கள் படித்து விட்டீர்கள்.''


எங்கோ இதுவரை ஒளிந்துகொண்டிருந்த துணிவு வாசல் ஆசாமிக்கு வந்துவிட்டது. நேராக வாசற்படியைத் தாண்டி உள்ளே வந்து விட்டார்.

''இங்கே நாகராஜன்னு யாராவது...'' என்று ஆரம்பித்தார் அவர். மேஜை அடியிலிருந்த ஸ்டூலை இழுத்து முன்னால் தள்ளிய நாகராஜன் ''இருந்தாரா? இருக்கிறாரா? இருப்பாரா? என்று கேட்கிறீர்கள். அந்த நாகராஜன் இங்கு இருந்தார், இருக்கிறார், இருப்பார். ஏனென்றால் நீர் குறிப்பிடும் ஆசாமி சாட்சாத் நான்தான். உங்களை நான் இதற்கு முன் சந்தித்த நினைவில்லையாகையால் நீங்கள் யாரென்று எனக்குத் தெரியாது'' என்றான். நாகராஜன் வார்த்தைகளைச் சினிமா கதாநாயகர்கள், வில்லன்கள் கத்திவீசுவது போல வீசினான்.

நண்பர் ஒருவரின் ஆலோசனையின்பேரில் ஒரு நல்ல விஷயத்துக்காகத் தேடி வந்த ஆசாமியை இப்படி ஓர் அரையே அரைக்கால் பைத்தியக்காரச் சூழ்நிலையில் சந்திக்க நேர்ந்தது பற்றித் திகைப்பே அடைந்தார் சடகோபன்.

''ஓ!.... நீங்கள்தானு மிஸ்டர் நாகராஜன்? நான்....'' என்று மென்று விழுங்கினுர். பேச வந்த விஷயத்தைப் பேசாமலே நழுவலாமா என்று கூட எண்ண ஆரம்பித்தார்.

''உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையா? இதோ ஒரு சாட்சியே வேண்டுமானுலும் கொண்டு வருகிறேன்'' என்ற நாகராஜன் மின்னல் வேகத்தில் வாசல் பக்கம் போய் மாடியைப் பார்த்து, ''டேய் பகாகரா! ஒன் மினிட்



இங்கே வந்துவிட்டுப் போடா! டிராவலிங் அலவன்ஸ் உண்டு. ஓடிவா'' என்று குரல் கொடுத்துவிட்டு மீண்டும் தன் நாற்காலிக்குத் திரும்பினான்.

புராண காலத்திலேயே அசுரர்களும் தேவர்களும் 'டிராவலிங் அலவன்ஸ்' என்று குறிப்பிடப்படும் பிரயாணப்படி வாங்க ஆரம்பித்து விட்டார்களா என்ற நினைவில் ஆழ்ந்தார் சடகோபன்.

அடுத்த நிமிடத்தில் ஐந்தாவது வயதைக் கடந்து கொண்டிருக்கும் ஒரு வாண்டுப் பயல் அரை டிராயரை இழுத்துப் பொத்தானைப் மாட்டிக் கொண்டே, ''வாட் மாமா! கால் பண்ணினீங்களா?'' என்று வாசலிலிருந்து வந்து சேர்ந்தான். கான்வெண்டுப் பள்ளியில் புதிதாகச் சேர்ந்திருப்பவன் அவன்.

''எஸ், மிஸ்டர் பவாகரன். நான் யாருன்னு இதோ உட்கார்ந்திருக்கிற மாமாவுக்குத் தெரியாதாம்! என் பெயரைக் கொஞ்சம் சொல்லேன்'' என்றான் நாகராஜன் அந்தச் சிறுவன் கையைப் பிடித்துக்கொண்டு. பி. கே. ஈசுவரன் என்ற ஒரிஜினல் பெயரைச் செல்லமாகப் பவாகரன் என்று மாற்றிய பெருமையும் உரிமையும் நாகராஜனையே சேரும்.

''நோ! நான் டெல் பண்ண மாட்டேன். ரைட் பண்ணிக் காண்பிக்கிறேன். நீ ஒரு பேப்பர் கிவ் பண்ணனும்'' என்றான் பையன். மேஜைமீது இருந்த ஒரு பேப்பரை எடுத்துக் கூடவே ஜெப்பிலிருந்த பேனாவையும் எடுத்து திருத்தி அழகாகக் கொட்டை எழுத்தில் 'பித்துக்குளி' என்று எழுதி நாகராஜன் கையில் கொடுத்தான்.

''ஓரல் எவிடென்ஸைவிட ரிட்டன் டாக்குமெண்டாகவே கொடுத்து விட்டாயேடா கண்ணு! பயலோட சாமர்த்தியத்தைப் பாருங்கள்'' என்று சொல்லிக் கொஞ்சம் கூட யோசனை செய்யாமல் அந்தப் பேப்பரைச் சடகோபனிடம் நீட்டினான் நாகராஜன். சடகோபனுக்கு அந்தப் பையன் கழுத்தில் முரட்டு ரோஜாப் பூ மாலையாக வாங்கிப் போட்டுப் பாராட்ட வேண்டும் என்ற ஆசை பொங்கி எழுந்தது. இப்படிப் பொருத்தமான பெயரைச் சூட்டத் திறமை வேண்டாமா?

''ரொம்ப கரெக்டுடா கண்ணு! உன் டிராவலிங் அலவன்ஸாகிய இரண்டு சாக்லேட்டுகளை அந்த டப்பாவிலிருந்து எடுத்துக் கொண்டு மூடியை அழுத்தமாக மூடிவிட்டுப் போ..... சார்! நீங்க யாருன்னு சொல்லிக் கொஞ்சம் விஷயத்துக்கு வருகிறீர்களா? சிறுபான்மை சமூகத்தின் பிரதிநிதிகளை அதிக கலாட்டா இல்லாமல் வெளியேற்றி அண்டை ராஜ்யங்களுக்கு விரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறேன்......''

சடகோபன் புரியாமல் விழித்தார்.

''ஓ!... புரியவில்லையா?...நீங்கள் கதவைத் தட்டியபோது நான் 'ஒன் டூ த்ரீ' என்று எண்ணிக்கொண்டிருந்தேனே, அந்த விஷயம்! இரண்டு மூன்று மூட்டைப் பூச்சிகள் எப்படியோ இந்த மேஜை இடுக்கில் குடியேறியிருக்கின்றன. அவைகளைச் சாத்விக முறையில் வெளியேற்றியாக வேண்டும்......''

சடகோபனுக்குச் சிரிப்பு வரவில்லை. பயம் வந்துவிட்டது.

''அப்படியானாலும் இப்போது உங்களை நான் தொந்தரவு செய்ய வில்லை. மீண்டும் சந்திக்கிறேன். வரட்டுமா?'' சடகோபன் எழுந்து விட்டார்.

''மிஸ்டர்! உங்க பேர் இன்னும் எனக்குத் தெரியாது. எதற்காகவோ, வீட்டு என் பெயர் எல்லாவற்றையும் விசாரித்துக் கொண்டு இந்தப் படை பதைக்கும் வெய்யிலில் வந்திருக்கிறீர். இடமென்று அப்புறம் வருகிறேன் என்றால் என்ன அர்த்தம்?''

''அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை, மிஸ்டர் நாகராஜன். ஊரிலிருக்கும் என் நண்பருக்குக் கல்யாண வயதில் ஒரு பெண் இருக்கிறாள். ''அந்த நண்பர் உங்கள் விலாசத்தைக் கொடுத்து உங்களைச் சந்தித்து மேல் கொண்டு விவரங்கள் தெரிவிக்கச் சொன்னார். கல்யாண மார்க்கெட்டில் நீங்கள் ஒரு 'எலிஜிபிள் பாச்சலர்' என்பதால்.....''

நாகராஜன் குறுக்கிட்டான். ''ஒன் மினிட். உங்கள் நண்பர் தவறு செய்து விட்டார்! நோ நோ! நான்தான் தவறு செய்து விட்டேன். வாசலில் ஒரு போர்டையே மாட்டி யிருக்க வேண்டும். கம்பெனிகள், காரியாலயங்கள், முதலியவற்றில் 'வேலை காலியில்லை' என்னும் போர்டுகளைத் தொங்க விட்டிருப்பது போல இந்த வாசலிலும் 'இங்குள்ள பிரம்மச்சாரி இன்னும் கலியாணத்துக்குத் தயாராக வில்லை' என்ற போர்டை மாட்டி விடுகிறேன்!...''

பையன் அரை அரைக்கால் பைத்தியம் இல்லை, முக்காலே அரைக்கால் விகிதமாகக் கூட இருக்கும் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்ட சடகோபன் கரங்களைக் கூப்பி அங்கிருந்து நழுவ எழுந்திருந்தார்.

''ஏன் சார்! நீங்கள் யாரென்றே சொல்லாமல் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். அது தெரிந்தால் நல்லதே'' என்றான் நாகராஜன் தயக்கத்துடன்.

''என் பெயர் சடகோபன். சொட்டா பாய் மொட்டாபாய் கம்பெனியிலே அலுவல். போதுமா?'' சடகோபன் வாசற்படி தாண்டினார்.

''ஜஸ்ட் எ மினிட் மிஸ்டர் சடகோபன்!'' என்று மீண்டும் நிறுத்தினான் நாகராஜன் அவரை. ''போகும் போது அந்த 'பியேர் ஆப் காட்' போர்டைப் பார்த்துக் கொண்டு போங்கள். நீங்கள் உள்ளே வந்த விதத்துக்கும் வெளியே போகும் விதத்துக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் ஏதோ விஷயத்தை மறைத்துப் பேசினதாக என் உள்ளுணர்வு சொல்லுகிறது. அது தப்பிதமாகவும் இருக்கலாம். எதற்கும் 'பியேர் ஆப் காட்'''

நாகராஜன் உள்ளே போகவும் கதவு சாத்திக் கொண்டது. சடகோபன் மீண்டும் அந்தப் போர்டைப் படித்தார். அவர் மனச்சாட்சி உறுத்தியது. தன் பெண் நீலா விஷயமாகத்தான் அவர் நாகராஜனைச் சந்திக்க வந்தார். பையனுக்குக் கொஞ்சம் 'ஸ்க்ரூ லூஸ்' என்ற நினைப்புத் தோன்றியதும் நண்பர் பெயரைச் சொல்லி நழுவினார். அதைத் தெரிந்து கொண்ட மாதிரி பேசி விட்டானே!

''கொஞ்சம் பைத்தியம்தான். சில வேளைகளில் தெளிவாகவும் பேசுகிறான்! ஆனால் அதை நம்பிப் பெண்ணை அவன்கிட்டே ஒப்படைக்க முடியுமா என்ன?'' என்ற நினைப்பில் சடகோபன் நடந்தார்.

2. பூவா தலையா?

"அப்பா! அப்பா! இன்னிக்கு மறந்து போயிட்டீங்களா? பையிலே பௌடர் டப்பா வைக் காணோம்" என்று கூவிக் கொண்டே நீலா வாசல் பக்கம் வந்தாள். சடகோபன் சாவகாசமாக வெற்றிலை புகையிலையைக் குதப்பிக் கொண்டிருந்தார்.

"இன்னிக்கும் மறந்து போயிட்டேனா?... உங்க அம்மா மைதாமா வேண்டும் என்று சொல்லியிருந்தாள். ஆபீஸ் அக்கௌண்டெண்ட் தலைபோகிற அவசரமாகச் சுதாமா கம்பெனிக்குப் போய் விட்டு வரச் சொன்னான். வர வழியிலே யாரோ சினிமா நடிகை குறுக்கே போனாள் என்று டிராபிக் டிஸ்லொகேஷன்! எல்லாம் ஒரே மா விவகாரமாப் போச்சு. அதனாலே மூஞ்சிக்குப் போட்டுக் கொள்ற மா வாங்க மறந்து போச்சு! பரவாயில்லே. உங்க அம்மா கேட்ட ஒரு கிலோ மைதாமா பாக்கெட்டுக்குப் பதிலாக இரண்டு கிலோ பாக்கெட் வாங்கி வந்து விட்டேன்! உங்க அம்மாவுக்குத் தெரியாமல்...."

சடகோபனை முடிக்க விடவில்லை நீலா! "போங்கப்பா! ஒரு சின்ன சைஸ் பௌடர் டப்பா வாங்க மறந்ததற்கு இத்தனை பெரிய வியாக்யானமா? நாங்களெல்லாம் மைதா மாவை உபயோகப்படுத்தறதாக இருந்தால் அப்புறம் பிளவர் மில்கள் எல்லாம் 'பேஸ் பிளவர் மில்லாக' மாறிடும் தெரியுமா? — அதிருக்கட்டும் அப்பா! உங்க வழியிலே எந்த சினிமா நட்சத்திரம் குறுக்கே வந்தாள்? கார் நம்பர் என்ன?" என்றாள் நீலா செல்லமாக.

"ஆமா! கர்ணன் கவச குண்டலத்தோட பிறந்த மாதிரி சினிமா நடிகர்களும் சினிமா நடிகைகளும் பிறக்கிற போதே காரோடு பிறந்து விடுகிறார்களோ? யாரோ குட்டி நட்சத்திரத்துக்கும் இன்னும் தோன்றாத நட்சத்திரத்துக்கும் நடுவிலே உள்ள கிரேடு போல இருக்கு! டாக்ஸி ரோடுக்கு அந்தண்டை நின்றிருந்தது. இவ இந்தப் பக்கத்திலிருந்து டாக்ஸிக்குப் போனாள். அவ்வளவுதான். பிளாட்பாரத்திலே போய்க் கொண்டிருந்தவங்க அத்தனை பேரும் ஓடினாங்க. உங்க காலேஜ் பக்கத்திலேதான்" என்றார் சடகோபன் அலட்சியமாக.

"அதுதானே கேட்டேன்! அவள் சினிமா நடிகை இல்லையாம்! ஏதோ மாறு வேடப் போட்டிக்குப் பெண் வேடம் போட்டுக் கொண்டு போகும் ஆசாமியாம். அந்தச் சந்தடியிலேதான் நானும் ரஸ்தாவைக் கடந்து கொண்டிருந்தேன். கூட்டத்திலே பட்ட இடியிலே என் புஸ்தகம், பர்ஸ் கீழே சிதறிப் போச்சு. நல்ல வேளை! ஒரு புண்ணியவான் எல்லாவற்றையும் பொறுக்கிக் கொடுத்தார். சில்லறைதான்...."

"புஸ்தகத்தைப் பொறுக்கிக் கொடுக்கிற சாக்கிலே கீழே விழுந்த சில்லறையை அடித்துக் கொண்டு போய் விட்டானா?" என்று கேட்டார் சடகோபன் கோபமாக.

"உங்களுக்கு எதிலுமே அவநம்பிக்கை! 'பர்ஸிலே எவ்வளவு சில்லறை இருந்தது'ன்னு கேட்டார். 'ஒரு ரூபாய் இருக்கும்'னு சொன்னேன். பையிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு, 'கீழே விழுந்த சில்லறையை நான் பொறுக்கிக் கொண்டிறேன். நீ போகலாம்! ஒரு ரூபாய்க்கு மேல் ஒரு பைசா அதிகம் இருந்தாலும் உங்கள் கல்லூரி பிரின்ஸிபாலிடம் கொண்டு வந்து கொடுத்து நோட்டீஸ் போர்டில் அறிக்கை விட்டு உன்னிடம் சேர்ப்பிக்கச் செய்கிறேன். உன் பெயரோ விலாசமோ எனக்குத் தேவையில்லை' என்று சொல்லிப் போய் விட்டார். ரொம்ப விசித்திரமாக இல்லே?..... நல்ல மனிதர்களும் இருக்கிறார்கள்....." நீலா ஏதோ நினைவில் நிறுத்தினாள்.



"நான் அந்த ஆபீஸில் 'டைம் கீப்ப'ராக இருந்தேங்க; வேலையை விட்டு நீக்கிவிட்டாங்க."
"ஏன்?"
"ஆபீஸில் யாரும் டயத்துக்கு வர இல்லையாம்! அதனாலேதான் நீக்கி விட்டாங்க!"

சடகோபன் நெற்றி சுருங்கியது. "அந்த ஆசாமிக்கு எத்தனை வயதிருக்கும்?"

நீலா உஷாரானாள். "எழுபத்தி இரண்டு வயது இருக்கும்" என்று சொல்லிக் கொண்டே நீலா உள்ளே போய் விட்டாள். ஆனால் அவள் மனத் திரையில் மட்டும் அந்த எழுபத்தி இரண்டு என்னும் எண் மாறி விழுந்து இருபத்தி ஏழாகக் காட்சியளித்தது.

"வர வரப் பட்டிணத்திலே பைத்தியங்கள் ஜாஸ்தியாகப் போச்சு! பைத்தியத்துக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லே. முந்தாநாள் அந்த நாகராஜன்கிட்டே போய் நான் சிக்கினேன். இன்று ஒரு கிழம் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டுச் சில்லறை பொறுக்குகிறது நடுத்தெருவில். நல்ல வேடிக்கை" என்று தானாகவே இரைந்து பேசிக் கொண்டார் சடகோபன்.

3. பவுண்டரி பறந்தது

அந்த மகளிர் கல்லூரியின் கேட் அருகே ஸ்கூட்டர் சத்தம் கேட்டபோதே நீலா, அந்த ஸ்கூட்டரையும், அதன் சாரதியையும் கவனித்துவிட்டாள். அந்த நேரத்தில் அவளுக்கு வகுப்புக் கிடையாது. பேராசிரியை தலைவலி என்ற காரணத்தைச் சொல்லி மாணவிகளுக்கு லீவு கொடுத்து அனுப்பி விட்டுப்

பத்திரிகைத் தொடர்கதை ஒன்றில் சுவாரசியமாக ஆழ்ந்துவிட்டிருந்தான். நீலாவும் அவள் தோழிகளில் சிலரும் புல் தரையில் உட்கார்ந்து சினிமா விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஸ்கூட்டர் சாரதி புல்வெளியை ஒட்டியிருந்த பாதையில் சற்று நின்று ''தயவு செய்து உங்கள் பிரின்ஸிபாள் அறையைக் காண்பிக்கிறீர்களா? நீங்களே கூட வந்து காண்பித்தால் மிகுந்த உதவியாக இருக்கும்'' என்றான் அந்த மாணவிகளின் குழுவைப் பார்த்து. ஆனாலும் அவன் பார்வை குறிப்பாக நீலாவின் மீது பதிந்திருந்தது. அந்தப் பார்வையில் 'நேற்று சில்லறை பொறுக்கிய விவகாரத்தில் கணக்குத் தீர்க்க வந்திருக்கிறேன்' என்ற அறிவிப்பு இருந்தது.

''அப்படியே வாருங்கள்'' என்று கையைக் காட்டி நீலா புல் தரையில் குறுக்காகப் பிரதான கட்டிடத்தை நோக்கி நடந்தாள். அந்த வாலிபனும் ஸ்கூட்டரை அங்கேயே நிறுத்திவிட்டுப் பாதை ஓரமாக நடந்தான்.

''அப்புறம் நான் வீட்டுக்குப் போன பிறகு தான் கணக்குப் பார்த்தேன். பர்ஸில் என்பது நயா பைசா தான்...'' என்று குறும்பாக ஆரம்பித்தான் நீலா.

''உஷ்! பேசவேண்டியதை எல்லாம் உங்கள் கல்லூரித் தலைவி சாட்சியாகப் பேசலாமே! இப்படி வழியில் அதுவும் கல்லூரி வட்டத்துக்குள் முன்பின் அறிமுகமில்லாத நாம் பேசிக்கொண்டு போவது நாலு மாணவிகளின் விமரிசனத்துக்கு உள்ளாகலாம்'' என்றான் அவன். அந்தக் கணத்திலேயே அவன் நீலாவின் நெஞ்சத்தில் ஒரு பெரிய ஹீரோவின் ஸ்தானத்தையும் பெற்றுவிட்டான்.

'இந்த இருபதாம் நூற்றாண்டில் ஒரு கல்லூரி மாணவியுடன் பேசக் கிடைக்கும் வாய்ப்பை இவ்வளவு சுலபமாகக் கைநழுவ விடும் ஓர் அழகான வாலிபன் இருப்பது சாத்தியமான விஷயமா?' என்ற ஆச்சர்யம் அவளை ஆட்கொண்டது.

பிரின்ஸிபாள் புண்ணியவதி தனியாகத் தான் சாவகாசமாக உட்கார்ந்திருந்தாள். அந்த அம்மையாருக்கு எப்போதுமே சாவகாசம்தான். வகுப்புகள் எடுக்காத மேற்பார்வை முதல்வர். ஆனால் ஒவ்வொரு மாணவியையும் தனித்தனியே தெரிந்து கொண்டு அவர்கள் கல்வி வளர்ச்சியின் அளவையும் எண்ணிப் பார்ப்பவள்தான். மாணவிகளுக்குத் தங்கள் கல்லூரி பிரின்ஸிபாளிடம் பக்தி எவ்வளவு இருந்ததோ அத்தனை அன்பும் மதிப்பும் கூடவே இருந்தன.

''குட்மார்னிங் மாடம். இவர் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்'' என்று நீலா சொன்ன பிறகுதான் மிஸ் புண்ணியவதி தன் கவனத்தைக் கவர்ந்திருந்த புத்தகத்திலிருந்து தலையை நிமிர்த்தினாள். எதிரே நின்ற வாலிபனைக் கண்டவுடன் அவள் முகம் மலர்ந்தது. ''ஹல்லோ...'' என்று ஆரம்பித்த புண்ணியவதியை மேலும் பேச விடாமல் உதட்டில் ஆள்காட்டி விரலை வைத்தவாறே அதை லாகவமாக நெற்றிக்கு எடுத்துச் சென்று, ''குட்மார்னிங் மாடம். இரண்டே நிமிடம் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்கிறேன். மன்னிக்கவும்'' என்று சொல்லி நிறுத்தி நீலாவைப் பார்த்து ''நேற்று நடந்ததை நீங்கள் சொல்கிறீர்களா?'' என்றான் இதமாக.

நீலா நடந்ததை விவரித்துவிட்டு, ''நான் வீட்டுக்குப்போய்ச் செலவழித்ததையெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தேன். பர்ஸிலே என்பது பைசாக்கள்தான் இருந்திருக்க வேண்டும். ஆகவே இந்த இருபது நயா பைசாவை அவரிடம் சேர்த்துவிடுங்கள்'' என்று சொல்லி இடுப்பில் செருகியிருந்த இரண்டு பத்துப் பைசா நாணயங்களைப் பிரின்ஸிபாள் மேஜையில் வைத்தாள்.

''நோ நோ மாடம்! நான் பொறுக்கி எடுத்த சில்லறை தொண்ணூற்றி ஒன்பது நயே பைசே இருந்தது. ஆகவே எனக்குச் சேரவேண்டியது ஒரே நயா பைசாதான். அது எனக்கு வந்தால் போதும். அந்த ஒரு பைசாவை வசூலித்துவிட வேண்டும் என்பதற்காக நான் வரவில்லை. சில்லறை அதிகமாக இருந்து நான் எடுத்துக்கொண்டு மோசடி செய்துவிட்டேனோ என்ற தப்பபிப்பிராயத்தைப் போக்குவதற்காகத்தான் வந்தேன். மேலும் உங்கள் கல்லூரி மாணவி ஒருத்தியுடன் முற்றிலும் அறிமுகமில்லாத நான் நடுவில் நின்று பேச வேண்டிய சந்தர்ப்பம் உங்களுக்கும் தெரிந்திருப்பது நல்லது என்பதற்காகவும் இங்கு வந்தேன்...''

''நோ மாடம். நான் இவருக்கு இருபது நயே பைசே கொடுக்க வேண்டும்...'' என்று குறுக்கிட்டாள் நீலா.

இந்த விசித்திர ரிப்போர்ட் புண்ணியவதியை அதீத வியப்புக்குள் ஆழ்த்திவிட்டது; விநோதமாகவும் இருந்தது.

''என் ராஜா இந்தப் பெண் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்றாள் புண்ணியவதி அந்த இளைஞனைப் பார்த்து.

''சாரி! இந்த விநாடிவரை எனக்குத் தெரியாது. உங்கள் கல்லூரி மாணவி என்பதை மாத்திரம் கீழே விழுந்த நோட் புத்தகங்களிலிருந்து தெரிந்துகொண்டேன்'' என்றான் அந்த இளைஞன்.

''என்னம்மா நீலா! உனக்கு இந்த ஆசாமியைத் தெரியுமா?''

''சாரி மாடம்! நான் இவரை நேற்று மாலைவரை சந்தித்ததேயில்லை. அவர் பெயர் கூட இப்போது நீங்கள் அழைத்தபோதுதான் தெரியவந்தது.''

''மாடம்! உங்கள் ஸ்டூடன்ட் கால்குலேஷன் சரியில்லை என்று தெரிவியுங்கள். தொண்ணூற்றி ஒன்பது பைசாவைக் கீழே போட்டுவிட்டு என்பது பைசாவைத்தான் போட்டேன் என்கிறாள். சீக்கிரமே அவள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டு, கணவன் செலவுக்குக் கொடுக்கும் பணத்துக்கு இப்படித் தப்பிதக் கணக்குச் சொன்னால் குடும்பப் பொருளாதாரம் என்ன ஆவது?'' இளைஞன் நீலாவைப் பார்த்தே பேசினான்.

''ஆமாண்டா ராஜா! நீ குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுப் பேரன் பேத்தி எடுத்து டைமண்ட் ஜூப்ளி கொண்டாடி அநுபவப் பட்டுவிட்டாய். என் மாணவிகளுக்காக ஒருநாள் ஜெனரல் அசெம்பிளியில் வந்து குடும்பப் பொருளாதாரம் பற்றிப் பேசேன்!'' என்றாள் புண்ணியவதி விஷமச் சிரிப்புடன்.

அந்தப் புதிய இளைஞனிடம் கல்லூரி பிரின்ஸிபாள் இவ்வளவு உரிமையுடன் பேசுவது

நீலாவுக்கு வியப்பாக இருந்தது. அந்த வியப்பில் அவள் சும்மா இருந்திருக்கலாம். ஆனால் பேசி வைத்தாள். "நோ மாடம்! நான் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும்போது வீட்டு நிதி இலாகா கணவனிடம்தான் இருக்கும். நிதியைச் சரியான முறையில் விநியோகிக்கக் கணவனுக்கு ஆலோசனை சொல்வதுதான் மனைவியின் கடமையே தவிர நிதியையே கையாளுவதல்ல! அந்த நியதியைத்தான் நான் பின்பற்றுவேன். அப்போது வரவு செலவுக் கணக்கில் பேதங்கள் ஏற்பட இடமிருக்காது" என்றாள் பெரிய மேதைபோல்.

"ஆமாண்டியம்மா! உடனே போய் 'மண மானவர்களுக்குப் பண விஷயமாய் யோசனை' என்ற புத்தகம் எழுதி வெளியிடு! ரைட்! நீ போகலாம். ஒரு பைசாவை இந்த ராஜாவுக்கு நான் கொடுத்துவிடுகிறேன்" என்று மின்னல் போல் லட்சணமாய் உத்தரவிட்டாள்.

நீலாவுக்குத் தான் மாத்திரம் வெளியே போவது பிடிக்காத விஷயமாக இருந்தது. புண்ணியவதியை மனதாரச் சபித்தாள்.

நீலாவின் பேச்சைக் கேட்ட ராஜா என்ற அந்த இளைஞனே பிரமித்துப் போய் நின்றுவிட்டான். 'புத்திசாலிப் பெண்' என்று அவன் அந்தராத்மா எதிரொலித்தது. அவள் போன வழியை இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஏன் ராஜா! அப்பாவிடமிருந்து கடுதாசி வருகிறதா?" என்று விசாரித்தாள் புண்ணியவதி. அவள் அந்த இளைஞனுக்கு உறவு என்று நீலாவுக்குத் தெரியாது. உறவானபோதிலும் அவன் கல்லூரி வட்டத்துக்குள் முதல் தடவையாக வருகிறான் என்பதும் அவளுக்குத் தெரியாது.

"இல்லே அத்தை! அவர் எழுதாமலிருப்பதற்காக நான் அடிக்கடி எழுதிக்கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

"அந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லே, இந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லே என்று எழுதிக்கொண்டே இருக்கிறாயே? வயசும் கூடவே வளர்ந்துண்டு வருதுடா! நினைவிருக்கட்டும்" என்றாள் புண்ணியவதி நிஷ்டூரமாக.

"இல்லே அத்தை! சீக்கிரமே பெண் பார்க்கப் போக உன்னைக் கூப்பிட வருகிறேன். நான் ஒரு லட்சியவாதி என்று உனக்குத் தெரியுமல்லவா? என்னைப் புரிந்துகொள்ளும் பெண்ணுக்காகக் காத்திருக்கிறேன். நான் ஒரு லட்சியவாதி இல்லேன்னா, உன் கல்லூரிக்கும், உன் கல்லூரி மாணவிக்கும் மதிப்புக் கொடுக்க ஒரு பைசா விஷயம் என்று ஒதுக்காமல் ஓடி வருவேனா?... ரைட்டோ! நான் வரேன் மாடம்!"

அவன் வேகமாகப் போய்விட்டான்.

4. லஞ்ச் டைம்

சோட்டாபாய் மோட்டாபாய்கம்பெனி மானேஜர் மல்லிகார்ஜுனனின் பெண் பாலா ஒரு கல்லூரி குமாரி. விடுமுறை நாட்களில் அவளுடைய மாடி அறை ஒரு பெரிய பிக்னிக் சென்டராகவே விளங்கும். அவள் சிநேகிதிகள் அணி அணியாக வந்து குவிந்துவிடுவார்கள்.

பாலாவுக்குத் திடீரென்று கர்நாடக சங்கீதத்தின் மேல் மோகம் ஏற்படும். அவ்வளவுதான்! அத்தனை சிநேகிதிகளும் அவளுடன் சேர்ந்து கோஷ்டி கானமாக ஆனந்தபைரவி ஆலாபனை செய்து எத்தனை தூரம் அதைச் சிதைத்துச் சோக பைரவியாக மாற்ற முடியுமோ அத்தனையும் பண்ணுவார்கள். திடீரென்று ஒரு நாள் அவர்களுக்கு 'கதக்' நடன மோகமும் வரும். நல்ல வேளையாக மல்லிகார்ஜுனன் வீட்டை ஸ்ட்ராங்காகவே கட்டிப் போட்டிருந்தார்.

பாலா படிப்பின் மீது உள்ள அக்கறையாலோ, பட்டம் வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தாலோ கல்லூரிக்குப் போய் வரவில்லை. தனது புதுப் புது ஆடைகளை மாணவிகளிடம் விளம்பரப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், கல்லூரி காண்டீன் டிபன் நன்றாக இருக்கும் என்பதற்காகவும் அங்கு போய் வந்தாள்.

ஒருநாள் அகஸ்மாத்தாக மாடிப்பக்கம் போன மல்லிகார்ஜுனன், பாலா மேஜை மீது அவளுடைய புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் இறைந்து கிடப்பதைப் பார்த்




புத்தாண்டு பூத்தது!

திருச்சி வாசுதேவன்

★

இன்பமனம் தான்வரும்
இளந்தென்றல் துணைசேர
அன்புமனச் சித்திரைப்பூ
அலர்ந்ததுபார், புத்தாண்டாய்!

வசந்தத்தேர் ஏறிவரும்
வையத்தின் நறுமலராம்
இசைத்தமிழ்ப் புத்தாண்டின்
இன்பமுமே வாழியவே!



தார். ஏதோ கைக்குவந்த ஒரு தடி நோட்டுப் புத்தகத்தை எடுத்துப் பிரித்தபோது அவர் பெரும் திகைப்புக்கு உள்ளானார்.

நோட்டில் தேன் இல்லை! பூரான் இல்லை! தேன் சொட்டும் காதல் கடுதாசியும் இல்லை. ஆனால் அழகாக வரையப்பட்ட பத்துப் பதினைந்து முகங்கள் மாத்திரம் இருந்தன. ஒவ்வொன்றிற்கும் அடியில் 'பாலா' என்று அனுபவப்பட்ட ஓவியர்கள் பெயர் எழுதுவதுபோல் எழுதியிருந்தாள். எல்லா முகங்களும் ஒரே பாணியில் அமைந்திருந்தன. ஒவ்வொரு முகத்துக்கும் அந்த அழகான மீசைக்கார இளைஞன் உரிமை கொண்டாடிக் கொண்டிருந்தான்.

தன் மகள் கார்ட்டூன் சித்திரங்கள் வரையப் பழகிக் கொள்கிறாள் என்பதை உணராத மல்லிகார்ஜுனன் நன்றாக வாரிவிடப்பட்டிருந்த தலையைக் கலைத்து விட்டுக் கொண்டார். அவர் முகம் சிவந்தது. 'ஆஹா! இந்தத் தடிக் கழுதை ஏதோ காதல் சேற்றில் விழுந்து புதைந்து கொண்டிருக்கிறது. பழங்காலக் கதாநாயகிகள் மாதிரிக் காதலனை ஓவியத்தில் தீட்டிப் பார்க்கும் அளவுக்கு இந்தப் பைத்தியம் வளர்ந்திருக்கிறது. உடனடியாகக் கல்யாணம் என்ற கயிற்றால் இதைக் கட்டித் தூக்கியாக வேண்டும்!' என்ற அசைக்க முடியாத தீர்மானத்துக்கு வந்து விட்டார்.

ஆபீஸ் வேலைகள் ஆரம்பித்த சுமார் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் சிப்பந்திகள் எல்லோரும் இருவராகவும், மூவராகவும் சேர்ந்து குசுகுசுவென்று தணிந்த குரலில் பேசிக்கொண்டார்கள். சம்பள உயர்வு சிபாரிசு பண்ணுவதற்காக மானேஜர் ஒவ்வொரு குமாஸ்தாவாகக் கூப்பிட்டுத் தனிமையில் ஏதோ பரீட்சை செய்ய ஆரம்பித்திருக்கிறார் என்ற செய்திதான் ஆங்காங்கு குட்டி மகாநாடுகளைத் தோற்றுவித்திருந்தது. உள்ளே போய் வந்த ஒருவராவது மானேஜர் என்ன மாதிரி கேள்விகள் கேட்டார் என்று சொல்ல மறுத்து விட்டார்கள். மானேஜர் அந்த மாதிரி வாக்குறுதி வாங்கியிருந்தாராம்.

பின் ஸீனியர் குப்புசாமியின் முறை வந்தது. உடம்பு நடுங்கியவாறே மானேஜரின் ஏர்கண்டிஷன் அறைக்குள் நுழைந்தபோது அவர் உடல் மேலும் நடுங்கியது. இத்தனை நாள் சர்வீஸில் அவர் இன்றுதான் மானேஜர் அறையில் நுழைகிறார்; மானேஜருடன் நேருக்கு நேர் நின்று பேசுகிறார்.

''நீங்கள்தானே குப்புசாமி? பில்ஸ் செக்ஷன்லே வேலை செய்கிறீர்கள் அல்லவா? உட்காருங்கள்'' என்றார் மல்லிகார்ஜுனன். அவர் முகத்தில் மருந்துக்குக்கூட சிடுமூஞ்சித்தனம் இல்லை. வார்த்தைகளில் சோடா பாட்டில் கள் போல இனிமை பொங்கி வழிந்தது.

''இல்லே சார்! நான் இப்படியே நிற்கிறேன்.'' என்றார் குப்புசாமி.

''நோ! உட்கார்ந்துதான் பேச வேண்டும். என் பெண் பாலாவுக்கு உடனடியாக ஒரு மாப்பிள்ளை தேடியாக வேண்டும். பையன் டீசெண்டாக இருக்க வேண்டும். ஒரு பையன் கிடைத்து விட்டால் உமக்கு மூன்று அட்வான்ஸ் இன்கிரிமெண்ட் கொடுக்க முதலாளியிடம் சிபாரிசு பண்ணுவேன். தெரிந்த பையன் இருக்கிறானா?'' மல்லிகார்ஜுனன் குப்புசாமியின் முகத்தை ஆவலுடன் பார்த்தார்.

குப்புசாமி சில கணங்கள் மூளையைக் குழப்பிக் கொண்டார். அவர் யோசனை பலித்து மூன்று அட்வான்ஸ் இன்கிரிமெண்ட் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, தற்சமயம் ஏதாவது சாதகமான பதிலைச் சொல்லி வெளியே வருவது புத்திசாலித்தனம் என்று அவருக்குத் தோன்றியது. ''சார்! புரசவாக்கம் ராமானந்த முதலித் தெரு முப்பத்தி ஏழாம் நம்பரில் நாகராஜன் என்று ஒரு பையன் இருக்கிறான். பெரிய இடத்துப் பையன். நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான் என்று கேள்வி. அந்த இடத்தை நீங்கள் முயற்சி செய்யலாம்'' என்றார் குப்புசாமி. சடகோபனிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயம் அது. தாராளமாக இங்கே தர்மம் பண்ணி விட்டார்.


மானேஜரை மகிழ்விக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் 'பையன் ஒரு அரைப் பைத்தியம் போல் தோன்றுகிறான்' என்று சடகோபன் குறிப்பிட்டிருந்ததைக் கூட அலட்சியப்படுத்தி விட்டார்.

மல்லிகார்ஜுனன் வெகு அக்கறையாகக் குப்புசாமி சொன்ன விலாசத்தைக் குறித்துக் கொண்டார். ''தாங்க்யூ குப்புசாமி. இந்த இடத்தை முயற்சி பண்ணறேன். நீங்க போகலாம். நாம் பேசிக் கொண்டிருந்தது நமக்குள் இருக்கட்டும்'' என்று கரம் கூப்பினார்.

குப்புசாமியைத் தொடர்ந்து இரண்டு மூன்று பேர்கள் உள்ளே போய் வந்தார்கள். பிறகு சடகோபன் முறை வந்தது. அவர் உள்ளே போய் வெகு நேரம் கழித்து வெளியே வந்தார். அவர் மாத்திரம் வரவில்லை. மல்லிகார்ஜுனனும் கூட வந்தார். இருவருமாக மானேஜர் காரில் அமர்ந்து எங்கோ புறப்பட்டு விட்டார்கள்.

இந்தக் காட்சியைக் கண்ட குப்புசாமிக்குப் பகீரென்றது. ''அடப் பாவி! இந்தச் சடகோபன் குடியைக் கெடுத்தானே! ஒருவேளை, மானேஜரை நாகராஜன் முன்னால் கொண்டு போய் நிறுத்தி நல்ல பெயர் வாங்கிக்கூடச் சம்பள உயர்வும் பெற்று விடுவானோ? மானேஜருக்கு மாப்பிள்ளை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கவலையில்லை! இந்தச் சடகோபனுக்குச் சம்பள உயர்வு கிடைக்கக் கூடாது. ஓசி வெற்றிலைகூடக் கொடுக்கத் தயங்கும் கர்ணன்!'' என்று குப்புசாமியின் உள்ளம் குமுறியது. அந்தக் குமுறலில் ஒரு குயுக்தியான யோசனையும் தோன்றியது.

'மானேஜரும் சடகோபனும் ராமானந்த முதலித் தெருவுக்குப் போகும் வேளையில் அங்கு ஒரு கலாட்டாவைத் தோற்றுவிக்கலாமே! போலீசுக்குப் போன் பண்ணி முப்பத்தி ஏழாம் நம்பரில் ஒரு முரட்டுப் பைத்தியம் அட்டகாசம் செய்வதாகவும் அதன் பெயர் நாகராஜன் என்றும் பப்ளிக் டெலிபோனிலிருந்து பேசினால்! கரெக்டாக இவர்களைத் தொடர்ந்து போலீசும் போனால் வெகு சுவாரசியமாக இருக்குமே!' என்று குப்புசாமி முடிவுக்கு வந்து அப்படியே செய்தார்.



5. ரசிகர் கலாட்டா

நாகராஜன் கவர்ப்புறமாகப் பார்த்து அமர்ந்தவாறு மேஜைமீதிருந்த டைப்ரைட்டரில் தன் காரியாலய ரிப்போர்ட் ஒன்றை அடித்துக் கொண்டிருந்தான். 'என்' என்ற எழுத்தை அவன் விரல்கள் அழுத்தும்போதெல்லாம் அவன் மனத் திரையில் நீலா வந்து நின்றாள். கல்லூரிக்குப் போய்விட்டு வந்த பிறகு ஓரிரு சந்தர்ப்பங்களில் அவன் நீலாவை நடை பாதையில் தூரத்திலிருந்து பார்த்திருக்கிறான். அவள் தலையைக் குனிந்து வேகமாக நடந்ததிலிருந்து அவள் தன்னைப் பற்றிய உயர்ந்த அபிப்பிராயத்தை அவன் உள்ளத்தில் தோற்றுவித்திருந்தாள். அது தானே அவனுடைய லட்சியக் காதல். கல்லூரி விடுமுறைக்காக மூடப்படுவதற்கு முன் நிலைப் புண்யவதியைச் சந்தித்து தன் மனத்தைத் திறந்து காண்பித்து அவள் ஆலோசனைப்படி நடக்க வேண்டும் என்றும் திட்டமிட்டிருந்தான் நாகராஜன்.

வாசற் கதவு தட்டப்பட்டது. வழக்கம் போல் கதிரு அசைவால் சத்தம் இல்லாமல் திறந்து கொண்டது. மல்லிகார்ஜுனன் பின்தொடர சடகோபன் உள்ளே நுழைந்தார்.

நாகராஜன் திரும்பிப் பார்க்காமலே, "ஹலோ மிஸ்டர் சடகோபன்! உங்கள் பின்னால் வருபவர்தான் நீங்கள் குறிப்பிட்ட நண்பரா? உட்காருங்கள். இதோ ஒரு நிமிடத்தில் இந்த ரிப்போர்ட்டை முடித்துவிட்டு வருகிறேன்." என்று டைப்ரைட்டரை வேகமாகத் தட்டினான்.

"இவனுக்கென்ன முதுகிலே கண்ணு?" என்று திகைப்படைந்தார் சடகோபன். டைப்ரைட்டர் மேலே ஒரு குவிந்த ஸ்படிகக் கண்ணாடி வைத்து அதன் மூலம் வாசலிலிருந்து வருபவர்களைத் திரும்பிப் பாராமலே பார்க்கலாம் என்பது அவருக்குத் தெரியாதே!

இரண்டாவது நிமிடத்தில் நாகராஜன் திரும்பி உட்கார்ந்து இருவரையும் கரங்கூப்பி வணங்கினான். "மன்னிக்க வேண்டும். எடுத்த காரியத்தை முடித்து விட்டு அடுத்த காரியத்துக்குப் போக வேண்டும் என்ற கொள்கையைக் கடைப் பிடிப்பவன் நான். மிஸ்டர் சடகோபன்! கல்யாண விஷயம்தானா? நான் வாசலில் இன்னும் போர்டு மாட்ட வில்லை என்ற தைரியத்தில் உள்ளே வந்து விட்டீர்களாக்கும். பரவாயில்லை. நான் இனிமேல் அந்தப் போர்டை மாட்ட வேண்டிய அவசியமிருக்காது. ஏனென்றால், இப்போது நான் ஓர் எலிஜிபிள் பாச்சலர். கல்யாணத்துக்குத் தயார். வைதிலை, இந்த நண்பரை எனக்கு அறிமுகப்படுத்த வில்லையே?" என்றான்.

சடகோபனுக்கு ஓரளவு நிம்மதி. தான் போலிக செய்த நபர் மூட்டைப் பூச்சியுடன் பேசிக் கொண்டிருக்கவில்லையே என்று!

"மிஸ்டர் நாகராஜன்! இவர் மிஸ்டர் மல்லிகார்ஜுனன். எங்கள் காரியாலய மானேஜர். இரண்டாயிரம் ரூபாய் சம்பளக்காரர். இவர் மகள் பாவா பி. எஸ்ஸி மாணவி. இவர் மகளுக்கு வரன் பார்க்கும் நோக்கத்தில் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறார்" என்றார் சடகோபன்.



"ஒரு எலிப்பொறி வாங்கினேன். கடைக்காரர் ரொம்ப நல்லவர். அந்த விலைக்கே ஒரு எலியையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்."

"சரி! முதல்லே எலியை 'ரிடர்ன்' பண்ணிவிட்டு அதன் ரேயத்தைக் குறைத்து வாங்கி வாருங்கள்!"

"சார்! கலியாணத்தைப் பற்றி நான் சில குறிப்பிட்ட லட்சியங்களை அனுசரிப்பவன். புற அழகுக்கும் செல்வாக்குக்கும் கொடுக்கும் மதிப்பை விடக் குணத்துக்கும், அந்த நல்ல குணங்களை வருங் காலத்தில் அந்தப் பெண் விடாமல் கடைப் பிடிப்பாள் என்ற நம்பிக்கைக்கும் தான் மதிப்புக் கொடுக்கிறேன். இந்த அடிப்படையில் நீங்கள் என்னிடம் பேசலாம். என்னைப் பற்றிய விவரங்கள் இதோ இருக்கின்றன. இவைகளும் உங்களுக்குத் திருப்தியளிக்க வேண்டுமல்லவா?" என்று சால்வி மேஜை டிராயரிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து மல்லிகார்ஜுனன் கையில் கொடுத்தான்.

அதை இரண்டு மூன்று முறைகள் படித்த மல்லிகார்ஜுனனின் முகம் மலர்ந்தது. "மிஸ்டர் நாகராஜன்! உங்களை மாப்பிள்ளையாக அடைவதில் நான் பெருமைப்படுவேன்" என்றார்.

நாகராஜன் அலட்சியமாகக் கையை அசைத்தான். "அது ஊர்ப் பெருமை! அசல் பெருமை வேறு இடத்தில் இருக்கிறது. எனக்கு மாலையிடப் போகிறவளைப் பற்றி நான் பெருமைப்பட வேண்டும். இந்த இரண்டு மனோபாவங்களிலும் சற்று விரிசல் ஏற்பட்டால் கூடக் கல்யாணம் என்பது மகத்தான தவறாகி விடும்" என்று ஆரம்பித்தான் நாகராஜன்.

வழக்கம் போல் பிரசங்கம் பண்ணி, மானேஜர் உள்ளத்திலும் தான் ஒரு பைத்தியம் என்ற எண்ணத்தை நாகராஜன் உண்டாக்கி விடக் கூடாதே என்ற பயத்தில் விஷயங்களைத் துரிதப்படுத்த முயன்றார் சடகோபன். மூன்று ஆட்களால் நின்றிமேனடுகள் அவரை அப்படிச் செய்யத் தூண்டின. மானேஜரைப் பார்த்து "ஏன், சார்! இன்றைக்கு நல்ல நாள்தான். ஏன் இப்படியே மிஸ்டர் நாகராஜனை உங்கள் பங்களாவுக்கு அழைத்துப் போய் உங்கள் மிஸஸ்க்கு அறிமுகப்படுத்தக்

கூடாது? அப்படியே மிஸ்டர் நாகராஜனும் பாலாவைப் பார்த்த மாதிரி இருக்கும்.......'' என்றார் சடகோபன். அந்த யோசனை மல்லிகார்ஜுனனுக்கு மிகவும் பிடித்திருந்ததால் தலையை ஆட்டினார்.

''எனக்கு உங்கள் கூட வருவது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் காப்பி டிபன் சாப்பிட வைத்து என் மேல் எந்த விதப் பொறுப்பையும் சுமத்திக் கொள்ள மாட்டேன். அப்புறம் உங்கள் முன்னிலையிலேயே உங்கள் பெண்ணிடம் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். ஜெனரல் க்வெஸ்சின்ஸ்! ரேடியோ க்விஸ் மாதிரி. உங்களுக்குச் சம்மதமா?.... அப்புறம்தான் என்னால் ஒரு முடிவுக்கு வர இயலும்'' என்றான் நாகராஜன்.

''பேஷாக! பாலா அடிக்கடி ரேடியோ க்விஸ் புரோகிராமுக்குப் போய் வருகிறாள். அவள் ஜீனியஸ் இண்டலிஜெண்ட் கேர்ள்'' என்றார் மல்லிகார்ஜுனன் எழுந்து கொண்டே.

மூவரும் வெளியே வந்தார்கள். நாகராஜன் வாசல் கதவில் பூட்டை மாட்டிப் பூட்டினான். ''மிஸ்டர் சடகோபன் உங்களை ஆபீஸிலேயே ட்ராப் பண்ணி விட்டு நான் இவரை அழைத்துக் கொண்டு போகிறேன்'' என்று அறிவித்தார் மல்லிகார்ஜுனன். அதன் பொருள், 'நாங்கள் சொந்த விஷயம் பேசும் போது நீ உலக்கை மாதிரி கூட வந்து உட்கார வேண்டாம்!' என்பதுதான் என்று சடகோபன் புரிந்து கொண்டார். அவர் முகம் காற்றுப் போன பலூன் மாதிரி சுருங்கியது.

மல்லிகார்ஜுனனின் கார் தெரு முனை திரும்பிய மூன்றாவது நிமிடத்தில் குப்புசாமி எதிர்ப் பக்கத்திலிருந்து வந்தார். போலீசுக்கு போன் பண்ணிய பிறகு அவரால் காரியாலயத்தில் உட்கார்ந்திருக்க முடிய வில்லை. நாகராஜன் வீட்டு வாயிலில் நடக்கும் கலாட்டாவைப் பார்க்க ஒரே ஆவல். பெர்மிஷன் எழுதி வைத்து விட்டுப் புரசைவாக்கத்துக்கு வந்தார்.

நாகராஜன் வீடு பூட்டப்பட்டிருந்தது. மானேஜர் காரையும் காணோம். ஒரு வேளை நாகராஜனை இழுத்துக் கொண்டு மானேஜரையும் சாட்சியாகக் கொண்டு போய் விட்டாரோ என்ற சந்தேகம் வந்தது. எதற்கும் அக்கம் பக்கத்தில் நோட்டம் விட்டுப் பார்க்கலாம் என்று இன்னொரு தூணைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

அந்தக் கணத்தில்தானா மாடியிலிருந்து பி. கே. ஈஸ்வரன் என்ற பகாசுரன் குப்பைக் கூடையில் தன் கோலிக் குண்டு கிடைக்காத ஆத்திரத்தில் அதை அப்படியே தூக்கி மாடியிலிருந்து தெருவில் எறிய வேண்டும்? அந்தப் பழைய குப்பைக் கூடைக்கு அடிப் பாகம் கிடையாத நிலையில் ஓர் அட்டையைச் செருகி மேலே குப்பைகளைப் போட்டு வைத்திருந்தார்கள். குப்பைக் கூடை கீழே வந்த வேகத்தில் அடி அட்டை எங்கோ பிய்த்துக்கொண்டு போய் விட்டது. நேராகக் கீழே நின்ற குப்புசாமியின் கழுத்தில் அத்தனை பூ உதிர்ந்த நார் மாலைகள் விழுந்ததைத் தொடர்ந்து அடியில்லாத குப்பைக் கூடையும் தலையில் விழுந்து முகத்தை மறைத்துக் கிரீடம் போல் அமர்ந்தது. திடுக்கிட்ட குப்புசாமி கூடையைக் கழட்ட மறந்து மேலே பார்த்துக் கூக்குரலிட ஆரம்பித்தான். பகாசுரன் உள்ளே ஓடி ஒளிந்து கொண்டதால் மாடி வராந்தாவில் யாருமில்லை. கச்சிதமாக அந்தக் கணத்தில் போன் செய்தி அடிப்படையில் வந்த இரண்டு சைக்கிள் போலீஸ்காரர்கள் குப்புசாமியின் இரு பக்கத்திலும் வந்து நின்றார்கள்.

''ஹூம்! நட! யார்தான் பைத்தியம்னு ஒப்புக்கறாங்க'' என்றார் ஒரு போலீஸ்காரர். குப்புசாமிக்கு, தான் பைத்தியமில்லை என்று சொல்லி நிரூபித்து ஆபீஸ் திரும்ப வெகு நேரமாயிற்று. அப்புறம் டெலிபோன் என்றாலே அவருக்கு ஒரு வித 'அலெர்ஜி' வந்து விட்டது.

6. ரன் அவுட்

தன் முன்னால் வந்து அமர்ந்த பாலாவை நாகராஜன் ஏற இறங்கப் பார்த்தான். நோட்டம் கொடுக்காமல் வந்தும்கூட அவள் மேக்-அப் பலமாகவே இருந்தது.

''மிஸ் பாலா. நான் ஒன்றும் பிரமாத க்விஸ் மாஸ்டருமில்லை. எக்ஸாமினரும் இல்லை. அதனாலே நான் கேட்கிற கேள்விகளிலே அப்படி ஒன்றும் பொடி இருக்காது. சில்லி க்வெஸ்சின்ஸாகக் கூட இருக்கும்...; இப்போ நீங்க ட்ராபிக் சிக்னல் போட்ட போது ரோட்டை க்ராஸ் பண்ணீங்க. ஒரே கூட்டம். உங்க கையிலே இருக்கிற சில்லறை, புஸ்தகம் எல்லாம் கீழே விழுந்துடுச்சு. கூட நடக்கிறவர் ஒருத்தர் 'அம்மா! எவ்வளவு சில்லறை கீழே விழுந்திருக்கும்' என்று கேட்டால் நீங்க உங்ககிட்டே இருந்த தொகையைக் கிட்டத்தட்ட சரியாகச் சொல்லுவீங்க இல்லையா?'' என்றான் நாகராஜன்.

''அதெப்படி சொல்ல முடியும்? நாலணு சில்லறை விழுந்திருக்கும். அதைப் போய் நாலு பேர் காதுகேட்கத் தம்பட்டம் அடிக்க முடியுமா? 'ஒ ருப்பீஸ் சேஞ்சும் போர் ஒன் ருப்பீ கரன்ஸி நோட்டும் விழுந்துடுத்து! போனால் போகிறது' என்று சில்லறையைப் பொறுக்க முயற்சி செய்யாமல், வீட்டுக்கு நடந்தோ டாக்ஸியிலோதான் வரவேண்டும். நாலணுக் காக விழுந்தடுன்னு நம்ப பிரஸ் டிஜ் என்ன ஆவது? ஒ யூ எக்ரீ வித் மீ டாடி?'' என்றாள் பாலா தன் தகப்பனாரைப் பார்த்து.

''வெரி குட். கொய்ட் கரெக்ட்'' என்று ஒத்துப் பாடினார் மல்லிகார்ஜுனன்.

''அடுத்த கேள்வி! உங்கள் வரும் காலக் கணவன் வீட்டுச் செலவுக்காக உங்களிடம் நூறு ரூபாய் கொடுக்க, பிறகு அந்தச் செல வுக்குக் கணக்குக் கேட்டால் நீங்கள் ஞாபக மாகக் கணக்குக் கொடுப்பீர்களல்லவா?''

இது நாகராஜனின் இரண்டாவது கேள்வி.

''நான்சென்ஸ்! அப்படிக் கணக்குக் கேட்ப வன் ஒரு புருட்டாகத்தான் இருப்பான். அப்படியே கேட்டாலும் சொல்லாமல் இருக்க எனக்கு உரிமை உண்டு. வாட் டு யூ சே டாடி?'' பாலாவின் முகத்தில் ஆத்திரம் பரவியது.

''ஐ எக்ரீ பாலா! யூ பாலோ யு மதர்'' என்று பாராட்டினார் தந்தை.

''அவ்வளவுதான், மிஸ் பாலா! தாங்யூ! மிஸ்டர் மல்லிகார்ஜுனன்! நான் வரட் டுமா? என்னை விடப் பல வகையிலும் சிறந்த மாப்பிள்ளை உங்களுக்கு வர வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்'' என்று எழுந்தான் நாகராஜன்.

''மிஸ்டர் நாகராஜன்! ஒரு நிமிஷம் உட் காருங்கள்! நீங்களோ உங்கள் தீர்மானத் தைச் சொல்லி விட்டீர்கள். காப்பி சாப்பிட இனி ஆட்சேபனை இருக்காது! காப்பி வருவ தற்குள், உங்கள் கேள்விகளைப் பற்றிக் கொஞ் சம் விளக்கம் கொடுங்களேன்! இந்தச் சந் தர்ப்பத்துக்கும் அந்தக் கேள்விகளுக்கும் என்ன சம்பந்தம்?'' என்றார் மல்லிகார் ஜுனன். இப்படிப்பட்ட ஒரு நல்ல வரன் கை நழுவுகிறதே என்று கவலைப்பட்டார் அவர்.

''நிறைய இருக்கிறது சார்! சம்பந்தப் பட்ட பெண்ணின் கடமைகள், பொறுப்பு ஆசாபாசம் இவைகளை ஓரளவு தெரிந்து கொள்ள உதவுகின்றன இந்தக் கேள்விகள். ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் ஒரு யுவதி சரியான விடை சொன்னாள். அவளும் ஒரு கல்லூரி மாணவிதான். மிஸ் புஷ்பவதி யோட மாணவி! மிஸ் நீலான்னு பேர்...!''

பாலா எம்பிக் குதித்தாள்!.... ''வாட்? மிஸ் நீலா! அப்பா! உங்க ஜுமான்தா சட கோபனோட டாட்டர்! பூ!... அவன்தானு? காக பணத்தை அதிகமாகக் கண்ணுலே பார்க் காதவ அப்படி ஐடியல்ஆன்ஸர் கொடுப்பது ஒண்ணும் ஆச்சரியமில்லே......''

நாகராஜன் தலை சுற்றியது. கண்களில் ஈரம் படர்ந்தது. குரல் கம்மியது. ''ஏன் சார்! உங்க கூட வந்தாரே சடகோபன்! அவர் பெண்ணு சார், நீலா?'' என்றான் மல்லிகார்ஜுனனைப் பார்த்து.

''ஆமாம்! சடகோபன்கூட ஏதோ வரன் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார். உன்னை அவருக்குச் சிபாரிசு பண்ணட்டுமா?'' என்றார் மல்லிகார்ஜுனன் பாதிக் குரோதத் துடனும் பாதி ஏளனத்துடனும்!

''வேண்டாம் சார்! வேண்டாம்! நான் ரன் அவுட்! கிரிக்கெட் ஆட்டத்திலே தொண் ணூற்றி ஒன்பது ஓட்டங்கள் எடுத்துச் சதத்தை எடுத்து முடிப்பதற்குமுன் துரதிர்ஷ்ட வசமாக ரன் அவுட் ஆகிறார்களே, அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவனாகி விட்டேன். ரன்னவுட்டாகிய பெருமை உங்களுக்கு இல் லாத போனாலும் என் துரதிருஷ்டம் என்னை இங்கே இன்று அழைத்து வந்திருக்காது. நான் அந்தப் பெண்ணை மணம் செய்து கொள்ள முற்பட்டால் உங்களுக்கு அந்தச் சடகோபன் மீது அளவரிய ஆத்திரமும், வெறுப்பும் ஏற்படும். இது சகஜம். நீங்கள் இல்லை என்று சொன்னாலும் மனத்தின் அடித் தளத்தில் அந்த வெறுப்புத் தீ கனிந்து கொண்டே யிருந்து சமயம் வரும் போது அவர் காலை வாரி விடுவீர்.

''இரண்டாவது அந்த மனிதரோ ஆரம்பத் தில் ஒரு பொய்யைச் சொல்லி விட்டார். தம் பெண்ணுக்காக வரன் தேட வந்தவர் எதையோ நினைத்துக் கொண்டு தம் சிநேகிதர் சார்பில் வந்ததாக நழுவினார். அந்தப் பொய்யே இன்று அவருக்குப் பாதகமாகி விட்டது. ஒரு வேளை திருமணமானாலும், தாம் சொல்லுவதை யெல்லாம் தம் மாப் பிள்ளை நம்புகிறாரோ நம்பவில்லையோ என்ற அச்சத்திலேயே நடுங்குவார். அந்தத் தண் டனையை அவருக்கு அளிக்க நான் விரும்ப வில்லை.

''என்னவோ, என் லட்சியங்களுக்கு ஏற்ற பெண் ஒருத்தி இருக்கிறாள். அவள் எங்கு வாழ்ந்தாலும் அந்தக் குடும்பம் நன்கு பரி மளிக்கும் என்ற நிறைவில் நான் பிரம்மச்சாரி யாகவே இருந்துவிட முடிவு செய்துவிட் டேன். நான் பிரம்மச்சாரியாக இருப்பதின் மூலம் நாட்டுக்குச் சேவை செய்ய முடியும். முதலாவது ஜனசங்கியைப் பெருக்கத்தைத் தடுக்கிறேன். இரண்டாவது சர்க்காருக்கு நிறைய வரி செலுத்துவேன். இந்தப் பெருமை போதும்; சார்!''

நாகராஜன் கைகளைக் கூப்பியவாறே நடந்தான்.

''ஆசாமி ரொம்பக் கெட்டிக்காரன். மனித உள்ளங்களை எடை போட்டு வைத் திருக்கிறான். அந்தச் சடகோபனை என் ஆத் திரத்திலிருந்து காப்பாற்றிவிட்டானே!'' என்றார் மல்லிகார்ஜுனன்.

பாலா கண்களில் கூட ஈரம் படர்ந்தது.

* * *

ராமானந்த முதலித் தெரு முப்பத்தி ஏழாம் நம்பரில் இப்போது ஒரு புது போர்டு தொங்குகிறது. ''நோ மாரியேஜ் ப்ரபோ சல்ஸ்'' என்பதுதான் அந்தப் போர்டு. மல்லிகார்ஜுனனே சடகோபன் சார்பில் இரண்டு மூன்று தடவைகள் வந்தார்.

''சார்! இந்த சீசனில் நான் இல்லை! அடுத்த சீசனில் பார்க்கலாம்'' என்று சொல் கிறான் நாகராஜன்.

துக்கடா



''நீ கொஞ்ச நாட்களாக வீட்டுக் கணக்கு எழுதுகிறுந்போம் இருக்கிறதே! ஏதாவது செலவைக் குறைக்க முடிந்திருக்கிறதா?''

''முடியாமல் என்ன? காலையிலிருந்து மாலை வரை ஆன செலவுக்கு மாலை நேரங்களில் உட்கார்ந்து கணக்கு எழுதுகிறேன். கூட்டிக் கழித்து இருப்பு பார்ப்பதற்குள் இருட்டி விடுகிறது. அதனால் சினிமா செலவு மிச்சமாகி விடுகிறது. என் மனைவியும், சினிமா சினிமா என்று துளைத்தெடுப்பதில்லை.''

துப்பறியும் நாவல்கள் எழுதுவதில் புகழ் பெற்ற ஆசிரியை அகாதா கிறிஸ்டி தமது கணவருடன் அப்போது பாக்தாதில் தமது பெரும்பான்மையான பொழுதைப் போக்கி வந்தாள். அவளுடைய கணவன் புதை பொருள் ஆராய்ச்சியாளர். எப்பொழுது பார்த்தாலும் ஏதாவது ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருப்பார். அதனால் வேடிக்கையாக ஒரு நிருபர், ''ஆமாம், நீங்கள் உங்கள் கணவரிடம் இவ்வளவு அன்பாக இருக்கிறீர்களே ஏன்?'' என்று கேட்டு வைத்தார் கிறிஸ்டியை.

''ஏன்? பழம்பொருள் ஆராய்ச்சியாளரைக் காட்டிலும் சிறந்த கணவர்கள் உலகத்திலேயே இருக்க முடியாது. பழம்பொருள் ஆராய்ச்சியைப் போலவே நாளாக நாளாக மனைவிமார்களிடத்தில் அவர்கள் தான் அதிக அன்பு செலுத்துவார்கள். இது தான் நான் என் கணவரை அதிகமாக நேசிப்பதற்குக் காரணம்!'' என்றாள் அகாதா கிறிஸ்டி.


ஒருமுறை எம். ஜி. எம். திரைப்படக் கம்பெனியாளர் பத்திரிகைகளுக்கு ஒரு தேவை விளம்பரம் செய்திருந்தார்கள்.:

''பிறந்து மூன்று வாரங்களுக்கு மேற்படாத இரு குழந்தைகள் எங்கள் படத்தில் நடிப்பதற்காகத் தேவை. ஆனால் ஒரு நிபந்தனை. இருவரும் நல்ல அநுபவம் மிக்கவர்களாக இருக்க வேண்டும்.''

இரு. சிநேகிதர்கள் தெருவில் சந்தித்துக் கொண்டார்கள்.

முதல் மனிதர்: பர்ஸில் பத்து ரூபாய் வைத்திருக்கிறேன். ஆனால் பர்ஸை வீட்டில் மறந்து வைத்துவிட்டேன். கொஞ்சம் கடன் கொடுத்து உதவுங்கள்.

இரண்டாமவர்: உனக்கா இல்லை என்று சொல்வேன்? இந்தா பத்துப் பைசா. பஸ்ஸில் வீட்டுக்குப் போய் பர்ஸை எடுத்துக் கொண்டு வந்து எனக்கு ஒரு பத்து ரூபாய் கொடு.



பந்தய மோட்டார் கார்களைப் பிளாஸ்டிக்கினால் உருவாக்கி வருகிறது மேற்கு ஜெர்மானிய கார் தயாரிப்பு ஸ்தாபனமாகிய போர்ஷே. இந்த வண்டியின் 904 பகுதிகளும் பிளாஸ்டிக்கினாலேயே ஆனவை. எஃகு, அலுமினியம் இவற்றைவிட பிளாஸ்டிக்கை உபயோகிப்பதால் மோட்டார் கார் இலேசாக இருக்கும். அதனால் அதிக வேகமாகவும் செல்லும். (மணிக்கு 155மைல்) கடகடத்துப் போய்ச் சத்தம் எழுப்பாது. துரு ஏறவும் செய்யாது. சிறிய விபத்துக்கள் நேர்ந்தாலும் எளிதில் நசுங்காமலும் சட்டென்று தீப்பிடித்து எரிந்து போகாமலும் இருக்கக்கூடிய இந்த ரக மோட்டார்களின் விலை மற்றப் பந்தய மோட்டார் கார்களின் விலையை விடக் குறைவுதான்!

ஈசுவர சந்திர வித்யாசாகர் ஒரு முறை இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். ஒரு பெருங் கூட்டத்துக்கு அவரைத் தலைமை தாங்க அழைத்திருந்தார்கள். அவர் நேரத்தில் கூட்டம் நடக்கும் இடத்துக்குச் சென்றார். மக்கள் வாசலிலேயே குழுமி நின்றனர். இப்படி ஏன் வாசலில் நிற்கிறீர்கள் என்று கேட்டதற்கு, ''இந்தக் கட்டடத்தைச் சுத்தம் செய்ய இன்று வேலையாட்கள் வரவில்லை. தூசும் தும்புமாக உள்ள இடத்தில் எப்படிப் போய் உட்காருவது?'' என்று சிலர் கூறினார்கள்.

வித்யாசாகர் உடனே துடைப்பத்தை எடுத்துக் கொண்டு, தம் கையாலேயே மண்டபத்தைச் சுத்தம் செய்தார். மக்கள் எல்லோரும் உள்ளே வந்து உட்கார்ந்ததும், அவைத் தலைவர் பேசத் தொடங்கினார்:

''நாடானாலும் மக்களானாலும் தன் கையே தனக்கு உதவி என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் வேலையைத் தான் செய்வது என்று ஏற்பட்டு விட்டால், பிறர் கையை எதிர்பார்க்க வேண்டிய அவசியமே ஏற்படாது. பிறர் கையை எதிர்பார்க்கும் மனிதர்களும் சரி நாடுகளும் சரி, உலகத்தில் முன்னேறி, வலுப் பெற முடியாது.''


நீதிபதி: உனக்குத் தண்டனை அளிப்பதற்கு முன்னால் நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?

குற்றவாளி (வாசற்பக்கம் ஒரு முறை பார்த்துவிட்டு) நீதிபதி அவர்களுக்கு ஆட்சேபனை இல்லையானால் 'குட் பை' சொல்ல விரும்புகிறேன்.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்
கொடுத்து



மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் அஜீரணத்தைத் தடுக்கிறது. அதிலும் குறிப்பாக குழந்தைகளுக்குப் பற்கள் தோன்றும்போது பெருமளவில் உதவுகிறது.

உடலில் ஏற்படும் திருகுவலி போன்ற வயிற்று வலி சம்பந்தமான தொல்லைகளைப் போக்கி, சுகமான நிலையை உண்டாக்குகிறது.

வயிற்று வீக்கங்களை, உப்புசங்களைப் போக்கி, வாந்தி பிரிவதற்கு உதவுகிறது.

உடல் நலத்தைப் பாதுகாத்து, குழந்தை அமைதியுடன் உறங்கவும் உறுதுணையளிக்கிறது.



மீண்டும்
புன்னகை
தோன்றக்
காணுங்கள்



ஒரு நாளைக்கு இருமுறை வீதம்
ஒவ்வொரு நாளும்
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சா
கொடுத்து வந்தால், உங்கள் குழந்தை
உற்சாகத்துடனும், உடல்
நலத்துடனும் காணப்படும்

GEOFFREY MANNERS & COMPANY LIMITED

ASP/GM 18 TM.

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

